வரு.74 இல. 13 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 மார்ச் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

March 27 Sunday, 2022

32 பக்கங்கள் 50/-







05
கொலையும் செய்யும் காதல்

06
பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு BIMSTEC வழிவகுக்கும்



07
பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் அரசு மிகுந்த அக்கறை




24
சிதிலமடையும் உக்ரேனும் தடைக்குள்ளாகும் ரஷ்யாவும்

## IMF உடன் நெருங்கி செயற்பட அரசு தயார்

### இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

சர்வதேச நாணய நிதிய அறிக்கையின் சில பரிந்துரைகளை, இலங்கை ஏற்கனவே அமுல்படுத்தியுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அத்துடன், பொதுமக்கள், வர்த்தகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு நேரடியாக பிரதிபலன் கிடைக்கக்கூடியதாக, சர்வதேச நாணய நிதியத்துடன் நெருங்கி செயற்படத் தயாரென்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான '

04

## ஜனாதிபதி தலைமையில் நாளை பிம்ஸ்டெக் உச்சி மாநாடு



### கொழும்பில் 30 ஆம் திகதி வரை நடைபெறும்



பல் துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (05 ஆவது பிம்ஸ்டெக்) மாநாட்டை இலங்கை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை கொழும்பில் கலப்பின முறைமையில் நடத்தவுள்ளது.

04

## IOC பெற்றோல் விலை 49 ரூபாவால் அதிகரிப்பு

### 92 ரகம் 303, 95 ரகம் 332




லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. இதற்கமைய, சகல விதமான பெற்றோல் வகைகளின் விலைகளும் 49 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பு நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலாவதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

04

## அமைச்சுப் பதவிக்காக அரசில் இருப்பவரல்ல நாம்

### இ.தொ.கா.சோரம் போகும் கட்சியல்ல



அரசின் பங்காளிக் கட்சியான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சுப் பதவிக்காக பேரம் பேசும் கட்சியல்ல என்பதுடன் அமைச்சுப் பதவிக்காக அரசாங்கத்தில் இருப்பவர்களுமல்லவென இ.தொ.கா பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். இ.தொ.கா சர்வகட்சி மாநாட்டில்

04

### அரசியல் அரங்கில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவரும்

# ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு சரியானதென நிரூபணம்

### காலம் நிரூபித்து வருவதாக டக்ளஸ் பெருமிதம்

அரசியல் அரங்கில் ஈ.பி.டி.பி. தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலைப்பாடுகள் சரியானதென்பது நிரூபிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கத்துடன் நல்லிணக்கத்தினை வலுப்படுத்துவதன் மூலமே எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முடியும் என்று ஈ.பி.டி.பி. வலியுறுத்தி

04

**13 ஆவது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையை முழுச் சர்வதேசமுமே இன்று கோரி நிற்பதாகவும் தெரிவிப்பு**






SLT mobitel அனுசரணையில் 15 ஆவது தடவையாகவும் ஆரம்பமாகவுள்ள பாடசாலைகளுக்கிடையிலான சண்டே ஒப்சேர்வர் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான அனுசரணையை மொபிடெல் நிறுவனத்தின் பிரதான விற்பனை அதிகாரி ஷஷிக்க செனரத், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் சட்டம் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சட்டத்தரணி ரக்கித்த அபேகுணவர்த்தனவிடம் உத்தியோக பூர்வமாக (24) கையளித்தபோது பிடிக்கப்பட்ட படம். மொபிடெல் நிறுவனத்தின் பொது முகாமையாளர் (விற்பனை//விநியோகம்) சுகத் அபேசிங்க,லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முகாமையாளர் (பிரசாரம்/ அலைவரிசை) சானக்க லியகே ஆகியோரையும் படத்தில் காணலாம். இந்தப் போட்டியில் பங்குபற்றுவோருக்கான கூப்பன்கள் எமது தினகரன், தினமின, டெய்லி நியூஸ், சண்டே ஒப்சேர்வர் பத்திரிகைகளில் வெளிவரும் என்பதுடன் வாரந்தோறும் நடைபெறும் சீட்டிழுப்பில் பணப்பரிசில்களும் வழங்கப்படும்.

## எங்கள் கருத்து...

### போட்டியின்றி பெற்றுக் கொள்ளும் விருதுகள் பெறுமதியானவையா?

கௌரவங்கள், விருதுகள், பாராட்டுகள், பொன்னாடைகள், பொற்கிழிகள் என்பவை எம்மைத் தேடி வர வேண்டுமே தவிர, நாமாக நாடிச் சென்று அவற்றைக் கையேந்தி கேட்டுப் பெறுதல் நாகரிகமல்ல. கௌரவங்களை நமக்கு நாமே சூடிக் கொள்ளுதல் அல்லது அவற்றை வேறு எவரும் பெற்றுக் கொள்ளவிடாமல் தட்டிப்பறித்தல் போன்ற காரியங்கள் உண்மையான கௌரவமாக அமைந்து விடாது. அவ்வாறான செயற்பாடு அருவருக்கத்தக்கதும், பிறர் நகைப்புக்குரியது மாகும்.

தலைநகரில் நடைபெறுகின்ற விருது வழங்கல் விழாக்கள் சிலவற்றை நோக்கும் போது, ஒழுங்குமுறையான போட்டிகள் எதுவுமின்றி தகுதியற்ற குறிப்பிட்ட சிலருக்கும், அவர்கள் சார்ந்த நிறுவனத்துக்கும் மகுடம் சூட்டுவது போன்ற அபத்தமான காரியங்கள் இடம்பெற்று வருவது தெளிவாகத் தெரிகின்றது. திறமைகளுக்கு இடமின்றி, கௌரவங்களை குறிப்பிட்ட சாரார் கபளீகரம் செய்யும் செயல்கள் வேதனை தருகின்றன.


ஒரு அமைப்பானது போட்டி எதுவுமேயின்றி எழுந்தமானமான முறையில் பரிசுக்குரியவர்களாக குறிப்பிட்ட சிலரை அறிவித்து, அவர்களுக்கு விருதுகளை வழங்கும் தன்னிச்சையான முறையற்ற கலாசாரம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

ஒரு நிறுவனமானது பெயருக்கு போட்டிகளை நடத்தி, போட்டியாளர்களின் திறமை, அனுபவம், ஆற்றல் போன்ற தகுதிகளை துளியளவும் கவனத்தில் கொள்ளாது தமக்குத் தாமே பரிசுகளையும், விருதுகளையும் பகிரங்கமாக அறிவித்து நடத்துகின்ற விழா உண்மையான விருது வழங்கும் விழாவாக அமைந்து விடப் போவதில்லை.

04

### பொருளாதார ஸ்திரத்தன்மை, கடன் மறுசீரமைப்பு

## இலங்கை தொடர்பான IMF நிறுவக அறிக்கை வெளியானது



### பல விடயங்களை வலியுறுத்தி அரசுக்கு அறிவுரை

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான 'உறுப்புரை 04' ஆலோசனை மற்றும் பணிக்குழாம் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன் நிறைவேற்று அதிகாரியின் இலங்கை தொடர்பான அறிவித்தலும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை

04

## இலங்கைக்கு சீனா 2,000 தொன் அரிசி வழங்க தீர்மானம்



இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, 2,000 மெற்றிக் தொன் அரிசியை இலங்கைக்கு வழங்க சீனா தீர்மானித்துள்ளது.

இலங்கையின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு சீன அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக

04

### இந்திய வெளிவிவகார அமைச்சர்

## ஜெய்சங்கர் நாளை இலங்கை வருகிறார்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் நாளை (28) இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸின் அழைப்பின் பேரில்

04



## ரயில் கட்டணங்களில் செவ்வாய் முதல் திருத்தம்

பஸ் கட்டணத்தை விடவும் குறைவு 04



## காகித தட்டுப்பாட்டைத் தீர்க்க புதிதாக தொழிற்சாலைகள்

அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு 04

### தினகரன் 90 வருட பூர்த்தியை முன்னிட்டு

## பேருவளை, தர்காநகரில் இன்று முப்பெரும் விழா

### கௌரவிப்பு விழா, கிரிக்கெட், கால்பந்து போட்டிகள்

பேருவளை தினகரன் நிருபர்

தினகரன் THINAKARAN

இலங்கையின் முன்னணி தேசிய பத்திரிகையான தினகரன் பத்திரிகையின் 90 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு பேருவளை மற்றும் தர்கா நகர் தினகரன்

04

## IOC பெற்றோல் விலை அதிகரிப்பு சிக்கலுக்குரிய விடயம்

### அமைச்சர் காமினி லொக்குகே சீற்றம்



லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தினால். மீண்டும் பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டமை பிரச்சினைக்குரியதென அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம், நேற்று முன்தினம் நள்ளிரவு முதல், தமது சகல விதமான பெற்றோல் வகைகளின் விலைகளையும், 49 ரூபாவினால் அதிகரித்துள்ளது. இது தொடர்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் காமினி லொக்குகே, கடந்த முறை லங்கா

04

### விக்கல் வீராச்சாமி



சார், உங்க அமைப்பு நடத்தின போட்டியில எல்லா போட்டியிலுமே ஒரே நிறுவனத்துக்கு மட்டுமே அவார்டு கிடைச்சிருக்கு, அதன் மர்மம் என்ன சார்.....

அது ஒண்டுமில்லை அப்பு, அமைப்புத்தான் எங்கட, ஆனா போட்டிகள அவங்களே நடத்தி அவங்களுக்கே அவார்டுகளையும் கொடுத்துடுவாங்க, அவ்வளவுதான்...!!!

TRIPLE BLASTER

இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே I நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09

Dialog எதிர்காலம் இன்றே.


CAPITOL TWINPEAKS
CAPITOL DEVELOPERS
Sanken Construction
P&T GROUP
COC
கொடுக்கப்பட்டது
கெபிடல் டுவின்பீக்ஸின் திறப்பு விழா
கடைசி விலை சரிசெய்தது 2018 டிசம்பர் மாதம்.
கெபிடல் டுவின்பீக வாழ்க்கை முறைக்கு சிறந்த வளாகம்
இல. 24, ஸ்டெபல் தெரு, கொழும்பு - 02 / +94 770 788 788

அரசாங்கத்துக்குப் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பொறுத்தவரை எந்தவிதமான பிரச்சினையும் இல்லை என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாந்து தெரிவித்தார். தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து அவர் எமக்கு விசேட பேட்டியொன்றை வழங்கினார்.

# நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு காரணம் நல்லாட்சி அரசாங்கம்!

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ விசேட பேட்டி






**கே: இன்றைய அரசாங்கம் தற்போதைய அனைத்து பிரச்சினைகளையும் முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தின் மீது திணிப்பதற்கு முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

*பதில்:* முன்னாள் ஜனாதிபதியின் குற்றச்சாட்டுகள் குறித்து நான் ஆச்சரியப்படவில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் முன்னாள் நல்லாட்சி அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் அரசாங்கத்தை கையேற்றபோது நமது பொருளாதார வளர்ச்சி சீனாவுக்கு அடுத்தபடியாக இருந்தது. அவர்கள் அதைத் திரும்ப ஒப்படைத்த போது, ஆப்கானிஸ்தானுடன் போட்டியிடும் நிலையில் இருந்தோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2015 இல் தோற்கடிக்கப்படாமல் இருந்திருந்தால், கொவிட்19 தொற்றுநோய் பரவிய பின்னரும் எமது நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமான நிலையில் இருந்திருக்கும்.

எனினும் மைத்திரி_ரணில் ஆட்சிக் காலத்தில் அது நடக்கவில்லை. முதலில் மத்திய வங்கியைக் கொள்ளையடித்தார்கள். அதன் அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர், அவர்கள் பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலுக்குச் சென்றனர். முன்னாள் நல்லாட்சி அரசாங்கம்தான் நாட்டை சீரழித்தது. அவர்கள் நாட்டை ஆட்சி செய்த விதத்தினால் இன்று நாம் இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

**கே: எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற கருத்துத் தொனிக்க அமைச்சர் நிமல் சிறிபால.டி.சில்வா தெரிவித்திருந்தார். பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கிக்கு விடுக்கும் சவாலாக இதனைப் பார்க்கின்றீர்களா?**

*பதில்:* இவை வெறும் அரசியல் பேச்சுகள் மட்டுமே. இதனை நாம் பெரிதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. கட்சிக்குள் தமது உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இவ்வாறான கருத்துகளை முன்வைக்கின்றனர்.

**கே: புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பொருளாதார கவுன்சில் தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக இதில் சிறுபான்மையினர், பெண்கள், இளைஞர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்களின் பிரதிநிதித்துவம் இல்லை எனக் கூறப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

*பதில்:* பதினொரு உறுப்பினர்களைக் கொண்ட பொருளாதாரச் சபைக்கு உதவுவதற்காக வர்த்தகத் தலைவர்கள் மற்றும் கல்வியாளர்களை உள்ளடக்கிய 16 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவை நியமிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. இதற்கமைய ஆலோசனைக் குழுவும் நியமிக்கப்பட்டது. நிதியமைச்சர் மற்றும் மத்திய வங்கி ஆளுநருக்கு எதிராக பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்ட நிலையில், பொருளாதார சபையை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு பல அமைச்சரவை அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொருளாதார கவுன்சிலுக்கு அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்குத் தனி ஆலோசனைக் குழுவும் நியமிக்கப்பட்டது. அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் பெயர்களை பொருளாதார சபையில் சேர்க்க முடியாது. எவ்வாறாயினும், அதனை பிரதிநிதித்துவப்படுத்த சில அமைச்சரவை அமைச்சர்களை நியமித்துள்ளோம்.

**ஒரு பெரிய சதித்திட்டம் தீட்டப்பட்டது, ஆனால் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. நாங்கள் அதை முன்கூட்டியே அடையாளம் கண்டு கொண்டோம். அவர்கள் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டனர்**

**கே: நாட்டின் இளைஞர்கள் மனச்சோர்வடைந்த நிலையில், ஆதரவற்றவர்களாக தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் திணறி வருவதாகப் பிரதான எதிர்க்கட்சி முன்வைக்கும் குற்றச்சாட்டை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பாராளுமன்ற பெரும்பான்மையில் எமக்கு எந்தவித பிரச்சினையுமே கிடையாது! எங்கள் கட்சியினர் மத்தியில் எந்த மனஅழுத்தமும் இல்லை. தேர்தலைச் சந்திக்க அவர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்**

*பதில்:* டொலர் நெருக்கடியால் பொருளாதாரச் சிக்கலை எதிர்கொண்டுள்ளோம். டொலரை மிதப்பதற்கு அனுமதித்திருப்பதுடன், இதனால் சிக்கல் சாதாரண நிலைக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவம் மற்றும் சஜித் பிரேமதாசவினால் கட்சிக்கு தலைமைத்துவத்தை வழங்க முடியாததன் காரணமாக எதிர்க்கட்சிக்கு வாக்களித்த இளைஞர்கள் மனச்சோர்வடைந்திருக்கலாம்.

ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கிராமங்களுக்குச் செல்வதால் அவர்களில் பெரும்பாலானோர் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். எதிர்க்கட்சிப் பொறுப்பை அவர் கையில் எடுத்துள்ளார். எனவே, சஜித் பிரேமதாச மற்றும் அவரது குழுவினர் மனஉளைச்சலுக்கு ஆளாகலாம் என்பது வெளிப்படை. ஆனால், எங்கள் கட்சியினர் மத்தியில் எந்த மனஅழுத்தமும் இல்லை. வருங்கால தேர்தலை சந்திக்க ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

**கே: பொருளாதார நெருக்கடி நிதி அமைச்சரினால் அதிகரித்துள்ளதாக முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். உங்கள் பார்வைகள் எவ்வாறு உள்ளன?**

*பதில்:* வீரவன்சவிடம் இருந்து இந்த விமர்சனத்தை எதிர்பார்க்க வேண்டும். அவர் தனது அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட பின்னர், ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் மற்றும் அரசாங்கம் குறித்து நல்ல கருத்துகளை வெளியிடுவார் என எதிர்பார்க்க முடியாது. அவர் என்ன செய்யத் திட்டமிட்டிருந்தார், உண்மையில் என்ன செய்தார் என்பது எங்களுக்குத் தெரியும். நாம் ஒரு அரசாங்கத்தில் இருக்கும் போது, அதில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு பாதுகாக்கப்பட வேண்டும்.

அமைச்சர் பதவியை வகிக்க நாங்கள் நியமிக்கப்பட்ட பிறகு, அரசாங்கத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். வீரவன்ச போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவையில் எவ்வாறு நடந்து கொள்வது என்பது தெரியாது. அவர் எப்போதும் மேற்கத்திய சக்திகளைப் பற்றிப் பேசுகிறார் என்றால், அவர் ஓரிரு உள்ளூர் நபர்களினால் கையாளப்படுகின்றார் என்பது தெளிவாகிறது. திறமையான அரசியல்வாதி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் என்பதாலேயே நிதி அமைச்சரை இலக்கு வைத்து விமல் வீரவன்ச தாக்கி வருகின்றார். தான் விரும்பியதைச் செய்ய முடியாத காரணத்தினால் இவ்வாறு தொடர் தாக்குதல்களை முன்வைக்கின்றார். ஒரு பெரிய சதித்திட்டம் தீட்டப்பட்டது, ஆனால் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை. நாங்கள் அதை முன்கூட்டியே அடையாளம் கண்டு அவர்கள் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டனர்.

**கே: அரசாங்கத்துக்குப் பாராளுமன்றத்தில் காணப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் பாதிப்பு ஏற்படுமா?**

*பதில்:* அரசாங்கத்தை தொடர்வதில் எங்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. அரசாங்கத்தின் பெரும்பான்மையை நாங்கள் தக்க வைத்துக் கொள்வோம். அவர்கள் அரசாங்கத்தில் பிளவை ஏற்படுத்த முயற்சித்தால், அவர்களின் குழுவிலும் பிளவை ஏற்படுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். எந்த சவாலையும் சந்திக்க தயாராக உள்ளோம். அப்போது எதிர்க்கட்சியிலும் எப்படி பிளவுகள் உருவாகின்றன என்பதை அவர்களால் பார்க்க முடியும்.




# எமது பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதற்கு வெளியாரிடமிருந்து தீர்வைத் தேடும் சுபாவம்

எம்மைப் பற்றி எமக்கு அதிகளவு பெருமை உண்டு. எமது தனித்துவம் பற்றி உயர்வாகவே கதைப்போம். பெருமையாகவே கதைப்போம். எந்த ஒரு நாட்டுக்கோ அல்லது இனத்துக்கோ தாழ்ந்து போகத் தயாரில்லை. எமது தனித்துவம் எவ்வாறாக இருந்தாலும் அன்றாடம் எழுகின்ற பிரச்சினைகளுக்கு விடையை வெளியாரிடமிருந்தே தேடுகின்றோம்.

அரசியல், பொருளாதாரம், மற்றும் சமூகப் பிரச்சினைகள் உருவாவது சாதாரண விடயமே. அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படும். தீர்வு காண்பதற்கான இயலாமையும் இல்லை. தாமதிப்பதால் பாரிய பிரச்சினையாக மாறுவது சிறிய பிரச்சினை என்பதைக் குறிப்பிட வேண்டும். நகத்தால் உடைக்கக் கூடிய தாவரத்தை கோடரியால் கூட வெட்டி சாய்க்க முடியாது என்ற நிலைமை வரும் வரை பார்த்திருக்கும் கெட்டித்தனம் எமக்கு உள்ளது.

இவ்வாறு குறிப்பிடுவதற்கு காரணமானது என்ன? பொதுமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள். வாழ்க்கைச் செலவு பெரும் பிரச்சினை. பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதோடு சந்தைக் கட்டுப்பாடு இல்லை. அரசியல் கட்சிகள் தூண்டிவிடும் எதிர்ப்புகளால் சமூகம் அமைதி இழந்துள்ளது. விவசாயம்,கல்வி,சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் கூட சிக்கலான நிலைமை தெரிகிறது. சுதந்திரத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதாரப் பிரச்சினை என்பது தெளிவாகிறது.

பெரும் எதிர்பார்ப்புடன் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்த பொதுமக்கள் விரக்தியில் உள்ளார்கள் என்பதைக் குறிப்பிடுவதில் தவறில்லை. இந்நாட்டு வரலாற்றில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் அதிகமாகும். மோதல்கள், பிரச்சினைகள், அனர்த்தங்கள் மற்றும் போராட்டங்கள் புதியவையல்ல. அவற்றுள் புதியன அல்லாத மற்றும் சமநிலையாக தீர்த்துக் கொள்வதற்கு எடுக்கும் முயற்சியும் பழைய சம்பிரதாய கட்டமைப்பு என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு தரப்பார் முன்வைக்கும் யோசனைகள் எதனையும் மற்றைய தரப்பார் ஒப்புக் கொள்வதில்லை. ஏனைய தரப்புக்கு காது கொடுக்க அதிகாரத்திலுள்ளவர்கள் தயாரில்லை. சமூகம் ஒன்றுகூடி இணைந்து தீர்வினை கண்டுபிடிப்பதற்கு அக்கறையில்லை. இறுதியில் நடப்பது என்ன? முறைகள் நெருக்கடிக்கு உள்ளாகின்றன. மக்கள் ஒரு அழிவிலிருந்து இன்னொரு அழிவுக்கு உள்ளாகிறார்கள். தலைவர்களின் பொறுப்பு மக்கள் வாழ்க்கையை சிரமத்துக்கு உள்ளாக்குவதா? தற்போது உருவாகியுள்ள சிக்கல்களை கட்டுப்படுத்த எம்மால் ஏன் ஒன்றிணைய முடியாது?

ஒன்றுகூடி கலந்துரையாடி ஒப்புதலுக்கு வரத் தயாராக இல்லாத நாம், தீர்வினை வெளியிலிருந்து எதிர்பார்க்கிறோம். உலகில் வேறொரு நாட்டிலிருந்து வேறொரு அமைப்பு வற்புறுத்தும் முறைக்கு மாறுவதற்கு தயார். மனித உரிமைகள் பிரச்சினைக்கு முன்னால் சிக்கலில் உள்ள இலங்கைக்கு தீர்வினை முன்வைப்பது சர்வதேச சமூகம். பொருளாதாரப் பிரச்சினையை கருத்தில் கொண்டு வருமானம் மற்றும் செலவை சரிசெய்ய வருவது வெளிநாடுகளாகும். சர்வதேச அமைப்புகள் எமக்கான கட்டமைப்பை உருவாக்க தயாராகி வருகின்றன. தமிழர்கள் தங்களுடைய பிரச்சினைகளை இந்தியாவிற்கு கொண்டு செல்கிறார்கள். முஸ்லிம்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்கு மத்திய கிழக்கு தலைவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர் சந்ததி எதிர்காலத்தை உருவாக்க முயற்சி செய்வது அந்நிய நாட்டிலாகும். இவை கவனமாக சிந்திக்க வேண்டிய விடயங்களாக தெரிகின்றன.

எமக்கு தீர்வு இல்லாத, தீர்வை கண்டுபிடிக்க முயற்சி செய்யாத பின்னணியில் வெளியாரிடம் சாயும் போக்கு உள்ளது. எமது மக்கள் உலகில் வேறொரு இடத்தில் விடையைத் தேடும் நிலைமைக்கு ஆளாகியுள்ளது பற்றி நாம் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும். தேசிய, மத மற்றும் அரசியல் தலைவர்கள் கவலை அடைய வேண்டியுள்ளதோடு, தங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பொறுப்புகளை நிறைவேற்றாமையே தற்போதைய பிரச்சினைகளுக்கு ஆரம்பம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தற்போதுள்ள பிரச்சினைகளை எண்ணி மக்களை சந்தித்து சுயவிமர்சனம் செய்ய வேண்டியுள்ளதோடு, அது இந்த தீர்க்கமான சந்தர்ப்பத்தில் எடுக்க வேண்டிய முக்கியமான முடிவாகும்.

பயங்கரவாதத்தை ஒழித்த எம்மால் மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்க முடியும். கொவிட் தொற்றை கட்டுப்படுத்தி மக்களின் உயிரைப் பாதுகாக்க முடிந்த நாட்டுக்கு தங்களுடைய இருப்பை பாதுகாப்பது முடியாத விடயம் அல்ல. வருமானம் மற்றும் செலவு பற்றி புரிந்துணர்வுள்ள,கடன்சுமை பற்றி அறிந்த நாம், புதிய தலைமுறைக்கு இடம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அறியாதவர்கள் அல்ல. பொருளாதார மற்றும் சமூக சீர்திருத்தத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. பிரபல்யம், அடுத்த தேர்தலில் விருப்பு வாக்குகளின் அளவை கணக்கிடும் இந்நாட்டு அரசியல் கட்சி தீர்வுக்காக முடிவெடுப்பதில்லை. புதிய மாதிரிக்கு மக்களை தயார்படுத்தாததோடு புதிய முடிவுகள் எடுக்க இடமளிப்பதில்லை. அதன் பயங்கரமான விளைவு எமது முன்னிலையில் உள்ளது. ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு வேறு எங்கேயோ தீர்வு கிடைக்கும் வரை பொதுமக்கள் காத்திருக்கிறார்கள்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

# ரயில் கட்டணங்களில் செவ்வாய் முதல் திருத்தம்

**பஸ் கட்டணத்தை விடவும் குறைவு**



அமைச்சரவைக்கு அறிவித்ததன் பின்னர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் ரயில் கட்டணங்கள் மறுசீரமைக்கப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், பஸ் கட்டணத்துடன் ஒப்பிடும் போது ரயில் கட்டணங்கள் அதிகளவில் அதிகரிக்கப்படாதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஜெய்ஷங்கர்...

இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

நாளை 28 முதல் 30 ஆம் திகதிகளில் வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் அமையவுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இந்த விஜயத்தின்போது, 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் BIMSTEC அமைச்சர்கள் மட்ட கூட்டத்தில் பங்கேற்கவுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார் அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், இலங்கை பயணத்தின்போது மேற்கொள்ளும் இருதரப்பு பேச்சுவார்த்தைகளில், இலங்கை இந்தியாவிடம் எதிர்பார்க்கும் முக்கிய விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுமென இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை விஜயத்துக்கு முன்னதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்று மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காகித தட்டுப்பாட்டைத் தீர்க்க புதிதாக தொழிற்சாலைகள்

**அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு**



தற்போது நிலவும் காகிதத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, எதிர்காலத்தில் நாட்டில் பல புதிய தொழிற்சாலைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை தரமுயர்த்துவதற்கும் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். நாட்டில் நிலவும் டொலர் நெருக்கடியால் காகித உற்பத்திக்கான மூலப் பொருட்களை இறக்குமதி செய்வது தடைப்பட்டுள்ளது. அதன் காரணமாக, வினாத்தாளை அச்சிட தேவையான தாள் பற்றாக்குறை ஏற்பட்டதையடுத்து, நாட்டில் பாடசாலை மற்றும் உயர்கல்வி பரீட்சைகளை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமைச்சுப் பதவிக்காக...

பங்கேற்காமல் இருப்பது தொடர்பாக எதிர்க்கட்சிகள் பல விமர்சனங்களை வெளியிட்டுள்ளன. இதற்கு பதிலளிக்கும் விதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஒரு வருடகாலமாக மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இது தொடர்பாக அந்தந்த துறைகளுக்கு பொறுப்பான அமைச்சர்கள், ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளோம். இவ்விடயங்கள் தொடர்பாக இ.தொ.கா பல நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் சமையல் எரிவாயு, டீசல் வாங்க மக்கள் வரிசையில் நின்று மூன்று பேர் இறந்துள்ளனர். கடந்த ஒரு வருடமாக மக்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இது தொடர்பாக கட்சித் தலைவர் கூட்டம், பாராளுமன்ற குழு கூட்டம் மற்றும் ஊடங்களுக்கும் அரசாங்கத்தின் பங்காளி கட்சி என்ற ரீதியில் நாம் அறிவித்துள்ளோம்.

இதன்போது உரப் பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலவும் காலகட்டத்தில் இடம்பெற்ற சர்வ கட்சி மாநாட்டில் இ.தொ.கா பங்கேற்கவில்லை. காரணம் அந்தந்த காலகட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு இதுவரை எட்டப்படவில்லை.

அமைச்சு பதவிற்காக பேரம் பேசிக்கொண்டுதான் சர்வ கட்சி மாநாட்டை புறக்கணித்தோமென எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுக்கின்றன. எங்களை பொருத்தவரை அமைச்சு பதவிக்காக அரசாங்கத்தில் இருப்பவர்கள் அல்ல நாங்கள். ஆளும் கட்சியிலுள்ள பங்காளிக் கட்சிகள் அரசுக்கு எதிராக கேள்வி எழுப்ப வேண்டுமென எதிர்கட்சி தெரிவிக்கின்றது.

அதனால் தான் நாங்கள் பல்வேறு கூட்டங்களில் கூட பங்கேற்கவில்லை.

ஆளும் கட்சி, எதிர்கட்சி என்றல்ல, மக்கள் பல்வேறு கஷ்டத்தில் இருக்கின்றனர். நாங்கள் மக்கள் பிரதிநிதியாக எப்போதும் இருப்போம் என்றும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

## IOC பெற்றோல்...

ஐ.ஓ.சி நிறுவனம் எரிபொருட்களின் விலையை அதிகரித்தபோது, அதன் அதிகாரிகளை அழைத்து, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலையுடன் அதனை சமப்படுத்துமாறு கூறியதாக தெரிவித்துள்ளார்.

அது தொடர்பான ஒப்பந்தத்தை ஆராய்ந்து, அதில் தங்களுக்கு எவ்வாறு அழுத்தம் கொடுக்க முடியும் என்பது குறித்து ஆராயுமாறு தமது செயலாளருக்கு அறிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறாக அழுத்தம் கொடுக்க முடியுமாயின், எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து, அமைச்சரவையைத் தெளிவுபடுத்தி அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம், பெற்றோலியக் கூட்டுத்தாபன எரிபொருள் விலை தற்போது அதிகரிக்கப்படமாட்டாதெனவும் அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தலைமையில் நாளை...

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் வெளிநாட்டமைச்சர்கள் முறையே 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள பிம்ஸ்டெக் சிரேஷ்ட அதிகாரிகள் சந்திப்பு மற்றும் அமைச்சர்கள் சந்திப்புக்காக இலங்கைக்கு வருகை தரவுள்ளதுடன், மியான்மார் வெளிநாட்டமைச்சர் இந்த மாநாட்டில் இணைய வழியாகப் பங்கேற்பார்.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தலைவர்களின் மெய்நிகர் பங்கேற்புடன் 30ஆம் திகதி 05ஆவது பிம்ஸ்டெக் உச்சி மாநாட்டுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமை தாங்குவார்.

இந்த உச்சி மாநாட்டில் மியான்மாரின் வெளிநாட்டமைச்சர் மியான்மாரை பிரதிநிதித்துவப்படுத்துவார்.

உச்சிமாநாடு மற்றும் தொடர்ச்சியான கூட்டங்களின் போது, பிராந்தியக் குழுவாக பிம்ஸ்டெக் அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து பிரதிநிதிகள் கலந்துரையாடுவர்.

உச்சிமாநாட்டின் போது, பிம்ஸ்டெக் சாசனம் ஏற்கப்பட்டு, பல சட்ட ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்படுமென மேலும் எதிர்பார்க்கப்படுகின்றது.



# தவக்கால சிந்தனை

## மனந்திரும்புவோம்

"ஆண்டவர் எத்துனை இனியவர் என்று சுவைத்து பாருங்கள்."

இறைவனின் அன்பு செயல் நாம் எத்தகைய சூழ்நிலைகளில் வாழ்ந்தபோதும் அவரை நாடி வருகின்ற போது அன்பால் எம்மை ஏற்றுக்கொள்வார், என்ற ஆழமான விசுவாச வாழ்வை விதையாக்கி, அவர் அன்பை அனுபவிக்க அவரிடத்தில் திரும்புவோம்.

கூட்டொருங்கியக்க செயற்பாடுகளுக்காக ஒன்றிணைந்திருக்கும் இவ்வாண்டுக் காலத்தின் செயல்நெறிகளை திரு அவை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது.

இந்த "ஏழை கூவியழைத்தான் ஆண்டவர் அவனுக்கு செவிசாய்த்தார்." அவர் எல்லா நெருக்கடியில் நின்றும் விடுத்துள்ளார். எமது ஒவ்வொரு அனுபவங்களையும், மீட்டுப்பார்க்கும் போது இறைவன் எம்மை எத்தகைய நன்மைத்தனங்களால் நிரப்பியுள்ளார் என அறிய முடிகின்றது. ஏழு முறையல்ல எழுபது முறை மன்னியுங்கள் என கூறும் இயேசுவின் வார்த்தைகள் எம்மை மன்னிப்பின் மாண்பை உணர்த்தும் செயலுக்கு அழைத்து செல்கின்றது.

இத் தவக்காலத்தில் ஆண்டவர் இயேசு கூறுவது: "ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும் போது அவர் புதிதாக படைக்கப்பட்டவராய் இருக்கின்றார்." எனவே ஒப்புரவாய் வாழ கற்றுக்கொள்ளுங்கள். ஒருவரை ஒருவர் குறைகளோடும், நிறைகளோடும் ஏற்று வாழ பழகி கொள்ளுங்கள். ஏனெனில் விண்ணரசு உங்களுக்கே உரியது. இக்காலத்தின் திருப்பயணமானது செப, தப முயற்சிகளில் ஈடுபடுவதுடன் இறைவனிடம் நெருங்கிய உறவை வளர்ந்துக் கொள்ள எம்மைத் தயார் செய்கின்றது.

கவியரசு கண்ணதாசன் தன் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் இயேசு பெருமானின் வரலாற்றை காவியமாக படைத்துச் சென்றார். அதில் திருந்திய மகன் உவமையில் இவ்வாறு கவி படைக்கின்றார் "ஒரு தந்தை இருமக்கள் ஊர் முழுதும் சொத்து, மூத்த மகனோ மணியான முத்து இளைய மகனோ மழையிலும் தேறாத நெத்து" என்று உவமையை தொடங்கின்றார.;

திருந்திய மகன் என்று கவிதையில் மெய்ப்பித்தும் காட்டுகின்றார். மூன்று வகையான திருவிவிலிய நிமித்தங்கள் இந்த உவமையில் தரப்படுகின்றன. மகனுக்காக காத்திருக்கும் தந்தை, மகனை பார்த்தவுடன் பரிவு கொண்டு ஓடிச்செல்லும் தந்தை, மகனை அணைத்துக் கொண்டு பரிவைக் காட்டும் தந்தை, இப்படி பரிவுள்ளம் கொண்ட இறைதந்தையின் உன்னத விம்பத்தை வெள்ளிடைமலையாக காணலாம்.

இந்த அருளின் காலமான தவக்காலத்திலும், இறைவனின் பரிவு அளவு கடந்து நம்பிக்கையாளர்களுக்கு ஒளியூட்டியும் வழிகாட்டியும் நிற்கிறது.

அருட் சகோ.
அ. அன்ரனி டனோஷன்...

## ஈ.பி.டி.பியின் நிலைப்பாடு...

வருகின்ற நிலையில், ஏனைய தமிழ் தரப்புக்கள் அந்த நிலைப்பாட்டினை சுயலாப அரசியலுக்காக வேனும் பின்பற்றுகின்ற சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. வலியுறுத்துகின்ற 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையே சாத்தியானது என்பதை சர்வதேச நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் வெளிப்படையாக அறிவித்து வருகின்றமையையும் சுட்டிக்காட்டினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நேற்று நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் யாழ். தலைமை செயலகத்தில் நேற்று நடைபெற்ற இக்கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அண்மையில் கடிதம் எழுதிய தரப்புகளாக இருந்தாலென்ன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொண்ட தரப்புக்களாக இருந்தாலென்ன, 13 ஆவது அரசியல் திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபையையே வலியுறுத்தியுள்ளனர்.

இதை கடந்த 30 வருடங்களுக்கு மேல் ஈ.பி.டி.பி. வலியுறுத்திய சந்தர்ப்பங்களில் எல்லாம், எம்மை தமிழ் மக்களுக்கு எதிரானவர்களாகவும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு முரணான கருத்துக்களை தெரிவிப்பதாகவும் இதே தரப்பினர் மக்களிடம் கூறிவந்தனர்.

சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்குமென்றும் கூறிவந்தனர்.

ஆனால், ஈ.பி.டி.பி. கட்சியினால் முன்வைக்கப்படுகின்ற நிலைப்பாடுகளும் பொறிமுறைகளுமே யதார்த்தமானதென்பது சர்வதேச நாடுகளாலும் சர்வதேச அமைப்புக்களாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், தமது அரசியல் இருப்புக்காக காலத்துக்குக் காலம் சுருதியை மாற்றுகின்ற தமிழர் தரப்புக்கள் இப்போது எமது வழிமுறைக்கு வந்துள்ளன.

இதனை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தெளிபடுத்துவதன் மூலம் எதிர்காலத்திலாவது மக்கள் ஏமாறாமல் சரியானவர்களை தெரிவு செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

# எங்கள் கருத்து...

## போட்டியின்றி பெற்றுக் கொள்ளும் விருதுகள்...

அவ்வாறான விருதுகளைப் பெற்று வீண்பெருமை கொண்டு, அதனைப் பறைசாற்றுவதற்காக விளம்பரம் தேடி ஆர்ப்பரிப்பது போன்றவையெல்லாம் விடயம் தெரிந்தவர்களுக்கு வெறும் நகைச்சுவையாகவே அமைகிறது.

உண்மையான திறமையாளர்கள் நாட்டில் பலர் இருந்தும், அவர்களுக்கு உரிய இடமளிக்காமல் வருடா வருடம் ஒரே நிறுவனத்துக்கும், ஒரே பேர்வழிகளுக்கும் தொடர்ச்சியாக விருதுகளை வழங்கி வருவதை உண்மையிலேயே தம்மைத்தாமே தாழ்த்திக் கொள்ளும் ஒரு செயலாகவே கருத வேண்டியுள்ளது.

அதிலும் அருவருக்கத்தக்க விடயம் என்னவென்றால், விருதுகளை வழங்குகின்ற அமைப்பில் முக்கிய பதவிகளை வகிக்கின்றவர்கள் தங்களது நிறுவனத்தின் பிரதிநிதிகளை மாத்திரமே விருதுகளுக்காகத் தெரிவு செய்து அவற்றை வழங்குவதாகும்.

போட்டி நடுவர்களாக நியமிக்கப்படுபவர்கள் விண்ணப்பங்களை கேட்டுப் பெறாமல், உண்மையான ஆற்றல் உள்ள வெற்றியாளர்களை விருதுக்காகத் தெரிவு செய்யும் ஆற்றல் கொண்டவர்களாக இருப்பதே நியாயம் ஆகும்.

நடுவர்களுக்கு பரந்துபட்ட ஆற்றல் இருக்குமாயின் மட்டுமே சரியான வெற்றியாளர்களை தெரிவு செய்ய முடியும். கடந்த பல வருடங்களாக இவ்வாறாக தொடருகின்ற நியாயமற்ற செயற்பாடு காரணமாக சுயாதீன செயற்பாட்டாளர்கள் பலர் இந்தப் போட்டிகளில் நம்பிக்கை இழந்துள்ளதுடன், விருதுக்கான போட்டிகளில் பங்குபற்றாது விலகி வருவதைக் காண முடிகின்றது. இவ்வாறு போட்டிகளை பலர் தவிர்த்துக் கொள்வதால், அது போட்டிகளை நடத்துவோருக்கு மேலும் வசதியாக அமைந்து விடுகிறது.

உண்மையில் விருதுகளை வழங்கும் போது, அதில் நம்பகத்தன்மை முதலாவதாக இருக்க வேண்டும். தெரிவுக்குழுவில் இருப்போருக்கு எந்தவிதமான அழுத்தமும் கொடுக்கக் கூடாது. இவ்விடயத்தில் அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும். எதிர்வரும் காலத்திலாவது விருது வழங்கும் விழாக்கள் சுதந்திரமாக, சுயாதீனமாக, நம்பிக்கையாக அமைய வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

விருது கிடைக்காத சிலரது கருத்தாக அல்லது ஆதங்கமாக இந்தக் கருத்துகள் அமையவில்லை. மிக நீண்ட காலமாக அவதானித்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, பலரது கருத்துகளையும் உள்வாங்கி 'எங்கள் கருத்தாக' இது எழுத்து வடிவம் பெற்றுள்ளது. விருதுகள் பெற்ற எவரையும் புண்படுத்துவது எமது நோக்கமல்ல. விருது பெற்றவர்களுக்கு எமது பாராட்டுக்கள். ஆனால் அவர்களை விடவும் தகுதியானவர்கள், ஒரு சிலரது அநீதியான செயற்பாட்டினால் தட்டிக்கழிக்கப்படுகிறார்கள், ஓரங்கட்டப்படுகிறார்கள் என்பதே எமது வருத்தமாகும். இந்த உண்மை சமூகத்தில் அனைவருக்கும் புரிந்த விடயம் என்பது எமக்கு ஆத்ம திருப்தி தருகிறது.

## இலங்கை தொடர்பான IMF நிறுவக அறிக்கை...

மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில், நம்பகமான, தெளிவான மூலோபாயங்களை இலங்கை அரசாங்கம் அமுலாக்குவது உடனடி அவசியமென சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பாதிப்புமிக்க குழுக்களைப் பாதுகாத்து, வறுமையைக் குறைப்பதற்கு சமூக பாதுகாப்பு முறைமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்துக்கு தாக்கம் செலுத்தியுள்ள பிரதான விடயம் குறித்து இந்த அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை பாதிக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்தும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. கொரோனா தொற்று பரவல் இலங்கையின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளதுடன், சுற்றுலாத்துறையின் வருமான இழப்பு அதில் பிரதானமாக உள்ளது.

தொற்றுநோய்க்கு முந்தைய வரி குறைப்புகள் மற்றும் கொரோனா தாக்கம் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் நிதிப் பற்றாக்குறை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தைக் கடந்தது.

கடந்த ஆண்டு, அரசாங்கக் கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில். நூற்றுக்கு 119 சதவீதமாக உயர்ந்ததுடன், சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கான அணுகல் இல்லாமல்போனது.

வெளிநாட்டுக் கடன் தீர்ப்பனவுகள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை விரிவாக்கம் காரணமாக அந்நிய செலாவணி பற்றாக்குறை உருவாகியுள்ளது.

இலங்கை, கொடுப்பனவு சமநிலை மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடியை அனுபவிக்கத் தொடங்கியதுடன், வெளிநாட்டு இருப்புக்கள், கடனைச் செலுத்துவதற்குப் போதுமானதாக இன்மையால், அரசாங்கக் கடன் சுமை அதிகரித்தது.

பரிமாற்ற கையிருப்பை கட்டியெழுப்புவதற்கு அதிகாரிகள் குறுகிய கால நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், இந்த வருடத்துக்கு அப்பால் இலங்கையால் எவ்வாறு பாரிய கடன் சேவையை பேண முடியும் என்பது தெளிவற்றதாகும்.

இந்தச் சூழலில் நிதி ஸ்திரத்தன்மையை கட்டியெழுப்புவது, வருமான வளர்ச்சியின் அடிப்படையில் அமைய வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

வெட் எனப்படும் பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி விகிதங்களை அதிகரித்தல் மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகள் மூலம், சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

நிதி அபாயத்தைக் குறைக்கும் வகையில், வலுசக்தி விலை நிர்ணயம் சீராக்கப்பட வேண்டும் என்பதுடன், நட்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களை மீள்கட்டமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## IMF உடன்...

உறுப்புரை 4' ஆலோசனை மற்றும் பணிக்குழாம் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய வங்கி தமது நிலைப்பாட்டை அறியப்படுத்தியுள்ளது.

## IOC பெற்றோல்...

இதன்படி, ஒக்டென் 92 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 303 ரூபாவாகும். அத்துடன், ஒக்டென் 95 ரக பெற்றோல் லீட்டர் ஒன்றின் புதிய விற்பனை விலை 332 ரூபாவாகும்.

## இலங்கைக்கு....

கொழும்பிலுள்ள சீன தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலங்காலமாக இரு நாடுகளும் பரஸ்பரம் ஆதரவளித்து வருவதால் சீன அரசு இந்த முடிவை எடுத்துள்ளது.

## பேருவளை, தர்காநகரில்...

வாசகர் வட்டம் ஏற்பாடு செய்துள்ள முப்பெரும் விழா இன்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதிகளில் மிக விமர்சையாக நடை பெறவுள்ளது.

பேருவளை மற்றம் தர்காநகர் தினகரன் வாசகர் வட்டம் ஏற்பாடு செய்துள்ள இவ்விழாவில் கலை, கலாசார மற்றும் பிரமுகர் கௌரவிப்பு நிகழ்வு தர்காநகர் ஸாஹிரா தேசிய பாடசாலை எம்.ஐ.எம் நளீம் ஹாஜியார் ஞாபகர்த்த மண்டபத்தில் இன்று 27 ஆம் திகதி காலை 09.00 மணிக்கு தினகரன், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும்.

தர்காநகர் ஸாஹிரா தேசிய பாடசாலை, அல்ஹம்ரா மகா வித்தியாலயம், அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை, அண்ணாசிகளை தமிழ் வித்தியாலயம், மதுகம கலைமகள் மகா வித்தியாலயம், வெலிப்பன்னை ரஹ்மானிய்யா முஸ்லிம் தேசிய பாடசாலை, பேருவளைப் பகுதியில் உள்ள சீனன் கோட்டை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை, நளீம் ஹாஜியார் மகளிர் தேசிய பாடசாலை, மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை, மஹகொட ஐ.எல்.எம் ஸம்ஸூதீன் மகா வித்தியாலயம் ஆகிய தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் மாணவர்களது கலை கலாசார நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இம் முப் பெரும் விழாவை முன்னிட்டு தர்காநகர் ஸாகிரா கல்லூரி வளாகம் விழாக் கோலம் பூண்டுள்ளது.

பேருவளை, தர்காநகர் வாசகர் வட்டத்தின் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான தேசமான்ய அல் ஹாஜ் பாஸி ஸூபைர் தலைமையில் இதற்கான பரவலான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சமய சமூக, கலை, கலாசார கல்வி மற்றும் ஊடகத்துறை, மற்றும் விளையாட்டுத் துறைகளில் பணிசெய்த 30 பேரும் மற்றும் தேசிய மட்டத்தில் பிரசித்தி பெற்ற 10 பிரமுகர்கள் இந்த விழாவில் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கொரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த சில்வா கலந்து கொள்வார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் பேருவளை பிரதேச சபைத் தலைவர் மேனக விமலரத்ன, பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், உப தலைவர் முனவ்வர் ரபாய்தீன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம் அஸ்லம் ஹாஜியார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இப்திகார் ஜெமீல், எம்.எம்.எம் அம்ஜாத், பேருவளை நகர சபை எதிர்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி, பேருவளை பிரதேச சபை முன்னாள் தலைவர் எ.ஆர். எம் பதியுத்தீன், தர்கா நகர் ஸாகிரா கல்லூரி அதிபர் நிஸ்ரின் அஷ்கர், பேருவளை ஹெட்டிமுல்லை பேர்கர் ஸிடி புட்சல் விளையாட்டு மைதான உரிமையாளர் பாஹிம் தாலிப், ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்துகொள்வர்.

பேருவளை நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள் உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள், அளுத்கமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, லேக் ஹவுஸ் பத்திரிகை விற்பனை முகவர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள், விளையாட்டுக் கழக தலைவர்கள், சமூக நல இயக்கங்களின் முக்கியஸ்தர்கள், தினகரன் வாசகர் வட்ட உறுப்பினர்கள் உட்பட தினகரன் ஆசிரிரியர்பீடத்தைச் சேர்ந்த இணை ஆசிரியர், செய்தியாசிரியர், பிராந்திய செய்தியாசிரியர், துணை ஆசிரியர்கள், ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொள்வர்.

அதே சமயம் பேருவளை ஹெட்டிமுல்லை புட்சல் பேர்கர் சிடி விளையாட்டு மைதானத்தில் தினகரன் வெற்றிக்கிண்ணத்திற்காக மாபெரும் உதைப்பந்தாட்டப் போட்டியொன்றும் இன்று 27 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெரும் அணிக்கு தினகரன் வெற்றிக் கிண்ணத்துடன் 25,000 ரூபா ரொக்கப்பணமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிக்கு ரனசப் கிண்ணத்துடன் 15,000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படும். அதே சமயம் சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர் சகல ஆட்ட வீரர், ஆகியோருக்கும் பெறுமதிவாய்ந்த பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

தினகரன் ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த எம்.என்.எம் ரிம்ஸானின் ஏற்பாட்டில் அணிக்கு 05 பேர் கொண்ட உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி அன்றைய தினம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அன்றைய தினம் அதே மைதானத்தில் பரிசளிப்பு வைபவம் நடைபெறும். இந்த உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்துவதற்கு ஹெட்டிமுல்லை பேர்கர் ஸிடி புட்சல் விளையாட்டு மைதானத்தை அதன் உரிமையாளர் பாஹிம் காலிப் இலவசமாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தேசமான்ய பாஸி ஸூபைரின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கிரிகெட் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி பேருவளை மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை 04 மணிக்கு நடைபெறும்.

மேற்படி சுற்றுப்போட்டி பேருவளைப் பகுதியிலுள்ள 32 விளையாட்டு கழகங்கள் பங்குபற்றின. இச்சுற்றுப்போட்டி ஆரம்பப் போட்டிகள் கடந்த 19, 20 ஆம் திகதிகளில் அதே மைதானத்தில் நடைபெற்றன.

கிரிகெட் சுற்றுப்போட்டியில் வெற்றி பெரும் அணிக்கு தினகரன் வெற்றிக் கிண்ணத்துடன் 25,000 ரூபா ரொக்கப்பணமும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் அணிக்கு ரனரப் கிண்ணத்துடன் 15,000 ரூபா ரொக்கப்பணமும் வழங்கப்படும். அதே சமயம் சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த வீரர், சிறந்த துடுப்பாட்டக்காரர் ஆகியோருக்கும் பெறுமதிவாய்ந்த பரிசில்களுடன் சான்றிதழ்களும் வழங்கப்படும்.



## கொலையும் செய்யும் காதல்

# காதலியையும் குடும்பத்தையும் கொளுத்திய முன்னாள் காதலன்

கட்டுகஸ்தோட்டை பொருளாதார மத்திய நிலையத்திற்கு அருகில் மெனிக்கும்புர வத்த இருக்கிறது. அங்கு தாய் தந்தையருடன் வாழ்ந்தார் மேனகா. ஒரு முறை பார்த்தால் மறுமுறை திரும்பிப் பார்க்க வைக்கும் அழகி. கலஹாவைச் சேர்ந்த தியாகராஜா (பாபு) பல வருடங்களுக்கு முன்னர் காய்கறிக் கடையில் வேலை செய்வதற்காக முதலில் கட்டுகஸ் தோட்டைக்கு வந்தவர். பிழைப்பிற்காக பல தொழில்களை செய்தவர். கடைசியாக தங்க நகைக் கடையில் வேலை செய்தார். பாபுவிற்கும் மேனகாவிற்கும் இடையில் காதல் மலர்ந்து 12 ஆண்டுகள் ஆகின்றன. கொழுந்து விட்டெறிந்த காதல் மனமுறிவால் மூன்று உயிர்களையும் எரித்துச் சாம்பலாக்கும் என எவரும் கனவிலும் நினைத்திருக்க மாட்டார்கள். பாபுவை மறுதலித்து, பெற்றோரின் விருப்பத்துடன் வேறொருவரை மணம் முடிக்க மேனகா மேற்கொண்ட தீர்மானத்தை சகித்துக் கொள்ள முடியாத பாபு, மேனகாவை மாத்திரமன்றி, அவரது தந்தையின் உயிரையும் பறித்துக் கொண்டு தமதுயிரை மாய்த்துக் கொண்டார்.

சம்பவம் நடந்த தினமான கடந்த 24ஆம் திகதி பெற்றோல் அல்லது அதனையொத்த திராவகமொன்றை எடுத்துக் கொண்டு, மேனகாவின் வீட்டை பாபு அடைந்த போது நேரம் காலை 6.00 மணியளவில் இருக்கும். வீட்டில்



மேனகாவின் சகோதரர் கமல்

மேனகாவும், அவரது தந்தையான ஈஸ்ரன் தேவனும் (71 வயது), தாய் ராணியம்மாவும் (65) மாத்திரமே இருந்திருக்கிறார்கள். இருவருக்கும் இடையிலான வாக்குவாதம் உச்சத்தைத் தொட்டதொரு சந்தர்ப்பத்தில், பாபு கையில் இருந்த திராவகத்தை மேனகாவின் மேல் வீசியெறிந்திருக்கிறார். பின்னர் நெருப்பைப் பற்ற வைத்திருக்கிறார். அதனைத் தொடர்ந்து பற்றிக் கொண்ட தீ, முழு வீட்டிலும் பரவியிருக்கிறது. எவரும் நெருங்க முடியாதவாறு தீச்சுவாலைகள் உக்கிரமாக இருந்திருக்கின்றன. ஓலமிடும் சத்தம் கேட்டு வீட்டிற்கு அருகில் இருந்த இளைஞர்கள் வீட்டின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றபோது, மேனகாவின் தாய் ராணி அம்மாவை மாத்திரமே காப்பாற்ற முடிந்தது.

ஸ்தலத்தில் நடந்ததை ரிஸ்வான் ஜமால்தீன் விபரிக்கிறார்: 'நானும் மெனிக்கும்புரவத்தையில் வாழ்பவன். காலை 7.00 மணியளவில் ஈஷ்வரன் மாமாவின் வீட்டில் தீப் பற்றி எரிவதைக் கண்டேன். ராணியம்மா ஓலமிட்டதைக் கேட்டேன். கதவுகள் மூடியிருந்தன. கதவுகளை உடைத்துத் திறந்தபோது, தீச்சுவாலைகள் வெளியேயும் பரவின. சுவாலைகளுக்கு மத்தியில் ராணியம்மா தரையில் தவழ்ந்து கொண்டு கதவருகே வந்தார். அவரது உடலில் தீக்காயங்கள். வெளியே இழுத்து எடுத்தோம். மகளைக் காப்பாற்றுங்கள் என்று ராணியம்மா கத்தினார். அவனும் வந்திருக்கிறான் என்றார். நாம் வீட்டுக்கு செல்ல முடியவில்லை. அந்தளவுக்கு நெருப்புச் சுவாலைகள். வீட்டில் இருந்த இரு கேஸ் சிலிண்டர்களும் தீப்பற்றி எரிந்துகொண்டிருந்தன, கணவரையும் மகளையும் காப்பாற்றுமாறு ராணியம்மா கெஞ்சிக் கேட்டாலும் கூட, எவரும் வீட்டை நெருங்க முடியாத நிலையே இருந்தது. வேறு வழியின்றி கண்டி மாநகர சபையின் தீயணைப்புப் படையை அழைத்தோம். அவர்கள் வரும் வரை காத்திருந்தோம். சுமார் இருபது நிமிடங்களில் தீயணைப்புப் படை வந்தது. தீயை அணைத்தபோதும், வீட்டினுள் இருந்த மூன்று பேரையும் காப்பாற்ற முடியவில்லை.'

வீட்டினுள் என்ன நடந்தது என்பதை அறிந்தவர், ராணியம்மா மாத்திரமே. அவர் படுகாயங்களுடன் கண்டி தேசிய வைத்தியசாலையில சிகிச்சை பெற்று வருகிறார். அவர் பொலிஸிற்கு அளித்த வாக்குமூலத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: 'மகளைக் காதலித்த இளைஞன் முதல் நாள் இரவும் வீட்டுக்கு வந்தார். வேறொருவரை மணம் முடிக்க மேனகாவிற்கு இடமளிக்க மாட்டேன் என்று சூளுரைத்துள்ளார். மேனகா விரும்பாவிட்டால் ஏன் வற்புறுத்துகிறீர்கள் என்று நாம் கேட்டபோது, அதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்னார். மறுநாள் காலை அவர் பின் கதவால் உள்ளே நுழைந்திருக்கிறார். அவரது கையில் ஒரு கொள்கலன் இருந்திருக்கிறது. அதில் இருந்ததை மகளின் மேல் வீசியெறிந்ததும், உடனடியாக தீப்பற்றிக் கொண்டது.'

பூர்வாங்க விசாரணையில் தாம் கண்டறிந்த விடயங்களை கண்டி பிரிவிற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷமில் ரட்னாயக்க விபரித்துக் கூறினார்: 'இது



காதல் முறிந்ததால் ஏற்பட்ட பிரச்சினையின் விளைவு என்பது புலனாகியிருக்கிறது. இந்த இளைஞனுக்கும், யுவதிக்கும் இடையில் 12 வருடகால காதல் தொடர்பு இருந்ததாக அறியக் கிடைத்தது. சமீபகாலமாக, இந்தக் காதல் தொடர்பில் மேனகாவிற்கு நாட்டம் குறைந்துள்ளது. இதன் காரணமாக, இருவருக்கும் இடையில் சச்சரவுகள் தீவிரம் பெற்றுள்ளன. சம்பவம் நடந்த தினத்தன்று பாபு ஒரு கொள்கலனுடன் மேனகாவின் வீட்டுக்கு சென்றுள்ளார். அதனைத் தொடர்ந்து சம்பவம் நடந்துள்ளது. இந்த நபர் ஆரம்பத்தில் பெண்ணைக் கொளுத்தி இருக்கலாமென பூர்வாங்க விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இரசாயன பகுப்பாய்வு அறிக்கை கிடைத்ததும் என்ன திராவகம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியக் கூடியதாக இருக்கும். எதனையும் நிச்சயமாகக் கூற முடியும்.'

மேனகாவின் தந்தையான ஈஷ்வர தேவன் கட்டுகஸ்தோட்டை ரணவன வீதியில் சுருட்டுக் கடையொன்றை நடத்தியவர். இவர் வெற்றிலைக்கூறு, சிகரட், சுருட்டு போன்றவற்றை விற்பனை செய்து அதில் கிடைக்கும் வருமானத்தின் மூலம் வாழ்க்கையை நடத்திச் சென்றவர் என பிரதேசவாசிகள் கூறுகிறார்கள். சில சந்தர்ப்பங்களில் தந்தைக்கு உதவியாக மேனகாவும் கடையில் நிற்பது வழக்கமாக இருந்தது. வீட்டில் பிட்டு, இடியப்பம் போன்றவற்றை தயாரித்து, அவற்றை கடைகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தைப் பெறுவதிலும் இந்தக் குடும்பம் ஆர்வம் காட்டியிருந்தது. கொவிட் பெருந்தொற்று நிலை காரணமாக, வியாபார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. வாழ்க்கையைக் கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டதால், ஈஷ்வரதேவன் பகல் நேரம் முழுவதையும் பெட்டிக்கடையில் செலவழித்தார்.

மேனகாவின் தோழியான எஸ்.சப்னா பழைய ஞாபகங்கள் மீட்டிப் பேசினார்: 'மேனகா நல்ல நண்பி. அவர் அயலவர்களுடன் நட்பாகப் பழகுவார். யாருடனும் சண்டையிட்டதில்லை. அவருக்கு நடந்த கதியை நம்பவே முடியவில்லை.'



மேனகாவின் தோழி சப்னா

மேனகாவின் காதல் தாய், தந்தையருக்கும், குடும்பத்தில் ஏனையவருக்கும் உவப்பானதாக இருக்கவில்லை. பாபுவுடனான தொடர்பை நிறுத்துமாறு வற்புறுத்தி இருக்கிறார்கள். அத்துடன், மேனகாவிற்கு வேறொருவரை திருமணம் செய்துகொடுக்க திட்டமிட்டார்கள். பாபுவுக்கு நிரந்தர தொழில் இல்லை. அவர் தங்கநகைக் கடையில் வேலை செய்தபோது, மோசடியயொன்றில் சிக்கி, ஆறு மாத காலம் வரை சிறைவாசம் அனுபவித்தார். இந்தக் காலப்பகுதியில் மேனகா மிகவும் மாறியிருக்கிறார் என்பதை பாபு உணர்ந்திருக்கிறார். தம்மை மறந்து விட வேண்டாம் என அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறார். தாம் 12 வருடகாலம் சம்பாதித்த பணத்தில் அவர் அதிகம் செலவழித்தது, காதலிக்காகத் தான். மேனகா பாபுவைத் தொடர்ந்து புறக்கணித்த போதிலும், பாபு அவர் பின்னால் சென்றிருக்கிறார். இரு வாரங்களுக்கு முன்னர் மேனகாவின் சகோதரர், ரணவன சந்தியில் வைத்து, தங்கையைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என எச்சரித்ததாகவும் தெரிகிறது.

மேனகாவின் சகோதரர் கமல் தகவல் தருகையில், 'நான் நுகேவலையில் வசிக்கிறேன். சம்பவ தினத்தன்று பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்து சென்ற போது நண்பரிடம் இருந்து அழைப்பு வந்தது. பெரும் பிரச்சினை நடந்திருப்பதாகக் கூறினார். மெனிக்கும்புர வீட்டுக்கு வருமாறு கேட்டுக் கொண்டார். நான் வீட்டுக்கு சென்றபோது முழு வீடுமே எரிந்திருந்தது. நினைக்காததெல்லாம் நடந்தது.'



பாபுவுடன் மேனகா

தீயில் கருகிய வீட்டில் இருந்து இலட்சக்கணக்கில் பணமும் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் பணத்தில் 20.00, 50.00, 100.00, 500.00, 1000.00 ரூபா பெறுமதியான ரூபா நோட்டுக்களும் இருந்தன. இவை உரப் பையொன்றில் இடப்பட்டிருந்தன. பெருந்தொகை நோட்டுக்கள் எரிந்தும் இருந்தன. சேமிக்கப்பட்டிருந்த பணமானது, மேனகாவின் திருமணத்திற்காக ஈஷ்வரதேவனும், ராணியம்மாவும் சேர்த்து வைத்ததென தெரியவந்திருக்கிறது. பணத்தை வங்கியில் சேமிப்பதை விடவும், தன்னிடம் வைத்துக் கொள்வதில் ஈஷ்வரதேவன் ஆர்வம் காட்டியமை இதற்குக் காரணமாக இருக்கலாமென நண்பர்கள் சொல்கின்றனர்.

வீட்டில் ஏற்பட்ட தீயினால் மூன்று உடல்களும் முழுமையாக கருகியிருந்தன. சிறிய அறையில் ஈஷ்வரதேவனின் உடல் இருந்தது. சற்று அப்பால், ஒருவரை ஒருவரை அரவணைத்துக் கொண்டிருந்த நிலையில், மேனகா,



பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரசிக்க சம்பத்



பாபு ஆகியோரின் சடலங்கள் இருந்தன. உடலில் தீவைத்துக் கொண்டதை அடுத்து, பாபு மேனகாவை அணைத்துக் கொண்டாரா என்ற சந்தேகம் பொலிசாருக்கு உள்ளது. எவ்வாறேனும், வீட்டுக்குள் நுழைந்தவுடன் அவர் தாழ்ப்பாளை இட்டு, வீட்டை மூடிக்கொண்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரசிக்க சம்பத்தின் ஆலோசனைக்கு அமைய, பொலிஸ் இன்ஸ்பெக்டர் குலசேன தலைமையிலான குழுவினர் விசாரணைகளை நடத்துகிறார்கள்.

**– எம்.ஏ.அமீனுல்லா**



நமது வீட்டுத்தோட்டத்தில் ஆரம்பிப்போம் !

நச்சுத்தன்மையற்ற புதிய காய்கறிகள், பழ வகைகள் கீரை வகைகள் மற்றும் ஏனைய வேளாண்மைகளின் பசுமையின் புதிய ஆரம்பம் !

- சுற்றுச் சூழலுக்கு சாதகமான வாழ்க்கைமுறை
- அன்றாட உணவுக்கான செலவுகளைக் குறைத்து கூடுதல் வருமானம் ஈட்டலாம்
- வரையறுக்கப்பட்ட நிலத்தை முடிந்தளவு பயன்படுத்துதல்
- ஆரோக்கியமான மக்கள்தொகையை உருவாக்குதல்

எதிர்காலத்திற்கான ஆரோக்கியமான, பசுமையான உணவுப் பயிர்களை நாமே வளர்ப்போம்

பதிவுசெய்துக்கொள்ள சந்தியுங்கள்

- கிராம உத்தியோகத்தர்
- விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்
- சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்
- குடும்ப சுகாதார சேவை அதிகாரி

விசாரணைகள் - விவசாயத் துறையின் விவசாய ஆலோசனை சேவை - 1920

கமத்தொழில் அமைச்சு

# பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு BIMSTEC வழிவகுக்கும்

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட 'பிம்ஸ்டெக்' அதாவது 'வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவுக்கான முன்னெடுப்பின்' (Bay of Bengal Initiative for Multi Sectoral Technical and Economic Cooperation BIMSTEC) உச்சிமாநாடு எதிர்வரும் 30ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.



பிம்ஸ்டெக் அமைப்பின் தற்போதைய தலைமைப் பதவியை வகிக்கும் இலங்கை இம்மாநாட்டை நடத்துகிறது. வங்காள விரிகுடா பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இம்மாநாட்டில் கலந்துரையாடல்கள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு நடத்தப்படவிருந்த 05 ஆவது உச்சிமாநாடு உலகளாவிய கொவிட் பெருந்தொற்று நிலைமை காரணமாக உரிய வேளையில் நடத்தப்படவில்லை. இந்த நிலையில், இவ்வருடம் இதனை நடத்த இலங்கை இணக்கம் தெரிவித்திருந்தது.

## நேரில் வருகை தந்தும், மெய்நிகர் வழியாகவும் ஏழு உறுப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பு

இம்மாநாடு கலப்புமுறையில் நடைபெறவுள்ளது. பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் சிலர் நேரடியாக வருகை தந்து கலந்து கொள்ளவிருப்பதுடன், சிலர் மெய்நிகர் முறையின் ஊடாக (ZOOM) இணைந்து கொள்ளவுள்ளனர்.

கடந்த 2021 ஏப்ரல் மாதத்தில் இக் குழுவின் வெளிவிவகார அமைச்சர்கள் மெய்நிகர் முறையில் சந்தித்து கலந்துரையாடலை நடத்தியிருந்தனர். பிராந்தியத்தில் பொதுவான பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வது குறித்து பொதுவான கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கான திட்டங்களை வகுப்பதற்கு இந்த மெய்நிகர் சந்திப்பு உதவியது.

## பிம்ஸ்டெக் அமைப்பின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ

இவ்வாறான நிலையில், இம்முறை நடைபெறவிருக்கும் 'பிம்ஸ்டெக்' உச்சிமாநாடு பௌதிக ரீதியாக உறுப்பினர்களின் நேரடி பங்கேற்புடன் நடத்தப்பட்டால் அனுகூலங்கள் அதிகம் உள்ளன. பிம்ஸ்டெக் அமைப்பு நாடுகளின் பொருளாதாரத்தை கொவிட் தொற்று பாதித்திருக்கும் இந்நிலையில் இலங்கை பிராந்தியத்தில் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்வதற்கு இம்மாநாடு வழிவகுப்பதற்கு இடமுண்டு.

இருந்தபோதிலும் பிம்ஸ்டெக் அமைப்பு நாடுகள் சிலவற்றின் தலைவர்கள் மெய்நிகர் வழியாக கலந்து கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்கள். நேரடியாக பங்கேற்போர் மற்றும் மெய்நிகர் வழியாக பங்கேற்போர் விபரங்கள் இறுதியிலேயே தெரியவரும்.

பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளின் இராஜதந்திர பயிற்சி அல்லது கல்வி நிறுவனங்களுக்கு இடையே பரஸ்பர ஒத்துழைப்பு, குற்றவியல் விஷயங்களில் பரஸ்பர சட்ட உதவி, போக்குவரத்து இணைப்புக்கான திட்டம் உள்ளிட்ட ஆவணங்கள் கொழும்பில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் கைச்சாத்திடப்படவுள்ளன.

'பிம்ஸ்டெக்மீள்திறன் கொண்ட பிராந்தியம், வளமான பொருளாதாரம் மற்றும் ஆரோக்கியமான மக்களை நோக்கி' என்பது 5வது பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டின் கருப்பொருளாகும்.

பிம்ஸ்டெக் அல்லது 'வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பு' என்பது தென்கிழக்கு ஆசியாவிலும் அமைந்துள்ள ஏழு நாடுகளை உள்ளடக்கிய ஒரு பன்னாட்டு அமைப்பாகும். இந்த அமைப்பில் இலங்கை, பங்களாதேஷ், இந்தியா, மியன்மார், தாய்லாந்து, நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகள் உள்ளடங்குகின்றன. இவை அனைத்தும் வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள நாடுகளாகும்.

**கொழும்பில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகின்றது 'வங்காள விரிகுடா பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவுக்கான முன்னெடுப்பின்' (Bay of Bengal Initiative for Multi Sectoral Technical and Economic Cooperation BIMSTEC) ஐந்தாவது உச்சிமாநாடு**

14 முன்னுரிமைத் துறைகள் இனங்காணப்பட்டு, இவைகளில் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க பல நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் வரியில்லா வர்த்தக உடன்பாடு செய்து கொள்ள பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இந்நாடுகளில் தலைமை வகிக்கும் பொறுப்பு அகர வரிசையில் ஒவ்வொரு நாட்டுக்கும் வழங்கப்படும். இதன் நிரந்தர செயலகம் டாக்காவில் அமைந்துள்ளது.

1997 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி பாங்காக் நகரில் (BIMSTEC வங்காள தேசம், இந்தியா, இலங்கை, தாய்லாந்து பொருளாதாரக் கூட்டுறவு) என்ற துணை பிராந்திய அமைப்பு உருவாக்கப்பட்டது. 1997 டிசம்பர் 22 இல் மியன்மார் நாடும் இதன் முழு உறுப்பினரானது. முதலில் நேபாளம் ஒரு பார்வையாளர் நாடாக இருந்தது. பின்னர் நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் முழு உறுப்பு நாடுகளாக இணைந்து கொண்டன.

வங்காள விரிகுடாவில் அமைந்துள்ள நாடுகளிடையே தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டுறவை மேம்படுத்த 14 நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன. வணிகம், முதலீடு, தொழில்நுட்பம், சுற்றுலா, மனித வள மேம்பாடு, வேளாண்மை, மீன் வளம், போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு, நெசவு, தோல் உள்ளிட்டவை இதில் அடங்குகின்றன.

இதனை விடவும், கல்வி, தொழிற் கல்வி, தொழில்நுட்பத் துறைகளில் ஆராய்ச்சி செய்வது மற்றும் பயிற்சியளிப்பது, கூட்டுறவை வளர்ப்பதும் இதன் நோக்கமாகும். இந்த நாடுகளின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு, சமூக, தொழில்நுட்ப மற்றும் அறிவியல் துறைகளில் ஒவ்வொரு நாடும் மற்றவற்றுக்கு உதவி செய்து எல்லோரும் நன்மையடைய வேண்டும் என்பதும் இதன் நோக்கம்.

பிம்ஸ்டெக் அமைப்பு, உலக சனத்தொகையில் 22 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய போதும், உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சதவீதம் மட்டுமே இவ்வமைப்பு பங்களிப்புச் செய்கிறது. எனவே, பிராந்தியத்தின் சவால்களை வெற்றி கொள்வதற்காக, உறுப்பு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை சிறந்த முறையில் பேணவும், பகிர்ந்த முன்னேற்றத்திற்கான பல வாய்ப்புகளைப் பயன்படுத்தவும், உறுப்பு நாடுகளை பலமாக ஊக்குவிப்பதாக இந்த அமைப்பின் தற்போதைய தலைவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களைப் போலவே, அனைத்து பிம்ஸ்டெக் முயற்சிகளுக்கும் இலங்கை முழுமையான அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும், மக்களுக்காக பகிரப்பட்ட சுபீட்சத்தையும் அமைதியையும் அடைந்து கொள்வதற்கு, அனைத்து பிம்ஸ்டெக் உறுப்பு நாடுகளும் இணக்கமாகச் செயற்படுவோம் என்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

பல்வேறு சவால்களை இலங்கை சந்தித்திருக்கும் சூழ்நிலையில் இந்தியா உதவ முன்வந்துள்ளது. இவ்வாறான காலகட்டத்தில் கொழும்பில் நடைபெறவிருக்கும் பிம்ஸ்டெக் மாநாடு இலங்கைக்கு பல்வேறு வகைகளில் உதவிகளை வழங்குவதாக அமையும் என்பதே எதிர்பார்ப்பாக உள்ளது. அதாவது இலங்கைக்கு அனுகூலங்களை இம்மாநாடு ஏற்படுத்தித் தருமென்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பி.ஹர்ஷன்...

# உலகை தனது காலடிக்கு கொண்டு வரும் இலக்கில் சீனா வகுத்துள்ள வியூகம்!

சீனா தனது அளவு கடந்த செல்வத்தைஉலக நாடுகளுக்கு கடனாக கொடுப்பது வழக்கம். உலக நாடுகள் சிலவற்றை கடன் ஊடாக தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான் சீனாவின் திட்டம். தனது எதிரிநாடுகளின் சிநேகித நாடுகளை தனது வலைக்குள் வீழ்த்துவதில் சீனா கண்ணும்கருத்துமாக காய் நகர்த்தி வருகின்றது.

பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் நாடுகளை கடன் ஊடாக கவர்ந்திழுத்து, அந்நாடுகளுக்கு அதிக வட்டிக்கு கடன் கொடுத்து, இறுதியில் அந்நாடுகளை தனது பிடிக்குள் வைத்திருப்பதே சீனாவின் தந்திரமான திட்டம். இவ்வாறு சில நாடுகளை சீனா தனது பிடிக்குள் வைத்திருக்கின்றது. பொருளாதார நெருக்கடியில் சிக்கித்

## நரேந்திர மோடி ஆட்சியில் இருக்கும் வரை இந்தியாவிடம் சீனாவின் தந்திரம் பலிக்கப் போவதில்லை!



தவிக்கும் நாடுகளை தன் வலைக்குள் வீழ்த்தும் தந்திரத்தை நன்கு புரிந்து வைத்துள்ள நாடு சீனா. இந்தியாவுடன் ஏனைய நாடுகள் நெருக்கமான நட்புறவு கொண்டிருப்பது சீனாவுக்குப் பிடிப்பதில்லை. இந்தியாவையும் அதன் நட்பு நாடுகளையும் எவ்வாறாவது பிரித்து விடுவதில் சீனா அக்கறையாக செயற்பட்டு வருகின்றது. அதற்கான உதாரணங்களை இங்கே குறிப்பிட வேண்டிய அவசியமில்லை. இதுதான் சீனாவின் தந்திரம்.

சீனா தற்போது தனது நாட்டின் வட மேற்கு பக்கத்தில் பாகிஸ்தானில் 4.5 இலட்சம் கோடி ரூபாவுக்கு (இந்திய நாணய பெறுமதி) முதலீடு செய்து, தன்வசப்படுத்தி வருகிறது. இதுவும் பாகிஸ்தானுக்கு கடன்தான். பாகிஸ்தானை சீனா தற்போது அதிகளவில் கடன்வலைக்குள் சிக்க வைத்து விட்டது.




சீனாவின் கனவுத் திட்டமான, 'பெல்ட் அன்ட் ரோட்' என்ற நீண்ட பாதையானது சீனாவிலிருந்து பாகிஸ்தானின் கூடார் துறைமுகம் வரை செல்கிறது. மேலும் பாலங்கள், அணைகள், கூடார் துறைமுகம் வரை ரயில் பாதை, கனிம தொழிற்சாலை என அனைத்திற்கும் சீனா தனது மிகப் பெரிய வர்த்தக வங்கி வாயிலாக பாகிஸ்தானுக்கு கடன் கொடுத்திருக்கிறது. பாகிஸ்தான் தனது மொத்த கடனில் பத்திலொரு பங்கை சீனாவிடமிருந்துதான் வாங்கியுள்ளது. பாகிஸ்தான் ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் உள்ளது. உலக நாடுகளில் இருந்து அதிக கடமை வாங்கியுள்ளது பாகிஸ்தான் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்தியாவின் விரோத நாடான பாகிஸ்தானை ஒட்டுமொத்தமாக தனது வலைக்குள் வீழ்த்தினால் இந்தியாவை எதிர்ப்பது சீனாவுக்கு இலகுவாக இருக்கும் என்பதுதான் மறைமுகத் திட்டம்.

## தென்சீனக் கடல் முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதே சீனாவின் கனவு!

2050 இற்குள் உலகை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, அனைத்து முயற்சிகளையும் சீனா மேற்கொண்டு திட்டமிட்டு செயலாற்றி வருவதாக சர்வதேச ஆய்வாளர்கள் கூறுகின்றனர். தனது நிலத்தின் கடைக்கோடியில் ஒட்டிக் கொண்டு, தனிநாடாகச் செயல்பட்டு வரும் தாய்வானை கைப்பற்றுவது சீனாவின் நீண்ட காலத் திட்டம்.இப்போது ஆப்கானிஸ்தானை அடிமையாக்கும் முயற்சியில் சீனா இறங்கி இருக்கிறது.

## 'பெல்ட் அன்ட் ரோட்' (அன்றைய பட்டுப் பாதை) ஊடாக தென்கிழக்கு ஆசிய நாடுகளான பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, கம்போடியா, வியட்நாம் போன்ற நாடுகளை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க சீனா திட்டமிடுகின்றது. இதன் வாயிலாக சீனாவிலிருந்து ஐரோப்பா, மத்திய ஆசிய நாடுகளான கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், ஆப்கானிஸ்தான் வாயிலாக பாகிஸ்தான் வரை மத்திய கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், ஆபிரிக்க நாடுகளுக்கும் சீனா எளிதாக சென்று விடலாம்

இந்தியாவை சுற்றியுள்ள நாடுகளை தன் வசத்தில் வைத்துக் கொண்டால் பாகிஸ்தான் வாயிலாக, இந்தியாவுக்கு காஷ்மீரில் தொல்லை கொடுப்பது போல், அருணாச்சல பிரதேசத்தில் தொல்லை கொடுத்து, 2025 இற்குள் அதை கைப்பற்றுவது சீனாவின் திட்டம்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, கம்போடியா, வியட்நாம் போன்ற நாடுகளை தன் கட்டுப்பாட்டில் வைக்க, நீண்ட நெடிய திட்டத்தை சீனா வைத்துள்ளதாக சர்வதேச ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் வாயிலாக, தென்சீனக் கடல் முழுவதையும் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வரலாம் என்று சீனா திட்டம் தீட்டுகின்றது.

ஆபிரிக்கக் கண்டத்தில் 54 நாடுகள் உள்ளன. எல்லா நாடுகளிலும் சீனாவின் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. சீனாவின் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இவ்விடங்களில் பணியாற்றுகின்றனர். போக்குவரத்துக்கான பாலங்கள், அணைகள், உயர்ரக வீதிகள், ரயில்வே பாதை, பாராளுமன்றம், கட்டடங்கள், அரசு கட்டடங்கள் என அனைத்தும் அந்நாடுகளில் சீனாவின் செலவுதான்.

கனிம வளங்கள், சுரங்கங்கள் வெட்டி எடுப்பது, ஆபிரிக்க மாணவர்களுக்கு உதவித்தொகை கொடுத்து சீனாவில் உள்ள கல்லூரியில் படிக்க வைப்பது, ஆபிரிக்க நாட்டை 'பெல்ட் அன்ட் ரோட்' (அன்றைய பட்டுப்பாதை) வாயிலாக, மத்திய ஆசியாவிலிருந்து இணைப்பது என பலதரப்பட்ட வேலைகளில் சீனா ஈடுபட்டுள்ளது. இதன் வாயிலாக, சீனாவிலிருந்து ஐரோப்பா, மத்திய ஆசிய நாடுகளான கிர்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மெனிஸ்தான், ஆப்கானிஸ்தான் வாயிலாக பாகிஸ்தான் வரை மத்திய கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், ஆபிரிக்க நாடுகளுக்கும் எளிதாக சென்று விடலாம்.



இது சீனாவின் உயிர்நாடித் திட்டம். ஆபிரிக்காவில் உயர் ரக 'கம்ப்யூட்டர் சேர்வர்களை' சீனா தன் பொருளாதார முன்னேற்ற வேலைகளை கண்காணிக்க அமைத்தது. இந்த சேர்வர்கள், சீனாவிலுள்ள ஷங்காய் தலைமை சேர்வரோடு இணைக்கப்பட்டுள்ளன.

(21ஆம் பக்கம் பார்க்க)

# கட்சிகளின் கருத்தறிந்து நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் அரசு மிகுந்த அக்கறை




**டொலர் பற்றாக்குறை போன்ற காரணிகளால் இலங்கை எதிர்கொண்டிருக்கும் பல்வேறு சவால்களுக்குத் தீர்வு காணும் பொருட்டு ஜனாதிபதி சர்வகட்சி மாநாடொன்றை நடத்தியிருந்தார். மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு தீர்வு காணும் நோக்கில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**

அதற்கு திறந்த கலந்துரையாடல்கள் தேவைப்படுகின்றன.

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதற்கான முன்னோடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்தின் முழுமையான அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அறிக்கை அரசாங்கத்துக்கு கிடைத்துள்ளதாக அறியமுடிகிறது. அரசாங்கம் வெளிநாட்டு கையிருப்பு தொடர்பில் கட்சிகளுடன் கலந்துரையாடும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும். நிதி தொடர்பில் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும் என



அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க ஜனாதிபதி இந்த சர்வகட்சி மாநாட்டைக் கூட்டியிருந்தார். ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கைத் தமிழரசுக் கட்சி, தேசிய காங்கிரஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், ஐக்கிய மக்கள் கட்சி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகள், ஸ்ரீலங்கா மகஜன கட்சி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கை



மக்கள் காங்கிரஸின் சில உறுப்பினர்கள், தேசிய முஸ்லிம் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை அமைப்பு போன்றவற்றின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசு இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்பதை அவர்கள் அனைவரும் வலியுறுத்தியிருந்தனர்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு நாம் அனைவருமே பொறுப்பு என்பதால், தீர்வு பெற்றுக் கொள்வதிலும் அனைவருக்கும் பொறுப்பு உண்டு. தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு



## அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது காலத்தின் தேவை

காண, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

குறுகிய கால மற்றும் நீண்ட கால உத்திகளை முன்னெடுப்பதன் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்குக் கொண்டு வர வேண்டியது அவசியம் என்பதையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

சர்வகட்சி மாநாடு நேர்மையான ஒரு முயற்சி ஆகும். இதில் எந்த வித அரசியல் இலாபமோ குறுகிய நோக்கமோ கிடையாது. சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துக் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை மீளாய்வு செய்வதற்கு பொறிமுறை ஒன்றை உருவாக்கி, பயனுள்ள முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்காக குழுவொன்றை அமைக்க முடியுமென்றும் ஜனாதிபதி இம்மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

சர்வகட்சி மாநாட்டின் ஆரம்பத்தில் நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகள் குறித்து மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அனைவருக்கும் தெளிவுபடுத்தியிருந்தார். இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்திருந்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இந்த நிலைமைக்கு ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதில் பயனில்லை. குறுகிய அரசியல் நோக்கத்தைக் கைவிட்டு அனைவரும் ஒன்றுபட்டு நாட்டை மீட்டெடுப்பதற்கு செய்ய வேண்டியதைப் பற்றி ஆராய்வதே பொருத்தமானது எனக் கூறியிருந்தார்.

நாட்டு மக்கள் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் பெருமளவிலான மக்கள் போஷாக்கின்மையை எதிர்கொண்டுள்ளனர். நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். பொருளாதார

செயற்பாடுகள் ஒரு கட்டமைப்புக்குள் மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். நாட்டின் குறுகிய, நீண்ட கால பொருளாதார கொள்கை தயாரிப்பு தொடர்பில் அனைத்துக் கட்சிகளின் ஒன்றிணைந்த இணக்கப்பாடு அவசியமாகும்.







> **மக்களை வீதியில் இறக்கி போராடுவதால் எவ்வித பயனுமில்லை; சர்வகட்சி மாநாட்டை எதிர்க்கட்சி புறக்கணித்தமையானது மக்கள் நலனில் அக்கறையற்ற பொறுப்பற்ற செயல்!**



அதேபோல, மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் எப்பொழுதும் சுட்டிக்காட்டும் தேசிய மக்கள் முன்னணி அதாவது ஜே.வி.பியினரும் இந்த மநாட்டைப் புறக்கணித்திருந்தனர். மக்களின் மீது உண்மையில் அக்கறை உள்ள தரப்பினராக இருந்திருந்தால் சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம் என்ற பரிந்துரைகளை முன்வைத்திருக்க வேண்டும்.

இதனை விடுத்து ஏற்கனவே பல்வேறு இன்னல்களைச் சந்தித்திருக்கும் மக்களை மேலும் உருவேற்றி வீதியில் இறங்கிப் போராடும் நிலைக்குத் தள்ளுவது ஏற்புடையதல்ல.

ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேநேரம், அரசாங்கம் அபிவிருத்தி செயற்பாடுகளை நிறுத்தி நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார். அத்துடன் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும் போது அரசின் திட்ட வரைபு ஒன்றை கொண்டு செல்வது முக்கியமானது.

நாட்டு மக்கள் பெரும் கஷ்டமான நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில் மக்களை அதில் இருந்து மீட்பதற்காக மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்த மாநாட்டில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர்கள் அனைவரும் கலந்து கொண்டிருந்தனர். நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் புதியதொரு வரவுசெலவுத் திட்டத்தை முன்வைக்கத் தயாராக இருப்பதாகவும், சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி, தமிழர் முற்போக்குக் கூட்டணி, விமல் விரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவித்துரு ஹெல உறுமய உள்ளிட்ட பல கட்சிகள் இம்மாநாட்டைப் புறக்கணித்திருந்தன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மக்கள் சார்பில் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பிலிருந்து விலகியிருப்பது இதன் மூலம் தெளிவாகத் தெரிகிறது.

நாடு பொருளாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும் சூழ்நிலையில், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது பற்றிய கருத்துகளை முன்வைப்பது சுயலாப அரசியலின் செயற்பாடாகவே பார்க்கப்படுகிறது. இவ்வாறான பின்னணியில் பிரதான எதிர்க்கட்சி உண்மையில் மக்கள் மீது அக்கறை

> **"நாடு பொருளாதார சிக்கலுக்குள் உள்ள வேளையில், ஆட்சியை எவ்வாறு கைப்பற்றலாம் என்பதிலேயே எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அக்கறை!**



கொண்டிருக்கும் கட்சியாக இருந்தால், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு மக்களின் பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துக் கூறி மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பற்றிய விரிவான கலந்துரையாடல்களை முன்னெடுத்திருக்க வேண்டும்.

பிரதான எதிர்க்கட்சி கடந்த காலங்களிலும் அரசாங்கத்தை விமர்சிப்பதைத் தவிர எவ்வித ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் முன்வைக்கவில்லையென்றே கூற வேண்டும். கொவிட் பரவல் ஆரம்பித்தது முதல் எடுத்ததற்கு எல்லாம் அரசாங்கத்தை விமர்சிப்பதையே அவர்கள் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் மக்களைக் கூட்டி வீதியில் இறக்கி தமது மக்கள் பலத்தைக் காண்பித்த எதிர்க்கட்சியினர் ஏன் பொதுவான மேடையில் மக்களின் பிரச்சினை பற்றி அனைத்துக் கட்சிகளுடனும் விவாதிக்கக் கூடாது?

சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்ததன் மூலம் பிரதான எதிர்க்கட்சியாக அவர்கள் செய்ய வேண்டிய பொறுப்பைத் தட்டிக் கழித்துள்ளார்கள் என்றே கூறலாம்.

இருந்தபோதும், சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொள்ளாத கட்சிகளையும் இணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் மூலம் நாட்டின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது என்பதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேபோல, எதிர்க்கட்சிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் இந்த சர்வட்சி மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை, கலந்து கொள்ளாத கட்சிகளையும் எதிர்காலத்தில் கலந்து கொள்ளச் செய்வதற்கு முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனவே, மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உண்மையான அக்கறையுள்ளவர்களாயின் இதுபோன்ற பொது மேசையில் விரிவான கலந்துரையாடல்களில் பங்கெடுப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகள் முன்வர வேண்டும். இதுவே நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் ஆரோக்கியமானதாக அமையும்.

## கண்டி மாவட்டத்தில் பறிபோகும் தோட்டக் காணிகள்

# காணிகளை வேண்டுமென்றே காடாக்கி கூறுபோடுகிறார்கள்!

### கண்டி மாவட்டத்தில் அரசு நிர்வகிக்கும் ஜனவசம தோட்டங்களே அதிகம்



இத்தோட்டங்களின் தேயிலை காணிகள் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைதான். எல்லாத் தோட்டங்களிலும் 30 சதவீதத்திற்கும் அதிகமான காணிகள் காடாகிக் கிடக்கின்றன. கலஹா குறுப், தெல்தோட்டை குறுப், கிறேட்வெளி போன்ற தோட்டங்களில் 70 சதவீதத்திற்கும் அதிகமான தேயிலை காணிகள் காடாக்கப்பட்டு தரிசு நிலங்களாகியுள்ளன.

பல இடங்களில் காடான இந்த தேயிலை காணிகளில் தீவைக்கப்பட்டு தேயிலைச் செடிகள் எரிந்து சாம்பலாகி தற்போது புல்தரையாக காட்சியளிக்கின்றன.

கலஹா, தெல்தோட்டை, வத்தேகம, பன்வில, நாவலப்பிட்டி, புப்புரஸ்ஸ, ஹேவாஹெட்ட உட்பட பல பகுதிகளை சேர்ந்த பகுதிகளில் உள்ள அரச தோட்டங்கள் காடாகிக் கிடக்கின்றன.

இத்தோட்டக் காணிகள் தனிநபர் மற்றும் நிறுவனங்களுக்கு குத்தைகளுக்கு அல்லது விலைக்கு விற்கப்பட்டு வருகின்றன. 50 ஏக்கர், 100 ஏக்கர் என அரசியல்வாதிகளின் அல்லக்கைகளுக்கும் அடிவருடிகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கையில் முதன் முதலில் தேயிலை நடப்பட்ட லூல்கந்துர தோட்டத்தில் கூட தேயிலைக் காணிகள் காடாக்கப்பட்டுள்ளன. இத்தோட்டப் பகுதிகளில் புதிதாக தொழிலாளர்களை தொழிலுக்கு இணைத்துக் கொள்வதும் மிகக்குறைவு. இதனால் தொழில்வாய்ப்புகள் இன்றி தோட்ட பகுதிகளை சேர்ந்த இளைஞர், யுவதிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதேவேளை கொழும்பு போன்ற வெளியிடங்களில் தொழில் புரிந்து வந்தவர்களும் கொரோனா காரணமாக தொழில் வாய்பை இழந்து தோட்டப்பகுதிகளுக்கே மீண்டும் வந்துள்ளனர்.

இவர்களுக்கு சுயதொழிலை உருவாக்கி கொள்ள தரிசாக இருக்கும் தோட்டக் காணிகளை இவர்களுக்கு பகிர்ந்து வழங்கி விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுகைத் தொழில் போன்ற துறைகளில் ஈடுபட வழிவகுப்பதன் மூலம் இவர்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.

அண்மையில் நாவலப்பிட்டி பகுதிகளில் ஜனவசம தோட்டங்களில் உள்ள தரிசு காணிகள் ஒரு ஏக்கர் வீதம் தோட்ட இளைஞர்களுக்கு விவசாய அமைச்சர் மஹிந்தானந்த தலைமையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரசுக்கு சொந்தமான பெருந்தோட்டக் காணிகள் பெருமளவில் வெளிநபர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு தொழிலாளர்கள் கடும் எதிர்பை தெரிவித்து வந்த போதும் இந்த செயல் அசுர வேகத்தில் இடம்பெற்று வருகின்றது. திட்டமிட்ட வெளியார் குடியேற்றங்களும் இடம் பெறுகின்றன. கலஹா குறுப்பில் 2500 ஏக்கர் தேயிலை காணிகளில் தற்போது 300 ஏக்கருக்கும் குறைந்த அளவிலான காணி மட்டுமே எஞ்சியுள்ளன.



தரிசாகிக்கிடக்கும் தேயிலை மலை



புல்லுக் காடான விளைச்சல் காணி



காடான நிலத்தில் குளவிக்கூடு





இருந்திருக்க வேண்டியது தேயிலைக்காடு

மாட்டுப்பட்டி, சுற்றுலாத்துறை, சிறுதேயிலை தோட்டங்கள் என பலவற்றுக்கு இந்த தோட்டக் காணிகள் கடந்த அரசு காலத்திலும் இந்த அரசு காலத்திலும் வழங்கப்பட்டுள்ளன.

இரண்டு அரசிலும் எமது மலையக அரசியல்வாதிகள் அங்கம் வகித்து உள்ளனர். இருந்தும் இவர்கள் இது தொடர்பாக கண்டு கொள்ளவே இல்லை.

அரசையும் அமைச்சர்களையும் திருப்திபடுத்த இவர்கள் தொழிலாளர்களை காட்டிக்கொடுத்துள்ளனர். தற்போது தெல்தோட்டை கிறேட்வெளி தோட்டத்தில் 200 ஏக்கர் காணியை தனிநபருக்கு கொடுக்க ஏற்பாடாகி காணிகள் அளக்கப்பட்டு வருகின்றன. இதற்கு கடும் எதிர்பை கிறேட்வெளி மக்கள் வெளிப்படுத்துகின்றனர்.

இலங்கையில் முதன் முதலில் தேயிலை நடப்பட்ட லூல்கந்துர தோட்டத்தில் நூற்றுக்கணக்கான ஏக்கர் தேயிலை காணிகள் காடாகிக் கிடக்கின்றன. தேயிலைக் காணிகளை திட்டமிட்ட ரீதியாக காடாக்குவதாக மக்கள் கூறுகிறார்கள். தேயிலை காணியாக இருக்கும் போது வெளிநபர்களுக்கு வழங்கும் போது தொழிலாளர்கள் மத்தியில் இருக்கும் எதிர்ப்பின் கடுமை தேயிலை காணிகள் தரிசாக்கப்பட்டு வழங்கும் போது குறைவடைகின்றது.

இவ்வாறு திட்டமிட்டு தேயிலைக் காணிகளை காடாக்குவது ஜனவசம நிறுவனமே என்கிறார்கள் தொழிலாளர்கள். தோட்ட நிர்வாகம் தாம் நினைத்தது போல் தோட்டத்தை காடாக்கவோ விற்பனை செய்யவோ குத்தகைக்கு வழங்கவோ முடியாது. ஆனாலும் அரசின் மறைமுக ஆதரவோடு இது நிகழ்வதாக சொல்லப்படுகிறது.

மாறிமாறி வரும் அரசாங்கங்களும் ஒரே நடைமுறையையே கையாளுகின்றமை இதை உறுதிப்படுத்துகின்றது. தோட்டக் காணிகளை வழங்குவதற்கு அமைச்சரவையின் அனுமதி பெற வேண்டும்.

அநேகமாக மலையக தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ச்சியாக அமைச்சரவையில் அங்கம் வகித்து வருகின்றனர். அவர்களுக்கு தெரியாமல் தோட்ட காணிகளை சுவீகரிக்க முடியாது. எனவே இவர்கள் அமைச்சரவையில் ஆமாம் சாமி போடுகின்றார்களா? என்ற கேள்வி எழுகிறதல்லவா?

கண்டி மாவட்டத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகக்கூடிய அளவில் தமிழ் வாக்குகள் இருந்த போதும் கடும் பிரயதனத்திற்கு மத்தியிலேயே நீண்ட இடைவெளிக்கு பிறகு ஒரு தமிழர் தெரிவாகியுள்ளார். இது ஒரு தனி நபரின் செல்வாக்கால் ஆனது.

மக்களோ மனமுடைந்த நிலையில் பெரும்பான்மை கட்சிகள் அரசியல் வாதிகளுடன் உள்ளனர். மஹிந்தானந்த, லக்ஷ்மன் கிரியெல்ல, அனுராதா ஜயரட்ன என இவர்கள் பின்னால் அதிகமானவர்கள் உள்ளனர்.

இந்த தொழில் சங்கங்களிலேயே அதிக தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். இதற்கு என்ன காரணம்? கண்டி மாவட்டத்தில் அதிகமான ஆசிரியர்கள் அமைச்சர் மஹிந்தானந்த ஆசிரியர் சங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

நமது தமிழ் அரசியல் பிரமுகர்கள் மக்களை தமது கட்டுக்குள் வைக்கத் தவறிவிட்டனர். தோட்டங்களில் தோட்ட நிர்வாகங்களும் தொழிலாளர்களை பிரித்து ஆளும் தந்திரத்தை கையாளுகின்றன. தண்டுமுண்டுகாரனுக்கு தயிறும் சோறும் என்பது போல் கொஞ்சம் துடிப்பானவர்களை பிரித்து தனி கட்சிக்கு தலைவராக்கி கங்காணி காவல் என பதவி வழங்குகின்றனர்.

ஒற்றுமையே பலம் என்பது இன்று எம்மவர் மத்தியில் இல்லை. 100 தொழிலாளர்களுக்கு 5 தலைவர்கள், 5 கட்சிகள் இது தோட்ட நிர்வாகத்திற்கு வாசியானதுதான். இவ்வாறு பிரித்து ஆளும் பிரித்தானியரின் தந்திரத்தை அன்றும் தோட்ட நிர்வாகங்கள் கடைப்பிடித்தன. அன்று எம்மவர் ஒற்றுமையை உடைக்க முடியவில்லை. மீண்டும் ஒன்றுபட்டால் மட்டுமே இருக்கும் கொஞ்ச தோட்டக் காணிகளையாவது பாதுகாக்க முடியும்.

படங்கள்: தெல்தொட்ட

**எம். ஆர், நவராஜா ...**

# செயலற்ற நிலையில் தொழிலாளர் பாதுகாப்பு சட்டங்கள்

### சங்கங்களும் கட்சிகளும் தமது சமூக பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்

நாட்டில் சர்வதேச ரீதியிலான தொழிற்சட்டங்கள், உள்நாட்டுக்குப் பொருத்தமான தொழிற்சட்டங்கள் என்பன நடைமுறையில் உள்ளன. இதேவேளை பெருந்தோட்டத் துறைக்கு மட்டுமென சில விசேட சட்டங்களும் உள்வாங்கப்படுகின்றன. இருந்தும் பெருந்தோட்டத் துறையைப் பொருத்தமட்டில் இச்சட்டங்கள் அனைத்தும் செயற்படுகின்றனவா எனும் கேள்வி எழுகின்றது. பெருந்தோட்ட வேலைத்தளங்களில் அன்றாடம் இடம்பெறும் நிகழ்வுகள் தொழிலாளர்களுக்கான சட்டங்கள் மீறப்படுவதையே கோடிட்டுக் காட்டுகின்றன.

1889ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சி தொழிலாளரது வேலையை ஒழுங்குபடுத்தும் முகமாக தோட்டத் தொழிற்சட்டம் ஒன்றைப் பிரத்தியேகமாக கொண்டு வந்தது. இதன் பேரில் தோட்டம், சம்பளம், செக்ரோல், ரெஜிஸ்டர் போன்ற சொற்பதங்கள் பயன்பாட்டுக்கு வந்தன. 1912, 1913களில் பெருந்தோட்டத் தொழிலாளரது வீட்டு வசதி, சுகாதார விதிமுறைகளை விரிவுபடுத்தும் இரண்டு புதிய சட்டங்களை காலனித்துவ ஆட்சி அமுலுக்குக் கொண்டு வந்தது.

1934ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட தொழிலாளர் நட்டஈட்டுச் சட்டம் மிகவும் முக்கியமானது. இச்சட்டம் துறைசார் தொழிலாளரது பாதுகாப்பை விதந்துரைத்தது. இதன்படி தொழில்புரியும் தருணத்தில் ஏற்படும் விபத்துக்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்பட வலியுறுத்தியது. நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் மேலும் பல புதிய சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கிலேயே அமுலுக்கு வந்தன. குறிப்பாக தொழில் பிணக்கு சட்டம் (1930), சேமலாப நிதிச் சட்டம் (1958), தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தோட்டத்திற்குள் பிரவேசிக்கும் அனுமதி சட்டம் (1970), தோட்டக் குடியிருப்புச் சிறப்புச் சட்டம் (1971), காணி சீர்திருத்தச் சட்டம் (1972) சேவைக்கால பணம் வழங்கும் சட்டம் (1983) ஊழியர் நம்பிக்கை நிதியம் (1980) என்பன தொழிலாளரது எதிர்கால நலன் குறித்ததான அம்சங்களை உள்ளடக்கிய சட்டங்களாகவே காணப்படுகின்றன.

பெருந்தோட்டக் கட்டமைப்பு பிரத்தியேகமாக சில இறுக்கங்களை உள்ளடக்கிய அமைப்பு. இத்துறைசார் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தையே மையமாகக் கொண்டு இயங்கும் வகையில் இதனை உருவாக்கியவர்கள் காலனித்துவ ஆட்சியாளர்கள் தான். ஆனால் அபத்தம் என்னவென்றால் சுதேசிய முகாமைத்துவங்களும் அம்முறையையே இன்னும் கைக்கொண்டு வருவதுதான். தோட்ட நிர்வாகம் சார்ந்த வாழ்வியல் சுழற்சியில் இருந்து விடுபட இயலாத நிலையில் பெருந்தோட்டச் சமூகமானது அவ்வப்போது சூழ்ச்சிகளிலும் சிக்குண்டு விழி பிதுங்க வேண்டியுள்ளது.

பிந்திய அம்சமாக 1000 ரூபா சம்பள அதிகரிப்பை முழுமையாக பெற முடியாத ஒரு சூழல் ஏற்பட்டிருப்பதும். இச்சூழச்சியின் ஒரு அங்கமே ஆகும். அரசாங்கத்தின் பொது வேலைத்திட்டம் பெருந்தோட்டப் பகுதிகளை உள்வாங்குவது கிடையாது. சேவைகள் மட்டுமின்றி அனர்த்த நிவாரணங்கள் கூட இவர்களை அண்டுவதில்லை. அண்மைக்கால கொவிட் 19 தொற்று நிவாரணம் 5000 பெற இவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்பது பிந்திய சான்று. பெருந்தோட்டச் சமூகத்தில் அதிக பட்சமானோர் வறுமைக் கோட்டிற்கு கீழேயே வாழ்கின்றனர்.

உழைப்பை விற்கும் கூலிச் சமூகமாக இவர்கள் கணிக்கப்படுவதால் ஏனோதானோ போக்கிலேயே நடத்தப்படுவது என்னவோ வெள்ளிடை மலை. சட்ட ரீதியாக இம்மக்களின் உரிமைகள்,தொழில்சார் பாதுகாப்பு பிரமாணங்கள் யாவும் உறுதிப்படுத்தப்படவே செய்கின்றன. ஆனால் நடைமுறையில் பலன் பெறத்தக்கதாக இல்லை.

1970 களில் பெருந்தோட்டங்கள் அனைத்தும் அரசுடைமை ஆக்கப்பட்டன. இது நிர்வாக ரீதியிலான மாற்றத்துக்கு வழி வகுத்தது. ஆனால் தொழிலாளர்களை நடத்தும் தன்மை அப்படியே தொடர்ந்தது. இது தோட்டங்களை நிர்வாகம் செய்வதற்கு வசதியாக இருந்ததே இதற்கான காரணம். 1972இல் பெருந்தோட்டங்கள் பல் தேசிய கம்பனி முகவர்களுக்கு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்டன. அதன் பின்னரும் பழைய போக்கே இற்றைவரை தொடர்கின்றது.

தொழிலாளர்களது சம்பள நிர்ணயம் மற்றும் நலன்புரி சேவைகள் சம்பந்தமான கூட்டு ஒப்பந்தம் இக்காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. இதில் தோட்டக் கம்பனிகளும் தொழிற்சங்கங்களும் கையெழுத்திட்டன. இந்த ஒப்பந்தத்தின் படி பெருந்தோட்ட மக்களின் உரிமைகள்,தொழில்சார் பாதுகாப்புகள், பொருளாதார அபிவிருத்திகள் பற்றி எல்லாம் விதிகள் சேர்க்கப்பட்டன. எனினும் பிற்காலத்தில் இது சம்பள நிர்ணயத்திற்கான ஒப்பந்தமாகவே எண்ணி சம்பந்தப்பட்ட தரப்புகள் நடந்து கொண்டுள்ளன. எனவே தான் தொழிலாளருக்கான நலன்புரி நடவடிக்கைகள் யாவும் கண்டு கொள்ளாமலே விடப்படுகின்ற நிலைமை நீடித்தது.

இந்த நிலையில் தான் கூட்டு ஒப்பந்தம் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. அரசு தலையீடு செய்து 1000 ரூபா நாட் சம்பளம் வழங்க ஆணையிட்ட பின் கம்பனிதரப்பு கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து நைஸாக நழுவி கொண்டு விட்டது. அதனை கட்டுப்படுத்த கடிவாளம் இன்றி பார்வையாளர் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள்.

தொழில் ரீதியிலான தொடர் நெடுக்கடிகளுக்குள் இன்று தொழிலாளர் சமூகம் தள்ளப்பட்டுள்ளது. குறிப்பாக பெண் தொழிலாளர்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சட்டங்களும் மனிதாபிமான ரீதியிலான அணுகுமுறைகளும் பின்னடைவைக் கண்டு வருகின்றன.

பெருந்தோட்டக் காணிகள் கவனிப்பாரற்று காடுகளாகி வருவதால் உயிருக்கு உத்தரவாதம் இல்லாமலே வேலை செய்ய வேண்டிய இக்கட்டுக்குள் பெண் தொழிலாளர்கள் பேதலித்து நிற்கிறார்கள். குளவிக்கொட்டு, தேனீக்கள் தாக்கு, பாம்புக் கடி, சிறுத்தைப் பயமென தொழிலாளர் அச்சத்துடனேயே அன்றாடம் தொழிலுக்குச் செல்கின்றார்கள். பாதுக்காப்புக் கவசங்கள் வழங்கப்படுவது இல்லை. உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. விபத்துக்கள், அனர்த்தங்களுக்கு உரிய நிவாரணங்கள் கூட கிடைப்பது இல்லை. சுகாதார நிலைமையோ படுமோசம் இருக்கும் மருத்துவமனைகளில் போதிய சிகிச்சைப் பெற வசதி இல்லை. வைத்தியர்கள் பற்றாக்குறை. மருந்து தட்டுப்பாடு. எனவே தனியார் சிகிச்சை நிலையங்களை நாட வேண்டிய தர்ம சங்கடம். பொறுப்புக் கூற வேண்டிய நிலை. தோட்ட நிர்வாகங்களோ எதைப் பற்றியும் எள்ளளவும் கவலைப்படுவது கிடையாது.

இதனால் தொழிற்சார் நன்மைகளைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. அவற்றுக்கான தனி ஏற்பாடுகள் இருந்தும் அவற்றைத் தக்க வைத்துக்கொள்ள பெருந்தோட்டத் தொழிற்சங்கங்கள் திராணியற்று காணப்படுகின்றன. பெண் தொழிலாளர்கள் பெரும் சுமையோடு தேயிலை மலைகளில் ஏறி இறங்குகிறார்கள். சுமையோடு நெடுந்தூரம் நடக்கின்றார்கள். மழை,வெயில், பனி, குளிர் என்று கால நிலைமைகளோடு போராடுகின்றார்கள். உயிரைப் பணயம் வைத்தே தொழில் செய்கின்றார்கள்.

வேலைத்தல விபரீதங்கள் இப்படி இருக்கும் போது வீட்டு வன்முறைகளும் விலாவெலும்பை முறிக்கின்றன. குடும்பப் பிரச்சினைகனைகள், பாலியல் கொடுமைகள், கட்டாய கல்யாணங்கள், குடும்பச் சுமையைத் தாங்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் என்று மன உளைச்சல்கக்கு உள்ளாகிறார்கள். அத்துடன் வேலைத்தளங்களிலும் வீடுகளிலும் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை வெளியில் சொல்'ல இவர்களுக்கு தெரிவதும் இல்லை. இதனால் பல படுபாதகங்கள் பதுங்குக் குழிக்குள் மூடப்படுகின்றன.

வேலைத் தளங்களில் ஓய்வறை, கழிவறை, சுத்தமான குடிநீர' வசதிகள் கிடைப்பது கிடையாது. தவிர சமூகத்துக்குள்ளும் அரச மட்டத்திலும் இவர்களுக்கான அங்கீகாரமோ கௌரவமோ வழங்கப்படுவது இல்லை. இன ரீதியிலான ஒடுக்குமுறைகளும் இடம் பெறவே செய்கின்றன. பொது மருத்துவ மனைகள், பொதுப் போக்குவரத்து சாதனங்களில் இதனை இப்பொழுதும் அவதானிக்கலாம்.

இவ்வாறான பின்புலத்தில் இவர்களுக்கான சமூக அந்தஸ்தைப் பெற்றுத் தருவதில் மலையக தொழிறிசங்கங்கள், அரசியல் அமைப்புகளின் பொறுப்புக்கள் சரியான முறையில் ஆற்றப்படுவதில்லை. இதன் காரணமாக இன்று பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் பாதுகாப்பிற்கான சட்டங்கள் கூட சத்தமின்றி மௌனித்துப் போயுள்ளன. அழுத பிள்ளைத்தான் பால் குடிக்கும் என்பார்கள். இங்கு அழ ஆயிரக் காணக்கானோர் இருக்கின்றார்கள், ஆனால் பாலுளட்டத்தான் யாருமே இல்லை.

**பன்.பாலா...**

## இலங்கையில் முழுமையான பிரஜைகளாக விரும்பும்

# இந்திய வம்சாவளி மலையக தமிழ் மக்களது அபிலாஷைகள் மற்றும் இலங்கை-இந்திய ஒப்பந்தங்கள்

**“இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர்” சார்பாக தமிழ் முற்போக்கு கூட்டணி முன்வைத்துள்ள அபிலாசை ஆவணம் இது, இலங்கை ஜனாதிபதி, இந்திய பிரதமர், பிரித்தானிய அரசு ஆகிய மூன்று தரப்புகளுக்கும் பிரதானமாக கையளிக்கப்பட்டது. அதை தவிர ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், ஜப்பான், கனடா, அவுஸ்திரேலியா. அமெரிக்கா தூதரகங்களுக்கும் அந்த நாட்டு அரசுகளுக்கும் அனுப்பப்படவுள்ளது.**

இது, மலையக தமிழர் என்று அறியப்பட்டுள்ள சமீபத்தையை இந்திய வம்சாவளி தமிழ் இலங்கையர்களின் விண்ணப்பமாகும். இலங்கை சமூகத்தில் தனித்துவமும், சமத்துவமும், கொண்ட மக்கள் என்ற அங்கீகாரத்தை கோரி, தொடர்ந்துவந்த இலங்கை அரசாங்கங்களிடம், நாம் தொடர்ச்சியாக முன்வைத்த கோரிக்கைகளுடன் இதுவும் தொடர்கிறது. இலங்கையில் சிங்கள, வடகிழக்கு தமிழ், முஸ்லிம் மக்களுடன் சமத்துவமான அடையாளம் கொண்ட சமூகமாக வாழ விரும்பும் எமது பேரவாவை இது வெளிப்படுத்துகிறது. 1980 இலிருந்து பல்வேறு அரசாங்கங்கள் முன்னெடுத்த அரசியலமைப்பு சீர்திருத்த செயன்முறைகளுடன் எமது அபிலாஷைகள் தொடர்புற்றுள்ளன.

### சமத்துவமுள்ள குடிமக்கள் என்ற அங்கீகார கோரிக்கைக்கான பின்னணி

ஏனைய சமூகங்கள் அனுபவிக்கும் அதே உரிமைகளை பெறுகின்ற முழுமையான குடிமக்கள் என்ற அங்கீகாரத்தையே சுதந்திரத்தின் பின் மலையக தமிழரது அரசியல் தலைமைகள் கோரி வந்துள்ளன. பாரபட்சமின்மை, சமூகத்தின் நலன்களையும், அடையாளத்தையும் பாதுகாக்கும் அரசியல் நிர்வாக ஏற்பாடுகள் ஆகியவையே எமது கோரிக்கைகள். நுவரெலியாவில் செறிவாகவும், ஏனைய பிரதேசங்களில் சிதறியும் வாழும் எமது மக்களின் விவகாரங்களை நிர்வகிக்க அவசியமான பாதுகாப்பு மற்றும் அரசியல் அதிகார குரல், சுயகௌரவம், கண்ணியம், சமாதானம் ஆகியவற்றை நோக்கியே இந்த கோரிக்கைகள் எழுகின்றன.

மலையக தமிழ் சமூகம், அன்று சிலோன் என்று அறியப்பெற்ற இலங்கைக்கு, 1800 களிலிருந்து, பிரித்தானிய முடியரசின் கீழிருந்த நிறுவனங்களால் கொண்டு வரப்பட்டனர். சுதந்திரம் பெற்ற போது மலையக தமிழ் சமூகமே இலங்கையில் இரண்டாம் பெரும்பான்மை இனமாக திகழ்ந்தது. ஆனால், அன்றைய அரசியலமைப்பின் 29(2) என்ற விதியையும் மீறி சர்ச்சைக்குரிய முறையில் அவர்கள் தம் குடியுரிமையை இழந்தார்கள். அதன் பின்னர் அநேகமானோர் பலவந்தமாக இந்தியாவுக்கு குடிபெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இது இச்சமூகத்தின் அரசியல் அந்தஸ்தையும் மற்றும் சமூக பொருளாதார நல்வாழ்வையும் பலவீனப்படுத்தியது.

நீண்டகாலமாக நாடற்று மற்றும் வாக்குரிமையற்று இருந்த நிலைமை, ஜனத்தொகை சரிவு, ஆகியவை, இன்றுவரையான நீண்ட பின்னணிகளாக அமைந்து, எமது இந்த கோரிக்கைகளை உருவாகியுள்ளன. இந்த சமூகம் எதிர்கொண்ட எம்மீதான திட்டமிட்ட வன்முறைகள், அதன் காரணமான உள்நாட்டு, வெளிநாட்டு இடம்பெயர்வுகள், பாரபட்ச, நேர்மையற்ற விளைவுகள், தொடர்ந்த ஒதுக்கல்கள் ஆகியவை எமது கோரிக்கைகளுக்கு ஏற்புடைமையை ஏற்படுத்துகின்றன.

### இந்திய வம்சாவளி மலையக தமிழர் நலன்கள் தொடர்பில் இந்தியாவின் நீடித்த அக்கறை

குடியுரிமை, அபிவிருத்தி, தொழில்வாய்ப்பு, வீடமைப்பு, கல்வி ஆகிய விவகாரங்கள் தொடர்பில் இந்தியா காத்திரமான பாத்திரங்களை வகித்துள்ளது. வரலாற்று உறவு, சர்வதேச நியமங்கள், புவியியல் மற்றும் மனிதாபிமான காரணங்கள் இவற்றுக்கான தேவைகளாக அமைந்துள்ளன. குடியுரிமை தொடர்பில் பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பரஸ்பர கலந்துரையாடல்கள், ஒப்பந்தங்கள் ஆகியவை கையெழுத்திட்ட தரப்புகளின் கடப்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. பரஸ்பர ஒப்பந்தங்களினால் மலையக மக்களின் அரசியல் அந்தஸ்தும், சமூகபொருளாதார நலன்களும் பலவீனமடைந்துள்ளன என்ற காரணம் இந்தியாவின் தார்மீக கடப்பாட்டை அதிகரித்துள்ளன.

இலங்கை, இந்திய நாட்டு தலைவர்களுக்கு இடையிலான இறுதியான ஒப்பந்தம் 1987ல் கையெழுத்தானது. ஆனால், அதற்கு முன், நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் (1954), சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் (1964), சிறிமாஇந்திரா (1974) ஒப்பந்தம் ஆகியவையும் நமது மக்களின் குடியுரிமை மற்றும் நலவுரிமைகள் தொடர்பிலான பரஸ்பர கடப்பாடுகளுடன் செய்யப்பட்டன. மேலும், ஜே. ஆர். ஜெயவர்தன, ஆர். பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ச ஆகிய தலைவர்களது நிர்வாகங்களுடன், இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ண முன்னெடுப்புகள் மூலமும் நீண்டகால குடியுரிமை பிரச்சினைகள் சட்டரீதியாக தீர்த்து வைக்கப்பட்டன.

மாகாணசபைகளை உருவாக்கிய 13ம் திருத்தத்தையும், மொழி உரிமைகளை உறுதிப்படுத்திய 16ம் திருத்தையும் கொண்டு வர 1987ன் இந்திய-இலங்கை ஒப்பந்தம் காரணமாகியது.

மாகாணசபைகள், இலங்கையின் அனைத்து ஒன்பது மாகாணங்களும் ஒருமட்ட அதிகார பரவலாக்கலை தந்ததுடன் மலையக மக்களுக்கும் தமது அரசியல் பிரதிநிதித்துவ குரலை ஒலிக்கும் வாய்ப்பை தந்தது. அரசியலமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மும்மொழி கொள்கை, சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும் இந்நாட்டின் ஒரு ஆட்சி மொழியாகவும், ஒரு தேசிய மொழியாகவும் அங்கீகரித்ததுடன். ஆங்கில மொழியை இணைப்பு மொழியாக ஏற்றுக் கொண்டது.

### இன்றைய அந்தஸ்தும், எமது கோரிக்கைகளும்

1.5 மில்லியன் இந்திய வம்சாவளி மலையக தமிழரின் இன்றைய அந்தஸ்து, நாம் கடந்து வந்த சரித்திரம் எம்மீது திணித்த நாடற்ற நிலைமை, குடியுரிமை தொடர்பிலான நிச்சயமற்ற தன்மை, வாக்குரிமை இழந்தமை ஆகியவற்றின் பிரதிபலனாகும். இது எமது சமூதாயத்தின் சமூகபொருளாதார நலன்களை பாதித்துள்ளது. பெருந்தோட்டங்களில் தொழில் புரியும், வாழும் பிரிவினரே, இந்திய வம்சாவளி மலையக தமிழருக்குள்ளே வாழும் மிகவும் பின்தங்கிய தரப்பினராகும். மிகவும் குறைந்த மனித வளர்ச்சி குறியீடுகளை கொண்டுள்ள இப்பிரிவினர், நாட்டின் ஏனைய பிரிவினருடன் ஒப்பிடுகையில் ஒதுக்கப்பட்ட பிரிவினராக உள்ளனர். தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, ஏனையவர்களை போன்று சமவுரிமையுள்ள முழுமையான குடிமக்களாவதை, இந்நிலைமை பாதிக்கின்றது.



இலங்கையின் குடிமக்களாக அங்கீகரிக்கப்பட்ட அனைவரும், வாக்குரிமை, நிலவுரிமை, அரச தொழில் உரிமை, அரச சேவைகளை பெறும் உரிமை ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான சம உரிமை மற்றும் உரிமைகளின் சமத்துவம் கொண்டவர்களாவர் என்பதுவே, பொதுவாக, 19541974 காலவரைக்கு இடைப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் பேச்சுவார்த்தைகள் ஆகியவற்றின் அடிப்படை சாராம்சமாகும். இத்தகைய சிந்தனையிலேயே, இரண்டு நாட்டின் தலைவர்களும் இந்த விடயங்களை அணுகினர். ஏனைய குடி மக்களுக்கு சமனான முறையில், வாக்குரிமை விவகாரம் முன்னேற்றம் கண்டிருந்தாலும் கூட, ஏனைய விவகாரங்களில் முன்னேற்றம் மிக மெதுவாகவோ, வரையறுக்கப்பட்டோ அல்லது முழுமையாக நிறுத்தப்பட்டோ இருக்கின்றன. தேசிய சராசரிகளை ஒப்பிடும் போது, சுகாதார தரவுகளில் தலைமுறை பின்னடைவு தெரிகிறது. தோட்டபுறங்களில் சுகாதார சேவைகள் இன்னமும் முழுமையாக தேசிய நீரோட்டத்துக்கு உள்ளே கொண்டுவரப்படவில்லை. வருந்தத்தக்க அளவில் நாம் அரச தொழில்களிலும், உயர் கல்விதுறையிலும், சமத்துவமாக நிர்வாக பணிகளிலும் இடம்பெறவில்லை.

இலங்கை அரசுகளுடனான, எமது சமூகத்தின் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளில் இவ்விவகாரங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பிட்ட கொள்கை பாரபட்சங்கள் மற்றும் நிறுவன தடைகள் ஆகியவற்றை கடந்து இன்றுவரை நாம் பெற்றுள்ள உத்தரவாதங்களையும், ஏற்பாடுகளையும் கூட, தற்போதைய தேர்தல்முறை மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள், பின்னடைவுக்கு உள்ளளாக்கி விடுமோ என அச்சம் கொண்டுள்ளோம்.

இலங்கை அரசின் அரசியலமைப்பு சீர்திருத்த முயற்சிகள் நடைபெறும் இப்பின்னணியில், பின்வரும் கோரிக்கைகளை இலங்கை அரசை கவனத்தில் எடுக்க செய்வதில் உங்கள் நல்லெண்ண உறவை பயன்படுத்துமாறு கோருகிறோம்;

i. பதின்மூன்றாம் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கத்துடன் மாகாணசபை தேர்தல்களை தாமதமின்றி உடன் நடத்தல்
ii. தமிழுக்கு சம அந்தஸ்து மற்றும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் அடங்கிய மும்மொழி கொள்கை ஆகியவற்றை அறிமுகப்படுத்திய பதினாறாம் திருத்தத்தின் முழுமையான அமுலாக்கம்
iii. தேசிய நீரோட்டத்தில் அமைப்புரீதியான ஒருங்கிணைவுடன் இலங்கை சமூக பரப்பில் தனித்துவ அடையாளம் கொண்ட அங்கமாக, மலையக சமுதாயம் முழு சமத்துவமான குடியுரிமையை பெற்று வாழ,

a) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நடத்திய முந்தைய சர்வ கட்சி மாநாட்டில் முன்மொழியப்பட்ட, நிலவரம்பற்ற சமூக சபை ஒன்றை, நுவர எலிய மாவட்டத்தில் செறிவாகவும், ஏனைய பகுதிகளில் சிதறியும் வாழும் இச்சமூகத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட விவகாரங்கள் தொடர்பில் பணியாற்ற அரசியலமைப்பு ரீதியாக உருவாக்குதல்
b) மத்திய, மாகாண, உள்ளூராட்சி மட்டங்களில் அதிகார பகிர்வு மற்றும் பரவலாக்கல் ஏற்பாடுகள்
c) அனைவரையும் உள்வாங்கும், சமச்சீர் பிரதிநிதித்துவ நோக்கில் நியாயமான தேர்தல் மற்றும் நிர்வாக எல்லை மீள் நிர்ணயத்துடன் கூடிய அனைத்து மட்டங்களிலும் அர்த்தமுள்ள விகிதாசார தேர்தல் முறைமை
d) நிலம், வீடு, தொழில், கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் இதுவரை காலமும் இழந்த வளர்ச்சிகளை எட்டிப்பிடிக்கும் நோக்கில், அரசியலமைப்பு ஏற்றுக் கொண்டுள்ள, மீளுறுதி (affirmative action) நடவடிக்கைகள்
e) தோட்ட குடியிருப்பு பிரதேசங்களை அரச பொது நிருவாக கட்டமைப்பின் கீழ் கொண்டு வந்து, தேசிய நீரோட்டத்தில் உள்வாங்குவதன் மூலம், நாட்டின் ஏனைய கிராமிய பிரதேசங்களில் நடைபெறுவதற்கு சமானமாக, தோட்ட பிரதேசங்களிலும் கிராம சேவகர் வலயங்கள், பிரதேச செயலக வலயங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, தோட்ட நிறுவனங்களுடன் பிணைக்கப்பட்டுள்ள தொழிலாளர் என்ற நிலையிலிருந்து விடுபட்டு, கிராமிய, பிரதேச, மாவட்ட மட்டங்களில் பரவலாக்கப்பட்ட அரச நிறுவனங்களின், நிருவாக மற்றும் நலவுரிமை சேவைகளை பெருகின்ற முழுமையான குடிமக்களாதல்

★★ நிலவரம்பற்ற சமூக சபை தொடர்பான விபரமான நகல் யோசனைகள், உங்களது அவதானம் மற்றும் இந்த யோசனைகளை இந்திய நிர்வாக அதிகார துறையின் மூலம் விருத்தி செய்து முன்னெடுத்தல், என்பவற்றுக்காக இத்துடன் பிற்சேர்க்கையாக இணைத்துள்ளோம்.



## நிலவரம்பற்ற சமூக சபை
## (Non–Territorial Community Council)

இந்திய வம்சாவளி மலையக தமிழ் இலங்கையர் நாடெங்கும் சிதறி வாழும் சிறுபான்மை மக்களுக்காக நிலவரம்பற்ற சமூக சபைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இந்த நிலவரம்பற்ற சமூக சபைகள் அரசியலமைப்பில் இடம்பெற வேண்டும்.

நாடெங்கும் சிதறி வாழும் மலையக தமிழ் மக்களுக்காக நிலவரம்பற்ற சமூக சபைகள் இயங்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சிறுபான்மை இனங்களை பாராளுமன்றம், மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் பிரதிநிதித்துவம் உறுப்பினர்கள், இந்த சமூக சபைகளில் நேரடியாக உறுப்பினர்களாக இடம்பெற வேண்டும்.

இலங்கை அரச நிர்வாக சேவையின் சிரேஷ்டதர அரச ஊழியர் இந்த சமூக சபை செயலகத்தின் பிரதம நிர்வாக அதிகார செயலாளராக செயற்பட வேண்டும். இந்த செயலாளருக்கு ஒரு அமைச்சின் செயலாளருக்கு உரிய அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். செயலக துணை செயலாளரும் நியமிக்கப்பட வேண்டும்.

சமூக சபையின் செயலாளருக்கு கீழ், இலங்கை நிர்வாக சேவை, மாகாண நிர்வாக சேவை ஆகியவற்றிலிருந்து உள்வாங்கப்படும் அதிகாரிகள் பணியாற்ற வேண்டும்.

சமூக சபையின் அவைக்கூட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க அவை செயலாளரும், துணை செயலாளரும் நியமிக்கப்பட வேண்டும்.

இந்த சமூக சபைகளில் தலைமை செயலகங்கள் தேசிய தலைநகரில் அமைக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றத்தில், மாகாணசபைகளில் சமர்பிக்கப்படும் மசோதாக்கள் இந்த சமூக சபைகளிலும் முன்வைக்கப்பட வேண்டும்.

சமூக சபைகளுக்கு முன்வைக்கப்படும், இந்த மசோதாக்களை ஆய்வு செய்யும்போது, அவை தாம் பிரதிநிதித்துவம் செய்யும் இனங்களின் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதார விடயங்களை பாதிக்கும் என கருதப்படுமாயின், அந்த மசோதாக்கள் தொடர்பில், அவசியமான திருத்தங்கள்/மாற்று யோசனைகள் பாராளுமன்றம், மாகாணசபைகள் ஆகியவற்றுக்கு முன்வைக்கப்பட வேண்டும்.

பாராளுமன்றத்திலும், மாகாணசபைகளிலும் முன்வைக்கப்படும் இத்தகைய திருத்தங்கள் எந்தளவு நடைமுறை அதிகாரமுள்ளவை என்பதை உயர்/அரசியலமைப்பு நீதிமன்றங்கள் தீர்மானிக்கும்.

தாம் பிரதிநிதித்துவம் செய்யும் இனங்கள் சார்பாக பின்வரும் துறைகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களை கண்காணிக்க, இடைநுழைய, பங்குபற்ற சமூக சபைகளுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

**ஆரம்ப, உயர்நிலை கல்வி மற்றும் தொழிட்நுட்ப பயிற்சி**
**ஆரம்பநிலை சுகாதாரம் மற்றும் போஷாக்கு**
**விளையாட்டு**
**கலாச்சாரம், மதம், மொழி விவகாரங்கள்**
**உட்கட்டமைப்பு அபிவிருத்தி வீடமைப்பு**
**வாழ்வாதாரம் (வேறு எதுவும்)**

நிலவரம்பற்ற சமூக சபை அவையின் செயற்பாடுகள் மகாணசபைகளின் செயற்பாடுகளுக்கு ஒத்ததாக, மும்மொழி சட்ட பாவனை, சமகால மொழிபெயர்ப்பு உட்பட, இருக்க வேண்டும்.

ஒரு தலைவர் (தவிசாளர்), ஒரு உபதலைவர் (உபதவிசாளர்) ஆகிய பதவிகளுக்கு, சபையின் அங்கத்தவரான பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும்.

சமூக சபை தமக்கு ஆலோசனை வழங்க, தகைமைவாய்ந்த விற்பன்னர்கள் அடங்கிய, அதிகாரபூர்வமான சான்றோர் குழு ஒன்ற பெயரிட்டு நியமிக்க வேண்டும்.

சமூக சபையின் முழுமையான அவைக் கூட்டம் என்பது சபை தலைவரின் தலைமையின் நடைபெறும், சபை உறுப்பினர்கள், சான்றோர் குழு உறுப்பினர்கள் அடங்கியதாக இருக்க வேண்டும்.

சமூக சபையின், சபை நடவடிக்கை குழுவால் தீர்மானிக்கப்படும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் அவை கூட்டங்கள் நிகழ வேண்டும்.

சமூக சபை அவைக்கூட்டங்களும், சபையின் துறைசார் குழு கூட்டங்களும் சபை தலைவரின் தலைமையிலும், தலைவர் வருகை தராத போது உப தலைவர் தலைமையிலும் நடைபெற வேண்டும்.

அனைத்து நிர்வாக சுழற்சி மற்றும் அபிவிருத்தி நிதி பயன்பாட்டு செலவீனங்களும், தேசிய பாதீட்டில் ஒதுக்கி தரப்பட வேண்டும்.

ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், பாராளுமன்றம், மாகாணசபைகள், மத்திய, மாகாண அமைச்சுகள், உள்ளூராட்சி மன்றங்கள், அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம அதிகாரிகள் உட்பட அனைத்து அரச நிர்வாக இயந்திரங்களும், சமூக சபைகளை அங்கீகரித்து பணியாற்ற வேண்டும்.

சமூக சபைகள், அவசியம் ஏற்படும் பட்சத்தில், தாம் பிரதிநிதித்துவம் செய்யும் சமூகங்களின் நல திட்டங்களுக்காக, வெளிநாட்டு, உள்நாட்டு உதவிகளை பெரும் அதிகாரம் கொண்டிருக்க வேண்டும்.

அத்தகைய அனைத்து நிதி பரிமாற்றங்களும் நிதி அமைச்சின் வெளிநாட்டு வள பிரிவின் (ERD) மூலமாகவே நடைபெற வேண்டும்.

அனைத்து தேசிய பாதீட்டு, உள்நாட்டு, வெளிநாட்டு நிதி வரவுகள் மற்றும் செலவுகள் தொடர்பில், சமூக சபை உள்ளக பாதீடு ஒன்றை சபையில் சமர்பிக்க வேண்டும்.

அனைத்து தேசிய பாதீட்டு, உள்நாட்டு, வெளிநாட்டு நிதி பயன்பாடுகளும் கணக்காய்வாளர் நாயகத்தால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

# வறிய குடும்பத்தில் பிறந்த சேவையாளர் ரிஸ்வான்



வறிய குடும்பத்தில் பிறந்து, வறுமையிலே வளர்ந்து, இன்று வறியோருக்கு உதவும் பரோபகாரியாக திகழ்பவர்தான் பேருவளை, மருதானையைச் சேர்ந்த முகம்மது ரிஸ்வான்.

இவர் மர்ஹும் முகம்மது தௌபீக் பாத்திமா ஜிப்ரியா தம்பதியின் புதல்வனாக 1977.07.19 ஆம் திகதி பிறந்தார். பேருவளை, மருதானையில் இயங்கிய பாத்தியதுன் நஸ்ரியா ஆரம்ப பாடசாலையில் இணைந்து ஆரம்பக் கல்வியைப் பெற்றார். அங்கு தரம் 4 வரை பயின்ற பின்னர், இன்று ஸேம் ரிபாய் ஹாஜியார் மகா வித்தியாலய மாக விளங்கும் அன்றைய முஸ்லிம் வித்தியாலயத்தில் தரம் 5 இல் இணைந்து கல்வியைத் தொடர்ந்தார். வறுமை, குடும்ப சூழ்நிலை காரணமாக கல்வியைத் தொடர முடியாத நிலையில் தரம் ஒன்பதுடன் பாடசாலைக் கல்விக்கு முழுக்குப் போட்டுக் கொண்டார்.

இவரது ஊர் பேருவளை கடற்கரையை அண்டிய பகுதியில் இருந்ததால், அங்குள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களுக்கு வந்து போகும் உல்லாசப் பயணிகளை சந்திக்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. அதனால் அவர்களுக்கான வழிகாட்டியாகச் செயற்படும் தொழிலில் இவரது 15 ஆவது வயதில் கால்பதித்தார். ஆனால் ஆங்கில மொழியறிவு இவருக்குப் பெரும் தடையாக அமைந்தது. ஆரம்பத்தில் அரைகுறை ஆங்கிலப் பேச்சு வழக்கில் செயற்பட்டுள்ளார்.

அப்போது அங்குள்ள விடுதியொன்றில் தங்கியிருந்த இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த உல்லாசப் பயணிகள் குடும்பம் ஒன்றுக்கு வழிகாட்டியாகச் செயற்பட்டுள்ளார். அப்போது இவரது ஆங்கில பேச்சுக் குளறுபடிகளை அவர்களால் உணர முடிந்துள்ளது. இச்சந்தர்ப்பத்திலேயே தம் வறுமை நிலை பற்றி எடுத்துரைத்து ஆங்கிலம் பேசுவதற்குரிய வசதியைச் செய்து தரும்படி கோரிக்கையை முன்வைத்துள்ளார். அவர்கள் அதற்கான போதிய பண உதவிகளை வழங்கியுள்ளனர். அதன் விளைவாக ஓர் ஆங்கில ஆசானை அமர்த்தி சில மாதங்களிலே நன்கு பேசக் கற்றுக்கொண்டுள்ளார். இந்த அதிஷ்டவசமான நிகழ்வின் பின்னர் தன் வழிகாட்டும் பணியைத் துரிதமாக வழிநடத்தியுள்ளார்.

இச்சந்தர்ப்பத்திலேயே இவருக்கு இரண்டாவது அதிஷ்டமொன்றும் கிடைத்துள்ளது. பேருவளையில் மற்றொரு பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஜேர்மன் நாட்டு உல்லாசப் பயணிக்கு வழிகாட்டும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவருடன் உரையாடும் சந்தர்ப்பத்தில் இத்தொழிலில் தனக்கு மேலதிக வருவாய் எதுவும் கிடைப்பதாக இல்லை. எனவே தனது குடும்ப வறுமையைப் போக்குவதற்கு வர்த்தக முயற்சி ஒன்றுக்கு உதவும்படி கேட்டுள்ளார். இவரது பேச்சினால் கவரப்பட்ட அவர் சில காலம் பொறுத்திருக்கும்படி கூறி இவரது பெயர் முகவரி, தொலைபேசி இலக்கங்களைப் பெற்று, நாடு திரும்பியுள்ளார். வாக்குறுதிப்படி மீண்டும் பேருவளைக்கு வந்த அந்த ஜேர்மன் வாசி, அவரது சொந்தச் செலவில் கடற்கரையை அண்டிய பகுதியில் திருமண மண்டபமொன்றை அமைத்துக் கொடுத்துள்ளார்.

அது, ரிஸ்வானுக்கு வருவாயைக் கொடுத்துக் கொண்டிருக்கையில், அதே ஜேர்மன் பரோபகாரி மூன்று வருடங்களின் பின் மீண்டும் இலங்கை வந்துள்ளார். மருதானை கடற்கரையில் உல்லாச பயணிகள் தங்கும் விடுதி அறைகள் கொண்ட கட்டடம் ஒன்றையும் கட்டிக் கொடுத்துள்ளார். அத்துடன் நின்று விடாது, அவர் இஸ்லாம் மதத்தையும் தழுவி இங்கு தங்கியிருக்கவும் செய்துள்ளார். இப்போது முகம்மது உமர் என தனது பெயரை மாற்றிக்கொண்டுள்ளார். இவருக்குப் பிரதி உபகாரமாக இலங்கைப் பிரஜா உரிமையும் பெற்றுக் கொடுப்பதில் ரிஸ்வான் கூடிய பங்களிப்புச் செய்துள்ளார்.

ரிஸ்வான் படிக்கும் பருவத்திலேயே சமூக கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்கள் எல்லாம் நன்குணர்ந்தும் எவ்வாறு வாழ வேண்டும் என்பதையும் அனுபவ ரீதியாகக் கற்றுணர்ந்ததாகக் குறிப்பிடுகிறார். அதனால் இப்போது எதிர்பாராத விதத்தில் பணம் வந்து சேர்வதால் தானும் பரோபகாரியாக சமூக நலப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இவ்வுதவிகள் ஆன்மிகம், கல்வித்துறைகளோடு ஏழைகளின் திருமணம், அநாதைகள், விதவைகள், தொழில் முயற்சியாளர்கள் என்று தேவையுடையோருக்கு பணத்தாலும் பொருளாலும் சேவைகள் சென்றடைந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் மருதானை அல் பாஸியத்துன் நஸ்ரியா ஆண்கள் பாடசாலைக்கு 15 இலட்சம் ரூபா செலவில் மூன்று வகுப்பறைக் கட்டடங்களை கட்டிக்கொடுத்துள்ளார். இதனையும் தனது தந்தையின் பெயரிலேயே செய்து கொடுத்து இவரது தாயாரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

திருமண மண்டபம், உல்லாச விடுதி ஆகிய இரண்டிலும் கிடைக்கும் வருமானத்தில் வருடம் 40 இலட்சம் ரூபாவை பொதுநல பணிகளுக்காக ஒதுக்கீடு செய்து வருவதாகவும் குறிப்பிடுகிறார்.

இந்த அடிப்படையிலே திகன கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கும் இயற்கை அனர்த்தங்களின் போதும் உதவி வருகிறார். பேருவளையைச் சேர்ந்த பாத்திமா ரிஸ்மினா என்ற பெண்ணை மணந்து இத்தம்பதிக்கு நான்கு குழந்தைச் செல்வங்கள். பணம் வந்து சேர்ந்த போதிலும் ஆடம்பர செலவுகள் ஏதுமின்றி சாதாரணமாகவே வாழ்ந்துவருகிறார். இவரது பணிகள் மேலும் தொடர வாழ்த்துவோம்.

கொரோனா காலத்திலும் வறிய மக்களுக்கு உலர் உணவுப்பொதிகளை வழங்கினார்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க அடிக்கடி விளையாட்டுப் போட்டிகளுக்காக நிதி உதவி செய்கிறார்.

**பீ.எம்.முக்தார்**
**பேருவளை**

# பொருளாதார நெருக்கடி தீர்க்க ஒரு சர்வகட்சி மாநாடு

## அபிவிருத்தி வரவு செலவு திட்டம் நிவாரண திட்டமாக மாறும்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த 23ம் திகதி புதன் கிழமை ஜனாதிபதி செயலகத்தில் சர்வகட்சி மாநாடு நடைபெற்றது.

அனைத்து கட்சிகளுக்குமான அழைப்பை ஜனாதிபதி விடுத்திருந்த போதும் பிரதான எதிர்க் கட்சி உட்பட பல கட்சிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

நாட்டின் முக்கிய கட்சிகளான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி தமிழ் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட முக்கியமான கட்சிகள் பல இந்த மாநாட்டில் கலந்துகொண்டு தமது யோசனைகளை முன்வைத்தன.

அந்தக் கட்சிகளின் தலைவர்கள் சர்வ கட்சி மாநாட்டில் கருத்துக்களை தெரிவித்த போது நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் தெரிவிக்கப்படும் அனைத்து யோசனைகளையும் உள்ளடக்கியதாக நடைமுறை சாத்தியமான வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்படுவது அவசியம் என்பதை வலியுறுத்தினர். நாட்டை தற்போதைய நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கான பூரண ஒத்துழைப்பை வழங்க முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைக்கு தீர்வாக சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது என்றும் அவ்வாறு செல்லும்போது நாட்டின் தற்போதைய நிலைமைகளை தெளிவாக எடுத்துரைத்து கடுமையான நிபந்தனைகளுக்கு உட்படாதவாறு அந்த உதவிகளை பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

மாநாட்டை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றிகளை தெரிவித்ததுடன் மாநாட்டில் கலந்து கொள்ளாத கட்சிகளிடம் இருந்தும் யோசனைகளை எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் தாராளமாக தமது யோசனைகளை முன் வைக்க முடியும் என்றும் தெரிவித்தார். இக்காலங்களில் புலம்பெயர்ந்த அமைப்புகள் நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு அழைப்பு விடுப்பது தொடர்பில் பல்வேறு தரப்பிலிருந்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் புலம்பெயர்ந்து வாழும் மக்கள் பலமாக உள்ள நிலையில் அவர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

கட்சித் தலைவர்கள் மட்டுமன்றி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மற்றும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளின் பிரதிநிதிகள் பலரும் இங்கு கருத்துக்களை முன் வைத்ததுடன் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு தீர்வு காணும் வகையில் ஆலோசனைகளையும் முன்வைத்தனர்.

கட்சித் தலைவர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட கட்சித் தலைவர்கள் தத்தமது கட்சிகளின் சார்பில் கருத்துக்களையும் யோசனைகளையும் முன் வைத்தனர்.

**அதைபோன்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம். ஏ. சுமந்திரன் மாநாட்டில் உரையாற்றியபோது**

புலம்பெயர் அமைப்புகளிடமிருந்து முதலீடுகளை மேற்கொள்வது தொடர்பில் கருத்துக்களை தெரிவித்ததுடன் அதற்கு பாலமாக இருந்து செயற்பட முடியும் என்ற கருத்தையும் முன்வைத்தார்.

அத்துடன் நாட்டில் தற்போது அபிவிருத்திக்கான அவசியத்தை விட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க வேண்டிய அவசியமே முன்னிலை வகிப்பதாக தெரிவித்த அவர் உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்திருப்பது, அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, நாட்டு மக்கள் அன்றாடம் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், வறுமை நிலை, மக்களில் தேவைகள் எதிர்பார்ப்புகள் தொடர்பிலும் இங்கு கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

மாநாட்டின் ஆரம்பத்திலேயே மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நாட்டின் தற்போதைய நிதி நிலைமை தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பிலும் விரிவான உரை ஒன்றை நிகழ்த்தினார். அதேவேளை நாட்டின் இந்த நெருக்கடி நிலைக்கு தற்போதைய அரசாங்கம் மட்டும் காரணமல்ல. கடந்த அரசாங்கங்களும் அதற்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற தோரணையில் அவர் கருத்துக்களை முன்வைத்த போது முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க அதற்கு எதிரான கருத்துக்களை முன் வைத்ததுடன் நாடு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் அனைத்து கட்சிகளினதும் யோசனைகளை பெற்றுக் கொள்வதற்காக கட்சிகளுக்கு அழைப்பு விடுத்து விட்டு கடந்த காலத்தை வைத்து குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டு போவதற்கு சர்வ கட்சி மாநாடு கூட்டப்படவில்லை என்றும் விசனம் தெரிவித்தார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டின் தற்போதைய நிலைமைகளை தெளிவாக எடுத்துக்கூறும் போது அவ்வாறான கருத்துக்கள் மத்திய வங்கி ஆளுநரால் முன்வைக்கப்பட வேண்டி இருந்ததாகவும் அது எவரையும் குற்றஞ்சாட்டும் வகையில் அமைந்திருந்தால் அதற்கு மன்னிப்பு கோருவதாகவும் கேட்டுக்கொண்டார்.

மாநாட்டின் இறுதியில் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ச உரையாற்றினார்.

அவரது உரையின் போது எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்பதாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு கூடிய கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவித்தார் அதற்கான இணக்கப்பாட்டை அமைச்சரவையின் மூலம் பெற்றுக்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்த அவர், வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிவாரணப் பொதிகளை மக்களுக்கு வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்த முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் நாட்டு மக்களின் கஷ்டங்களை அரசாங்கம் நன்கு அறிந்துள்ளது. அதேவேளை அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள்தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளை நாடு எதிர்கொண்டுள்ளது. அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கமைய உள்ளூர் உற்பத்தியில் தன்னிறைவு காண வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதேவேளை அத்தியாவசியப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதே அரசாங்கத்தின் கொள்கை யாகும். சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்வது தொடர்பில் பலரும் யோசனைகளை முன் வைத்துள்ள நிலையில் அது தொடர்பில் முன்னோடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் நிதியமைச்சர் கூறினார்.

நாட்டின் தற்போதைய நிலையை கவனத்திற் கொண்டால் அபிவிருத்தி வரவுசெலவுத் திட்டம் இப்போது முக்கியமல்ல பதிலாக மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வரவுசெலவுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை ஒன்றை முன்வைத்தார். நாட்டின் தற்போதைய நிலை தொடருமானால் போசாக்கற்ற சந்ததியொன்றே உருவாகும் என்றும் அவர் கவலை தெரிவித்தார்.

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கருத்து தெரிவிக்கையில்,** பண்டிகை காலங்களுக்கு முன்பதாக மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். கடந்த வருடங்களில் கொரோனா வைரஸ் சூழல் காரணமாக மக்கள் புது வருடத்தைக் கொண்டாட முடியாமல் போனது. இம்முறை புதுவருடத்தை கொண்டாடுவதற்காக மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இம்முறையும் மக்களுக்கு அதனை கொண்டாட முடியாத நிலை காணப்படுவதால், மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமாகாண ஆளுநருமான சுரேன் ராகவன் சர்வகட்சி மாநாடு தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்;

விமர்சனங்களை எவரும் முன்வைக்கலாம். அதற்கான நேரம் இதுவல்ல. கட்சி, நிறம் என அனைத்து பேதங்களையும் கடந்து அனைத்து கட்சிகளும் கூடி நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண முன்வரவேண்டியதே இப்போதுள்ள தேவையாகும் என்றார்.

**பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கருத்து தெரிவிக்கையில்:**

எமது தலைவரான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே சர்வகட்சி மாநாடு நடத்தப்படுகிறது. விமர்சனங்களை தாண்டி நெருக்கடிகளுக்கு தீர்வு பெற இதுவே சிறந்த சந்தர்ப்பம். நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை வெற்றிகொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் அடுத்த ஆட்சியாளர் யார் என இப்போதே சிந்திக்காமல் நாட்டுக்கான தீர்வை பெற்றுக்கொள்ள அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பது அவரது பேச்சின் மையப்புள்ளியாக இருந்தது.

**சிவநேசதுரை சந்திரகாந்தன் எம். பி கருத்து தெரிவிக்கையில்:** எம்மால் முடிந்த பங்களிப்பை நாம் செய்வோம் என்றார்.

மொத்தத்தில் சர்வகட்சி மாநாட்டின் முதல்அமர்வு நம்பிக்கையை ஏற்படுத்துவதாக இருந்தது. அவசியமானால் இன்னொரு தடவையும் கட்சிகளை அழைத்து பேசலாம். இது பொதுப் பிரச்சினைகளின் பேரில் பொதுக் கருத்துகளை உருவாக்க உதவும். நாட்டின் பொது நன்மைக்காக கட்சிகள் பொது வேலைத்திட்டங்களை அமைத்து பணியாற்றுவது ஏற்கனவே நாடுகளில் நிகழ்ந்திருப்பவை தான். சர்வ கட்சி மாநாட்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக திட்டமொன்று முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி மாநாட்டின் இறுதியில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

**–லோரன்ஸ் செல்வநாயகம்**

# கொழும்பு முஸ்லிம்களின் கல்வி வரலாற்றில் கைரியா ஒரு மைல்கல்

'சத்திய எழுத்தாளன்'
கலாபூஷணம்
**எஸ். ஐ. நாகூர் கனி**

'கற்பவனாய் இரு கற்றுக் கொடுப்பவனாய் இரு கல்விக்கு உதவுபவனாய் இரு நான்காவது நபராய் இராதே' என்ற நபிகளாரின் அருள் மொழியை அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இந்த குரலோசை யார் காதில் விழுந்ததோ – விழவில்லையோ, நம் நாட்டில் தலைநகர் கொழும்பு – 09இல் தெமட்டகொடையில் வாழ்ந்த ஒரு சன்மார்க்க நெஞ்சத்தின் காதுகளில் அச்சொட்டாக விழுந்தது. அதுவும் எப்போது என்கிறீர்களா? இற்றைக்கு 140 வருடங்களுக்கு முன்னம்... (அதாவது 1882இல்) செவிவழி சென்று சிந்தனையைத் தொட்டது. அந்த நல்லிதய நாயகர் யார்? அவர்தான்...

மர்ஹும் சுல்தான் லெப்பை காக்கா என்பவராவார்.

தன் வாரிசுகளான மூன்று சகோதரியருள் மூத்தவளின் மூத்த மகள் கைரியாவின் திருநாமத்தில், சமுதாய வருங்கால விடியலை மனதில் எண்ணி ஒரு பள்ளிக்கூடத்தை – மத்ரஸாவை 'மத்ரஸதுல் கைரியா'வைத் துவக்கினார். அக்கால சாயலில் ஒரு அரபு மத்ரஸாவாக ஆரம்பிக்கப்பட்ட இக்கல்விக்கூடம், நாளடைவில் ஆங்கிலம் தமிழ் சிங்களம் என்பன போதிக்கப்படும் லோகாயத பாடசாலையாக – பெண்கள் மட்டுமே பயிலும் ஒரு மகளிர் வித்தியாலயமாக உருமாறியது. இது 01. 07. 1967 முதல் அரசு கையேற்ற ஒரு தேசிய பாடசாலையாக – பொது சொத்தாக ஆனது. தலைநகர் கொழும்பில் முஸ்லிம்களால் முதன்முதல் தோற்றுவிக்கப்பட்ட பாடசாலை என்ற வரலாற்றுப் பெருமைக்கு அது உரித்தானது.

இன்றைய அதன் நிலைமை என்ன?

முஸ்லிம் சமூகமே பெருமையுறும் வண்ணம் அது வளர்ந்துள்ளது. வரலாறு படைத்துள்ளது. மர்ஹும் சுல்தான் லெப்பை காக்காவால் அன்று புதைத்த – மன்னிக்க வேண்டும் விதைத்த வித்து, செடியாக வளர்ந்து – மரமாக உயர்ந்து 140 வருடங்களை (1882 _2022) நிறைவு செய்துள்ள ஓர் ஆல விருட்சமாக நிழல் பரப்பிக் கொண்டிருக்கிறது. அந்த நிறைவின் வரலாற்று முதுமையின் மீது வெளிச்சமிட்ட வெற்றி விழா 140 ஆண்டுகள் நிறைவு விழா கடந்த 20.பெப்ரவரி.2022 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மயங்கும் வேளையில் கொழும்பிலுள்ள நெலும் பொக்குன என்ற தாமரைத் தடாகத்தின் ராஜபக்ஷ கலையரங்கில் பிரம்மாண்டமாக நடந்தது. விழாவுக்கு வருகை தந்தோர் அனைவரின் இதயங்களிலும் வற்றாத மகிழ்ச்சி வெள்ளத்தை அள்ளி வீசியது என்றால், அது மிகையாகாது.




அந்த நிறைவு விழா நிகழ்ச்சிகளின் நேர்த்தியை நிமிர்ந்திருந்து நோக்குவோமா?

அதற்குமுன் ஒன்றை நாம் நெஞ்சில் நிறைத்துக் கொள்ள வேண்டும் அது...

140 என்பது வெறும் எண்ணிக்கையோ, இலக்கமோ அல்ல. அது தடைதாண்டி ஓட்டம்போல் சவால்கள் பலவற்றை தாண்டிய – சமாளித்த – வெற்றிகண்ட அனுபவம், இந்த அனுபவத்தின் வலிகள் ஒன்றா? இரண்டா? எவ்வளவோ! அத்தனை வலிகளும் இன்ப வேதனையாக இருந்ததை உணரமுடிந்தது. சம்பிரதாய முறைப்படி முதலில் மறைவசனங்கள் மாணவி ஒருத்தியாய் ஓதப்பட்டு, பொருள்விளக்கம் தரப்பட்டது. அடுத்து தேசிய கீதம் பாடசாலை கீதம் இரண்டும் செவி சபாக்களில் தேனாக இனித்தன. சாதனை நாயகியாக மேடை ஏறிய அதிபர் திருமதி நஷீரா ஹஸனார் அச்சொட்டாக முக்கிய விஷயங்களை குறிப்பிட்டு தலைமையுரை நிகழ்த்தினார். அதில் கைரியா தாயின் இன்றைய வளர்ச்சிக்கு ஆரம்பம் தொட்டு அடுத்தடுத்து பணியாற்றிய அதிபர்களை நினைவுபடுத்தி நெஞ்சார வாழ்த்தினார். கைரியாவின் பல்வேறு வெற்றிக்கும் அபிவிருத்திக்கும் உதவிகள் பல செய்து, ஒத்துழைப்பு வழங்கிய உத்தமர்கள் பல தரத்தினையும் பாராட்டி – சீராட்டி – நன்றி கூறி நெகிழ்ந்தார். மகிழ்ந்தார்.



விழாவில் பிரதம அதிதியாகப் பங்கேற்று சிறப்பித்த நீதியமைச்சர் மாண்புமிகு அலிசப்ரி உற்சாகமாக மேடையேறி, கொழும்பு முஸ்லிம்களின் கல்வி சாதனைகளை கைரியாவைத் தொட்டு பெருமிதப்பட்டார். வெற்றி வேந்தர்கள் பலருக்கும் பாராட்டுக்களை பறைசாற்றி சந்தோஷப்பட்டார். கைரியா மென்மேலும் வளர வாழ்த்துப் புஷ்பங்களை வாரி இறைத்து வார்த்தையாடினார்.

கைரியாவின் சாதனைகளையும் வேதனைகளையும் சோதனைகளையும் சதா காலமும் எழுத்து மூலம் எடுத்தியம்பிக் கொண்டே கல்வெட்டு ஆவணமாகத் திகழவல்ல சிறப்புமலர் ஒன்று மேடையில் வெளியிடப்பட்டதற்கு அடையாளமாக விழாவின் பிரதம அதிதியான நீதியமைச்சருக்கு முதற்பிரதி வழங்கி கண்ணியப்படுத்தப்பட்டார். கைரியாவோடு கைகோர்த்து சம்பந்தப்பட்ட எல்லோருடைய வீடுகளிலும் காலத்தின் கல்வெட்டான மேற்படி சிறப்பு மலர் பிரதி இருக்க வேண்டும் என்ற அவசியத்தை மலரில் மணம் வீசும் எழுத்துக்கள் ஒவ்வொன்றும் சொல்கின்றன.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் படிகளை மிதித்து மேலே செல்ல எத்தனிக்கும் ஏந்திழை மாணவியர் ஆம் கைரியாவிலிலுருந்து பல்கலைக்கழகங்களுக்கு பல்வேறு துறைக்களுக்கும் தெரிவான எதிர்கால கல்விமான்களான மாணவ செல்வங்களையும் பிற துறைசார் சாதனை மாணவிகளையும் வரவழைத்து, பிரதம அதிதியின் திருக்கரங்களால் சான்றிதழ்கள் வழங்கியமை, எதிர்கால சாதனைகளை சொல்லாமற் சொல்வது போல இருந்தது.

இடையிடையே மாணவியரின் கலாசார நிகழ்ச்சிகள் சபையை சந்தோஷப்படுத்தின. வளர்ந்துவரும் உலகின் தொழிட்நுட்ப – விஞ்ஞான வளர்ச்சிகளோடு நம் சமுதாய சோதரிகளும் ஒன்று கலக்கும் எதிர்காலத்தை நோக்கிய கைரியாவின் பயணம் வெற்றிபெற அனைவரும் வாழ்த்தினர். நாமும் வாழ்த்துவோம்.

**'கடந்த இரண்டு வருடங்களாக வரமுடியாமல் போய்விட்டது. இந்த முறையும் அதிகம் மக்கள் வர முடியவில்லை. அடுத்தமுறையாவது நாங்கள் ஒரே குடும்பமாக மணலில் அமர்ந்து உணவு உண்டு உறவு கொண்டாடி மகிழ வேண்டும் அதற்கு அந்தோனியார் தான் அருள் புரிய வேண்டும் என்றார் தமிழகத்தில் இருந்து வந்திருந்த ஒரு தாய்'**

# களையிழந்து காணப்பட்ட கச்சத்தீவு

நேரடி ரிப்போர்ட்
லோரன்ஸ் செல்வநாயகம்...









இலங்கை இந்திய மக்களின் உறவுக்கு சிறந்த பாலமாக கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயம் திகழ்ந்து வந்திருக்கிறது.

வருடாந்தம் மார்ச் மாதத்தில் வருகின்ற இந்த கச்சத்தீவு திருவிழாவுக்காக இரண்டு நாடுகளினதும் மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

அவர்கள் தம் உறவையும் அன்பையும் புதுப்பித்துக் கொள்வதற்காக ஒவ்வொரு வருடமும் இந்த வாய்ப்பை கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா அவர்களுக்கு வழங்குகிறது.

இரண்டு நாட்கள் மட்டுமே நடைபெறும் இந்த திருவிழாவில் ஆயிரக்கணக்கான இந்திய மக்களும் ஆயிரக்கணக்கான இலங்கை மக்களும் கலந்து கொள்வர்.

உறவுகள் ஒன்றிணைந்து உண்டு, களித்து சந்தோசம் கொண்டாடி தம்மிடமுள்ள பொருட்களையும் பகிர்ந்துகொண்டு அந்தோனியார் திருத்தலத்தில் திருவிழாவை மட்டுமன்றி தமது உறவுகளையும் கொண்டாடி மகிழ்வர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த திருத்தலம் முன்பு இந்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்தது. தற்போது இலங்கை அரசாங்கத்தின் சொத்தாகி விட்டது. யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் நெடுந்தீவு பங்கு கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தை நிர்வகிக்கின்றது.

அந்தவகையில் வருடாந்தம் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகளை யாழ்ப்பாண மறைமாவட்டமும் யாழ்.மாவட்ட செயலகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றன. அனைத்து அடிப்படை வசதிகளும் அங்கு ஏற்படுத்தப்பட்டு மக்கள் திருவிழா நடைபெறும் இரண்டு நாட்களிலும் எந்த வித குறையுமின்றி அந்த இரண்டு நாட்களையும் கழிப்பது வழக்கமாகி வருகிறது. கடல் போக்குவரத்துக்கான வசதிகளை இரண்டு நாட்டினதும் கடற்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் அதற்கான ஒழுங்குகள் மிக நேர்த்தியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையையும் குறிப்பிட வேண்டும்.

இந்த வருடமும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இலங்கை இந்திய பக்தர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக கடந்த மார்ச் 12ஆம் திகதி கொண்டாடப்பட்டது.

இரு நாடுகளிலும் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுக்கே அனுமதி வழங்கப்பட்டிருந்தது டன் இலங்கையிலிருந்து 100 பக்தர்களும் இந்தியாவிலிருந்து 80 பக்தர்களுமே திருவிழாவில் கலந்துகொண்டிருந்தனர். பக்தர்கள் மிக குறைவாக காணப்பட்டதால் திருவிழாவின் போது அங்கு காணப்படும் கலகலப்புக்கு இம்முறை பஞ்சமாகிவிட்டது.

எனினும் இரு நாட்டு பக்தர்களும் பக்திபூர்வமாக திருவிழாவில் பங்கேற்றதைக் காணமுடிந்தது. மார்ச் பதினோராம் திகதி மாலை கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாயின.

தவக்காலத்தில் இந்த திருவிழா வருவதனால் திருவிழாவிற்கு முதல்நாள் சிலுவைப்பாதை பவனி நடத்தப்பட்டது. 14 நிலைகளைக் கொண்ட இந்த சிலுவைப்பாதை பவனி ஆலய சுற்றாடலை சுற்றி கடற்கரையின் ஊடாக நடைபெற்றமை ஒரு வித்தியாசமான அனுபவமாக காணப்பட்டது.

தொடர் 15ஆம் பக்கம்....



பொருளாதார அரசியல்

# நட்பு நாடுகளின் உதவி எமக்கு மிக அவசியம்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியற்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்



இலங்கையின் பொருளாதார நெருக்கடி மேலும் இறுக்கமடைந்து செல்வதை பொதுமக்களால் உணரக் கூடியதாக உள்ளது. தொடர்ந்து கொண்டே செல்லும் பெற்றோல் டீசல் மண்ணெண்ணெய் மற்றும் எரிவாயுத் தட்டுப்பாடு அவற்றைப் பெற்றுக்கொள்ள இரவு பகலாக நீண்டு கொண்டே செல்லும் மக்களின் வரிசைகள் என சிக்கல்கள் நீள்கின்றன.

வரிசைகளில் நின்ற முதியவர்கள் சிலர் மயங்கி விழுந்து இறந்த சம்பவங்கள் பதிவாகியிருக்கின்றன. நாட்டில் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் மின்வெட்டு நேரங்கள், சட்டபூர்வமாக நாட்டை விட்டு வெளியேறும் மக்களின் எண்ணிக்கையில் அதிகரிப்புடன் சட்டரீதியற்ற விதத்தில் சில குடும்பங்கள் அருகில் உள்ள தமிழகத்திற்கு பஞ்சம் பிழைக்கச் சென்றமை போன்ற சம்பவங்கள் பிரச்சினையின் தீவிரம் மேலும் அதிகரித்துச் செல்வதை உணர்த்துகின்றன.

இந்நிலையில் கடந்த வெள்ளி நள்ளிரவிலிருந்து சகல பெற்றோல் வகைகளினதும் விலைகளை 49 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக IOC நிறுவனம் அறிவித்துள்ளது. இதன்படி இலங்கையில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 300 ரூபாவைக் கடந்துள்ளது.

இது இலங்கையில் கடந்த ஆண்டு நிலவிய 117 ரூபா விலையுடன் ஒப்பிடுகையில் 160 சதவீத அதிகரிப்பாகும். ஆயிரம் ரூபாவுக்கு சுமார் 8.5 லீற்றர் பெற்றோலை வாங்கிய ஒருவர் இப்போது அதே ஆயிரம் ரூபாவில் வெறும் 3.3 லீற்றர் மாத்திரமே வாங்க முடியும். ஆயிரம் ரூபா மிக விரைவாக செல்லாக்காசாகி வருகிறது என்பது இதன் கருத்தாகும்.

விலைகள் அதிகரித்துச் செல்லும் அதேவேளை எரிபொருள் போன்றவற்றிற்குத் தட்டுப்பாடு நீங்கவில்லை. துறைசார்ந்த அமைச்சர்கள் அதோ கப்பல் வருகிறது அடுத்த வாரம் பிரச்சினை தீரும் என்று பல வாரங்களாக அறிக்கை விடுகின்றனர். ஆனால் பிரச்சினை தீர்ந்தபாடில்லை. நீரேந்து பகுதிகளில் மழை கிடைக்காத காரணத்தால் மின்வெட்டு நேரம் 10 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்படலாம் என பயமுறுத்துகின்றனர்.

வழமையாகவே மார்ச், ஏப்ரல் மாதங்களில் மழை குறைவு என்பது பாடசாலை மாணவருக்கும் நன்கு தெரியும். நாட்டில் அதிகரித்துச் செல்லும் மின்தேவையைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ப மாற்றுவழிகளைக் கையாண்டிருக்க வேண்டாமா? ஆண்டு முழுவதும் சூரிய ஒளியைப்பெறும் இந்த நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக சூரியசக்திக் கட்டமைப்புகளை அரசாங்கம் வழங்கினாலும் நாட்டிற்கு அது நட்டமில்லை.

இலங்கையில் வாழும் ஒரு சராசரிக் குடும்பத்திற்கு சூரிய சக்தி கட்டமைப்புகளை கொள்வனவு செய்யும் நிதி வல்லமை இல்லை. ஏற்கெனவே நாளாந்த மின்வெட்டுகளால் மக்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் பொதுமக்கள் மத்தியில் விரக்தி நிலையும் ஆட்சி மீதான வெறுப்பும் தொடர்ந்து அதிகரித்துச் செல்வதைக் காணமுடிகிறது.

அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தற்போதைய நெருக்கடிக்கு கோவிட் தொற்று ஏற்படுத்திய பிரச்சினை தான் காரணம். உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான போர் இதற்கு காரணம். உலகளாவிய ரீதியில் ஏற்பட்டு வரும் பொருள்விலை அதிகரிப்புகள் தான் காரணம்.

முன்னைய அரசாங்கம் பெற்ற கடன்கள் தான் காரணம் என பல்வேறு காரணங்களைச் கூறி நிலைமையைச் சமாளிக்க முனைந்தாலும் அவை பொதுமக்கள் மத்தியில் எடுபட்டதாகத் தெரியவில்லை. தகவல் தொடர்பாடல் வசதிகளும் சமூக ஊடகங்களும் செல்வாக்குச் செலுத்தும் புறச்சூழலில் மக்களுக்கு கிடைக்கும் தகவல்கள் அதிகம்.

அத்தகவல்களின் உண்மைத்தன்மை பற்றி சிந்திக்கும் அளவுக்கு பொது அறிவுடையவர்களாக எல்லோரும் இருப்பதில்லை.

அண்மைக்காலமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பாக தமிழ்மொழி மூலம் வெளிவந்த இலத்திரனியல், அச்சு மற்றும் காட்சியூடாக வெளியீடுகளை நோக்குமிடத்து ஒவ்வொரு ஊடகமும் தமது இஷ்டப்படி கதைகளை அவிழ்த்து விடுவதை காணமுடிகிறது.

குறிப்பாக இந்தியாவிலிருந்து வரும் முகப்புத்தகப் பதிவாளர்கள் ஒவ்வொருவரும் இலங்கைப் பொருளாதாரத்தின் சிறப்பு ஆய்வாளர்களாக நினைத்துக்கொண்டு கருத்துகளைக் கக்குகிறார்கள். அதே போலவே உலகப் பிரசித்தி பெற்ற ஊடகங்களும் தமது பார்வையை இலங்கையின் தற்போதைய நொருக்கடியின் பால் திருப்பியுள்ளன.

ஆகவே உண்மையும் பொய்யும் கலந்து இலங்கை தொடர்பான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றுக்கு யாரும் கட்டுப்பாடு விதிக்க முடியாது. ஆனால் உத்தியோகபூர்வமாக பொறுப்புவாய்ந்த அரசாங்கம் மக்களுக்கு நாட்டின் உண்மை நிலையை தெளிவுபடுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் முடிவுகள் ஒரு பேச்சாளர் மூலமாக வெளிப்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போது உதவும் நோக்குடன் இந்தியா, அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய முக்கியமான நாடுகளின் பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த நட்பு நாடுகளின் உதவி இன்றைய சூழ்நிலையில் இலங்கைக்கு கட்டாயம் தேவைப்படுகிறது. அதேவேளை இந்த நாடுகளுடன் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகள் பற்றிய தகவல்கள் மக்கள் பிரதிநிதிகளின் மன்றமாகிய பாராளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தப்பட வேண்டும்.

அண்மையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் முன்னாள் பிரதமமந்திரியும் நீண்டகால அனுபவமுள்ள அரசியல்வாதியுமான ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட கருத்துகள் பற்றியும் அரசாங்கம் கவனத்திற்கொள்வது நல்லது. தனியன் யானை ஒன்று வந்துள்ளது முன்னைய ஆட்சியின் போது பொருளாதார வளர்ச்சி சீரழிந்தது போன்ற எகத்தாளங்கள் நிதி அமைச்சராலும் மத்திய வங்கி ஆளுனராலும் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அவர்களின் வாயை அடைத்து நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு மக்களை ஆசுவாசப்படுத்த வேண்டிய தேவையை முன்னிலைப் படுத்தினார் ரணில்.

# இந்திய-ரஷ்ய உறவில் ஏற்பட்டுள்ள நெருக்கம்

# இந்தோ-பசுபிக் உபாயத்தை முடிவுக்கு கொண்டுவருமா?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உக்ரையின் ரஷ்யப் போர் உலகளாவிய அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற எண்ணப்பாங்கு வலுவடைந்து வருகிறது. உக்ரைனை மையப்படுத்தி எழுந்துள்ள போரில் ரஷ்யா அதிக நெருக்கடியை எதிர் கொள்ள ஆரம்பித்துள்ளது. மேற்குலகமும் ரஷ்யாவை உக்ரைனுக்குள்ளேயே அதன் வலுவை முடிவுக்கு கொண்டுவரலாம் என கணக்குப் போட்டு போரை நடாத்துகிறது. அதில் அமெரிக்கா பிரதான பங்காளியாக விளங்குகிறது. ரஷ்யாவும் அமெரிக்காவும் போரை நீடிக்க விரும்பும் நாடுகளாகவே காணப்படுகின்றன. அதிலும் அமெரிக்கா போரில் ஈடுபடாது போரை நிகழ்த்தும் நாடாக விளங்குகிறது. ஆனால் மறுபக்கத்தில் இந்தியா ரஷ்ய நட்புறவை அதிகம் விமர்சிக்கும் அமெரிக்கா ரஷ்யாவிடமிருந்து ஆயுத இறக்குமதியை இந்தியா மேற்கொண்டால் பாரிய பொருளாதார தடையை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என அமெரிக்கா மிரட்டியுள்ளது. இக்கட்டுரையும் இந்தோபசுபிக் உபாயத்தின் பாதுகாப்பு அமைப்பான குவாட்டின் இருப்புப் பற்றிய தேடலாக அமையவுள்ளது.

குவாட் அமைப்பின் பிரதான நாடுகளாக ஜப்பான் இந்தியா அமெரிக்கா அவுஸ்ரேலியா காணப்படுவதோடு தென்குவாட் அமைப்பு நாடுகளாக இஸ்ரேலும் ஐக்கிய அரபு அமீரகமும் இந்தியா அமெரிக்க அணியில் காணப்படுகின்றன. இதில் இந்தியா தொடர்பில் அமெரிக்கா பலதடவை எச்சரிக்கைகளையும் வலியுறுத்தல்களையும் அதிகம் முதன்மைப்படுத்தி வருகிறது. அதாவது இஸ்ரேல் போன்று ரஷ்யாவுடன் போர்க் காலத்தில் இந்தியா உறவு கொள்ளாத போதும் ஆதரவை மட்டுமே வெளிப்படுத்தியிருந்தது. ஆனால் நீண்ட கால நட்பு நாடு என்ற வகையில் இந்தியா ரஷ்யா நெருக்கமானவையே. ஆனாலும் இஸ்ரேல் அளவுக்கு இந்தியா ரஷ்யாவுடன் போர்க்கால உறவினைக் கொள்ளவில்லை என்றே கூறலாம். ஆனாலும் இஸ்ரேலை விட்டுவிட்டு ஏன் அமெரிக்கா இந்தியாவை மிரட்டுகிறது என்பதே பிரதான கேள்வியாகவுள்ளது. அதற்கான காரணங்களை விரிவாக நோக்குவது அவசியமானது.

முதலாவது, இந்தியா ரஷ்யா சீனா அதிகம் கீழைத்தேச நாடுகளாகவே மேற்குலகத்தால் நோக்கப்படுகிறது. ரஷ்யா ஒரு ஈரோசிய நாடாக அமைந்தாலும் அதன் கலாசார ரீதியல் ஆசிய இயல்புகளையே அதிகம் கொண்டுள்ளது என்பதை மேற்கு வெளிப்படுத்துகிறது. அதே நேரம் இம்மூன்று நாடுகளில் இந்தியாவும் சீனாவும் மேற்கின் பிரதான சந்தையாகவே உள்ளன. அதிலும் சீனா அமெரிக்க வர்த்தக முரண்பாடு மேற்கை அதிகம் இந்தியச் சந்தையில் தங்கியிருக்க வழிவகுத்துள்ளது. அதனால் இந்தியாவை மேற்கு இழப்பதென்பது அதன் சந்தையை இழப்பதே முதன்மை விடயமாகும். அதனை தக்கவைக்க அமெரிக்கா இந்தியா மீது மிரட்டலையும் அதே நேரம் விட்டுக் கொடுப்பையும் மாறி மாறிக் கையாண்டு வருகிறது. அதற்கான காரணம் இந்தியாவை இழந்து விட முடியாது என்பதை வெளிப்படுத்துவதற்கான நகர்வாகவே தெரிகிறது.

இரண்டாவது இலங்கைக்கு அமெரிக்கா தனது இராஜதந்திரிகளை (23.03.2022)அனுப்பி கடல் ரீதியான பாதுகாப்பு விடயங்களில் சில உடன்பாடுகளை எட்டியுள்ளது. அது மட்டுமன்றி இரு நாட்டுக்குமான நான்காவது உயர்மட்ட உரையாடலை ஆரம்பித்துள்ளது. கரையோர கண்காணிப்பு பிரிவுக்கான பயிற்சி மற்றும் கடற்படைக்குரிய விசைப் படகுகள் என இரு நாட்டினது கடல்சார் உறவு பலமாக திட்டமிடப்பட்டதுடன் திறந்த மற்றும் சுதந்திரமான இந்தோ, பசுபிக் உபாயத்திற்கான உறவாகவும் இரு நாட்டு தூதுவர்களது இணைந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் இந்தியாவும் மன்னார் வளைகுடாவை அண்டிய பகுதியில் தனது கடல் கண்காணிப்பினை அதிகரிக்கும் விதத்தில் உலங்குவானூர்திகளை இணைத்துள்ளது. ஏறக்குறைய இரு நகர்வுகளும் இந்திய அமெரிக்க உறவு சார்ந்த நடவடிக்கையாகவே தெரிகிறது.

மூன்றாவது திறந்த மற்றும் சுதந்திரமான இந்தோ, பசுபிக் தந்திரோபாயத்தின் இந்துசமுத்திர கடலாதிக்கமுடைய நாடு இந்தியாவே. அது மட்டுமன்றி அத்தகைய இந்தோ, பசுபிக் உபாயத்தின் முக்கிய நோக்கமும் சீனாவின் விஸ்தரிப்பினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கையாகவே உள்ளது. அதாவது இந்து மற்றும் பசுபிக் சமுத்திர நாடுகள் மீதும் சமுத்திரம் மீதும் சீனாவின் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் விதத்திலேயே மேற்கு நாடுகளால் வடிவமைக்கப்பட்டு இந்தியாவையும் இணைத்து செயல்படுத்தும் திட்டமாக இந்தோ, பசுபிக் உபாயம் அமைந்திருந்தது. அதன் பாதுகாப்பு அணியாகவே குவாட் காணப்பட்டது. இதில் குவாட் மற்றும் AUKUS உடன்படிக்கைகள் முதன்மையானவையாகவே உள்ளன. இதில் இந்து சமுத்திரத்தில் பிரதான நாடாக இந்தியா விளங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். அத்தகைய முக்கியத்துவம் உடைய நாடான இந்தியாவை எந்த அடிப்'படையிலும் மேற்கு இழக்க முயலாது. அதனாலேயே சில விட்டுக் கொடுப்புகளையும் நகர்வுகளையும் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக அண்மைய காலத்தில் ஜப்பான் அவுஸ்ரேலியா ஆகிய குவாட் நாடுகள் இந்தியாவில் முதலீடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முதன்மைப்படுத்தியுள்ளன. அதன் பிரதான நோக்கம் இந்தியா ரஷ்யா உறவை தகர்ப்பதற்கான உத்தியாகவே தெரிகிறது. இந்தியாவை படிப்படியாக நெருக்கடிக்கு உள்ளாக்குவது ஒரு புறம் நிகழ மறுபக்கத்தில் இந்தியாவை திருப்திப்படுத்துவதில் குவாட் நாடுகள் முனைப்பாக செயல்படுகின்றன. பொருளாதா உதவிகளையும் முதலீட்டு முயற்சிகளையும் இந்தியாவுடன் மேற்கொள்வதன் மூலம் இந்திய ரஷ்ய உறவை பாதிக்கச் செய்யலாம் என்பதே குவாட் நாடுகளின் நகர்வாகும். அதனாலேயே இந்தியாவை மேற்கின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும் எதிர்காலத்தில் சீனாவை இந்தியாவுடன் மோதவிடவும் திட்டமிடுகின்றன.

நான்காவது ரஷ்யாவையும் உக்ரையினையும் போரிட வைத்ததன் மூலம் மேற்கு இலாபமடைந்தது போல் எதிர்காலத்தில் சீனாவையும் இந்தியாவையும் மோதவிட்டால் மேற்கு போர் புரியாமலேயே இந்தியாவையும் சீனாவையும் ரஷ்யாவையும் போன்று முடிவுக்கு கொண்டுவந்து விடலாம் எனக் கணக்குப் போடுகின்றன. அதுவே மேற்குலகத்தின் உத்தியாக உள்ளது. எவ்வாறு நேரடியாக போரிடாது மேற்கு ரஷ்யாவின் இராணுவ வலிமையையும் பொருளாதார இருப்பினையும் தகர்க்க முடியுமோ அதே அளவுக்கு இந்தியாவையும் சீனாவை மோதவிட விரும்புகிறது. அதனால் இரு நாட்டினது எழுச்சியையும் மேற்குடனான வல்லரசுப் போட்டியையும் முடிவுக்கு கொண்டுவரலாம் என்பதே மேற்குலகின் திட்டமிடலாகும்.



அதற்கு சவால்விடும் விதத்திலேயே ரஷ்ய இந்திய நெருக்கம் இந்திய, சீனா உறவைச் சாத்தியப்படுத்திவிடும் என்பதில் மேற்குலகம் அச்சமடைகிறது. குறிப்பாக அமெரிக்காவின் நீண்ட காலத் திட்டமிடல்களை ரஷ்ய இந்திய நெருக்கம் தோற்கடித்து விடும் என்ற குழப்பத்திலேயே ஜோ பைடனது உரைகளும் எச்சரிக்கைகளும் அமைந்துள்ளன. இந்தியாவை நெருகடிக்குள் தள்ளும் புற நகர்வுகளை ஏற்படுத்தும் வாய்ப்புக்களை உருவாக்கிவருகிறது. ஆனால் இந்தியா பொறுத்து அமெரிக்காவுக்கு பல முன்நகர்வுகள் உண்டு. குறிப்பாக ஈரான் எண்ணெயை அமெரிக்கா தடை விதித்த போதும் இந்தியா இறக்குமதி செய்வதில் பின்னிக்கவில்லை. அதற்கு எதிராக இந்தியா மீது எந்த நடவடிக்கையும் முழுமையாக அமெரிக்காவால் மேற்கொள்ள முடியாது போனது. அதற்கான அடிப்படை இந்தியாவை இழந்துவிடுதல் என்பது அமெரிக்கா உட்பட மேற்குலகத்தின் வாய்ப்புக்களும் சந்தையும் இழக்கப்படுவது மட்டுமன்றி சுயமான இந்திய வளர்ச்சியை சாத்தியப்படுத்தி விடும் என்பதில் மேற்குலகம் கவனம் கொள்கிறது.

ஐந்தாவது ரஷ்ய இந்திய உறவினால் இந்தோ பசுபிக் உபாயம் முடிவுக்கு வருமாயின் சீனாவின் வளர்ச்சியை எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்பதே பிரதான குழப்பமாகும். உக்ரைன் மீதான போர் மறைமுகமாக சீனாவுக்கு அதிக இலாபங்களை தந்துள்ளது. அதில் பிரதானமானது மேற்கு கிழக்கு அரசுகளுக்கிடையிலான பிரிநிலை ஒற்றை தோற்றப்பாட்டில் மட்டுமல்லாது நடைமுறையிலும் ஏற்படுத்தியுள்ளது.

இதனால் ரஷ்யா பலவீனமடைந்துள்ளமை மறுபக்கத்தில் சீனாவுக்கு கிழக்கு முரண்பாட்டை தவிர்க்க உதவப்போகிறது. அதனாலும் சீனா தனது வாய்ப்புக்களை கட்டமைக்க முயலுகிறது. மேலும் பொருளாதார வாய்ப்புக்களை விரிவாக்கவும் இந்திய, சீன உறவைப் பலப்படுத்தவும் வழியேற்படுத்தியுள்ளது. உக்ரையின் போர் தந்துள்ள பிரதான பாடம் மேற்குலகத்தின் அணுகுமுறை எப்படியான விளைவை தரும் என்பதேயாகும். இது உக்ரைன் போன்ற அரசுகளுக்கும் பொருத்தப்பாடுடையது.

எனவே உக்ரையின் ரஷ்யப் போர் இரு நாடுகளையும் மட்டுமல்ல அதன் விளைவுகள் குவாட் கட்டமைப்பையும் இந்தோ, பசுபிக் தந்திரோபாயத்தையும் தகர்த்துள்ளது. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையும் அது ரஷ்யாவுடன் கொண்டுள்ள நெருக்கமும் சீனா சார்ந்த நெருக்கத்தை சாத்தியப்படுத்துமா என்ற சந்தேகத்ரைத தந்துள்ளது. இரு நாட்டுக்குமான உறவில் ரஷ்யாவின் பங்கு எதிர்காலத்தில் எவ்வாறானதாக அமையும் என்பதே தற்போதைய கேள்வியாகும்.

அது எப்போதும் இந்தியாவுக்கும் கீழைத் தேசத்திற்குமானதாக அமையவே வாய்ப்பு அதிகமுண்டு. சீனாவுடன் ரஷ்யா கொண்டுள்ள நெருக்கம் சீனாவின் ஐக்கிய நாடுகள் சபையில் நிகழும் வாக்களிப்புகளில் கண்டு கொள்ள முடிகிறது. எனவே இம்மூன்று நாடுகளதும் நகர்வுகளை பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகளை வைத்து கையாள அமெரிக்காவும் ஏனைய மேற்குலகமும் திட்டமிட ஆரம்பித்துள்ளன.

இத்தகைய அணியைக் குழப்புவது அணிக்குள் முரண்பாட்டை ஏற்படுத்துவது மற்றும் அணியில் தங்கியுள்ள நாடுகளை தனிமைப்படுத்தி வெல்வது போன்ற உபாயங்களுடன் நகர மேற்குலகம் ஆரம்பித்துள்ளது. அதனை வலுப்படுத்தும் விதத்திலேயே மேற்கு ஊடகங்களும் நிறுவனக்கட்டமைப்புகளும் நியாதிக்க மன்றங்களும் செயல்பட முனைகின்றன.






சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில், 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 ஆம் திகதி பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் நிகழ்வை இலங்கை வங்கி ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதிப் பொது முகாமையாளர் (கிளை செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி வங்கியியல்). நிலந்த மெனெரிபிட்டியகே, பேச்சாளர், பேராசிரியர் பிரதிபா மஹாநாமஹேவா மற்றும் உதவிப் பொது முகாமையாளர் திருமதி நயனா சமந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.




இரத்மலானை கிளையின் ஏற்பாட்டிலான நிகழ்வு






கொள்ளுப்பிட்டி 2வது கிளையின் ஏற்பாட்டிலான நிகழ்வு



சேவா வனிதா பிரிவு நடத்தும் பயிற்சி

BANK OF CEYLON
BOC
ලංකා බැංකුව இலங்கைவங்கி










அருந்ததியின் மாற்று மோதிர நிகழ்வும் மணப்பெண் அலங்கார கண்காட்சியும் நான்காவது தடவையாக யாழப்பாணம் செல்வா பெலஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது பங்கேற்பாளர்கள், சாதனையாளர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

தினகரன் THINAKARAN
தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
Daily News
















## காதல் கடிதம்



ரதிதேவி,
மானிப்பாய்

மரத்தில் எழுதிய
காலம் போய்
காதல்
தாளில்
தவழுதடி இன்று

உயிர் ஒதுக்கி
அவை செய்த அர்ப்பணிப்பு
மறவோம்
எம் காதல் கடிதங்களைப் போல்
இம் மரங்களையும் பேணுவோம்
வாடி

உன் கூந்தல் போல்
நிழல் வடிவில்
உயிர் கூடிக்கிடந்தது
நினைவோ

உன் அப்பன்
துரத்தி வரவே
மரம் ஏறி மறைந்தது
எப்படி மறந்தாய்

பின் உன் பெற்றோர்
சம்மதத்துடனே
திருமணமும் நடந்தேறி
ஆசீர்வாதம் பெற
பல வருடம் முதலேயே
எமை ஆசீர்வதித்தது
இம் மரமன்றோ;
காற்றில் உதிர்த்த இலைகள்!

பின் இராத்திரி நேரம்
அன்று கீச்சிட்டு
ஆக்கினை குடுக்காமல்
துறவி போல்
தியானித்துக் கிடந்தது
இம் மரத்தின் முப்பாட்டன்
செதுக்கிக் கொடுத்த
கட்டில் அன்றோ,
முதல் இரவையும் மறந்தாயோ
போடி

பின் கர்ப்பிணித்தாயாக
நீ ஆசை மாங்காய் கேட்கையிலே
வார்த்தை உதிர்த்து முடிக்கும் முதலே
குறை மாதத்தில் கனியை
எடுத்துக் கொடுத்தது மறந்தால்
நன்றோ
நன்றிகெட்டவளே

இன்று எம் மகள்
மரம் ஏறிப் பழக,
நாம் பயம் அன்றி
அதைப் பார்த்துக்கிடக்க
இந்தக் கிளைகள்
அவளை ஏந்தும் என்ற
தைரியம்
காரணம் அன்றோ

ஆனால்
எம் அன்பு மரத்தின்
மகள் எங்கே?

## உன்னை தழுவுவேன்

வாழையூர் கவிநிலா



வெண்ணிலா வானத்திடமிருந்து
விடிகின்ற வேளையில்
விடைபெற்று சென்றாலும்
மறுதினமே அதன் வருகை
தொடர்வதில்லையா?

வண்டுகள் பூவிற்குள்
தேன் பருகிச் சென்றாலும்
மீண்டும் பூவைத் தேடி
வருவதில்லையா?

கடலலைகள் கரையை
தொட்டு தழுவி விடைபெற்று
சென்றாலும் மறுநொடியே
மீண்டும் கரையோடு
இணைந்து கொள்வதில்லையா?

நானும் வெண்ணிலாவாக
விரைவில் வருவேன்
நட்சத்திரங்களாக வழிமேல்
விழிவைத்து காத்திரு

கணப்பொழுதில் வரும்
கடலலையாக நான்
கரையிலுள்ள மணலான
உன்னை தழுவுவேன்

## வேண்டும்

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

சித்தத்தில் சுத்தம் வேண்டும்
சிதையா எண்ணம் வேண்டும்
பத்தி நெஞ்சில் வேண்டும்
பாரபட்சம் அகல வேண்டும்

உத்தம நெறிகள் வேண்டும்
உலகம் உன்னைப் புகழவேண்டும்
வித்திடும் செயல்கள் வேண்டும்
வீணற்ற கருமம் வேண்டும்

சத்தியம் காக்க வேண்டும்
சாதனை கூட வேண்டும்
நித்தமும் தைரியம் வேண்டும்
நீ எல்லோரிலும் வாழவேண்டும்

அத்தக முடனே வாழ வேண்டும்
அகிலத்தில் மாறா நிலையும் வேண்டும்
சித்திகள் நிறைய காணவேண்டும்
சீர்மை வாழ்வில் நிலைக்க வேண்டும்

## தினகரன்

இணுவில் வாகீசன்

மாதங்கள் தேடும் வருடங்கள்
தொன்னூறு கடந்தாய்
பத்திரிகைத்துறையில்
என்றும் நிலைத்திருப்பாய்
வானத்து கதிரவனாய்

பல் சுவைச் செய்திகளுடன்
பலரையும் அரவணைத்தாய்
களம் தந்தாய் பலருக்கு
தலை நிமிர்ந்தனர் உன் பெயரால்

இணைய உலகின் சுழற்சியில்
இணைந்தாய் இரும்புக் கரங்களுடன்
இனியொரு விதி செய்யவென
இணைந்தனர் பலர் உன் கரங்களுடன்

நூறுகள் கடந்தும் தொடரவே
மக்கள் மனதில் என்றும் பதியவே
வரலாற்றில் தொடர் தடம் பதிக்கவே
சேவைகள் என்றும் தொடரட்டுமே

## துணிந்தெழு பெண்ணே!

வரக்காமுறையூர்
ராசிக்

மெல்லிடை காட்டி நிதம்
துள்ளிநடை பயன்று வரும்
தாரகையே யென் தங்கமே!
எள்ளி நகை யாடுது
எந்தன் மனம் வாடுது
கடைத் தெரு பக்கம்
கன்னி நீ போகையிலே
கடைக் கண்ணால் நோக்கும்
காடையர் கூட்ட மொன்று
கற்புக்கு விலை பேசுது
காண என் மனம் கூசுது
செயற்கை சாய மதை
செவ்விதழ் மீது பூசி
கயல் விழி அழகையும்
கடைத் தெரு பொருளாக்கும்
தையல் உந்தன் பாணி
தைக்கிது மனதில் ஆணி

அன்னமாய் நடை பயில
வலை வீசி வாலிபருனை
வளைத் தெடுப்ப ரதால்
நிலைய யிழந்து தவிக்குது – என்
நெஞ்சம் நெருப்பாய் கொதிக்குது
தனிமை மறந்தே தினம்
தாகம் கொண்டலைய
கண்ணியம் நிறை கற்பும்
காளையர்க்கு கரும்பாகுது
கன்னியே நீ உணர்ந்திடு
கற்பை காக்க துணிந்திடு

## மறக்கமுடியாத அணைப்புக்கள்

அறூபா அஹ்லா
கல்முனை

முதல் அணைப்பு அது
முத்தான அணைப்பு அது
தாயின் மார்பினில்
நான் தூங்க
தாயின் கரங்களோ
எனை அணைக்க
சுகமான உறக்கம்
எனைத் தழுவிய
முதல் அணைப்போ...
தாயின் பாசமான
அணைப்பு...

படித்துப் பட்டம் பெறுகையில்
தோள் தட்டி அணைத்து
பெருமித முகத்தோடு
புன்னகை சிந்தும் தந்தையின்
முதல் அணைப்போ
பெறுமித அணைப்பு...

நாம் இருக்கிறோம்
பயம் எதற்கு
தனியானவள் அல்ல நீ
துணிந்து செல்லென்று
மார்தட்டிச் சொல்லி
தோள்கொடுக்கும்
உடன் பிறப்புக்களின்
முதல் அணைப்போ
தைரியமூட்டும் அணைப்பு...

இறுதிவரை
உன்னோடு தான்
இன்ப, துன்பத்திலும்
உன்னோடு தானென
முடிச்சிட்டு மணந்த
மன்னவனின்
முதல் அணைப்போ
பிரிக்க முடியாத உறவின்
வலுவான அணைப்பு...

எம் இரத்தத்தில்
பிறந்த குழந்தையை
கையில் சுமந்து அணைத்த
முதல் அணைப்போ
வாழ்வின் எல்லையில்லா
மகிழ்ச்சியை அள்ளித் தந்த அணைப்பு...

## காலடி கூந்தல்

நிலவூர்ச் சித்திரவேல்
திருகோணமலை

**குதிக்கால் வரைக்கும்**
**நீண்டு வளர்ந்தடர்ந்த**
**கூந்தலைப் பார்த்துக்**
**காலடிக் கூந்தலென்று**
**கவிஞன் வடித்தான்**
**கவிதையில் புகழ்ந்து**

**முதுகையே முட்டாத**
**மூன்றங்குல முடியையும்**
**கால் அடிக்**
**கூந்தல் என்றே**
**கணிதன் வடிப்பேன்**
**கவிதையில் இகழ்ந்து!**

## கண்ணீர் துளிகள்!

அகீலா ஜவுபர்
ஏத்தாளை புத்தளம்

பட்டாடை சூடி
கம்பளத்தில் நடைபோட
வாய்ப்பில்லை என்றெண்ணி
கண்ணீர் விடாதே!

வானமதன் உச்சிதொட
உயர்ந்திருக்கும் மாளிகையில்
வசிப்பிடங்கள் இல்லையென
கண்ணீர் விடாதே!

புகையை கக்கி
சூழலை விழுங்கும்
வாகனங்கள் இல்லையென
கண்ணீர் விடாதே!

வயிறாற உணவுண்ண
அறுசுவையுடன் காத்திருக்கும்
மானிட வரிசையில்
நானில்லையென கண்ணீர் விடாதே!

நாளில் ஓர்பகுதியினை
நிம்மதியாய் படுத்துறங்க
பஞ்சுமெத்தை பஞ்சமென
கண்ணீர் விடாதே!

ஏழையாக வாழ்ந்தாலும்
கோழையாக வாழவில்லை
என்பதனை மறந்திட்டு
மௌனியாக மாறிடாதே!



## பெண்ணவள்

நுஸ்ஹா நவாஸ்
ஏறாவூர்

சிறுநோயென்று நீ சுருண்டிட்டால்
சிறகொடிந்த பறவையாய்
சிறப்புடன் உன்னைக் காக்கும்
நீ சிறக்க மறுப்பின்றி
உதவிடும் பெண்ணவள்
தாய்........

தாய் பிரிந்து வந்தாலும்
பாரமாக கருதாது
தாரமாக உன்னோடிணைந்து
தயவளிக்கும் உன்
இல்லற வாழ்வில் மிளிரும்
தாரகைப் பெண்ணவள்
மனைவி.......

சண்டைகளாயிரம்
சங்கமிப்பினும்
சகோதரப் பாசத்தில்
சட்டென மறைந்திடும்
கவலைகளை மறைத்திடும்
அன்பு மிகுந்த
ஆறுதல் பெண்ணவள்
சகோதரி.......

கூன் விழுந்து
குனிந்து வளைந்து
திண்டாடுகையில்
தூணாக உனைத் தாங்கி
துணை நிற்கும் பெண்ணனவள்
மகள்.......

இப்படி எத்தனை எத்தனை
கதாபாத்திரம் ஏற்றாலும்
சலிப்பின்றி அரங்கேற்றுகிறாள்
பெண்ணவள்
தன் திறமைகளை சேவையாக....
ஓங்கட்டும் பெண் புகழ் பூலோகமெங்கும்!
ஒழியட்டும் பெண்ணடிமை
பூலோகம் விட்டும்
பெண்ணவள் பெருமை
பெருகட்டும்..............

## மறதி...



நுஸ்ரத் மஹ்ரூப்ர்
மாதம்பை

மறதி வேண்டும்...
மறதி வேண்டும்...
மனதுக்கு மறதி வேண்டும்...

நினைவுகளும் நிகழ்வுகளும்
என்றுமே விசித்திரமானவைகள்தான்..
சிரித்ததை நினைத்து அழுவதும்
அழுததை நினைத்து
சிரிப்பதுமாய்...

எனவே...
நங்கூரமின்றி
நகர்ந்து செல்லும்
வாழ்வை ரசிக்க
மறதி வேண்டும்....

ஆழ்மனதின் அடியில்
அடங்கிப்போயிருக்கும்
அழுகைகள் அப்படியே
அமிழ்ந்து போயிட
மறதி வேண்டும்....

முதல் பிரசவ வலி
அவள் மறக்க
மறதி வேண்டும்...
இல்லையேல்
இரண்டாம் குழந்தையாய்
இங்கு யாரும் இல்லை....
ஆதலால்...
அடுத்தடுத்ததாய் பிரசவிக்க
அவள் பட்ட
மரண வேதனை மறக்க
மறதி வேண்டும்....

உற்றார் உறவினர்
உயிரோடு இருந்தும்
உதவாமல் இருக்கும்போது
வரும் கவலை மறக்க
மறதி வேண்டும்....

அடுத்த சுவர்
அக்காவின் அட்டூழியங்கள்
அன்றன்றே மறந்து வாழ
மறதி வேண்டும்....

நட்பை நலிவடையச் செய்த
நண்பர்கள் நினைவுக்கு வரா
மறதி வேண்டும்.....

உயிர் கொள்ளி நோயோடு
உறவாடித் தவித்திடும்
ஒவ்வொரு கணமும்
மரணப் பயமின்றி வாழ
மறதி வேண்டும்...

சமாதிகளில்
சங்கமிக்கப்பட்டவர்களை
சந்திக்கவே மாட்டோம்
எனும் கவலை மறக்க
மறதி வேண்டும்...

மரண வலி தானே
உயிரின் வலி..
என்றோ அந்த வலி
உணரனும் தானே!
அதையும் மறந்து வாழ
மறதி வேண்டும்...

ஏனெனில்
மனிதன் மரணம் வரை
உயிர் வாழ வேண்டும்.....

## தாமதங்களின் தாகம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

நான் நினைப்பது ஒன்று
ஆனால் எனக்கு நடப்பது ஒன்று...

நான் விரும்புவது ஒன்று
ஆனால் நான் பெற்றுக் கொள்வது
வேறு ஒன்று...

நான் துரத்திச் செல்வது ஒன்று
ஆனால் என்னைத் துரத்தி
வருவது இன்னொன்று

நான் தொலைக்கக் கூடாதென
நினைப்பது ஒன்று
ஆனால் என்னை விட்டு
மொத்தமாய் தொலைந்து போவதும்
அந்த ஒன்று தான்

பிடித்த ஆடையொன்றை அணிய
அத்தனை வேகமாக எத்தனிக்கிறேன்
அணியாதே எனத் தடுக்கிறது
தாயின் கரங்கள்

தடுக்கி விழுந்த என்னை
தாங்கிப் பிடித்தவள்
தவறாக சொல்ல மாட்டாளென ஏற்கிறேன்

நான் இஷ்டப்பட்டதை விட
அவள் பிரியப்பட்டதில் இருக்கும்
ஆனந்தத்தை உணர முடிகிறது
பின்னொரு நாளில்...

என்னை வெகுவாக
கோபப்பட வைக்கிறார்களென
கொப்பளிக்கிறேன் நான்
பொறுமையாக இரு என்கிறார் தந்தை

அந்தக் கோபம்
பின்னொரு நாளில்
என்னைக் கணக்கின்றி
கடந்து செல்கையில் உணர்கிறேன்
பொறுமையின் பரிசு என்னவென்று...

இந்த நிமிடம் இந்த வேலையை
முடித்து விடலாம் எனத் துணிகிறேன்
தயங்காமலே
தாமதமாகிப் போகிறது
அந்த வேலை..

என்ன இது சோதனை
இப்படி இழுத்தடிக்கிறதேயென
வியந்து நிற்கின்றேன்
பின்னொரு நாளில்
தாமதமாகிப் போனதற்கே
தலை வணங்குகிறேன் இறைவனை

நான் நினைத்த ஒன்று
எனக்கு நடக்காதிருப்பதும்
நான் விரும்பிய ஒன்றை
பெற்றுக் கொள்ளாதிருப்பதும்
நான் விரும்பாத ஒன்று
என்னைத் துரத்தி வருவதிலும்
வரண்ட மண்ணில் படரும்
பச்சைத் துளிராக
ஏதோ சில நல்லதைக் காண்கிறேன்..

தாமதங்களின் தாகம் தான்
சில நேரங்களில் தாங்கிப் பிடிக்கிறது

என்னை....!!!

## களையிழந்து காணப்பட்ட கச்சத்தீவு... 11ஆம் பக்க தொடர்....

சிலுவைப்பாதை தியானம் நிறைவுற்றதும் அதனைத் தொடர்ந்து வெஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற்று அதன் இறுதியில் கச்சத்தீவு புனித அந்தோனியாரின் திருச்சுரூப பவனி நடைபெற்றது. இந்த திருச்சுரூப பவனியின் போது கடற்படையினரும் புனித அந்தோனியாரின் திருச்சுரூபத்தை சுமந்து பவனியாக வந்ததைக் காண முடிந்தது. இலங்கை இந்தியாவிலிருந்து வருகை தந்த பக்தர்கள் மட்டுமன்றி அதிகாரிகளும் இந்த சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். முதல் நாள் கொண்டாட்டங்கள் நிறைவுபெற்று மறுநாள் 12ஆம் திகதி காலை 6.30மணிக்கு செபமாலை தியானம் இடம்பெற்று 7.00 மணிக்கு யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் இலங்கைஇந்திய அருட் தந்தையர்கள் மற்றும் அருட் சகோதரிகளின் பங்கேற்புடன் கூட்டுத் திருப்பலியாக திருவிழா திருப்பலி நிறைவேற்றப்பட்டது..

தமிழக இராமநாதபுரம் மறைமாவட்டத்தின் வேர்க்காடு பங்குத்தந்தை தேவசகாயம் அடிகளார் தலைமையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 80 பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டதுடன் இலங்கையில் யாழ் மறைமாவட்டத்தின் நெடுந்தீவுப் பங்குத் தந்தை வசந்தன் அடிகளாரின் தலைமையில் இலங்கை பக்தர்கள் 100 பேர் கலந்து கொண்டிருந்தனர்.

இரு நாடுகளிலிருந்தும் இம்முறை மிகக்குறைந்த எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்களே அழைத்துச் செல்லப்பட்ட நிலையில் கடற்படையினரின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து குறிக்கட்டுவான் ஊடாக ஊடகவியாளர்கள் குழுவொன்றும் படகு மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர்.

இம்முறை கச்சத்தீவு திருவிழா இரண்டு முக்கிய எதிர்பார்ப்புகளைத் தந்திருந்தது.

அது கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக இரண்டு வருடங்களாக கச்சத்தீவு திருவிழா நடைபெறாமல் இருந்த நிலையில் இரு நாட்டு உறவுகளும் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ள முடியாத நிலையை இம்முறை திருவிழா தீர்க்கும் என்ற எதிர்பார்ப்பு காணப்பட்டது.

அதேவேளை,இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையிலான பிரச்சினைகள் உக்கிரமடைந்து வரும் நிலையில் இருநாட்டு மீனவர் சமூகமும் கச்சத்தீவில் சந்தித்து அதற்கான இணக்கப்பாடு ஒன்றை எட்டும் தருணமாகவும் இம்முறை திருவிழா எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இரண்டு நாடுகளில் இருந்தும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பக்தர்களுக்கே அனுமதி வழங்கப் பட்டிருந்த நிலையில் அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்றே கூறலாம். திருவிழாவிற்கு முதல்நாள் இரவு சமய நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்த சந்தர்ப்பத்தில் அவசரம் அவசரமாக இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றது. கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வருகை தந்து இரண்டு தரப்பு மீனவர்களினதும் கலந்துரையாடலுக்கு நடுநிலை வகித்தார்.

இரண்டு தரப்பினரினதும் பேச்சுவார்த்தை மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் செயற்பாடுகளுக்கு தான் பக்கச்சார்பின்றி நடுநிலை வகிப்பதாக அமைச்சரே அதன்போது குறிப்பிட்டார்.

வழமைபோன்று இரு தரப்பு மீனவர்கள் மத்தியில் கலந்துரையாடல் நடைபெற்றதுடன் இராஜதந்திர மட்டத்தில் பிரச்சினையை முன்னெடுக்கப் போவதாகவும் அந்தவகையில் தாம் கொழும்பு திரும்பி ஜனாதிபதியுடன் அது தொடர்பில் கலந்துரையாடி எதிர்வரும் மே மாதத்தில் இரண்டு தரப்பு மீனவர்களையும் ஒன்றிணைத்து பேச்சுவார்த்தை ஒன்றை ஒழுங்கு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அதன்போது உறுதியளித்தார்.

இலங்கை மீனவர்களைப் பொறுத்தவரையில் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் மீன் பிடிக்க வரக்கூடாது என்பதே அவர்களின் நிலைப்பாடாக இருந்தது. அதற்கு காரணம் உண்டு. இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகள் மூலம் தொழில் செய்து தமது வளங்களை அழிப்பதால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வருவதாக அவர்கள் இங்கு சுட்டிக் காட்டினர்.

அதேபோன்று இந்திய மீனவர்கள் தாம் காலங் காலமாக இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்து வருவதாகவும் அதேபோன்று இலங்கை மீனவர்களும் இராமேஸ்வரம் பகுதிக்கு வந்து மீன் பிடித்து வருவதாகவும் இரு தரப்பினரும் ஒரு இணக்கப்பாட்டுடன் இதனை முன்னெடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர். இலங்கை கடற்பரப்பிற்குள் மீன் பிடிப்பதற்கு தமக்கும் உரிமையுண்டு என்ற போர்வையிலே அவர்களது கருத்துகள் அமைந்திருந்தன.

இலங்கை மீனவர்கள் தெரிவிப்பது போல தமது இழுவைப்படகு மூலம் மேற்கொள்ளப்படும் மீன்பிடி நடவடிக்கைகளை முற்றாக நிறுத்துவதற்கு கால அவகாசம் ஒன்று தேவைப்படுகிறது என்ற கருத்தினையும் அவர்கள் முன்வைத்தனர். எவ்வாறாயினும் அதனை எந்தவிதத்திலும் ஏற்க முடியாது என்பதே இலங்கை மீனவர்களின் கருத்தாக இருந்து. முதலில் அவர்கள் இழுவைப்படகு மூலம் மீன் பிடிப்பதை முற்றாக நிறுத்த வேண்டும். அதன் பின்னர் நாட்டுப் படகு மூலம் அவர்கள் மீன் பிடிப்பது தொடர்பில் பரிசீலிக்கலாம் என்றும் இலங்கை மீனவர்கள் இதன்போது தெரிவித்தார்.

நீண்ட காலமாக தொடரும் இந்த பிரச்சினைக்கு விரைவான தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில் தாம் நேரடியான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். இவ்வாறு வழமைபோலவே எந்தவித முடிவுகளும் இன்றி அதே இழுபறியுடன் இந்த பேச்சுவார்த்தையும் முடிவுக்கு வந்தது.

பேச்சுவார்த்தை ஊடகவியலாளர்கள் மீனவர்களை தனித்தனியே சந்தித்தபோதும் இருதரப்பும் தத்தமது நியாயங்களை எடுத்துக் கூறினர்.

மீனவர் பிரச்சினைகள் எவ்வாறு இருந்தாலும் தாம் தமது உறவுகளுடன் ஒன்றாக கச்சத்தீவு திருத்தலத்தில் அந்தோனியார் திருவிழா கொண்டாடுவது தமக்கு பெரும் மகிழ்ச்சிளிக்கிறது என இந்திய மீனவர்கள் தெரிவித்தனர். எந்தக் காரணங்களுக்காகவும் இத்தகைய சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடக்கூடாது என்றும் பிரச்சினைகளை விட எங்கள் உறவுகளின் தொடர்புகள் எமக்கு மிகவும் அவசியம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த பக்தர்களிடம் நாம் பேச்சுக் கொடுத்தோம், 'கச்சத்தீவு திருவிழா எப்போது வரும் என்று எதிர்பார்த்து காத்திருப்போம். எது எப்படிப் போனாலும் எங்கள் தொப்புள்கொடி உறவுகளை பார்த்தாக வேண்டும். அவர்களோடு பேச வேண்டும். சேமநலன்களை பகிர்ந்து கொள்ள வேண்டும் என ஏக்கத்தோடு காத்திருப்போம்.

அந்த நாள் வந்துவிட்டால் அது போன்ற மகிழ்ச்சி எங்களுக்கு வேறு எதுவும் கிடையாது. ஒவ்வொரு வருடமும் எப்படியாவது வந்து விடுவோம். கடந்த இரண்டு வருடங்களாக வரமுடியாமல் போய்விட்டது. இந்த முறையும் அதிகம் மக்கள் வர முடியவில்லை. அடுத்தமுறையாவது நாங்கள் ஒரே குடும்பமாக மணலில் அமர்ந்து உண்டு உறவு கொண்டாடி மகிழ வேண்டும் அதற்கு அந்தோனியார் தான் அருள் புரிய வேண்டும் என்றார் தமிழகத்தில் இருந்து வந்திருந்த ஒரு தாய். அவர்களில் பலரும் இத்தகைய கருத்துக்களையே தெரிவித்தனர்.

இந்த திருவிழாவின் ஏற்பாடுகள் தொடர்பிலும் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் வடக்கு கடற்படைக்கு பொறுப்பான கட்டளைத் தளபதியிடம் நாம் பேசினோம்.

திருவிழா ஏற்பாடுகள் மட்டுமன்றி யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீண்டும் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வடக்கின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள மக்களுக்கும் கடற்படையினர் பல்வேறு உதவிகளையும் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவை சிறப்பாக நடத்த வேண்டும் என்பதிலும் முடிந்தளவு மக்களை அதில் பங்கேற்க செய்ய வேண்டும் என்பதிலும் கடற்படையினரின் பங்கு அலாதியானது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தெரிவித்த அவர், தாம் அவர்களோடு கலந்துரையாடிய போது அவர்கள் முற்றாக இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

தமது மீனவர்களை கைது செய்வதும் தமது படகுகளை கைப்பற்றி ஏலத்தில் விற்பதும் மீனவர்களை தாக்குவதும் அச்சுறுத்துவதும் எந்த விதத்திலும் நியாயமில்லை என இந்திய மீனவர்கள் தெரிவித்தமை தொடர்பில் அவரிடம் நாம் கேள்வி எழுப்பினோம்.

'கடற்படையினர் தமது கடமையை செய்வார்கள். அவர்கள் தமது பொறுப்பில் இருந்து ஒருபோதும் விலக முடியாது. கடற் பாதுகாப்பு, கடல் மார்க்கமாக நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், நாட்டு எல்லைக்குள் அத்துமீறிய பிரவேசம் போன்றவற்றை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. மீனவர்கள் தொடர்பில் கடற்படையினர் தீர்க்கமான எந்த முடிவையும் மேற்கொள்ள முடியாது என்றும் அது இராஜதந்திர மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டியது' என்பது அவர் பதிலாக இருந்தது.

'கச்சத்தீவு அந்தோனியார் திருத்தலம் மிகவும் சக்தி வாய்ந்தது. மக்கள் விசுவாசத்தோடு அந்த திருவிழாவில் கலந்து கொள்வது மகிழ்ச்சியளிக்கின்றது தொடர்ந்து இன்று திருவிழா நிகழ்வுகள் விமரிசையாக நடைபெற வேண்டும் அதற்கான சகல பங்களிப்புகளையும் கடற்படையினர் வழங்குவார்கள்' என்றும் அவர் எம்முடன் மேலும் பேசும்போது கூறினார்.

இலங்கை இந்திய கடற்படை அதிகாரிகள், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் முக்கியஸ்தர்கள் பலரும் திருவிழாவில் கலந்து கொண்டிருந்தனர். வழமை போன்று இம்முறை கச்சத்தீவு களைகட்டவில்லை என்றே கூறவேண்டும்.

திருவிழா நிகழ்வுகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் இரண்டு நாட்டு மக்களும் வருகை தந்து கச்சத்தீவே கலகலத்துப் போகும் வகையில் நடமாடி செயற்படும் அந்த கண்கொள்ளா காட்சிகளை இம்முறை காண முடியவில்லை.

இருநாட்டு மக்களும் சொந்தம் கொண்டாடி,உணவு பகிர்ந்து, அவர்களிடம் உள்ளதை இவர்களுக்கும் இவர்களிடம் உள்ளதை அவர்களுக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ச்சி கொண்டாடுவதை இம்முறை காணமுடியவில்லை. திருவிழா முடிந்ததும் கச்சத்தீவு கடலில் பிள்ளை குட்டிகளோடு நீந்திக் குளித்து இரண்டு தரப்பு மக்களும் மகிழ்ச்சி கொண்டாடுவதை இம்முறை காண முடியவில்லை .

போத்தல்களைக் கொண்டுவந்து கச்சதீவு கடல் நீரை பக்தியோடு நிரப்பிக்கொண்டு திருத்தலத்தின் மண்ணை பொட்டலமாகக் கட்டிக் கொண்டு செல்லும் பக்தர்களை இம்முறை காண முடியவில்லை. அதே போன்று பாதுகாப்பு கடமையில் இருப்போர் துரத்தித் துரத்தி விரட்ட பற்றைக்காடுகளுக்குள் மறைந்து சிறு சிறுவியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் அதற்கான சந்தர்ப்பத்தையும் கூட இந்த முறை காணவே முடியவில்லை.

மொத்தத்தில் கச்சத் தீவை நிரப்பும் வகையில் யாத்திரிகர்கள் வருகை தந்து கச்சத்தீவை கலகலக்கச் செய்து களிப் பூட்டி நடத்தப்படும் திருவிழாக்கள் மீண்டும் எப்போது வரும் என்ற ஏக்கம், எதிர்பார்ப்புடனேயே இரண்டு நாட்டு மக்களும் விடை பெற்றுச் சென்றதையே காண முடிந்தது.

தமிழ்நாடு இலங்கை இரண்டுக்கும் இடையிலான மையத்தில் இத்தீவு அமைந்துள்ளது.

கச்சத் தீவின் தீவின் பரப்பளவு 285 ஏக்கர். இத்தீவு யாழ்ப்பாணத்திலிருந்து 70 கி.மீ. நெடுந்தீவிலிருந்து 28 கி.மீ. இராமேஸ்வரத்திலிருந்து 18 கிலோ மீற்றர். தலைமன்னாரிலிருந்து 25 கிலோ மீற்றர் கச்சத்தீவின் புவியியல் அமைப்பு முட்டை வடிவில் இருக்கும் அதேவேளை அது கடலில் தக்கையென மிதப்பது போல் காணப்படும்.

தீவின் மேற்கே உயர்ந்த பாறைகள், உட்பகுதியில் வெண்மணல் திட்டுகள் ஆங்காங்கே குழிகளும் உண்டு. புல் தரைகளும் உண்டு. நடுப்பகுதி கல்மலை என அழைக்கப்படும். கடல் மட்டத்திலிருந்து கல்மலை 20 அடி உயரம். அதன் அருகே ஆழ்கிணறு ஒன்று உள்ளது. அதன் நீர், குடிப்பதற்கு நன்று தொடர்ந்து கனமழை பொழியும்போது செடி, கொடி அரும்பும். இங்கு 'டார்குயின்' எனும் பச்சை ஆமைகள் இருந்துள்ளன.

அதனால் கச்சத்தீவைப் பச்சைத்தீவு என முன்னர் அழைத்துள்ளனர். கச்சம் என்றால் ஆமை என்பர். அதனாலும் இத்தீவை கச்சத்தீவு என்பர். இத்தீவின் பச்சை மேனியில் இச்சை கொண்டோர் 'பச்சைத் தீவு! என்ற சொல்லால் அழைத்தனராம். பச்சைத் தீவு மருவி 'கச்சத்தீவு' என வழங்கப்படுகிறது என்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது.


SPMC

# பதவி வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்

## *மருந்தாக்கல் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் இராஜாங்க அமைச்சு*

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள துடிப்பான, சுயமாக சிந்தித்து செயலாற்றக் கூடிய, தொழிலில் சாதனை படைக்கக் கூடிய SPMC உடன் இணைய ஆர்வமுள்ளவர்களை நாம் அழைக்கின்றோம்.

**ஒவ்வொரு விண்ணப்பதாரியும்:**

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கான உடல், உள ஆரோக்கியமும் தீவின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான தகுதியும் இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த குணநலன்களை உடையவராக இருத்தல் வேண்டும்.

### 1. தர உறுதி அதிகாரி பதவி

**(POST OF QUALITY ASSURANCE OFFICER ) – (JM-1-1- IIஆம் தரம்)**

தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாக்கல் அல்லது இரசாயனவியலை உள்ளடக்கிய விஞ்ஞான இளமாணிப் பட்டம்
2. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதியில் 6ஆம் நிலைக்குக் (NVQ Level-6) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றிலிருந்து மருந்தாக்கல் தர உறுதி துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால அனுபவம்.

**குறிப்பு:** மருந்தாக்கல் ஆய்வுகூட வேலைகள் மற்றும் தர முகாமைத்துவ முறைமையில் அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
2. விடயத்துறையுடன் தொடர்பான பதவியொன்றில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ‘‘முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல்’’ (MA-2-1) IIஆம் தரப் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### 2. ஒழுங்குபடுத்தல் விவகார அதிகாரி

**(POST OF REGULATORY AFFAIRS OFFICER) (JM-1-1- IIஆம் தரம்)**

**தகைமைகள்** : வெளிவாரி விண்ணப்பதாரிகள்

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாக்கலில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மருந்தாக்கல் அல்லது இரசாயனவியலை உள்ளடக்கிய விஞ்ஞான இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருந்தியலாளர்

3. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்கல்வித் தகுதியில் 6ஆம் நிலைக்குக் (NVQ Level-6) குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**அத்துடன்**

இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருந்தியலாளர் மற்றும் அரசாங்க திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சபை அல்லது கீர்த்தி வாய்ந்த வர்த்தக நிறுவனமொன்றிலிருந்து மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் துறையில் தகைமைக்குப் பின்னரான குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
2. இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்யப்பட்ட மருந்தியலாளர் மற்றும் விடயத்துறையுடன் தொடர்பான பதவியொன்றில் அனுபவத்தைப் பெற்றிருத்தல் மற்றும் ‘‘முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பவியல்’’ (MA-2-1) IIஆம் தரப் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட கால திருப்திகாரமான சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

- **சம்பள அளவுத்திட்டம்:** JM 1-1 – 2016: ரூபா **42,600/= – 10 x 755 - 18 x 1135 – 70,580/=**
- **வயதெல்லை:** 22 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.
- **ஆட்சேர்ப்பு முறைமை:** போட்டி ரீதியிலான எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை

**பக்க நலன்கள் (Fringe Benefits)**

- வருகைப் பதிவு மற்றும் செயற்பாட்டு ஊக்குவிப்பு பணம்
- பாவிக்கப்படாத வருடாந்த மற்றும் சுகவீன விடுமுறைக்கான மீளப்பெறல் கொடுப்பனவுகள்
- மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் மருத்துவ மீளப்பெறல் வழங்கல் திட்டம்
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) கூட்டுத்தாபனம் சம்பளத்தின் 15% பங்களிப்புச் செய்யும் அதேவேளை ஊழியர் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
- ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) சம்பளத்தின் 3% கூட்டுத்தாபனம் பங்களிப்புச் செய்யும்
- 1983இன் 12ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை வழங்கப்படும்.
- ஏனைய பக்க நலன்கள்

**பொதுவான அறிவுரைகள்:**

- பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர், முகவரி மற்றும் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்களுடன் சகல கல்விச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகளையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் http;/www.spmclanka.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து விண்ணப்பப்படிவங்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.
- அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நியதிகள் சட்டச்சபை ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமையின் ஊடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அவர் தெரிவு செய்யப்பட்டால் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கு விடுவிக்கப்படுவார் என சான்றுபடுத்தபட்டிருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களுக்குள் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
- மேற்குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள தோட்டம், இரத்மலான.**



## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

# வெற்றிடங்கள்

## கண் மருத்துவ தொழில்நுட்பவியலாளர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **தகைமைகள்** | : இலங்கை கண் மருத்துவ தொழிநுட்ப பாடசாலையிலிருந்து, பெற்றுக்கொண்ட சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருட அனுபவத்துடன் இலங்கை மருத்துவ சபையில் ஓர் கண்மருத்துவ தொழில்நுட்பவியலாளராக பதிவு செய்யப்பட்டிருத்தல். |
| **வயது** | : விண்ணப்பதாரிகள் 50 வயதிற்கு குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்கள் இல்லையெனில் 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்காக கவனத்தில் கொள்ளப்படுவர். |
| **சம்பளம்** | : ரூ. 43,310 - 10x600 - 11x890 - 10x985 - 10x1015 - 79,100/- மாதாந்தம். சம்பளப் படி - ரூ. 43310/- மாதாந்தம் மேலதிகமாக, அரசாங்கத் துறையினருக்கு செலுத்தப்படும் கொடுப்பனவுகள் மற்றும் சபையினால் அனுமதிக்கப்படும் மேலதிக கொடுப்பனவுகளும் செலுத்தப்படும். |
| **நியமனத்தின் விதிகள்** | : நிரந்தரமானது (50 வயதிற்குக் குறைந்தவர்கள்) அத்துடன் ஊழியர் சேமலாப நிதி அடிப்படையிலாகும். இந்த பதவிக்காக அவர்களது விண்ணப்பங்களை இரண்டாம் நிலையில் விண்ணப்பிக்க விரும்பும் அரசாங்க நிறுவனங்களில் இருந்து வரும் எந்த விண்ணப்பங்களும் கவனத்தில் கொள்ளப்படும். |

அரச சேவையில் தற்போது கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் அவர்கள் கடமையாற்றும் திணைக்களங்கள்/ நிறுவனங்களின் தலைமையூடாக அவர்களது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படும் இடத்து, சேவையில் இருந்து அவர்களை விடுவிக்க முடியும் என்பதை தெரிவித்து சம்பந்தப்பட்ட திணைக்களம்/ நிறுவனத்தின் தலைமையினால் வழங்கப்படும் சான்றிதழின் ஓர் நேரடி பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இந்தப் பதவிக்கு எந்த விண்ணப்பதாரியையும் நியமித்தல்/ நியமிக்காதிருத்தல் பற்றிய உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளர்கள் சபை கொண்டிருக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

முழுமையான சுயதரவு (CV) உடன் இரண்டு (02) உறவினர் அல்லாத பரிந்துரைப்பவர்களுடனான அவர்களது விண்ணப்பங்களை, 2022.04.11 அன்று அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்படுவதற்கு விண்ணப்பதாரிகள் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**
**தலபத்பிட்டிய, நுகேகொடை**
**14.03.2022**



**டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

**363, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 7**

## கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் (ITI) PhD மற்றும் MPhil ஆராய்ச்சி மாணவர்கள் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனமானது (ITI) டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இயங்கும் அரசுக்கு சொந்தமான முன்னணி விஞ்ஞான மற்றும் கைத்தொழில் ஆராய்ச்சி அமைப்பாகும். பின்வரும் பகுதிகளின் கீழ் மேம்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி தளங்களில் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு சாத்தியமான MPhil மற்றும் PhD அபேட்சகர்களை ITI தேடுகிறது: இயற்கை மற்றும் பாரம்பரிய விவசாய தொழில்நுட்பம், பசுமை ஆற்றல் தொழில்நுட்பம், தொழில்துறை உயிரித் தொழில்நுட்பம், உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், மூலிகை தொழில்நுட்பம், பொருள் விஞ்ஞானம் மற்றும் நனோ தொழில்நுட்பம், மருந்தியல் ஆராய்ச்சி, கடல் வளங்கள், இயற்கை தயாரிப்பு இரசாயனம் மற்றும் பொறி-இலத்திரனியல் மற்றும் தொலைத்தொடர்பு, உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலையங்களின் ஒத்துழைப்புடன் ITI மூத்த ஆராய்ச்சியாளர்களால் மேற்பார்வை செய்யப்படுகிறது.

**எமது பலம்:**

- உயர்தர உபகரணங்களுடன் கூடிய நவீன ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) ஆய்வுகூடங்கள்
- பலதரப்பட்ட அம்சங்களில் சாதகமான R&D சூழல்
- பட்டப்பின்படிப்பு தகைமைகளுக்கு வழிவகுக்கும் ஆராய்ச்சி உதவிகள்
- உள்நாட்டு மற்றும் சர்வதேச தகைமை பெற்ற ஆராய்ச்சியாளர்களின் மேற்பார்வை

அனைத்து பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகளும் ஆராய்ச்சி மூலமான மற்றும் முழு நேர அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.

**PhD/ MPhil** ஆராய்ச்சி மாணவர் நிலைகளுக்கான தகைமை அளவுகோல் - **SLQF** அளவு – 12/11

1. இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் BSc சிறப்புப் பட்டம் (04 ஆண்டுகள்) அல்லது BSc பட்டம் (04 ஆண்டுகள்).

அல்லது

2. இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் அணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் BSc பட்டம் (03 ஆண்டுகள்) மற்றும் இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் (ஆராய்ச்சியுடன்/ மூலம்) பட்டப்பின்படிப்பு பட்டம்.

**கட்டணம் (Bench Fee):**

MPhil (2 வருடங்கள்): 300,000.00 இ.ரூபா (அரச வரிகள் தவிர்த்து) + பல்கலைக்கழக பதிவுக் கட்டணம்

PhD (3 வருடங்கள்): 500,000.00 இ.ரூபா (அரச வரிகள் தவிர்த்து) + பல்கலைக்கழக பதிவுக் கட்டணம்

PhD/ MPhil திட்டங்களுக்கான அனைத்து R&D செலவுகளும் ஆராய்ச்சி மானியங்களில் உள்ளடக்கப்படும். மாணவர்கள் கட்டணம் (Bench Fee) மற்றும் பட்டப்பின் பதிவு கட்டணத்தை மாத்திரமே மாணவர்கள் செலுத்த வேண்டும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது:**

- விண்ணப்பப்படிவங்களை ITI இணையதளத்தில் இருந்து (www.iti.lk) தரவிறக்கம் செய்ய முடியும்.
- ITI/PhD/MPhil-2022 என்ற குறிப்பு இலக்கத்தை பயன்படுத்தி இலங்கை வங்கி, டொரிங்டன் சதுக்க கிளையின் 2323303 என்ற நடைமுறை கணக்கிற்கு 2,000 ரூபா விண்ணப்பக் கட்டணத்தை செலுத்திய பின் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் துணை ஆவணங்களுடன் சேர்த்து முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பணிப்பாளர் நாயகத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும்: postgrad@iti.lk
- விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதி 2022.04.28

**மேலதிக விபரங்களுக்கு**
**பணிப்பாளர் நாயகம்**
**தொ.: +94 11 2797300 / 071-5346867**
**மின்னஞ்சல்: postgrad@iti.lk**

# கையேந்தாத பொருளாதாரம் கைகூடுவதற்கு கைசேர்வோம்!

சுஐப் எம். காசிம்

"இல்லையென்போர் இருக்கையிலே, இருப்பவர்கள் இல்லை என்பார்" இது, சினிமாப்பாடல். தேவைக்காக கையேந்துவோரின் கையறு நிலைமையையும், கை நிறைய இருந்தும், கடுகளவாவது கொடுக்காதோரின் கல்நெஞ்சையும் குறித்துக்காட்டும் யதார்த்தங்கள் இவை. ஊழிக்காலம் வரைக்கும் இந்நிலைமைகள் இருக்கவே போகிறது. இதற்காக யாரையும் குற்றம் சொல்லவும் முடியாது. இப்படியொரு நிலைமைக்குள்தான், எமது நாடும் இன்றிருக்கிறது.

பணமிருக்கிறது ஆனால், எரிவாயு வாங்க முடியாது. நிதியிருக்கிறது, அதற்கு எரிபொருள் வாங்க இயலாது. வசதியிருக்கிறது, இருந்துமென்ன? முழுநேரமும் மின்சாரத்தை நுகர இயலாது, வசதியான வாகனங்களை ஓட இயலாது. உழைக்க இயலுகிறது, இயன்றாலும், கிடைத்த ஊதியத்துக்கு ஒருகிளாஸ் அங்கர் குடிக்க முடியாது. இதைத்தான், "toomuch money chase few goods" என்கிறது பொருளியல். அதிகளவு பணம் கொஞ்சப் பொருட்களை துரத்துகிறது. இவைகள் எப்படி, ஏன், எப்போது ஏற்பட்டன. இதற்கான ஆராய்ச்சியில், அரசியல்வாதிகள் ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபட்டாலும் அவர்களது ஆலோசனைகள் அல்லது அறிக்கைகளில், சாயம்பூசப்பட்டிருக்க கூடாது.

முழுஅளவில்,பொருளாதார மற்றும் வியாபார விற்பன்னர்கள் கலந்துரையாடி கண்டறியப்பட வேண்டிய விடயம்தானிது. தவிர்க்க முடியாமல் அரசியலும் கலப்பதாலோ?என்னவோ? கரை காணாமல் இழுபறியாகிச் செல்கிறது இப்பொருளியல். நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை, அரசியல்வாதிகள் கண்டுகொள்ளாமலா இருப்பது? மக்கள் பிரச்சினையில் அவர்களது பிரதிநிதிகளும் பங்கெடுப்பதில்லையா?இந்தச் சிந்தனைகளில்தான், சிலரின் ஆதாய அரசியலும் நுழைந்துகொள்கிறது. திறந்துவிடப்பட்ட பொருளாதாரக் கொள்கையால், உள்நாட்டு உற்பத்தியிலிருந்த கவனங்கள் திசை திருப்பப்பட்டன. அளவுக்கு அதிகமான நுகர்வுகள், உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியை ஐதாக்கியது மட்டுமன்றி, டொலரின் பெறுமதியை உயர்த்தியிருக்கிறது. இவைதான் இந்த நெருக்கடியில், பிரதான பங்காற்றுகிறது. இதிலிருந்துதான், பிரச்சினைகள் அணுகப்பட வேண்டும்.

இன்று, எமக்குத் தேவைப்படும் அத்தனையும் எங்கிருந்தோ வர வேண்டியதுதானே! இங்கிருந்தே இவற்றைப் பெற முடியுமென்றால், டொலர் தேவைப்பட்டிருக்காது. வெளிநாட்டினர் இங்கு வருவதலும், எமது நாட்டினர் அங்கிருந்து அனுப்புவதாலும் கிடைக்கும் அந்நியச் செலாவணியால் மீதமாகும் இருப்பு, சராசரியாக பத்து பில்லியன் அமெரிக்க டொலராகப் பேணப்பட வேண்டும் என்கின்றனர் பொருளியல் நிபுணர்கள். இந்த இருப்பு, கட்டுப்பாட்டு விலையில் டொலர் இருக்கும் வரைக்கும்தான். டொலரின் விலை குறைந்தால், சராசரி இருப்பு பத்து பில்லியனை விடக் கீழிருந்தாலும் பறவாயில்லை. மாறாக, டொலரின் பெறுமானம் கூடி, நமது நாணயத்தின் பெறுமதி இறங்குமானால், சராசரி இருப்பு சர்வதேச சந்தைக்கு ஏற்ப கட்டாயம் உயரவே வேண்டும். இந்த பத்து பில்லியன் அமெரிக்க டொலரில், மூன்று வீதம் சுற்றுலாத்துறையாலும், ஏழு வீதம் நம்மவர்களின் வெளிநாட்டு உழைப்புக்களாலும் கிடைக்கிறதாம். இப்போது, இந்த சராசரி இருப்பு மத்திய வங்கியில் பேணப்படவில்லை. இதுதான் பிரச்சினை. இப்பிரச்சினைக்குள்ளும்,போதியளவு தங்கம் இல்லாமலும் உள்நாட்டில் நாணயம் அச்சிடப்படுகிறது. பணவீக்கம் ஏற்படுமெனத் தெரிந்தும் நாணயத்தை அச்சிடுவது, புழக்கத்தை அதிகரிக்கத்தானே!

ஏன் பேணப்படாமற் போனது? நாட்டில் நிலவிய சூழல்கள்தான். ஈஸ்டர் தாக்குதலால் வீழ்ந்த சுற்றுலாத்துறை, கொரோனாவால் ஏற்பட்ட நிர்வாக முடக்கங்களே பிரதான பங்காற்றிகள். வளர்ச்சியடைந்த நாடுகளால், இந்த நிலைமைகளிலிருந்து மீண்டெழ முடிகிறது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் திண்டாடியும், திணறியுமே மீள வேண்டியிருக்கிறது. இதுதான், காரணம் என்பதுமில்லை. அரசியல் நுழைந்து கொண்டு, விகாரங்களை வெளிப்படுத்துவதும் காரணம்தான். இலக்கை நோக்கிச் செய்யப்பட்ட அல்லது செய்யப்படும் பாரிய அபிவிருத்திகள் அரசுகள் மாறுகின்றபோது, மாற்றாந்தாய் மனநிலையால் கைவிடப்படுவதும் இவ்வாறான நெருக்கடிகளையே ஏற்படுத்தும்.



அண்மையில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டிலும் இந்த விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்காகத்தான், பொருளாதாரக் கோட்பாட்டிலான திட்டங்களை இம்மாநாடு வலியுறுத்தியுள்ளது.

ஆட்சிகள் மாறுவதைப் போல, எந்தக் காலத்திலும் மாறாத பொருளாதாரக் கோட்பாடுகள்தான், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளை வலுப்படுத்தும். இந்தியா இன்று இந்த வலுவுக்கு வரக் காரணமும் இதுதான் என்பதும் கண்டறியப்பட்டிருக்கிறது. எமது நாட்டுடன் சேர்ந்துதானே! இந்தியாவும் மூடிய பொருளாதாரத்தை பின்பற்றியது. இன்று, பாரதம் எங்கே சென்றிருக்கிறது. ஆனால், நமது நிலை பாவமாகியிருக்கிறது.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்காது புறக்கணித்த கட்சிகள், எப்போதோ காத்திருந்த ஒரு சந்தர்ப்பத்தை பயன்படுத்தியிருக்கின்றன. பங்கேற்ற கட்சிகளோ, இதையும் ஒரு சந்தர்ப்பமாகப் பாவித்திருக்கின்றன. அவ்வளவுதான். எனவே, பதுக்கல் மற்றும் பற்றாக்குறை ஏற்படுத்தல் இன்னும் கழுத்தறுப்பு வியாபாராங்களை கைவிட்டு மனிதாபிமானம் பேணிய மனநிலைகளில் வியாபாரிகள் மட்டுமல்ல அரசியல்வாதிகளும் செயற்பட வேண்டும்.


இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்

ICTA ideas actioned

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை (EOI)

### ஒப்படை தலைப்பு: முக்கிய திறனைக் கட்டியெழுப்புவதற்காக பிரசுரிப்பதற்கு தயாரான ஆவணங்களை உருவாக்க ஒரு தொழில்நுட்ப எழுத்தாளரை வாடகைக்கமத்துதல்

### ஒப்பந்த இல. ICTA/GOSL/CON/IC/2022/02

இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) என்பது நாட்டின் டிஜிட்டல் பரிவர்த்தனைக்காக மூலோபாயத்தைத் தயாரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக கட்டாயமாக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு அங்கமாக ICTA பிரஜைகளுக்கான சேவைகளை வழங்க டிஜிட்டல் தீர்வுகளைச் செயற்படுத்துகின்றது. அதே வேளையில் அரசாங்க அதிகாரிகளின் டிஜிட்டல் கல்வியறிவு, திறமை மற்றும் ஒழுக்கத்தை மேம்படுத்துவதற்காக அவர்களை மீளுருவாக்கம் செய்தல் மற்றும் திறன்களை மேம்படுத்துகின்றது. டிஜிட்டல் மாற்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முழு அரசாங்க அணுகுமுறைகள் அடுத்த மூன்று (03) ஆண்டு காலத்தில் அரசாங்கத் துறைக்குள் குறிப்பிடத்தக்க கலாசார மாற்றத்தை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் விளைவாக அரசாங்க செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் ஒரு பிரஜையை மையமாகக் கொண்ட, டிஜிட்டல் முறையில் இயக்கப்படும் மற்றும் விளைவு சார்ந்த கட்டமைப்புக்குள் கணிசமாக உருவாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு முக்கிய பங்கை நிறைவேற்றுவதற்காக ICTA ஒரு தொழில்நுட்ப எழுத்தாளராக அனுபவம் வாய்ந்த ஆலோசகரின் சேவையை பெற விரும்புகின்றது. மற்றும் இதன் மூலம் பணியை மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த தொழில்சார் நிபுணர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகளை அழைக்கின்றது. தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து தொடர்புடைய கலைபொருட்களை ஆவணப்படுத்த வேண்டும் மற்றும் ICTA வின் அங்கீகாரத்துடன் வெளியிடுவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் மிக உயர்ந்த தொழில்முறை தரத்தில் உருவாக்க வேண்டும்.

**ஒப்படைக் காலம்:** 06 மாதங்கள்

**தகைமை மற்றும் அனுபவம்:**

| |
|---|
| அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ நிறுவனமொன்றின் தகவல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் அல்லது இயைபுடைய துறையில் இதற்குச் சமமான தகைமை |
| தொழில்நுட்ப எழுத்து மற்றும் ஆவணப்படுத்தலில் செயல்முறை அனுபவத்துடன் விடயப் பரப்பில் குறைந்தபட்சம் 03 வருட கால அனுபவம் |
| பல்வேறுபட்ட பார்வையாளர்களுக்கான முறைமைத் தேவைப்பாடு விபரக் குறிப்புகள், அறிக்கைகள் மற்றும் நடைமுறைப் பொருட்கள் போன்ற ஆவணங்களை எழுதுவதில் அனுபவம் |
| பயன்பெறுநர்களின் புரிதலை அதிகரிக்கும் புகைப்படங்கள், வரைபடங்கள், வரைபு குறிப்புகள், அமினேஷன் மற்றும் விளக்கப்படங்களின் உருவாக்கம் மற்றும் பயன்பாடு |
| மக்கள் தொடர்பு பிரசாரங்களில் அனுபவம் |
| Microsoft office மற்றும் photoshop, coral draw, Visio என்பவற்றில் அனுபவம் ஆனால் இவைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதல்ல. |

ஆர்வமுடைய பிரத்தியேக ஆலோசகர்கள் இதனையொத்த ஒப்படைகள், தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்ப எழுத்துத் திறன்கள் மற்றும் ஏனைய பொருத்தமான / தொடர்புடைய நிபுணத்துவம் ஆகியவற்றை நிரூபிப்பதற்கு தகைமைகள், முன்னைய அனுபவத்தை ஆவண அத்தாட்சியுடன் பின்வருவன உட்பட தேவையான விபரங்களை சமர்ப்பிப்பதன் மூலம் இந்தக் கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கு கோரப்படுகின்றனர்.

1) சுயவிபரக்கோவை/ சுயவிபரம் (இணையதள CV வடிவத்தை பயன்படுத்தவும்)
2) ஒரு பக்க முகப்புக் கடிதத்தில் குறித்த துறையில் தொடர்புடைய அனுபவம், நிபுணத்துவம் முதலியவற்றை முன்னிலைப்படுத்தவும்.
3) பணியை நிறைவேற்றுவதற்கான அணுகுமுறை மற்றும் வேலைத்திட்டம் (அதிகபட்சம் 5 பக்கங்கள்)
4) எதிர்பார்க்கப்படும் அனைத்தையும் உள்ளடக்கிய மாதாந்த கட்டணம். (ஒட்டுமொத்த தொகை)

“குறிப்பு விதிமுறை” ஆவணங்களை ICTA வில் தற்போது பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுடைய ஆலோசகர்கள் மேலதிக விபரங்களை https://www.icta.lk/procurement/ என்ற இணையதளத்திலிருந்து ஆவணங்களை பார்வையிடுவதற்காக தரவிறக்கம் செய்யலாம்.

பிரத்தியேக ஆலோசகர்கள் தேர்வு முறையை பின்பற்றி ஆலோசகர்களின் தேர்வு மற்றும் தொழில்வாய்ப்புக்கான அரச வழிகாட்டலில் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கு அமைய ஆலோசகர் தேர்வு இடம்பெறும். அனைத்து ஆவணங்களும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும் என அனைத்து ஆர்வமுடைய ஆலோசகர்களுக்கும் அறிவுறுத்தப்படுகின்றது.

ஆர்வமுடைய ஆலோசகர்கள் procurement@icta.lk என்ற மின்னஞ்சல் மற்றும் +94 11 2369091 என்ற தொலைநகல், +94 11 2369099 என்ற தொலைபேசி வழியாக தொடர்புகொள்வதன் மூலம் ICTA, பெறுகைப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

அனைத்து கோரப்பட்ட தகவல் உள்ளடங்கிய ஆர்வ வெளிப்பாட்டை 2022 ஏப்ரல் 06ஆம் திகதி 15 மணித்தியாலத்திற்குப் பிந்தாமல் தலைவர், மே/பா பெறுகைப் பணிப்பாளர், இலங்கை தகவல் தொழில்நுட்ப தொடர்பாடல் முகவர் நிலையம், 06ஆம் மாடி, இல. 490, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரிக்கு ஒன்றில் (i) procurement@icta.lk எனும் மின்னஞ்சல் மூலம் அல்லது (ii) நேரில் ஒப்படைத்தல் அல்லது (iii) தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பிரத்தியேக ஆலோசகருக்கான ஆர்வத்தை வெளிப்படுத்துதல் - முக்கிய திறனைக் கட்டியெழுப்புவதற்காக பிரசுரிப்பதற்கு தயாரான ஆவணங்களை உருவாக்க ஒரு தொழில்நுட்ப எழுத்தாளரை வாடகைக்கமர்த்துதல்” (ICTA/GOSL/CON/IC/222/02) எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**திணைக்கள ஆலோசனை பெறுகைக் குழு (CPCD),**
**இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம்,**
**இல. 490, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03**
**இலங்கை**
**தொலைபேசி: +94 11 2369099, தொலைநகல்: +94 11 2369091, www.icta.lk**

**2022 மார்ச் 27ஆம் திகதி.**



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
**மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம்**

## வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கு – 2022

## ஆய்வு பத்திரங்களுக்கான அழைப்பு

### தொனிப்பொருள்: “இலங்கையில் பெண் தொழில்படையின் பங்கேற்பு”

பின்வரும் உப தொனிப்பொருள்களின் கீழ் வருடாந்த ஆராய்ச்சி கருத்தரங்கிற்காக முழு ஆய்வு பத்திரங்களை சமர்ப்பிப்பதற்கு தொழில் சந்தை துறைகளில் இருந்து ஆய்வாளர்களுக்கு (உள்ளூர் தனிநபர், நிறுவனம், பல்கலைக்கழகம், அரச சார்பற்ற நிறுவனம் (NGO) முதலியன) இந்தத் திணைக்களம் அழைப்பு விடுக்கிறது.

- பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் வேலை வாய்ப்புகள் (மாற்றுத்திறனாளி, விதவை ஆகியோர்)
- பெண் தொழிலாளர்கள் பங்கேற்பில் கொவிட்-19 இன் பாதிப்பு
- பெண் தொழில் பங்கேற்பில் உள்ள மனப்பாங்கு மற்றும் கலாசார தடைகள்
- பெண் தொழில்படை பங்கேற்பில் கவனிக்கப்படாத பகுதிகள்

**சுருக்கங்களுடன் முழு ஆய்வுக்கான வழிகாட்டல்கள்**

**சொற்கள் எண்ணிக்கை**

**சுருக்கம்** - 250 – 350 சொற்கள், அதிகபட்சம் 5 முக்கிய சொற்கள்

**முழு ஆய்வு பத்திரம்** - அதிகபட்சம் 3000 சொற்களுடன்

- அறிமுகம், பிரச்சினை அறிக்கை, ஆராய்ச்சி கேள்விகள்/ நோக்கங்கள், கட்டுப்பாடுகள்
- செய்முறை நெறி
- பகுப்பாய்வு, முடிவுகள், கலந்துரையாடல், முடிவுரை மற்றும் பரிந்துரைகள் (அதிகபட்சம் 800 சொற்கள்)
- குறிப்புகள்
- **தலைப்புப் பக்கத்தில் அவசியம்**, தலைப்பு, எழுத்தாளர் பெயர்/ கள் மற்றும் முகவரி/ முகவரிகள் (நிறுவன தொடர்பு), மின்னஞ்சல் முகவரி/ அனைத்து எழுத்தாளர்களின் முகவரிகள் இருத்தல் வேண்டும்.
- **புள்ளிவிபரங்கள் மற்றும் அட்டவணைகள்** எழுத்து உடலுடன் உட்பொதிக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதோடு முறையே பட விளக்கங்கள் மற்றும் கலப்பு உசாத்துணை சரியாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
- **உருவங்கள்** - படங்கள் படமூலங்களில் (Pixels) குறைந்தது 1024 x 768 அளவுகளுடன் JPG வடிவத்தில் அனுப்பப்படுதல் வேண்டும்.

**வரைபடங்கள்** (Graphs) - MS Excel தவிர்த்து செயலிகள் மூலம் தயாரிக்கப்பட்டு JPG படங்களாக அனுப்ப வேண்டும்.

**Word மற்றும் PDF வடிவங்களுடன் அசல் ஆராய்ச்சி, தெளிவான எழுத்து, இலக்கண ஆங்கிலம் அடிப்படையில் சமர்ப்பித்தல் வேண்டும்.**

**முக்கிய திகதிகள் மற்றும் இறுதித் திகதிகள்**

***முழு ஆய்வுப் பத்திரம் மற்றும் அறிவிப்புப் படிவத்துடன் சுருக்கங்களை சமர்ப்பித்தல்***
2022 ஜூன் 20

***முழு பத்திரத்திற்கான விமர்சகர்களின் கருத்துகள்***
2022 ஜூலை 20

***திருத்தப்பட்ட பத்திரத்தை சமர்ப்பித்தல்***
2022 ஓகஸ்ட் 04

***ஏற்றுக்கொள்ளல் பற்றிய அறிவித்தல்***
2022 ஓகஸ்ட் 10

**மேலதிக விபரங்களுக்கு**
பி. சுமித் பெரேரா - 0112187401 / 0714891788
எல்.பீ.எல். குணரத்ன - 0112187404 / 0778046623
(திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி பிரிவு)
மின்னஞ்சல் : **dme.lmi.gov@gmail.com**
இணையதளம் : **www.dome.gov.lk**

- **இந்த கருத்தரங்கு 2022 செப்டெம்பர் மாதம் கொழும்பில் நடைபெறும்**

மங்கையர் முற்றம்



Ladies Fashion



# மாதவிடாய் தாமதம் ஏன்?



மாதவிடாய் என்பது பெண்களுக்கு சரியான நேரத்தில் வந்தால் தான் உடலில் எந்த நோய்களும் நம்மை அண்டாது என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள்.

பெண்களுக்கு மாதவிடாய் சுழற்சியானது ஒவ்வொரு ஆண்டும் 11 முதல் 13 வரை இருக்க வேண்டும். அதிகமான மாதவிடாய் சுழற்சியின் கால அளவு 28 நாட்கள் (இது ஒரு மாதவிடாய் சுழற்சியின் சராசரி கால அளவு). ஆனால் சாதாரண மாதவிடாய் சுழற்சி 21 முதல் 35 நாட்கள் வரை இருக்கும். ஒருவேளை மாதவிடாய் சுழற்சியானது தவறினாலோ அல்லது ஒழுங்கற்றதாக இருந்தாலோ, உடனடியாக மருத்துவரிடம் சென்று சோதிப்பது நல்லது. மாதவிடாய் தாமதாக வருவதற்கு பல காரணங்கள் உள்ளன.

### அதிக மன அழுத்தம்

மன அழுத்தம் அதிகமாக இருப்பவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையே பாதிப்படைகிறது. அதிக மன அழுத்தத்தினால் உடலில் ஹோர்மோன் சுரப்பியானது குறைகிறது. இதனால் தான் மாதவிடையானது சரியான நேரத்தில் வராமல் பெண்கள் அவதிப்படுகிறார்கள். இது மாதிரியான நேரத்தில் தகுந்த மருத்துவரை அணுகுவது நல்லது.

### அடிக்கடி உடல் நல குறைவு

ஒரு சிலருக்கு திடீரென்று நோய் ஏற்படுதல், பல நாட்களாக உடலில் நோய் இருந்துக்கொண்டே இருந்தால் கூட மாதவிடாயானது சரியான நேரத்தில் வராமல் தாமதம் ஆகலாம். நமது உடலில் இருக்கக்கூடிய நோயின் காரணமாகத்தான் மாதவிடாய் சரியாக வரவில்லை என்று உங்களுக்கு முன்கூட்டியே தெரிந்தால் மருத்துவரிடம் உடனே சென்று மாதவிடாய் எப்போது சரியாக வரும் என்பதில் ஆலோசனை கேட்டு தெரிந்து கொள்ளவும்.

### அதிக உடல் எடை

உடல் எடையானது அளவிற்கு அதிகமாக இருந்தால் ஹோர்மோன்கள் மாதவிடாய் சுழற்சியை மாற்றம் செய்து சில நேரத்தில் மாதவிடாயை வரவிடாமல் செய்துவிடும். பெரும்பாலான பெண்களுக்கு தங்களின் எடை குறைந்த பிறகு, அவர்கள் அதிக எடையுடன் இருப்பதாக நினைத்தாலும், அவர்களுக்கு மீண்டும் சாதாரண மாதவிடாய் சுழற்சிகள் ஏற்படுவதுடன், கருவுறுதலும் ஆரம்பமாகின்றன.

### உடல் எடை குறைவு

உடலானது அதிக உடல் எடையும், மிகவும் மெலிந்து போய் இருக்க கூடாது. உடலில் தேவையான கொழுப்புகள் இல்லை என்றாலும் மாதவிடாய் தாமதமாக வரும். மாதவிடாய் முழுவதுமாக நின்று போகக்கூடிய வாய்ப்புள்ளது. இதன் காரணமாகத் தான் பெரும்பாலான பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சினைகளுக்கு காரணமாகிறது.

மேலும் அதிக வேலை பளு உள்ள பெண்களுக்கும் அல்லது தொழில்முறை தடகள வீராங்கனைகளுக்கும் இந்த தவறுதல் காரணமாகிறது.

# தந்தூரி டீ (Tandoori Chai)



நம் நாட்டிலும் தற்போது தந்தூரி டீ மிகவும் பிரபல்யமடைந்து வருகிறது. (இதை சாய் என்றும் அழைப்பார்கள்) பொதுவாக தெருவோரங்களில் வண்டிகளில் வைத்து இந்த தந்தூரி டீ விற்பனை செய்து வருகிறார்கள். தந்தூரி டீ அனைத்து டீ பிரியர்களுக்கும் மிகவும் பிடிக்கும்.

இதை எவ்வாறு நம் வீடுகளிலிலும் செய்யலாம் என்பதை பார்ப்போம்.

**தேவையானபொருட்கள்:**

பால் – 2 கப்
டீத்தூள் – 2 தே.கரண்டி
சர்க்கரை – 4 தே.கரண்டி
இஞ்சி – சிறிய துண்டு
ஏலக்காய் பொடி – 1/2 தே.க
சிறிய மண் கலயம் – ஒன்று

**செய்முறை**

முதலில் அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அவற்றில் இரண்டு கப் பால் மற்றும் 1/2 கப் தண்ணீர் சேர்த்து நன்றாக கொதிக்க வைக்கவும். அதன்பிறகு இரண்டு ஸ்பூன் டீத்தூள் சேர்த்து கொதிக்க விடவும்.

பின்பு நான்கு ஸ்பூன் சர்க்கரை சேர்த்து நன்றாக கிளறி விடவும்.

இறுதியாக ஏலக்காய் பொடி மற்றும் இடித்து வைத்துள்ள இஞ்சி ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து ஒரு முறை கொதிக்க வைத்துக் கொள்ளுங்கள். இப்போது அடுப்பை மிதமான சூட்டில் வைத்துக் கொள்ளுங்கள்.

இப்போது நாம் மண் கலயத்தை அடுப்பில் வைத்து நன்றாக சூடுபடுத்த வேண்டும். அதாவது மண் பானையை 20 நிமிடங்கள் வரை அடுப்பை நன்கு வேகமாக எரியவைத்து பானையை சூடு படுத்தி வைத்து கொள்ளவும்.

பின்பு தந்தூரி டீயை வடிகட்டி அப்படியே இந்த சூடுபடுத்திய பானையில் ஊற்ற வேண்டும். டீயானது பானையில் ஊற்றும் போது நன்றாக நுரைத்து வரும். சிறிது நேரம் கழித்த பிறகு இந்த டீயை வேறொரு பாத்திரத்தில் மாற்றி கொள்ளுங்கள்.

# வேப்பிலை ஹெயார் பெக்



உங்களுடைய தலையில் எந்தவொரு பொடுகு மற்றும் பேன் தொல்லை இல்லாமல் வேரில் இருந்தே உங்கள் முடியை வலுவாக வளரச்செய்ய வேப்பிலை ஹெயார் பெக்கை பயன்படுத்தி பாருங்கள்.

நம்முடைய முடியை உதிராமல் வலிமையாக வளர்க்க வேப்பிலை பேக்கை வாரத்தில் ஒருநாள் பயன்படுத்தலாம். முடியாதவர்கள் மாதத்தில் இரண்டு நாட்களாவது இந்த ஹெயார் பெக்கை பயன்படுத்தலாம்.

**ஹெயார் பெக்கை தயார் செய்யும் முறை**

பாசிபயறு – 1 கைப்பிடி, வேப்பிலை – 1 கைப்பிடி, தேங்காய் துருவல் – 1 கைப்பிடி,

முதல் நாள் இரவே ஒரு கைப்பிடி அளவு பச்சைப் பயிரை தண்ணீரில் போட்டு ஊற வைத்துக் கொள்ளுங்கள். மறுநாள் காலை ஒரு மிக்ஸியில் ஊறவைத்த தண்ணீருடன் பச்சை பயிரை சேர்த்துக் கொள்ளுங்கள். அதன் பின்பு நன்றாக கழுவிய வேப்பிலை ஒரு கைப்பிடி, தேங்காய் துருவல் ஒரு கைப்பிடி சேர்த்து, மிக்ஸியில் இந்த பேக்கை அரைக்க வேண்டும்.

மிகவும் கெட்டியாக இந்த பேக்கை அரைக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. கொஞ்சம் தளதளவென அரைத்து மெல்லிசாக இருக்கும் பருத்தித் துணியில் இந்த பேக்கை வடித்து எடுத்துக் கொள்ளுங்கள். இந்த பேக் கொஞ்சம் திரவப் பதத்தில் இருக்க வேண்டும்.

**பயன்படுத்தும் முறை**

தலை முடியை முதலில் கவிழ்த்துப் போட்டு தலைக்குப் பின்பக்கம் இருக்கக்கூடிய இடத்தில், முடிக்கு அடிப்பக்கத்தில் இந்த பேக்கை முதலில் நன்றாக தடவி மசாஜ் செய்யுங்கள். காரணம் அந்த இடத்தில்தான் பேன் பொடுகு தொல்லை அதிகமாக இருக்கும். அதன் பின்பு தலைக்கு முன்பக்கத்தில் நன்றாக இந்த ஹேர் பேக்கை வைத்து மசாஜ் செய்து விடுங்கள். இது திரவப் பதத்தில் உள்ளதால் இந்த பேக் உங்களுடைய முகத்தில் ஒழுகத் தான் செய்யும்.

தலையில் எல்லா இடங்களிலும் படும்படி இந்த பேக்கை போட்டு விட்டு, அதன் பின்பு முடியின் நுனி வரை இந்த பேக்கை நன்றாக தேய்த்து முடியை சுருட்டி ஒரு கொண்டை கட்டிக்கொள்ளுங்கள். 20 நிமிடங்கள் கழித்து ஷெம்பு அல்லது சீயக்காய் போட்டு முடியை சுத்தமாக அலசி நன்றாக காய வைத்து விடுங்கள். உங்களுக்கே உங்களுடைய முடியில் வித்தியாசம் தெரியும்.

வேப்பிலையோடு தேங்காயும் பாசிப்பயறும் சேர்த்து உங்களுடைய முடிக்கு ஒரு வலிமையை கொடுத்திருக்கும். ஒரு ஷைனிங் கொடுத் திருக்கும். மிகவும் ஒல்லியாக இருக்க கூடிய முடி கூட அப்படியே அடர்த்தியாக தெரியும். இது மட்டுமல்லாமல் பச்சை பயிரை வாரத் தில் இரண்டு நாட்கள் சுண்டல் செய்து சாப்பிட்டு வர வேண்டும். அப்போது உங்களுடைய தலைமுடியும் சருமமும் மேலும் மேலும் அழகாகும்.

# சரும பாதுகாப்பிற்கு சந்தனம்



சந்தனம் பொதுவாக மருத்துவக் குணம் கொண்டது. மிகவும் வாசனையாகவும் இருக்கும், மேலும் அதிக குளிர்ச்சி வாய்ந்தது. இது முக வறட்சி தன்மையை குணப்படுத்துகிறது.

மேலும் முகத்திற்கு அதிகம் ஈரப்பதத்தை அளிக்கின்றது. சந்தனம் முகத்தில் ஏற்படும் அனைத்துப் பிரச்சினைக்கும் சிறந்த ஃபேஸ் பெக்காக சந்தனம் விளங்குகிறது.

சந்தன பொடியை முகத்தில் பூசுவதால் முகதளர்வுகள், முகத்தின் ஈரப்பதம் மற்றும் நிறம் மேம்படுத்தப்படுகிறது.

வறட்சியின் காரணமாக முகத்தில் அரிப்பு மற்றும் வெடிப்புகள் ஏற்படுவதை தடுக்கிறது.

சந்தன பொடி சருமத்தின் சுருக்கங்களை இறுக்கமாக்குகிறது.

முகத்தில் தோன்றும் தொற்றுகள் மற்றும் அரிப்புகளை சந்தனப் பொடி குணப்படுத்துகிறது.

மேலும் புத்துணர்வையும், குழந்தையின் தோல் போன்ற மென்மையான சருமத்தையும் தரும் ஆற்றல் சந்தனத்திற்கு உண்டு.

### ஃபேஸ் பெக் – 1

சந்தன பவுடர் – 1 தே.கரண்டி, தயிர் – 1 தே.கரண்டின், தேன் இவற்றை ஒன்றாக கலந்து கொள்ளவும்.

இந்த ஃபேஸ் பெக்கை முகம் மற்றும் கழுத்து பகுதிகளுக்கு அப்ளை செய்து ஒரு மணி நேரம் வரை வைத்து பின்பு தண்ணீரால் முகத்தை கழுவ வேண்டும. இந்த முறையை வாரத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை பயன்படுத்தலாம்.

### ஃபேஸ் பெக் – 2

சந்தனப் பொடியை மஞ்சள் தூள், ஒரு துளி எலுமிச்சை சாறு மற்றும் பால் ஊற்றி கலந்து, சருமத்தில் தடவி ஊற வைத்து கழுவ வேண்டும்.

இதனால் முகமானது பொலிவோடு காணப்படும்.

### ஃபேஸ் பெக் – 3

1/2 – தே.கரண்டி முல்தானி மெட்டி, 1/2 – தே.கரண்டி சந்தனப் பொடி, தயிர் ஆகியவற்றை கலந்து, முகத்தில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.

# ப்ரோக்கோலி



அதிக சத்து நிறைந்துள்ள காய்கறிகளில் ப்ரோக்கோலியும் ஒன்று. பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்கள் உணவில் அதிக அளவு ப்ரோக்கோலியை பயன்படுத்தி வந்தனர். இது முட்டைகோஸ், காலிஃப்ளவர் குடும்பத்தை சார்ந்தது. இந்த ப்ரோக்கோலியில் பலவிதமான நன்மைகள் இருக்கின்றன.

★விட்டமின் A, விட்டமின் C, விட்டமின் K , செலினியம், பொஸ்பரஸ், நார்ச்சத்து போன்ற சத்துக்கள் அதிக அளவில் உள்ளது.

★இதில் இருக்கும் என்டி ஒக்சிஜன் எனப்படும் Molecule உடலில் ஏற்படும் செல் சேதத்தை தடுக்கிறது. நம் உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்ள வும் உதவுகிறது.

★ தற்போது மக்கள் அனைவரும் கொலஸ்ட்ரோல் அதிகரிக்காமல் இருக்க வேண்டும் என்று சத்துள்ள உணவுகளை எடுத்து கொள்கின்றனர். அதில் முக் கியமான ஒன்றாக இந்த ப்ரோக்கோலி உள்ளது. இதில் அதிக அளவு நார்ச் சத்து இருப்பதால் உணவில் இருக்கும் கொலஸ்ட்ரோல் உடலில் தங்காமல் வெளியேற செய்கிறது.

★ மலச்சிக்கல் மற்றும் செரிமான பிரச்சினை உள்ளவர்களுக்கு ஒரு சிறந்த உணவாக இந்த ப்ரோக்கோலி இருக்கிறது.

உணவு செரிமானம் அடைய உதவும் அமிலங்களின் செயல்பாட்டை அதிக ரித்து செரிமான பிரச்சினையை சரி செய்கிறது.

★ எலும்பு வளர்ச்சி பெறுவதற்கு விட்டமின் k மற்றும் கல்சியம் நிறைந்த உணவுகளை எடுத்துக்கொள்ளலாம். எலும்பு வலுப்பெறாமல் இருந்தால் ஒஸ்டியோபொரோசிஸ் ஏற்பட வாய்ப்புள்ளது.

ப்ரோக்கோலியில் எலும்புகளின் வளர்ச்சிக்கு உதவும் விட்டமின் k அதி கமாக உள்ளது. வாரத்தில் இரண்டு நாட்கள் இந்த காய்கறியை உணவில் எடுத்து கொள்வது நல்லது.

★புகையிலை பிடிப்பதாலும் மற்றும் பல காரணங்களாலும் ஆண்கள் முதல் பெண்கள் வரை அனைவருக்கும் புற்றுநோய் ஏற்படுகிறது.

ப்ரோக்கோலியில் சல்போரபேன் எனப்படும் வேதிப்பொருள் இருப்பதால் புற்றுநோய் வராமலும், புற்றுநோய் செல்லின் வளர்ச்சியை தடுக்கவும் உதவு கிறது.

★இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிப்பதால் சர்க்கரை நோய் ஏற்படு கிறது. சர்க்கரை நோய் உள்ளவர்கள் இன்சுலின் அளவை கட்டுப்படுத்தவும், சீராக்கவும் ப்ராக்கோலியில் உள்ள நார்ச்சத்து உதவுகிறது.

★வயது முதிர்ச்சியின் காரணமாக சிலருக்கு நினைவாற்றல் குறைய ஆரம் பித்து விடும். நினைவாற்றல் அதிகரிக்க ப்ராக்கோலியை அடிக்கடி உணவில் சேர்த்து கொள்வது நல்லது. இதில் விட்டமின் சி, விட்டமின் கே மற்றும் ஒமேகா 3 இருப்ப தால் ஞாபக சக்தி அதிகரிப்பதற்கு பெரிதும் உதவுகிறது.

இளமை தோற்றத்தோடு இருக்க வேண்டும் என்பது நம் அனைவருக் குமே இருக்கின்ற ஆசை தான். ப்ரோக்கோலியில் இருக் கும் குளுக்கோராஃபா னின் சருமத்தில் உள்ள செல்களை சேதத்தில் இருந்து பாதுகாத்து வயது முதிர்வை தடுக்க உதவுகி றது.

தினகரன் 90 ஆவது ஆண்டு நிறைவு உதைபந்தாட்ட கிண்ணம்
பேருவளை ஹெட்டிமுல்ல பேகர்சிட்டி உள்ளக அரங்கில்
இன்று ஞாயிற்றுக்கிழமை 2.30மணிக்கு

# THINAKARAN TROPHY































இன்று உதைப்பந்தாட்டத்தில் ஈடுபடும் கழக வீரர்களின் படங்கள்
(அணிகள்; பேருவளை, தர்காநகர், மங்கொண)
படங்கள் :










Chief Organizer
M.N.M. Rimsan







E G Lab
Emteem Gem Laboratory
Since 2003

# மலையகத்தின் மூத்த அரசியல் சிந்தனையாளர் காதருடன் சதீஷ்குமார் லண்டனில் சந்திப்பு

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவரான காதர் மாஸ்டர் என அழைக்கப்படும் பி.ஏ காதர் 80களில் தொடங்கி நீண்ட காலமாக மலையக மக்களின் சமூக மாற்றத்திற்கான அரசியல் தொழிற்சங்க செயற்பாடுகளிலும், வடகிழக்கு மக்களின் உரிமைப் போராட்டங்களிலும் அர்ப்பணிப்புகளோடு செயற்பட்டவர்களில் முக்கியமானவர் ஆவார்.



ஆதிக்க அரசியல் சவால்களுக்கு மத்தியில் கடும் பிரயத்தனங்களோடு அமரர் பெரியசாமி சந்திரசேகரன் தலைமையில் புதிய சிந்தனைவாத இளைஞரகளின் பங்களிப்புடன் மலையக மக்கள் முன்னணியை உருவாக்கிய ஸ்தாபக நிர்வாகிகளில் ஒருவரான காதர் ம.ம. முன்னணியின் முதலாவது செயலாளரும் ஆவார்.

வடக்கு கிழக்கு பூர்வீக மக்களின் உரிமைப் போராட்டங்களுக்கு மலைநாட்டிலிருந்து கருத்து ரீதியாகவும் உணர்வுபூர்வமான தார்மீக உதவிகளை வழங்கியதோடு தமிழ் இளைஞர்களுக்கு அடைக்கலம் கொடுத்தார்கள், மலையக இளைஞர்கள் புரட்சிகர சிந்தனைகளை தூண்டினார்கள் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் பெ.சந்திரசேகரன், வி.டி.தர்மலிங்கம், காதர் உள்ளிட்டோர் பல தடவைகள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டனர். இளைய தலைமுறையினரின் புதிய உருவாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் அப்போதைய ஆட்சியாளரின் அடக்குமுறைகள் காரணமாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் நீண்ட காலமாக தடுப்புக்காவலில் பல்வேறு துன்பங்களையும் எதிர்கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது பிரிட்டனில் வாழும் காதர் மாஸ்டரை கடந்தவாரம் லண்டன் *Reading Berkshire* என்றழைக்கப்படும் புறநகரிலுள்ள இல்லத்தில் வைத்து மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் சந்தித்துள்ளார்.

ம.ம.மு.யின் தலைவர் வே.இராதாகிருஷ்ன் உள்ளிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் எம்.பிக்கள் புத்திஜீவிகள், அரசியல்,சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் சமூக பொருளாதார நிலைமைகளில் மாற்றங்களை உருவாக்குவதற்காக முன்னெடுத்துள்ள ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வரவேற்பதாக தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ள புதிய அரசியலமைப்பு தொடர்பான முன்மொழிகள், தேர்தல் சீர்திருத்த முறைமைகள் போன்ற செயற்பாடுகளில் தேசியளவில் அனைத்து சிறுபான்மை சமூகங்களும் கருத்தொற்றுமையுடன் பரஸ்பர இணக்கப்பாடுகள் அடிப்படையில் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதுடன் **(21ஆம் பக்கம் பார்க்க)**



கொழும்பு மாநகரசபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்க இலங்கை சின்மயா மிஷன் அமைந்துள்ள 10 ஆவது ஒழுங்கையை 'சின்மயா ஒழுங்கை' எனப் பெயர் மாற்றம் செய்ய மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவரது சமூகப் பணிகள் தொடர்பான செயல்திட்டங்கள், பொரளை கனத்தை 'இந்து மயானம்' மீள புனரமைப்பது தொடர்பில் மேற்கொண்டு வரும் செயல்திட்டம் என்பவற்றை பாராட்டிக் கௌரவிக்கும் வகையில், ஒண்டாரியோ மாகாணத்தின் அமைச்சரும் ஸ்காபுறோ வடக்கு தொகுதி மக்கள் பிரதிநிதியும் தமிழர்களின் நெருங்கிய நண்பருமான றேமட்சோ வழங்கிய பாராட்டுச் சான்றிதழை சென்னையில் நடைபெற்ற 'பகிர்வோம் பாராட்டுவோம்' நிகழ்வில் கனடா உதயன் நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆர்.என். லோகேந்திர லிங்கம் முன்னிலையில் தமிழக சுற்றுத்லாத்துறை தொழிலதிபர் வி.கே.டி. பாலன் வழங்கியபோது எடுத்த படம்.


நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## நகர அபிவிருத்தி அதிகார சபை

### முதலீட்டு முன்மொழிவைக் கோருதல் (RFP)




கொழும்பு-03, கொள்ளுப்பிட்டி பெரஹெர மாவத்தையில் கலப்பு அபிவிருத்தி செயற்றிடம்

**வடிவமைப்பு - நிதியியல் - நிர்மாணம் - செயற்படுத்தல் - உரிமைத்துவம் (DFBOO) அடிப்படையில் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து (முதலீட்டாளர்கள் / அபிவிருத்தியாளர்கள்) முதலீட்டு முன்மொழிவுகள் (RFP) கோரப்படுகின்றன.**

| அமைவிடம் | நில அளவையாளர் வரைபடத்தின் பிரகாரம் விபரங்கள் | அளவு | அடிப்படை விலை (இல. ரூபா) | பிணை முறி (இல. ரூபா) | குத்தகைக் காலம் |
|---|---|---|---|---|---|
| பெரஹெர மாவத்தை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03. | 6242ஆம் இலக்க நில அளவையாளர் வரைபடத்தின் துண்டு இல. A | 115.95 பேர்ச்சஸ் | 1,127,000,000.00 | 20,000,000.00 | 99 |

இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் (முதலீட்டாளர்கள் / அபிவிருத்தியாளர்கள்) தொடர்புடைய மேலதிக தகவல்களை உள்ளடக்கிய முதலீட்டுப் முன்மொழிவுகளைக் கோரும் ஆவணமொன்றை பெற்றுக்கொள்வதற்கு பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடக்கிய மீளளிக்கப்படாத 100,000.00 ரூபா தொகையை பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து 2022 மார்ச் 29ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 9வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் 2022 ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

அபிவிருத்தி முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல் 2022 மே மாதம் 06ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு நிறைவுறும்.

கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகள் பத்தரமுல்ல ''சுஹுருபாய'', 17ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி, கரையோரம் பேணல், கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (நகர அபிவிருத்தி) அவர்களின் அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்கள்:**
**பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி),**
**ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**8ஆம் மாடி,**
**செத்சிறிபாய, கட்டம் 1,**
**பத்தரமுல்ல.**

**அமைவிடம்**
**6°54'58.23"N**
**79°51'4.84"E**

தொலைபேசி : 011-2875921, 011-3611950 மற்றும் 011-2875916-18-20 நீடிப்பு 2960-2967
தொலைநகல் இல. : 011-2875900
மின்னஞ்சல் முகவரி : realestatedivisionuda@gmail.com
இணைய தளம் : www.uda.gov.lk

தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணக்கக் குழு,
நகர அபிவிருத்தி, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு,
17ஆம் மாடி, 'சுஹுருபாய', பத்தரமுல்ல.


ADVERTORIAL

CAPITOL TWINPEAKS

# சன்கென் கொழும்பு நகரில் தனது மைல்கல் திட்டத்தினை ஆரம்பித்துவைக்கின்றது

## கெபிடல் டுவின்பீக்ஸ் லைப்ஸ்டைல் கொம்பிளக்ஸ்

சன்கென் குழுமத்தின் மற்றுமொரு வெற்றிகர படைப்பான கெபிடல் டுவின் பீக்ஸ் கலப்பு அபிவிருத்தி திட்டம், மக்கள் வாழ்வதற்கும் தொழில் புரிவதற்கும் விளையாடுவதற்குமான 475 ஆடம்பர தொடர் மாடிகளை கொண்ட இரட்டை கோபுரங்களையும் 40000 சதுர அடியில் வசதிகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது.

தினசரி வாழ்க்கைக்கான சகல தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய வகையில் மாடிக்கட்டிட குடியிருப்பு தொகுதி நுழைவாயிலில் வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ளன. 50வது மாடி சர்வதேச தரத்திலான விருந்துகளுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது. எட்டாவது மாடி அனைத்து குடியிருப்பாளர்களும் அனுமதிக்கப்படும் வகையில் க்ளப் ஹவுஸ் உள்ளடங்களாக பல்வேறு வசதிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றுல் 250 பேரை உள்ளடக்க கூடிய வைபவ அறையும் இருப்பது சிறப்பம்சமாகும்.

வணிக மாவட்டத்தின் மத்தியில் அமைந்துள்ள டுவின் பீக்ஸிற்கு அருகாமையில் பிரதான வைத்தியசாலைகள் மற்றும் அண்மித்த பாடசாலைகள், வழிபாட்டு தலங்கள், பல்வேறுப்பட்ட உணவு தேர்வுகளுக்கு, பொழுது போக்கு, சுற்றுலா தலங்கள், வணிக வளாகங்கள், சினிமா திரையரங்குகள், காலிமுகத்திடல் மற்றும் பேர வாவி போன்றன அமைந்துள்ளன. அத்துடன் பிரதான மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களை கவரக்கூடிய துறைமுக நகரம் டுவின் பீக்ஸிற்கு இரண்டு கிலோமீற்றருக்கு அருகில் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தை சேர்ந்த ஏனைய திட்டங்களுடன் ஒப்பிடுகையில் கெபிடல் டுவின் பீக்ஸ் மிக உன்னதமான வாழ்க்கைதர அனுபவத்தினை பெற்றுத்தருவதுடன் எதிர்காலத்தின் நிலையான மிகச்சிறந்த அபிவிருத்திக்கு இன்றைய இலாபகரமான தேர்வுகளில் ஒன்றாகும்.

கட்டுமானம் மற்றும் கட்டிட அபிவிருத்தி துறையில் மிகப்பெரிய வளர்ச்சிபெற்ற உள்நாட்டு நிறுவனமாக சன்கென் குழுமம் திகழ்கிறது. இலங்கையின் மிகவும் உயரமான கட்டிடங்கள் பலவற்றுக்கு சன்கென் நிறுவனமே காரணம்.

தனது 9 நாடுகளில் 3 கண்டங்களில் 40 வருடங்களுக்கும் மேலாக நிர்மாண செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதுடன் தமது வெற்றிகளையும் அனுபவங்களையும் வெளிப்படுத்திக்கொண்டிருக்கின்றது. சன்கென்னின் உண்மைத்தன்மை மற்றும் அதன் வெற்றிப்பாதை தொடர்ச்சியாக முதலீட்டாளர்களின் நம்பிக்கையினை வென்றுள்ளதுடன் இன்று பல அபிவிருத்தி திட்டங்களை தன்வசப்படுத்திக் கொள்வதற்கு அடித்தளமாக அமைந்துள்ளது. சன்கென்னிற்கான போட்டி பரந்துபட்டு காணப்படுகின்றது.

சன்கென்னின் தனித்துவமான இந்த தொடர்மாடி வீட்டுத்திட்டம்- கெபிடல் டுவின் பீக்ஸ் கடந்த 2021 மார்கழி மாதம் முதல் உரிமையாளர்களிடம் கையளிக்க ஆரம்பிக்கப்பட்டதுடன் வெகுவிரைவில் குடியமர்த்துவதற்கு தயாராகி வருகிறது.

சொத்துக்களில் முதலீடுகளை மேற்கொள்ளல் என்பது பணவீக்கத்தினை குறைப்பதற்கான சிறந்த வழிமுறையாகும். கொவிட்-19 காரணமாக கட்டிட மற்றும் சொத்துக்கள் மீதான விலை அதிகரித்துள்ள நிலையில் 2018 ஆண்டு சன்கென் குழுமம் சிறந்த திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் நடவடிக்கைகளை டுவின் பீக்ஸ் குடியிருப்புகளில் மேற்கொண்டிருந்தது. வருடத்தில் சராசரியாக 7 சதவிகித வணிக அபிவிருத்தியை இலக்காக கொண்ட முதலீட்டாளர்களுக்கு இதுவொரு பாரிய வரப்பிரசாதமாகும். பல முதலீட்டாளர்கள் இவ்வபிவிருத்தியில் பல முதலீட்டு பலாபலன்களை இனங்கண்டுகொண்டுள்ளதுடன் இத்திட்டம் கடந்த 12 மாதங்களுக்கு மேலாக தீவிர கேள்வி நிலையை பேணிவருகிறது.

சன்கென் நிர்மாண முகாமைத்துவ இயக்குணரான ரஞ்சித் குணதிலக கூறியதாவது: "கடந்த 3 அல்லது 4 வருட காலப்பகுதியில் தொழிலாளர் மற்றும் பொருள் விலையேற்றங்களுக்கு மத்தியில் இத்திட்டம் இன்று நிறைவடைந்துள்ளது. இதுபோன்றதொரு திட்டத்தை நாளை நீங்கள் ஆரம்பித்தால் கெபிடல் டுவின் பீக்ஸை விட 50வீத அதிகரிப்புடன் குடியிருப்புக்கள் காணப்படும். இன்று கெபிடல் டுவின் பீக்ஸில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இதுவுமொரு பிரதான காரணமாக திகழ்கின்றது".

இறுதியாக சில குடியிருப்புக்கள் விற்பனைக்குண்டு.











# அந்தமானில் நந்தவனம் இலக்கிய சந்திப்பு





தமிழ்நாடு திருச்சியிலிருந்த கடந்த 25 ஆண்டுகளாக வெளிவரும் இனிய நந்தவனம் மாத சஞ்சிகையின் ஏற்பாட்டில் ஆண்டு தோறும் அந்தமானுக்கு இலக்கியச் சுற்றுலாவும்இலக்கிய சந்திப்பும் நிகழ்த்தப்பட்டு வருகிறது அந்த வகையில் 22/03/2022அன்று அந்தமான் தமிழர் சங்கத்தில் இனிய நந்தவனம் இலக்கியச் சந்திப்பு நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது

அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் எல்.மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அந்தமான் தமிழர் சங்கத் துணைத்தலைவர் கவிஞர் தமிழ்ச்செல்வன் செயலாளர் வே.காளிதாசன் பொருளாளர் ந.ஜெயராமன் , துணைச் செயலாளர்கள் சோழன் சுதாகரன், மா.சேது, செயற்குழு உறுப்பினர்கள் வி.கோ, கு.காட்டுராஜன், முருகேசன் மற்றும் அந்தமான் எக்ஸ்பிரஸ் இதழாசிரியர் கே.கணேசன், அந்தமான் இலக்கிய மன்றத் தலைவர் கே.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்



தமிழ்நாட்டிலிருந்து இந்நிகழ்வில் கலந்துகொண்ட கவிஞர் இரா.முருகன்,இரஜகை நிலவன், ஜோசப் பன்னீர்செல்வம், மரியே விட், புலவர் நாச்சிமுத்து, கவிஞர் கோவிந்தராஜன், ஆகியோருக்கு இலக்கியப் பேரொளி விருதும் பத்திரிகையாளர் வேலயாவுக்கு இலக்கியச்சுடர் விருதும் மருத்துவர் வர்ம கணேசனுக்கு மருத்துவ மாமணி விருதும் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது இனிய நந்தவனம் சஞ்சிகை ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் நிகழ்வை ஒருங்கிணைத்து ஏற்புரை வழங்கினார் அந்தமான் தமிழ் அறிஞர்கள் பலர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# வாடிக்கையாளர்களின் இருப்பிடத்துக்கு பசுமையான கோழி இறைச்சியை தருவித்துக் கொள்ளும் வசதி

தொடர்ச்சியாக மாறுபடும் நுகர்வோர் கட்டமைப்புக்கமைய, New Anthoney's Farms (Private) Ltd இனால், வாடிக்கையாளர்களின் இருப்பிடங்களுக்கு தரமான கோழி இறைச்சியை இலவசமாக தருவித்துக் கொள்ளும் புதிய வணிகக் கட்டமைப்பான 'Dorakadapaliya' என்பதை அறிமுகம் செய்துள்ளது.

சுவை நிறைந்த கோழி இறைச்சி தயாரிப்புகளை நாடு முழுவதிலும் விநியோகிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட Dorakadapaliya கட்டமைப்பினூடாக, சிறந்த மற்றும் பாதுகாப்பான கோழி இறைச்சியை, வாடிக்கையாளர்கள் தமது இருப்பிடத்துக்கு தருவித்துப் பெற்றுக் கொள்ள முடியும். புகழ்பெற்ற HarithaHari தெரிவுகளிலிருந்தும் வாடிக்கையாளர்கள் தமக்கு தேவையானவற்றை தெரிவு செய்து கொள்ள முடியும். Dorakadapaliya இனால் நாடு முழுவதிலும் விநியோக சேவை முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படுவதுடன்,வாடிக்கையாளர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து சௌகரியமான முறையில் ஒரு பொத்தனை அழுத்தி, இலகுவாக தமக்கு தேவையான கோழி இறைச்சியை பெற்றுக் கொள்ள முடியும்.

மீள்சுழற்சிக்குட்படுத்தக்கூடிய அல்லது கொம்போஸ்ட் ஆக்கக்கூடிய, இலகுவில் உக்கக்கூடிய பொதியில் விற்பனையாகும் HarithaHari தெரிவுக்கு மேலதிகமாக, வாடிக்கையாளர்களால் நாவூறும் கிறிஸ்பி சிக்கன் தெரிவான 'Crizzpy's' கோழி இறைச்சித் தெரிவுகளிலிருந்தும் தமக்கு தேவையானதை பெற்றுக் கொள்ள முடியும். கொண்டாட்டங்கள் மற்றும் ஏதேனும் விசேட நிகழ்வுகளுக்கு மிகவும் பொருத்தமான, பிரீமியம் தெரிவான கிரில், பேக் அல்லது BBQ முறையில் தயாரித்துக் கொள்ளக்கூடிய சகல இயற்கையான மூலப்பொருட்களையும் கொண்டு தயாரிக்கப்படும் 'SpicyDycy'அல்லது சிறந்த 'Chico' தெரிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

New Anthoney's Farms இன் பிரதம நிறைவேற்று அதிகாரி நீல் சுரவீர கருத்துத் தெரிவிக்கையில், "நாடு முழுவதிலுமுள்ள எமது வாடிக்கையாளர்களிடமிருந்து கருத்துகளைப் பெற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, எமது ஒன்லைன் விற்பனைப் பகுதியை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்.

உணவு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள போது, வாடிக்கையாளர்களின் தன்னிறைவு என்பதற்கு நாம் முக்கியத்துவமளிக்கின்றோம். எமது பல செயற்பாடுகள் இதனை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளன.

இது ஒரு சாதாரண பிரிவு விரிவாக்கம் மாத்திரமன்றி, நுகர்வோர் மத்தியில் உறுதியான உறவை பேணும் நாம், தரமான கோழி இறைச்சி வகைகளை தொடர்ந்தும் பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்படுத்தியுள்ள அடிப்படை வசதியாகவே கருதுகின்றோம்." என்றார்.

வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845




சுபோத முதியோர் இல்லம் மற்றும் பகல் நேர கண்காணிப்பு நிலையம்
2 ஆம் கிளை
2009 இல் தாபிக்கப்பட்டது
உங்கள் பெற்றோர், நெருங்கிய உறவினர்கள், நோயாளர்கள்ருபவ் அங்கவீனர்கள். நாம் அவர்களை மிகவும் கவனமாக பார்த்துக் கொள்வோம். தினசரி, மாதம் அல்லது நீண்ட காலத்திற்கு. இணைக்கப்பட்ட குளியலறைகள் மற்றும் அழகு இயன் மருத்துவ சிகிச்சைகள்.
சிறந்த அனுபவமுடைய மருத்துவ பணியாளர்கள். அமைதியான சூழ்நிலையில் அனைத்து வசதிகளுடன் அமைந்துள்ளது.
அவசர மருத்துவ சிகிச்சை நிலையங்கள் மற்றும் அரசாங்க வைத்தியசாலைகளுக்கு அருகாமையில்.
இல. 7/13, தெலவள பாதை, மவ்ர மாவத்தை, இரத்மலான.
0726 506 485 | 0716 790 672




வேலைவாய்ப்பு
வரவேற்பாளர் (பெண்கள் மட்டும்)
- வயது 20-32
- Computer Knowledge
- 03 மொழி தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
சம்பளம் 40,000/- முதல் 75,000/- வரை வழங்கப்படும்
radomanpower2266@gmail.com
Rado Manpower Service (Pvt) Ltd
No 10/21, Saunders Place, Colombo -12.
0777 32 54 54 | 0766 42 42 48












GLOBAL START UP CONSULTANTS
114, அன்டர்சன் வீதி, களுபோவில, தெஹிவளை.
அனுஷா - 076 936 62 46 / 011 3 462 634
E-Mail - info.anusia@gmail.com

Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

# ஏன் இங்கிலாந்து உயர் கல்வி கற்பதற்கு சிறந்த இடமாக திகழ்கின்றது?

UK அதன் புகழ்பெற்ற கல்விசார் சிறப்பிற்காக அறியப்படுகிறது மற்றும் புகழ்பெற்ற வரலாற்று பல்கலைக்கழகங்களைக் கொண்டுள்ளது. இது இன்றைய உலகில் நவீன மற்றும் பாரம்பரியத்தின் சரியான கலவையைக் கொண்ட ஒரு நாடு. QS உலக பல்கலைக்கழக தரவரிசையின்படி, முதல் 50 பல்கலைக்கழகங்களில் ஐந்தில் ஒரு பங்கு UK இல் அமைந்துள்ளது. உலகில் உயர்கல்விற்கு இரண்டாவது மிகவும் பிரபலமான இடமாக UK உள்ளது.

மாணவர்கள் இங்கிலாந்தில் படிக்க விரும்புவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று மலிவுத்தன்மை மற்றும் குறுகிய பட்டங்கள். இளங்கலை படிப்புகள் பொதுவாக 3 ஆண்டுகள் மற்றும் முதுகலை பட்டம் ஒரு வருடம் ஆகும். அவர்கள் ஆக்கபூர்வமான, விமர்சன மற்றும் பயனுள்ள சிந்தனை உள்ளிட்ட குறிப்பிட்ட திறன்களை வழங்குகிறார்கள், அது உறுதியான அடித்தளமாக இருக்கும். பல்வேறு நிலப்பரப்புகள், துடிப்பான கலாச்சார சலுகை மற்றும் உலகம் முழுவதிலுமிருந்து நண்பர்களை உருவாக்கும் வாய்ப்பு ஆகியவற்றுடன், இங்கிலாந்தில் செலவழித்த நேரம் வாழ்க்கையை மாற்றும்.

UK உங்கள் சொந்த ரசனைக்கு ஏற்றவாறு ஒரு அற்புதமான மாணவர் வாழ்க்கையை வழங்குகிறது. உங்களை மகிழ்விப்பதற்கும், புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்வதற்கும், நண்பர்களை உருவாக்குவதற்கும் எண்ணற்ற வழிகளைக் காண்பீர்கள்.

காலப் பருவத்தின் தொடக்கத்தில், புதிய மாணவர்களை வரவேற்க, பல்கலைக்கழகங்கள் 'வெல்கம் வீக்' நடத்துகின்றன. இந்த நேரத்தில் பல்கலைக்கழக கிளப்புகள் மற்றும் சங்கங்கள் புதிய உறுப்பினர்களைத் தேட நிகழ்வுகள் மற்றும் விருந்துகளை நடத்துகின்றன. என்ன இருக்கிறது என்பதைக் கண்டறியவும் உங்களுக்கு விருப்பமான எதிலும் சேரவும் இது ஒரு சிறந்த வழியாகும்.

UK ஒவ்வொரு ஆண்டும் 400,000 சர்வதேச உயர்கல்வி மாணவர்களை வரவேற்கிறது. உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சிக்கான இங்கிலாந்தின் நற்பெயர் காரணமாக மாணவர்கள் சமீபத்திய வசதிகளைப் பெறுவார்கள். உலகெங்கிலும் உள்ள முதலாளிகளால் மிகவும் மதிக்கப்படும் ஒரு பண்புக்கூறான உங்கள் ஆங்கிலத் திறன் மற்றும் மொழியைப் பேசுவதில் நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளவும் UK கல்வி உதவும்.

பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கிளப்புகள் மற்றும் சங்கங்களின் பெரிய தேர்வு உள்ளது, எனவே அனைவருக்கும் ஏற்ற செயல்பாடுகள் உள்ளன. நீங்கள் அரசியலைப் பற்றி விவாதிக்க விரும்பினாலும், சுடுவது எப்படி என்பதைக் கற்றுக் கொள்ள விரும்பினாலும், இசைக்குழுவில் சேர விரும்பினாலும் அல்லது ஸ்கூபா டைவிங்கிற்குச் செல்ல விரும்பினாலும், உங்களைக் கவரும் ஒன்றை நீங்கள் நிச்சயமாகக் காண்பீர்கள்.

அதே போல் ஒத்த எண்ணம் கொண்டவர்களைச் சந்திப்பது மற்றும் வேடிக்கையாக இருப்பது, கிளப் மற்றும் சொசைட்டிகளில் சேர்வது அனுபவத்தைப் பெறுவதற்கும் உங்கள் சிவியில் அதிக மென் திறன்களைச் சேர்ப்பதற்கும் சிறந்த வழியாகும். பல சமூகங்கள் நிகழ்வுகளை ஒழுங்கமைப்பதற்கும், தொண்டுக்காக பணம் திரட்டுவதற்கும் அல்லது தன்னார்வத் தொண்டு செய்வதற்கும் வாய்ப்புகளை வழங்குகின்றன, இவை அனைத்தும் நீங்கள் வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தொடங்கும் போது உங்களுக்கு நல்ல நிலையில் இருக்கும்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் அதன் மலிவு மற்றும் உயர்தர கல்வியின் காரணமாக இங்கிலாந்தில் படிக்கத் தேர்வு செய்கிறார்கள். மற்ற வருங்கால ஆய்வு இடங்களை விட இங்கிலாந்தில் பட்டங்களை பெறுவதற்கு குறைந்த நேரம் எடுக்கும்.

மற்ற நாடுகளில் இளங்கலை பட்டப்படிப்புக்கு குறைந்தது நான்கு வருடங்களும், முதுகலை பட்டப்படிப்புக்கு இரண்டு அல்லது மூன்று வருடங்களும் ஆகும், இளங்கலை பட்டப்படிப்புக்கு மூன்று வருடங்களும், ஐக்கிய இராச்சியத்தில் முதுகலை பட்டதாரிக்கு ஒரு வருடமும் ஆகும். இது அறிவுப் பகிர்வு மற்றும் கற்பித்தலின் தரத்தில் சமரசம் செய்யாமல், உங்கள் கல்விக்கான உங்கள் செலவைக் குறைக்கிறது.

UK விசா செயல்முறை சிக்கலானதாக தோன்றலாம் ஆனால் அது மிகவும் எளிதானது. மாணவர்கள் குறுகிய காலத்திற்கு விசாவைப் பெற விரும்பினால், அவர்கள் குறுகிய கால மாணவர் விசாவிற்கு விண்ணப்பிக்கலாம், இது ஆறு மாதங்கள் வரை செல்லுபடியாகும் மற்றும் அதை நீட்டிக்க முடியும். அவர்கள் நீண்ட காலத்திற்கு ஒரு படிப்பைத் தொடர விரும்பினால், அவர்கள் உத்தேசித்துள்ள நிறுவனம் Tier 4 ஸ்பான்சர் உரிமத்தை வைத்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கை மாணவராக, நீங்கள் வளாகத்தில் வசிக்கும் வசதியைத் தேர்வுசெய்யலாம் அல்லது வளாகத்திற்கு வெளியே தங்குமிடத்தைத் தேடலாம். இங்கிலாந்தில் உள்ள பெரும்பாலான பல்கலைக்கழகங்கள் மற்ற நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக ஹால் ஆஃப் ரெசிடென்ட் (ஒரு வேளை உணவு அல்லது மூன்று வேளை உணவு அடிப்படையில்) வழங்குகின்றன. வளாகத்தில் வசிப்பவராக வாழ்வது மிகவும் மலிவான விருப்பமாகும், இருப்பினும் நீங்கள் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும், மேலும் உங்களுக்காக ஒரு இடத்தைப் பெறுவதற்கு முன்னதாகவே விண்ணப்பிக்க வேண்டும்.

உங்களால் அத்தகைய தங்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அல்லது தனியாகத் தங்க விரும்பினால், பகிரப்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் உங்களுக்காக ஒரு இடத்தை வாடகைக்கு எடுக்கலாம் அல்லது உள்ளூர் பிரிட்டிஷ் குடும்பத்துடன் தங்கலாம். நினைவில் கொள்ளுங்கள், வாடகைகள் நகரத்திற்கு நகரம் மாறுபடும்.

## உலகை தனது காலடிக்கு கொண்டு வரும் இலக்கில்... (06ஆம் பக்கத் தொடர்)

இதேவேளை தென் அமெரிக்காவில் உள்ள 12 நாடுகளில் கூட, சீனா கால்பதித்துள்ளது. பிரேசில், ஆர்ஜென்டினா, ஒலிவியா, சிசில், மெக்சிகோ, வெனிசுலா, கொலம்பியா முதலிய நாடுகளில் பெருந்தொகை நிதியில் முதலீடு செய்ய உள்ளது. இந்த முதலீடு பெரும்பாலும் புதிய ரயில் பாதைகள், நெடுஞ்சாலைகள் அமைப்பதற்கேயாகும். அதாவது, 'பெல்ட் ரோட்' அமைப்பதற்கே! இது அமெரிக்காவுக்கு பெரும் ஆத்திரத்தையும், அச்சத்தையும் மூட்டியுள்ளது என்பது வேறு விடயம்.

தென் அமெரிக்க வளங்களைக் கொள்ளையடித்துச் செல்லும் வெளிப் படைத்தன்மை இல்லாத நாடாக சீனா உள்ளதென அமெரிக்கா குற்றம் சாட்டி வருகிறது.

தன் பொருளாதார வளத்தை மேலும் மேம்படுத்தி, 60 சதவீத உலக நாடுகளை தன்வசப்படுத்தி வைக்கவும், ஆசியாவையும் தென்னமெரிக்காவையும் இணைக்கப் போடப்படும் 'சில்க் ரோட்' திட்டத்தை முழுமூச்சாக நிறைவேற்றவும் வேகமாக செயல்பட்டு வருகிறது சீனா.

இதுஇவ்விதமிருக்க பொருளாதார முதலீடுகளால் இந்தியாவையும் கைக்குள் போட்டுக் கொள்ளும் தந்திரத்தைக் கையாள முயன்ற சீன ஜனாதிபதி ஷீ ஜின்பிங்கின் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி உணர்ந்து கொண்டதும், சீன இறக்குமதிக்கு பல தடைகளை விதித்தார். அதன் மூலம் சீனாவின் ஆதிக்கத் திட்டத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார் பிரதமர் நரேந்திர மோடி.

கடந்த 2014 வரை சீனாவுக்கு இந்தியா கடன்பட்ட தொகை 27 இலட்சம் கோடி ரூபா; 2021 இல் அந்தத் தொகை 31 ஆயிரம் கோடி ரூபாவாகக் குறைந்துள்ளது. சீனாவிலிருந்து இந்தியா இப்போது மின்சாதனப் பொருட்கள், பிளாஸ்டிக் மற்றும் மருத்துவ சாதனங்களை இறக்குமதி செய்கின்றது. இந்தியாவிலிருந்து இரும்பு தாதுக்கள், பருத்தித் துணிகள், அலுமினியம், ஓர்கானிக் இரசாயனங்களை ஏற்றுமதி செய்யப்படுகின்றது. பிரதமராக மோடி ஆட்சியில் இருக்கும் வரை, சீனாவைப் பற்றி இந்தியா கவலைப்பட தேவையில்லை என்றார்கள் இந்திய பொருளாதார நிபுணர்கள்.

இந்நிலையில் சீனா மீதான வெறுப்பினால், அங்கிருந்து இடம்பெயர்ந்து தங்கள் தொழில் நிறுவனங்களை இந்தியா, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளில் நிறுவுவதற்கு அமெரிக்க, அவுஸ்திரேலிய, ஐரோப்பிய நாடுகள் நினைக்கின்றன.

இந்நாடுகளில் முதல் தெரிவாக இந்தியாதான் உள்ளது. சீன பொருட்களையோ, சீன வர்த்தகத்தையோ உலக நாடுகள் அறவே ஒதுக்க முடியாது. ஆனால், சீனாவைப் புறக்கணிக்கும் நாடுகளால், எதிர்காலத்தில், கணிசமாக பொருளாதார பலமடைய, பலனடையப் போவது இந்தியாதான்.

தற்போதைய பொருளாதாரச் சூழலில், இந்தியாவில் இருந்து உருக்கு உட்பட மூலப்பொருள் ஏற்றுமதி சீனாவுக்கு அதிகரித்திருப்பதற்கு பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன. கொரோனாவுக்குப் பிறகு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் சீனாவில் இருக்கும் தங்கள் நிறுவனங்களை வேறு நாடுகளுக்கு இடப் பெயர்ச்சி செய்வதில் முனைப்பு காட்டி வருகின்றன. அவ்வாறு வெளியேறும் நிறுவனங்கள் பல,இந்தியாவிற்கு வருவதற்குதான் அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில், இந்திய மூலப் பொருட்களை, சீனா அதிக அளவில் வாங்கி குவிப்பதற்கு இதுதான் காரணம்.

## மலையகத்தின் மூத்த அரசியல்... (19ஆம் பக்கத் தொடர்)

இன முரண்பாடுகள் தீர்க்கப்பட்ட சர்வதேச நாடுகளின் நிபுணத்துவ அனுபவங்களையும் முன்மாதிரியாக ஆராய வேண்டும். புலம்பெயர்ந்த வாழும் சமூக ஆர்வலர்களது ஒத்துழைப்புகளையும் பெற வேண்டியதன் அவசியம் பற்றியும் கலந்துரையாடப்பட்டதாக சதீஷ்குமார் தினகரன் வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.

லண்டன் Harrow civic centre இல் 2002 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட 'சிறுபான்மை மக்களின் சுயநிர்ணய உரிமைகளும் அதிகார பரவலாக்கமும்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் ஆகியோருக்கும் இடையிலான சமாதான ஒப்பந்தம் அடிப்படையிலான முன்நகர்வுகள் பற்றிய கருத்தரங்கம் ஆகியவற்றில் அமைச்சர் பெரியசாமி சந்திரசேகரன், ஏ.எச் எம்.அஸ்வர், செல்வம் அடைக்கலநாதன், ஊடக செயலாளர் ஹென்றி விக்கிரமசிங்க, சமாதான ஒப்பந்தத்தோடு தொடர்புடைய தமிழ் இயக்கங்களின் பிரதிநிதிகள், ஏனைய ஐரோப்பிய தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டதோடு அப்போதைய புனர்வாழ்வு மீள்குடியேற்றம் அகதிகள் விவகார அமைச்சகத்தின் பணிப்பாளராக நானும் பங்கேற்று கருத்து ரீதியாக முன்வைத்த ஆய்வு அறிக்கையினையும் 'வெக்டோன்' தொலைக்காட்சி நேர்காணலையும் காதர் பெருமையோடு நினைவுப்படுத்தினார்.

மேலும் எரிக் சொல்ஹெய்மின் ஒத்துழைப்போடு Centrer for Peace and Social Interaction அமைப்பின் சார்பாக த. தருமகுலசிங்கம்,காதர் மற்றும் ஏனைய அமைப்பாளர்களால் ஜெர்மனி,டென்மார்க், நோர்வே நாடுகளிலும் இடம்பெற்ற கருத்தரங்குகளிலும் விவாதித்து முன்வைக்கபட்ட சிபாரிசுகளை அறிக்கைகளை மையப்படுத்தி தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதிய திருப்பத்தோடு நூலொன்றையும் வெளியிடும் பணியிலும் காதர் ஈடுபட்டுள்ளாரெனவும் சதீஷ்குமார் மேலும் தெரிவித்தார்.

# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

டைஹட்சு Tanto 2019 51750 கி.மீ. புல் ஒப்சன் 5750000.00 076 8973093 உடனடியாக விற்பனைக்கு. நேர்மையான கொள்வனவாளர்கள் மட்டும். 021353

### வர்த்தகம்

**233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு**

KVA 60 புதிய இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பகின்ஸ் ஜெனரேட்டர், KVA32 ஜோன்டியர் ஜெனரேட்டர், KVA7 லிஸ்டர் ஜெனரேட்டர். இத்தாலி புதிய 1001, 2001, 270 1 திரி பேஸ், சிங்கல் பேஸ் புத்தம் புதிய கம்பிரெஜஷர் விற்பனைக்கு. பாணந்துறை. 0778460690, 0726267432. 022240

### வேலைவாய்ப்பு

**301 வேலை வாய்ப்பு வேலை வாய்ப்புகள்/சேவைகள்**

ABC MAN POWER SERVICE அரச அங்கீகாரம் பெற்ற எமது சேவையூடாக வீட்டுப் பணிப்பெண்கள், காவலாளி, Driver, சிறு குழந்தை பராமரிப்பாளர், நோயாளி பராமரிப்பாளர், தென்னந்தோட்டம், கோழிப்பண்ணை வேலையாட்கள், கிளீனர்ஸ் மேலும் அனைத்து விதமான வேலை ஆட்களையும் உடன் பெற்றுக் கொள்ள அழைக்கவும். Mr. Ranjan 011 7179323, 071 0444416, 011 7179323. 022061



**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

கொழும்பு பழைய சோனகத் தெருவில் அமைந்துள்ள பி.வி.சி. பைப் பிட்டிங்ஸ் விநியோகத்தர் நிறுவனத்திற்கு கவுண்டர் சேல்ஸ்மன் மற்றும் பிரிலான்ஸ் மார்க்கட்டிங் எக்ஸகட்டிவ் தேவை. தொடர்பு 077 2300450, 0777 072545. 021845

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

Audit Trainee with A/L Commerce O/L Maths B Apply Agape Accounting Services, 89-1/2, Bank shall Street, Colombo-11. email: agapeaccservices@gmail.com whatsapp: 0755030954, Tel: 0777239397. 021522

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

தெற்கு தங்காலைக்கு அருகில் வைத்திய சாலையின் பெண் மருத்துவரின் வீட்டில் தங்கி கடமையாற்ற விரும்பும் 55 வயதிற்கு குறைந்த ஆரோக்கியமான செயற்பாடுள்ள பெண் தேவை. சிங்களம் கதைக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். 077 4570876/ 070 4407999. 022268

வீடொன்றில் சமையல் மற்றும் வேலைகளிற்கு 65 வயதிற்கு க் குறைந்த ஆண் ஒருவர் தேவை. 0771838628. 022238

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

கொழும்பு 05, ஹெவ்லொக் வீ தியில் இல் ஓர் சீன உணவகத்தில் வெற்றிடங்கள். பயிலுநர்/ பயிற்சி பெற்ற வெயிட்டர்கள், கிச்சன் ஹெல்பர், டிஷ் வொஷர்ஸ் மற்றும் வெயிட்டர்/ரைடர்கள். தொடர்பு 0705323273, 0765718240. 016128

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

குருநாகல் வாரியபொல தென்னந்தோட்டத்திற்கு 4055 வயதிற்கிடைப்பட்ட நன்றாக வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. தங்குமிட வசதிகள். டிரக்டர் செலுத்த முடியும் எனில் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம். 077 3165395. 021898



குருநாகல், வாரியபொல தென்னந் தோட்டத்திற்கு 40 55 வயதிற்கு இடைப்பட்ட நன்றாக வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை. தங்குமிட வசதிகள். டிரக்டர் ஓட்டக்கூடியவராயின் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம். 0773165395. 022261

தோட்ட கண்டக்டர் தேவை. 50 ஏக்கருக்கு குறைந்த தென்னந்தோட்டத்திற்கு அனுபவம் அவசியம். 0777 897837. 021501

**325 தொழில்துறை பொது**

கடுவலை நகர பகுதியில் வேலைவாய்ப்பு. சொகலட் பிஸ்கட், கேக், பால்மா, நிறுவனங்களிற்கு வேலையாட்கள் தேவை. மாத வருமானம் 45,000 55,000. தினசரி கூலி 1500/= மேல். பெற்றுத் தரப்படும். தொடர்பு கொள்ள: 0 7426146 7 6, 0 7426392 7 2. 022244

கொழும்பு பழைய சோனகத் தெருவில் அமைந்துள்ள பி.வி.சி. பைப் பிட்டிங்ஸ் விநியோகத்தர் நிறுவனத்திற்கு உடனடியாக உதவியாட்கள் தேவை. தொடர்பு கொள்க. 077 2300450, 0777 072545. 021847

சில்லறைக் கடைக்கு அனுபவமுள்ள அனுபவமற்ற Salesmen தேவை. சம்பளம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும். 0771283150. 022798

தெஹிவளை உற்சவப் பொருட்கள் விநியோகிக்கும் நிறுவனத்தில் சேவைக்கு 18 25 இடைப்பட்ட கையுதவியாட்கள், சாரதிகள் தேவை. உணவு, தங்குமிடத்துடன் பொருத்தமானவருக்கு கூடுதல் சம்பளம். 070 7322815. 022115

நிறுவனமொன்றை கவனித்துக்கொண்டு தங்கியிருக்கக் கூடிய வயதான ஒருவர் தேவை. உணவு இலவசம். சம்பளம் ரூ. 25000/ 070 1450955. 022116

ஹம்பந்தோட்ட மாவட்டத்திலுள்ள பூங்காவை அலங்கரிக்கும் நிறுவனத்திற்கு சேவை செய்வதற்காக சேவையாளர் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கும் முன்னுரிமை, தங்குமிடம் இலவசம். தொடர்பு இல. 0714 583176, 071 4843816. 021533

ஹம்பாந்தோட்டை மாவட்டத்திற்குள் நடத்திச் செல்லப்படும் பூங்கா அலங்கார நிறுவன சேவைக்கு ஊழியர்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. தங்குமிடம் இலவசம். தொடர்பு 071 4583176, 071 4843816. 022186

Polythene Film Extruder மெஷின் ஒப்பரேட்டர்கள் மற்றும் உதவியாளர்கள் (ஆண்/பெண்) நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும் இல. 785, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை. 021832

Rolythene Bag Cutting மெஷின் ஒப்பரேட்டர்கள் மற்றும் உதவியாளர்கள் (ஆண்/பெண்) நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும். இல. 785, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை. 021830

0 7 1864 3778 சுத்திகரிப்புச் சேவை விடயங்களுக்கு ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. தொடர்பு 07 1 8653871, 07 6 3155331, 07 6 0989129. 022449

07 7 9975547, 071 86 5 3778 நட்சத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடனடியாக சேர்த்துக் கொள்ளப்படுவர். உணவு இலவசம். (12 மணி நேரம்) இற்கு 1 750/ = 1450/= கொழும்பு 071 8653780, அலுவலகம் 0763155331, 0 706 6 55 331. 022425

### சொந்த விடயம்

**528 தங்குமிட வசதிகள்**

கொழும்பு 6 வெள்ளவத்த பெண்களுக்கான தளபாடங்களுடனான அறைகள், இணைந்த குளியலறை, உணவு அறை, சமையலறை குக்கர், வொசர், குளிர்சாதனத்துடன். 75/1, W.A. சில்வா மாவத்த, தொ.பே. 2591169, 075 50 91379. 022269



### காணி/தோட்டம்

**615 வீடு சொத்து சேவைகள்**

Property Management Services - Purchase, Sell, Rent, Lands for warehouses, projects, Tea, coconut estates, cultivation, Bare Lands - upcountry & Colombo. Estner :- 07 747 0 6207/ 0762884527 022785

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

நுகேகொடை ஜம்புகஸ்முல்ல மாவத்தையில் கௌரவமான, பாதுகாப்பான சுற்றாடலில் அமைந்துள்ள 3.8 பேர்ச் இரண்டு மாடி வீடு. (மூன்றாம் மாடியில் ஸ்லெப் போடப்பட்டுள்ளது.) 20 அடி பாதையுடன் விற்பனைக்கு 20 மில்லியன் விலை பேசித்தீர்மானிக்கலாம். 011 4345762, 075 3678836. 021314

4 பேர்ச் 2 அறைகள் வரண்டா போதிராஜ மாவத்த மாளிகாவத்த, கொழும்பு 10. 07 7 1825131. 021906

**621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு**

கண்டி மாநகர சபை எல்லைக்குள் கட்டுகஸ்தோட்டை நகர மையத்தில் (கட்டுகஸ்தோட்டை அரசாங்க வைத்தியசாலைக்கு பின்புறம்) பெறுமதியான 48 பேர்ச்சஸ் நெல் காணி விற்பனைக்கு உள்ளது. தெளிவான செயல்கள். மூன்று கட்ட மின்சாரம் மற்றும் குழாய் நீர், கடந்த பத்து ஆண்டுகளாக நிலத்தில் விவசாயம் செய்யப்படவில்லை. ஒரு பேர்ச் 700, 000. தொடர்பு (07 17090665) (0812 054495). 021214

**622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு**

மாத்தளை மாநகர சபை எல்லைக்குள் 32 பேர்ச்சஸ் காணி பிரதான வீதிக்கு முன்பாக 42 அடி அகலம் உடனடி விற்பனைக்கு. 0777866387. 021236

**642 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு**

வத்தளை அல்விஸ்டவுன் முழுமையாக டைல்ஸ் செய்யப்பட்ட 02 படுக்கையறை வீடு A/C யுடன் குத்தகை/ வாடகைக்கு 3 மில்லியன் பேசித் தீர்க்கலாம். 070 3284433, 077 6604433. 022158

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 சுயனி - 011 2 429 342/343

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை

திறன் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு

# வெற்றிடங்கள்

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையானது நாட்டில் அரச துறை விஞ்ஞானிகளுக்கு நிதி உதவி அளிக்கும் அரசாங்க நிதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றாகும்.
தேசிய ஆராய்ச்சி சபையில் (NRC) பின்வரும் பதவிக்காக தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## விஞ்ஞான/ ஆராய்ச்சி அதிகாரி - AR 1 – பதவி 01

***தொழில் விபரம்*** : சபைக்காக மானிய முகாமைத்துவம், அரச மானிய தகவல், தரவுகளை பராமரித்தல், புள்ளிவிபர ஆய்வுகள், அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் கருத்தரங்கு/ பயிற்சிப்பட்டறைகள் போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தலுக்கு பொறுப்பாக இருப்பார்.

**தகைமைகள்**

1. இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், விவசாயம், பொருளியல், புள்ளிவிபரவியல், ICT கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணினி பொறியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் சிறப்புப் பட்டம்.

**அல்லது**

2. தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு பின்னரான டிப்ளோமாவுடன் இலங்கை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல். விவசாயம், பொருளியல், புள்ளிவிபரவியல், ICT கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணினி பொறியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் பொதுப் பட்டம்.

***வயது*** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : AR 1-2016 [ரூபா 53,150-1,375 x 10 – 1,910 x 15 – 95,550/-]

**மேலுள்ள பதவிக்கு பொருந்துகின்ற ஏனைய நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்ற வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
4. எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
5. ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காக (ETF) உரித்துடையதான இந்தப் பதவி நிரந்தரமானது.
6. தேசிய ஆராய்ச்சி சபையின் ஊழியர்களுக்கு பொருந்தும் ஏனைய நலம்சார் கொடுப்பனவுகள்.
7. விண்ணப்பதாரர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் பிரதிகள், ஏனைய தொடர்புடைய சான்றிதழ்கள், இரு உறவினர்கள் அல்லாத நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து தமது கையொப்பமிடப்பட்ட விண்ணப்பங்களை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2022 ஏப்ரல் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் “தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்தியா மாவத்தை, கொழும்பு 07” என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில்/ விரைதூதரில் அனுப்புதல் வேண்டும்.
8. தபால்/ விரைதூதர் தாமதங்களை தவிர்ப்பதற்கு நேரத்திற்கு சமர்ப்பிப்பதை உறுதி செய்ய admin@nrc.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சுயவிபரக் கோவையின் ஸ்கேன் பிரதி ஒன்றை நீங்கள் அனுப்புதல் வேண்டும். சுயவிபரக் கோவையின் அனைத்து பக்கங்களும் அபேட்சகர் மூலம் கையெழுத்திடப்பட்டிருத்தல் வேண்டும்.
9. அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்கள் தமது குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.
10. மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரம் www.nrc.gov.lk என்ற தேசிய ஆராய்ச்சி சபை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
**தேசிய ஆராய்ச்சி சபை**
**120/7, வித்தியா மாவத்தை**
**கொழும்பு-07**
**தொ. இல. : 011-2675176**
**தொலைநகல் : 011-2675136**
**மின்னஞ்சல் : admin@nrc.gov.lk**

---

# இலங்கை பயன்பாடுகள் ஆணைக்குழு

## ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கை

### மூன்றாம் தரப்பு முதலீட்டை எளிதாக்கும் வகையில், மேற்கூரை சூரிய மின்சக்தி உற்பத்தி தொடர்பான ஒப்பந்தக் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து திருத்துவதற்கான ஆலோசனை சேவைகள்

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தகுதிவாய்ந்த கட்சிகளிடமிருந்து மூன்றாம் தரப்பு முதலீட்டை எளிதாக்கும் வகையில், மேற்கூரை சூரிய மின்சக்தி உற்பத்தி தொடர்பான ஒப்பந்தக் கட்டமைப்பை மதிப்பாய்வு செய்து திருத்துவதற்கான ஆலோசனை சேவைகளுக்கான ஆர்வ வெளிப்பாட்டுக்கான கோரிக்கையை **(EOI)** அழைக்கிறது. சமர்ப்பிப்பதற்கான வழிகாட்டுதல்களை எமது **www.pucsl.gov.lk** என்ற இணையதளத்தில் காணலாம்.

EOIகளை 11 ஏப்ரல் 2022 அன்று பிற்பகல் 3:00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03
இலங்கை

தொலைபேசி: (011) 2392607/8 தொலைநகல்: (011) 2392641
மின்னஞ்சல்: pasindub@pucsl.gov.lk, regulate@gmail.com

திகதி: 2022.03.27

---

**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**

# வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

இலங்கையின் விநியோக அமைப்பொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையுமான கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய ஏழு கிளைகளையும் 500,000 இற்கு மேலான வாடிக்கையாளர்களுக்கு சேவைபுரிவதுடன் 1500 ஊழியர்களுடனான தொழிற்படையையும் கொண்டுள்ளதுடன் பின்வரும் பதவிக்கான தகைமையுள்ள நபர்களை தேடுகின்றது.

## பிரதி பொது முகாமையாளர் (IT)

| | |
|---|---|
| தேவைப்படும் தகைமைகள் பின்வருமாறு: | |
| கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் | * கணினி விஞ்ஞானம் / பொறியியலில் விஞ்ஞானமானி (கௌரவ) பட்டம்<br>* பொறியியலாளர்கள் நிறுவனத்தில் இணைந்த அங்கத்தவராகவிருத்தல் வேண்டும். |
| தகைமைப் பட்ட பின் தகைமை / துறை அனுபவம் | Fifteen (15) years of experience in managing application development, managing operations and support services (network operations, mainframe operations, server operations and help desk) of which at least 6 years experience as a Chief Manager I.T. category. |
| வயது | 2022 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று 45 வயதிற்கு கீழேயிருத்தல் வேண்டும். |

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் பொறியியலுக்கான மேலதிக பொது முகாமையாளருக்கு கடமைக்காக அறிக்கையிடுவதுடன் கம்பனியின் தகவல் தொழில்நுட்பவியல் திணைக்களத்தை செயற்றிட்டத்துடன் முகாமைப்படுத்துவார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கம்பனியினால் பராமரிக்கப்படும் வாகனம் அடங்கலாக மேலதிக நன்மைகளும் வழங்கப்படும்.

உங்களின் சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை கீழேயுள்ள முகவரிக்கு 2022 ஏப்ரல் 06 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் தன்மையில் அனுப்பவும்.

விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது விண்ணப்பத்திலும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையிலும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**மேலதிக பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்)**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**
**1 ஆம் மாடி, ஈ.ஏச். குரே கட்டிடம்**
**411, காலி வீதி, கொழும்பு-03.**

LECO

---

# வத்தளையில் ஆடம்பர வீடொன்று விற்பனைக்கு

வத்தளை அவரிவத்த பாதையில் மதிப்பான குடும்பங்கள் கொண்ட சூழலில் அனைத்து உயர்தர பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் பொழுதுபோக்கு நிலையங்களுள்ள இடத்தில் அமைந்துள்ளது. 15 பேர்ச் காணி 3 மாடி வீடு. 20 அடி அகலமான பாதை, அனைத்து படுக்கையறைகளும் வளிச்சீராக்கல் கொண்டது. 4 படுக்கையறைகள், 3 குளியலறைகள் வெந்நீர் கொண்டவை மதுபானமிடம் சிறந்த காட்சியுடன் 2 பன்ரீக்கள் கிரனயிட் பதிக்கபபட்டவை. பணியாளர் அறை பணியாளர் குளியலறைகளுடன் முழுவதும் தரை ஓடு பதிக்கப்பட்டது. நெதும் பலகையிலான படிக்கட்டு அனைத்து கதவுகள் மற்றும் யன்னல்கள் பலாமர பலகை காணி சீராக்கப்பட்ட தோட்டம், தானியங்கும் இரு ரோலர் கேட்டுக்கள். கட்டிடக் கலையுடன் வடிவமைக்கப்பட்டது. 3 வழி மின்சாரம். முழுவதற்குமான CCTV 80 மில்லியன் மாத்திரமே. கொடுக்கல் வாங்கல்கள் வெளிநாட்டு கரன்சியிலும் மேற்கொள்ளலாம். தொடர்பெண் 070 5031726.

---

**உடபுஸ்ஸல்லாவ பெருந்தோட்ட நிர்வாகம்**

# மிளகு அறுவடைக்கான விலை கோரல்

## டக்வாரி தோட்டம், ரங்கல, தெல்தெனிய

உடபுஸ்ஸல்லாவ பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் டக்வாரி தோட்டத்தில் சுமார் 3400 மிளகு கொடிகள் அறுவடைக்கு தயாராக உள்ளதால் அதற்கான விலை கோரலுக்கான அறிவிப்பு.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் கொடிகளை பார்வையிட முடியும். மேலதிக விபரங்களுக்கு டக்வாரி தோட்ட காரியாலயத்தை தொலைபேசி எண் 081-4928077 இல் தொடர்பு கொள்ளலாம். விலை கோரல் விண்ணப்பத்தை தோட்ட காரியாலயத்தில் ரூபா 1000.00 செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். காரியாலத்தில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்பத்திரம் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பப்பத்திரங்களை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதிக்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பவும்.

**நிதி முகாமையாளர்,**
**உடபுஸ்ஸல்லாவ பெருந்தோட்ட நிர்வாகம்,**
**இல 95A, நம்பபான, இங்கிரிய.**

---

BE BETTER INFORMED!




News you can trust now free on your mobile phone.

VISIT
apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

---

வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்

## வேலைவாய்ப்பு


- விரிவுரையாளர் (பயிற்சி)
- சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II)
- உள்வாரி பேராசிரியர்
- காட்சிபருத்துனர் (தற்காலிக)

மேற்குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது 2022 மார்ச் மாதம் 27 ஆம் திகதி (Sunday observer) சன்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

மேலதிக விபரங்களை பல்கலைக்கழக வலைதளத்தினூடாக பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்
www.uovt.ac.lk

துணைவேந்தர்
வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்,
இல.100, கந்தவல,
இரத்மலானை.
தொலைபேசி : 011 2630706
2022 மார்ச் 27

---

Publish your advertisements with us
ADVERTISING Centres

KATARAGAMA
Opposite Kataragama Bus Stand, Pussadewa Mawatha
047 223 5291
Associated Newspapers of Ceylon Limited
No 35, D R Wijewardene Mawatha, Colombo 10
1949

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

## AHEAD செயற்றிட்டம்

Uva Wellassa University

### தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பதில் பெருமை கொள்வோம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது தேசிய வளத்தை மையப்படுத்தி அதற்கான மேலதிக செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதுடன் பட்டப்படிப்பு, நிபுணத்துவம், கூட்டுறவு என்பனவற்றின் புதிய போக்குகளையும் ஏற்படுத்துகின்றது. பல்கலைக்கழக கல்விசார் திட்டங்கள் கவனமாக வடிவமைக்கப்பட்டு தங்கள் தொழில் வழங்குநருக்கு பெறுமதி சேர்க்கும் தேர்ச்சி வாய்ந்த புதிய மாணவர் பரம்பரையை முன்கொணர்கின்றது. தேசிய ரீதியிலான இப்பாரிய முயற்சியில் நீங்களும் ஓர் அங்கத்தவராகலாம்.

## பெறுகை அறிவித்தல்

பின்வருவனவற்றை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களைக் கோருகின்றார்.

| விளக்கம் | கேள்வி இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப் படாத வைப்பிடல் (ரூபாவில்) | விலைக் கோரல் முன்னோடிக் கூட்டத் திகதி மற்றும் நேரம் | விலைமனு மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| பிரயோக விஞ்ஞான பீடம் - பிரயோக விஞ்ஞான பீடத்திற்கு விரிவுரை மண்டபமொன்றை நிர்மாணித்தல் - படிநிலை III | UWU/AHEAD/RA1/ FAS/NCB/ WORKS/03 | 154,000.00 | 3,500.00 | 2022 மார்ச் 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு | 2022 ஏப்ரல் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கான மீளளிக்கப்படாத கட்டணத்தை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேலே குறிப்பிட்டுள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக AHEAD/OTS அலுவலகத்திற்கு அல்லது இலங்கை வங்கியின் 82592579 என்ற கணக்கிலக்கத்திற்கு ரொக்கப் பணத்தில் நேரடியாக செலுத்திய பின்னர், இக்கொடுப்பனவிற்கான பணப்பற்றுச்சீட்டுடன் பெறுகைக்கான பிரதிப் பணிப்பாளருக்கு (AHEAD/OTS) எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் எந்தவொரு விலைமனுதாரரும் 2022 ஏப்ரல் 12ஆம் திகதி பி.ப. 4.00 மணி வரை முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்தும் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்வோர், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை 82592579 என்ற கணக்கிலக்கத்தையுடைய ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் AHEAD செயற்றிட்டத்தின் பெயரில் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் கொடுப்பனவை மேற்கொள்ளலாம் என்பதுடன், பணப்பற்றுச்சீட்டு/பணவைப்புத்துண்டு ஆகியவை பூர்த்தி செயயப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும். (விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.)

விலைமனுக்களை நிர்ணயிக்கப்பட்ட விலைமனுக்கள் 2022 ஏப்ரல் 18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் அவைகள் அதன் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைக் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, (அதிகாரமளிக்கப்பட்ட கடிதத்துடன்) சமுகமளிக்க அனுமதிக்கப்படுவார். கேள்விகளை முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறையில் உள்ளடக்கி அதன் இடது பக்க மேல் மூலையில் இயைபுடைய கேள்வி இலக்கம் எழுதப்பட்டு பதிவுத் தபாலில் “தலைவர், செயற்றிட்ட பெறுகைக் குழு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பசறை வீதி, பதுளை” என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

மேலதிக விபரங்களை 055-3127378 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெறுகைக்கான பிரதிப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**
2022-03-27

---

SMIB

**அரச ஈட்டு, முதலீட்டு வங்கி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுத்திகரிப்புச் சேவைக்கான பெறுகை

தலைமையகம் மற்றும் நாடளாவிய ரீதியிலான கிளைகளுக்கு சுத்திகரிப்பு சேவையின் பெறுகைக்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை அரச ஈட்டு முதலீட்டு வங்கி (SMIB) இன் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

வியாபார பதிவு மற்றும் சமமான சேவையில் 5 வருட காலத்திற்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டுள்ளவர்களுக்கு விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். வார நாட்களில் 2022 ஏப்ரல் 06ஆம் திகதி வரை மு.ப.9.00 முதல் பி.ப 3.30 வரை ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 2000/- செலுத்துவதன் பேரில், மற்றும் கீழ்க்காணும் முகவரிக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். விலைமனு ஆவணங்களை நிர்வாகம் மற்றும் தளபாடங்கள் பிரிவில் இலவசமாகப் பரிசீலனைக்கு கிடைக்கும்.

விலைமனுக்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது 2022 ஏப்ரல் 08 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கொழும்பு - 03, காலி வீதி, இல.269, அரசஈட்டு முதலீட்டு வங்கியின் 4ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து இடலாம். தாமதமமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்ட பின்பு உடனடியாக கீழேயுள்ள முகவரியில் சமுகமளிக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். எல்லா விலைமனுவுடனும் ரூ.100,000/- தொகையிலான ஓர் விலைமனுப்பிணை இணைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பிரதம முகாமையாளரைத் (மனிதவளங்கள் மற்றும் தளபாடங்கள் ) தொடர்புகொள்ளுங்கள்.

**தொ.பே.இல: 011-7722879/011-7722784**
**பொது முகாமையாளர்,**
**அரச ஈட்டு முதலீட்டு வங்கி,**
**இல-269, காலி வீதி,**
**கொழும்பு - 03**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 04

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| | 10 | 11 | 12 | 13 | |
| 14 | 15 | | 16 | 17 | 18 |
| 19 | | 20 | | 21 | |
| 22 | 23 | 24 | 25 | | |

பெயர் ....................................................

வகுப்பு ....................................................

தொலைபேசி இல ....................................................

பாடசாலை பெயர் ....................................................

வதிவிட முகவரி ....................................................

....................................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) உலகில் வாழும் தரைவாழ் உயிரினங்களில் மிகப்பெரிதான இந்த மிருகத்துக்கு, இவ்வாறு மற்றொரு பெயரும் உண்டு.

(04) உடல், உடம்பு, சரீரம், தேகம் என்றெல்லாம் பல சொற்களால் குறிப்பிடுகின்றோ். அவ்வாறான மற்றொரு சொல் இது. (தலைகீழான சொல்)

(07) பூவாகி, பிஞ்சாகி, காயாகி.... அதன் பிறகு அடுத்த பருவம் இதுதான்.

(10) எமது நாட்டில் உள்ள நதிகளில் மிகவும் நீளமானது.

(14) வட்டம் ஒன்றை எடுத்துக் கொள்வோமானால், அதன் சமச்சீர் அச்சை விட்டம் என்று கூறுகின்றோம். விட்டத்தின் அரைவாசி இதுவாகும். அதாவது வட்டத்தின் மையப்புள்ளிக்கும் பரிதிக்கும் இடையிலான நீளம்.

(16) பூவின் இதழ் இது.

(22) மனிதர்கள் பலரிடம் இந்த தீயகுணம் உள்ளது. அகம்பாவம், கர்வம், மமதை என்றும் கூறலாம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(01) காணியைச் சூழ எல்லையாக அமைக்கப்படுவது.

(03) எமது நாட்டில் எங்குமே காணக்கூடிய கருமை நிறப் பறவை. (தலைகீழான சொல்)

(05) கலைநிகழ்ச்சிகளை அரங்கேற்றும் இடம்.

(08) உலகுக்கு இவ்வாறும் ஒரு பெயர் உண்டு. (தலைகீழான சொல்)

(10) இலங்கைக் காடுகளிலும் வசிக்கின்ற மிருகம். மனிதனால் இறைச்சிக்காக இம்மிருகம் வேட்டையாடப்படுவதால், அருகிக் கொண்டு செல்கின்றது.

(13) உங்கள் வீட்டுச் சுவரிலும் பெரும்பாலும் இரவு நேரத்தில் இப்பிராணியைக் காணலாம். சுவரில் வழுக்கி விடாமல் இந்த நகருயிரி எவ்வாறு வேகமாக ஓடுகின்றது என்பது பெரும் விந்தை. (தலைகீழான சொல்)

(14) இரவில் உணவு தேடும் பறவை, இதன் கண்கள் அச்சம் தரும்.

(20) ஆடுகளில் ஆண் இனத்தின் மரபுச் சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 03

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தசாப்தம் 07. நாளை 09. முதலை
13. சுத்தம் 19. பல் 21. வானவில்

**மேலிருந்து கீழ்**

02. சாந்தம் 05. நாம் 08. மூளை
11. விடுதலை 16. பசு 17. வால் 20. பால்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 02

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**நா. அம்சாயினி,**
தரம் 12பி, தி/ஸ்ரீசண்முகா வித்தியாலயம்,
திருகோணமலை.

**இரண்டாம் பரிசு**

**ஏ.எச். அப்துல் அலீம்,**
தரம் 07சி, அலிகார் தேசியக் கல்லூரி, ஏறாவூர்.

**மூன்றாம் பரிசு**

**சி. அஷ்விதா,**
தரம் 07, வ/ சைவபிரகாச மகளிர் கல்லூரி,
வவுனியா.

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். சவிலக்ஷனா,**
தரம் 10ஏ, பது/தமிழ் மகளிர் மகா வித்தியாலயம்,
பதுளை.

**2. சுஸ்மிதன் ஆனந்தன்,**
தரம் 12,
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

**3. எம்.எச்.சி.என். ஸம்றா,**
தரம் 10 சி, மாறை / அறபா தேசிய பாடசாலை,
வெலிகம.

**4. ஏ. அய்யாஷ்,**
தரம் 09, கே/திப்பிட்டிய மு.வித்தியாலயம்,
திப்பிட்டிய, அரனாயக்க.

**5. ச. கபிதூரிகா,**
தரம் 07, மட்/வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை,
மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 04
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து.**

**தெளிவுரை :**
**ஒழுக்கம் தவறுதலால் குற்றம் உண்டாவதை அறிந்து, மன வலிமை உடைய சான்றோர் ஒழுக்கத்தில் தவறாமல் காத்துக் கொள்வர்.**

## பொலித்தீன் அற்ற சூழலை உருவாக்குவோம்!

உலகளாவிய ரீதியில் சூழலியலாளர்களும் இயற்கையை நேசிப்போரும் பொலித்தீன் பாவனையால் இந்த உலகுக்கு ஏற்படும் தீமைகளைப்பற்றி உரக்கக் குரல் கொடுத்து வருகின்றனர்.

பிளாஸ்ரிக் பாவனை கடந்த அரை நூற்றாண்டு காலமாக மனிதனின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள நிலையில் தற்போது அது மனித வாழ்வுக்கும் ஏனைய உயிரினங்களின் இருப்புக்கும் இயற்கைக்கும் கேடாகவும் அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது.

பிளாஸ்ரிக்கும் பொலித்தீனும் உக்கி அழிவதில்லை. இதனால் சூழலுக்கும் காலநிலைக்கும் ஆரோக்கியத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. பிளாஸ்



ரிக், பொலித்தீன் கழிவுகள் நிலத்திற்கும், நிலத்தடி நீருக்கும், ஆறு, குளம், வாவி, ஏரி, கடல் போன்ற நீர் நிலைகளுக்கும் வளி மண்டலத்திற்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது. மனிதர்கள் மாத்திரமன்றி விலங்குகள், நீர்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் போன்றவற்றிற்கும் அச்சுறுத்தலாகவே உள்ளது.

பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பனவற்றால் ஏற்படுகின்ற மிக முக்கிய நோய் புற்றுநோயாகும். பிளாஸ்ரிக் துகள்கள் கருவிலுள்ள குழந்தைகள் குறைபாட்டுடன் பிறப்பதற்கும் காரணமாகின்றது என மருத்துவத்துறை கூறுகின்றது.

புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம், வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, நீர் வழிந்தோடாமை சூழலில் கிருமிகளினதும் காவிகளினதும் பெருக்கம், நுளம்பு, ஈ பெருக்கம் என்பவற்றிற்கும் பொலித்தீன் பிளாஸ்ரிக் போன்றவற்றின் ஆக்கிரமிப்பு காரணமாக அமைந்துள்ளது. இலகுவில் உக்கும் தன்மையற்ற பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்றவற்றின் இயல்பு காரணமாக குளப் படுக்கைகளிலும் ஏனைய நீரேந்துப் பகுதிகளிலும், வடிகான்களிலும் சேரும் பிளாஸ்ரிக் பொலித்தீன் பொருட்கள் மண்ணினுள் ஒரு படையாக உருப்பெறுவதால் வெள்ளநீர் மண்ணுள் வடிந்து செல்லமுடியாத தன்மை ஏற்படுகின்றது.

இதன் காரணமாக நிலக்கீழ் நீர் வளம் குறைவதாகவும் வடிந்து செல்ல முடியாத நீர் நிலத்தின் மேற்பரப்பில் தங்கி வெள்ளப் பெருக்குகள் ஏற்பட வழிவகுப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளன.

கடந்தாண்டு இந்தியாவின் தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில் ஏற்பட்ட மோசமான வெள்ளப் பெருக்கிற்கு இது ஒரு காரணமாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும் பயிர்ச் செய்கை நிலங்களின் உயிர்த் தன்மையும் உயிர்வகைகளின் பல்வகைத் தன்மையும் ஆபத்துக்குள்ளாக்கப்படுவதாக சூழலியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். விலங்குகளால் உண்ணப்படும் பொலித்தீன்கள் அவற்றின் கடலினுள் சிக்குண்டு அடைப்புகளை ஏற்படுத்தி அவை சடுதியாக இறக்கவும் காரணமாய் அமைந்திருக்கின்றன.

நாளாந்தம் நம் நாட்டில் 400 தொடக்கம் 500 தொன் பொலித்தீன் கழிவுகளாக வீசப்படுவதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, இந்த பூமிப் பந்திற்கு அழிவை ஏற்படுத்தும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்த்து இயற்கையோடு இணைந்த புது உலகைப் படைப்போம்!

**ஏ.எச். அப்துல் அலீம்,**
தரம் 08சி,
அலிகார் தேசியக்கல்லூரி,
ஏறாவூர்.




புஸ்பராஜ் / ரம்யாபிரபா ,
கலஹா குறுப்,
அப்பர் கலஹா.






**ஆர். அம்ரிதா,**
தரம் 05, கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி,
கொழும்பு 04.

## ‘உலக சிட்டுக் குருவிகள் தினம்’ கடந்த 20ஆம் திகதி



# சிட்டுக்குருவிகள்

சிட்டுக்குருவிகள் உருவத்தில் சிறியதாகவும், இளம் சாம்பல் கலந்த பழுப்பு நிறத்திலும் காணப்படும். இந்தப் பறவை 8 செ.மீ. முதல் 24 செ.மீ. வரை வளரக்கூடியவை. கூம்பு வடிவ அலகு கொண்ட இந்தப் பறவை சுமார் 27 கிராம் முதல் 40 கிராம் வரை எடை கொண்டதாக இருக்கும். ஆண் பறவைக்கும், பெண் பறவைக்கும் சில வேறுபாடுகள் உண்டு. இந்த வகை பறவைகள் மரத்திலும், வீடுகளின் மறைவான இடங்களிலும் வைக்கோல் போன்ற மெல்லிய பொருட்களை வைத்து கூடு கட்டி வாழும். இவை தானியங்கள், புழு, பூச்சிகளை உணவாகக் கொள்ளும். முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் தன்மை கொண்ட இந்த வகைப் பறவை, 13 ஆண்டுகள் வரை வாழும் தன்மை பெற்றவை.

சுற்றுச்சூழல் மாற்றங்களின் காரணமாக, இப் பறவைகள் அழிந்து வருவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக செல்போன் டவர்களில் இருந்து வெளிப்படும் மின்காந்த அலைகளின் தாக்கம் காரணமாக, இந்த குருவிகளின் இனப்பெருக்க மண்டலம் பாதிக்கப்பட்டு, இவற்றின் இனப்பெருக்கம் குறைந்து வருவதாக கண்டறியப்பட்டுள்ளது. நகர்ப்புறங்களில் இவற்றை அதிக அளவில் காணமுடியாத சூழல் உருவாகிவிட்டது. மனிதனின் பழக்க வழக்கங்களில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய மாறுதல்கள், நவீன தகவல் தொழில் நுட்பப் புரட்சி, இயற்கைக்கு மாறாக எடுக்கப்படும் சுற்றுச்சூழல் நடவடிக்கை போன்ற காரணங்களால், சிட்டுக்குருவி எனும் சிற்றினம் அழிவுப்பாதைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வெளிக்காற்று வீட்டிற்குள் வர முடியாதபடி, வீடு முழுவதும் குளிரூட்டப்பட்ட அறைகளை உருவாக்குவதால், அதில் குருவிகள் கூடுகட்டி குடியிருக்க இயலாமல் போனது.எரிவாயுக்களில் இருந்து வெளியேறும், மெத்தைல் நைட்ரேட் எனும் வேதியியல் கழிவுப் புகையால், காற்று மாசடைந்து பூச்சி இனங்கள் அழிகின்றன. மேலும் வீட்டு தோட்டங்கள், வயல்களில் பயிர் களுக்கு பூச்சிக்கொல்லி மருந்து தெளித்து பூச்சிகள் கொல்லப்படுகின்றன. இதனால் ஏற்படும் உணவுப் பற்றாக்குறையால், நகருக்குள் வாழும் குருவிகள் பட்டினி கிடந்தே அழிகின்றன. பல சரக்கு கடைகள் மூடப்பட்டு, பல்பொருள் அங்காடிகள் பெருகி வருகின்றன. இங்கு நெகிழிப் பைகளில் தானியங்கள் அடைத்து விற்கப்படுவதால், வீதிகளில் தானியங்கள் சிதற வாய்ப்பில்லை.

சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கை அண்மைக் காலங்களில் குறைந்து வருவதன் காரணமாகவும், நாள்தோறும் தமது வாழ்வுக்காக அவை எதிர் நோக்கும் பிரச்சினைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி, அதன் வாயிலாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் கடந்த 2010ம் ஆண்டு முதல், மார்ச் 20ந் தேதியை ‘உலக சிட்டுக் குருவிகள் தினம்’ அனுஷ்டிக்கப்படுகிறது.

அரிய வகையாக மாறி வரும் சிட்டுக்குருவிகளைக் காக்க, தினமும் வீட்டின் முன்பாகவோ, மாடியிலோ, சிறிதளவு தண்ணீரும், உணவும் வைத்தாலே இவற்றின் வாழ்க்கையில் புத்துயிர் பிறக்கும்.

**பெ. திலானுஷா,**
மபோல, வத்தளை.



**வை. சகிலன்,**
தரம் 11பி, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.



**ஆர். பிரியங்கா**
தரம் 08பி ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.

## புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி



இம்முறை நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் கொழும்பு, கொள்ளுப்பிட்டி அல் அமீன் வித்தியாலய மாணவன் **துவான் ரசீட் ஹபீஸ் 152** புள்ளிகளைப்பெற்றுள்ளார்.

இப்பாடசாலையில் சிங்கள மொழிமூலம் பரீட்சைக்குத்தோற்றி கடந்த 30 வருடங்களின் பின் வெற்றுப்புள்ளிகளுக்கு மேல் முதல் முதலாக பெற்று சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை ஏற்படுத்தியுள்ள இவர் துவான் ரசீட் பாத்திமா ரம்ஸியா ஆகியோரின் புதல்வராவார்.

### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற எல்ல இந்தகல த.வி. மாணவர்கள்



புள்ளி 150 சுரேஸ்குமார் நதிஷா | புள்ளி 163 நிரஞ்சன் ஷாகித்யா | புள்ளி 153 சிவனேசன் திவ்யதாரணி | புள்ளி 155 ஸ்ரீதர் ரிமாஷினி | புள்ளி 157 சிவகுமார் சகிலாஷினி



வகுப்பாசிரியர்



அதிபர்

அண்மையில் வெளியான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய பண்டாரவளை கல்வி வலயத்தின் எல்ல கோட்டத்தில் அமைந்துள்ள இந்தகல தமிழ் வித்தியாலயத்தில் 05 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கும் அதிகமான புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். இவர்களில் நிரஞ்சன் ஷாகித்யா 163, சிவகுமார் சகிலாஷினி 157, ஸ்ரீதர் ரிமாஷினி 155, சிவனேசன் திவ்யதாரணி 153, சுரேஸ்குமார் நதிஷா 150 எனப் புள்ளிகளைப் பெற்றுள்ளனர். இவர்களுடன் வகுப்பாசிரியை மற்றும் அதிபர் ஆசைத்தம்பி ஆகியோரை படங்களில் காணலாம்.



**எஸ். அகிலன்,**
தரம் 08, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



# விளையாட்டு

## விளையாட்டு உலகம்:

# சிதிலமடையும் உக்ரேனும் தடைக்குள்ளாகும் ரஷ்யாவும்



“குளிர்கால பராலிம்பிக் விளையாட்டு விழா அண்மையில் சீனாவின் பிஜிங் நகரில் முடிவடைந்தது. அதில் பதக்கப்பட்டியலில் போட்டியை நடாத்திய சீனா முதலிடத்தைப் பெற்றுதுடன், இரண்டாவது இடத்தை யுத்த கெடுபிடிகளுக்கு மத்தியில் இவ்விழாவில் பங்குபற்றிய உக்ரேன் பிடித்தது. இது தனது இறைமையையும், அபிமானத்தையும் உலகுக்கு எடுத்துக்காட்டுவதற்காக அமைந்த ஓர் சந்தர்ப்பமாகும்”






ரஷ்யப் படைகள் உக்ரைனை ஆக்கிரமித்து போர் தொடுத்து வருவதால் ரஷ்ய நாட்டுக்கு அமெரிக்க உட்பட ஐரோப்பிய நாடுகள் பல விதத் தடைகளையும் விதித்துள்ளது. அத்தோடு விளையாட்டு உலகமும் பல தடைகளையும் விதித்துள்ளதால் ரஷ்யா விளையாட்டு உலகிலும் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த மாதம் நடைபெற்ற உலகத் தடகள நடைப்பந்தய சம்பியன்ஷிப் போட்டியிலும் ரஷ்யாவுக்கு உலக தடகள சம்மேளனம் தடை விதித்தது. உலகக் கால்பந்தாட்ட சம்மேளனம், உலக ஒலிம்பிக் கமிட்டி, உலக டென்னிஸ் சம்மேளனம் என அனைத்து விளையாட்டு நிகழ்ச்சிகளிலும் ரஷ்யாவை தடை செய்துள்ளது. ரஷ்ய தேசிய அணியையும், கழக அணிகளையும் மறு அறிவித்தல் வரை பிபா மற்றும் ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கம் போட்டிகளிலிருந்து இடைநிறுத்தியுள்ளது. மேலும் இவ்வருடம் கட்டாரில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடரிலிருந்தும் ரஷ்யாவை வெளியேற்றுவதாக அறிவித்துள்ளது. ரஷ்யாவின் பலம்வாய்ந்த எரிசக்தி நிறுவனமான கெஸ்ப்ரொம் நிறுவனத்துடனான பங்காளித்துவத்தை ஐக்கிய ஐரோப்பிய கால்பந்தாட்ட சங்கம் முடிவுக்குக் கொண்டுவந்துள்ளது. மேலும் தனிப்பட்ட ரீதியில் சில விளையாட்டு வீரர்களும் ரஷ்யாவுக்குக் கடும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளதுடன் உக்ரேனில் பாதிக்கப்படட மக்களுக்குப் பல விளையாட்டு வீரர்களும் உதவி வருகின்றனர்.

முன்னணி டென்னிஸ் வீரர் அண்டி மூர்ரே எதிர்ப்புத் தெரிவித்ததோடு, 2022ம் ஆண்டு தான் விளையாடும் தொடர்களின் மூலம் தனக்குக் கிடைக்கும் பரிசுத்தொகையை உக்ரேன் நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட சுமார் 7.5 மில்லியன் குழந்தைகளுக்கு யுனிசெப் அமைப்புடன் இணைந்து அவசரகால மருத்துவத்திற்கு தேவைப்படும் மருந்து விநியோகம் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் தேவைகளுக்கு உதவும் முகமாக செலவிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உக்ரேன் வீராங்கனை எலினா ஸ்விடோவும் அண்மையில் மெக்ஸிகோவில் நடைபெற்ற மன்மெரே மகளிர் டென்னிஸ் போட்டித் தொடரில் பங்குபற்றியுள்ளார். இத்தொடரில் தனக்குக் கிடைக்கும் பரிசுத்தொகையை உக்ரேன் இராணுவத்துக்கு வழங்குவேன் என்று அவர் கூறியுள்ளார்.

கடந்த ஒரு மாதகாலமாக ரஷ்யாவின கோரமான தாக்குதலால் சிதிலமடைந்துவரும் உக்ரேனில் பல விளையாட்டு வீரர்களும் படையில் சேர்ந்து தனது நாட்டுக்காகப் போராட ஆரம்பித்துள்ளனர். உக்ரேன் இப்போரினால் உருக்குலைந்து வரும் நிலையில் கடந்த மாதம் சீனாவின் நடைபெற்ற குளிர்கால பராலிம்பிக் தொடரில் அந்நாட்டு வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

தமது நாட்டில் ஆக்கிரமிப்பில் ஈடுபட்டுள்ள ரஷ்யப் படைகளின் தாக்குதலில் அல்லோபப்படும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வீர, வீராங்கனைகளாக அவர்கள் சீனாவில் நடைபெறும் குளிர்கால பராலிம்பிக்கில் கலந்து கொண்டனர். தமது நாட்டில் ரஷ்யப்படையினர் நடத்தப்படும் தாக்குதலால் மனக்கிலேஷத்துக்குள்ளான ஒரு மன நிலையில் கூட உக்ரேன் வீரர்கள் இந்த விளையாட்டு விழாவில் பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

“நாம் இங்கு எமது நாட்டுக்காகப் போராடவே வந்துள்ளோம். உக்ரேன் என்ற எங்கள் தாய்நாட்டுக்காக சர்வ தேசத்துடன் எமது இறைமைக்காகப் போராடவே இங்கு வந்துள்ளோம்” என குளிர்கால பராலிம்பிக்கில் முச்சறுக்கல் போட்டியில் பதக்கம் வென்ற இர்யானா புர்ஸி தெரிவித்தார்.

“எனது உடல் இங்கு போட்டிகளில் கலந்து கொண்டாலும் எனது எண்ணம், மனநிலை எல்லாம் உக்ரேனில்தான். எனது எல்லா நினைவுகளும் அந்த யுத்த பூமியில்தான். எனது குழந்தைகள், எனது குடும்பத்தைச் சுற்றியே எனது நினைவுகள் வட்டமிடுகின்றன” என பதக்கம் வென்ற உக்ரேன் வீராங்கனை கொனோவா ஊடகவியலாளரின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது தெரிவித்தார்.

“இவ்விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளும் போட்டியில் எனது முழுக் கவனத்தையும் செலுத்துவது சிரமமான காரியமாக இருந்தது. ஏனெனில் எமது எண்ணங்கள் குழம்பியுள்ளது. இந்த யுத்த சூழ்நிலையில் போட்டிக்காக மனதை ஒரு நிலைக்குக் கொண்டுவருவது கடினமாகதாகும். நான் பங்குபற்றிய கடினமான பராலிம்பிக் இதுவாகும்” என யுக்ரேன் கார்கிவ்வை வசிப்பிடமாகக்கொண்ட லியாஸ்ஹேன்கோ என்ற வீராங்கனை கூறியிருந்தார்.

“எனது ஊரில் தற்போது மீதமுள்ளது யுத்த அழிவுகள் மட்டுமே எனவே இந்த சூழ்நிலையில் எனக்குப் போட்டிகளில் பங்குகொள்ள முடியாத மனநிலையில் நான் உள்ளேன்” என தனது போட்டியிலிருந்து கடைசி நேரத்தில் விலகிய மரதன் வீரர் எனஸ்டேசியா லாலேடினா கூறினார். “எனது தந்தையை ரஷ்யப் படை கைது செய்து சிறையிலடைத்துள்ளனர். எனவே இப்போட்டியில் கலந்து கொள்ளும் சிறந்த மனிநிலையில் நான் இல்லை” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

“அவரது தந்தை ஒரு இராணுவ வீரர் நாட்டைக் பாதுகாப்பதற்காக போராடும் போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் லாலேடினாவை போட்டிகளில் பங்குகொள்ளச் செய்ய முடியாதுள்ளது என உக்ரேன் பராலிம்பிக் குழுவின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வீர, வீராங்கனைகள் மட்டுமல்ல உக்ரேன் விளையாட்டுக் குழுவின் பயிற்றுவிப்பாளர்களும் மிகுந்த மன உளைச்சலுக்குள்ளாகியிருந்தனர். பயிற்சியாளர் ஜெவிஸின் வீடு கார்கிவ் அமைந்துள்ளதால் படைகளின் தாக்குதலுக்குள்ளானதாகவும் அவரது குடும்பத்தவர்களும் ஆபத்தில் சிக்கியுள்ளனர் என்றும் தெரிய வந்ததுடன் அவர்கள் இப்போது இங்கு இருக்கிறார்கள். என்று கூட தெரியாது” என அப்பயிற்சியாளர் தெரிவத்துள்ளார்.

இந்நிலையில் குளிர்கால பராலிம்பிக் முடிவடைந்த நிலையிலும் அவ்வீரர்களில் பலர் தமது நாட்டுக்குள் செல்வதற்கு தயங்குகின்றனர். தமது தாய்நாட்டுக்குள் நுழைந்தால் எமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என அவர்கள் அஞ்சுகின்றனர்.

தமது நாட்டுக்காக பதங்கங்களை வென்ற வீர, வீரங்கனைகளான விடேலி லியுயானெக்கோ, கிரிகோரி வொசின்ஸ்யி வென்னவுன், டிராஸ் ரூட் போன்றோரும் இன்னும் சீன பீஜிங் நகரிலேயே தங்கியுள்ளனர்.

“நான் எவ்வேளையிலும் எனது குடும்பத்தினரையும், எனது நண்பர்களையும் நினைவுபடுத்திக்கொண்டிருக்கிறேன். இங்கு நான் ஹோட்டலில் பாதுகாப்பாக இருந்தாலும், எனது நாட்டுக்குள் எனது குடும்பம், நண்பர்கள் படும் அவஸ்தைகளை நினைக்கும் போது கண்கள் பணிகின்றன. அவர்களை நினைக்கும் போது கவலையாகவுள்ளது” என கதிரையில் இருந்துகொண்டு ஐஸ்ஹொக்கிப் போட்டியில் வென்று பதக்கம் பெற்ற டிராஸ் ரூட் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெற்ற குளிர்கால பராலிம்பிக் விழாவில் பங்குகொள்ள ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்களைத் தடை செய்வதற்கு சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி நடவடிக்கை எடுத்திருந்தது, சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம், பீபா, ஐரோப்பிய கால்பந்து சம்மேளனம் மட்டுமல்லாது, அமெரிக்க உட்பட ஐரோப்பிய ஒன்றியமும் பல பொருளாதாரத் தடை விதித்திருந்தாலும் உக்ரேன் மீதான தாக்குதலை ரஷ்யா இன்னும் முடிவுக்குக் கொண்டுவரவில்லை.

எம்.எஸ்.எம்.ஹில்மி...



# மியாமியில் முர்ரே பங்கேற்பு

ஆண்டி முர்ரே தனது மியாமி பகிரங்க பிரசாரத்தை ஆர்ஜென்டினாவின் ஃபெடரிகோ டெல்போனிஸை நேர் செட்களில் வென்றதன் மூலம் வியாழன் அன்று டேனியல் மெட்வெடேவுடன் ஒரு புதிரான இரண்டாவது சுற்றில் போட்டியைத் தொடங்கினார்.

மூன்று முறை கிராண்ட்ஸ்லம் சம்பியனான முர்ரே, விம்பிள்டன் மற்றும் அமெரிக்க பகிரங்கத்தை

வென்ற பெருமைக்குரிய உச்சங்களுக்கு ஒருபோதும் திரும்ப முடியாது, ஆனால் அவரது உலோக இடுப்பு மற்றும் கிரானைட் உறுதியுடன், 34 வயதான அவர் இன்னும் போட்டியிட விரும்புகிறார்.

7-6, 7-4, 6-1 என்ற கணக்கில் அவர் வெற்றியை எளிதாக்கும் போது, தனது உச்சத்தில் இருந்ததைப் போலவே உறுமினார் மற்றும் முஷ்டியால் உந்தினார்.

அடுத்ததாக உலகின் இரண்டாம் நிலை வீரரான மெட்வெடேவ், இரண்டாவது இடுப்பு அறுவை சிகிச்சைக்குப் பிறகு சுற்றுப்பயணத்திற்குத் திரும்பியதில் இருந்து இங்கிலாந்து வீரரின் சரம் வெற்றிகளின் திறனை மீண்டும் சோதிப்பார்.

அவர் தனது கடைசி ஐந்து போட்டிகளில் முதல் சுற்று வெற்றிகளை ஆதரிக்கத் தவறிவிட்டார், மேலும் மெட்வெடேவ் உடனான அவரது மோதலே ஐந்து ஆண்டுகளில் முதல் இரண்டு வீரர்களுக்கு எதிராக அவர் வந்த முதல் முறையாகும்.

இருப்பினும், முர்ரே, மிகப்பெரிய போட்டிகளில் இன்னும் கலவையில் இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்.

'இது எனக்கு ஒரு பெரிய விஷயம்,' என்று அவர் நேர்காணலின் போது கூறினார்.

'முடிந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முதல் செட் மிகவும் இறுக்கமாக இருந்தது, ஆனால் இறுதியில் நான் சிறப்பாக செயல்பட்டேன்.'

'இந்த மைதானத்தில் நான் இங்கு விளையாடுவது இதுவே முதல் முறை. எனக்கு மியாமியில் ஒரு இடம் இருந்தது, ஆனால் நான் வேறு ஒன்றை வாங்க வேண்டியிருக்கும்.'

ஒரு புத்திசாலித்தனமான ஃபோர்ஹேண்ட் வெற்றியாளர் ஹார்ட் ராக் ஸ்டேடியத்தில் இரண்டு முறை மியாமி பகிரங்க சம்பியனான முர்ரேவுடன் போட்டியை ஒன்றரை மணி நேரத்திற்குள் நிறைவுசெய்தார், அதே நேரத்தில் அவரது வழக்கமான தாக்குதல் ஷொட்களை கட்டவிழ்த்துவிட்டார்.

மெட்வெடேவ் மிகவும் கடுமையான சோதனையை வழங்குவார், ஆனால் இந்த வார இறுதியில் இந்த ஜோடி அருகில் உள்ள போகா ரேடனில் ஒன்றாக பயிற்சி பெற்ற பிறகு, முன்னாள் பயிற்சியாளர் இவான் லெண்டலை தனது மூலையில் வைத்திருப்பார் என்று நம்பும் முர்ரே மேலும் கூறியதாவது: 'நான் அவரை அழைத்துச் செல்ல ஆவலுடன் காத்திருக்கிறேன். அவர் ஒரு புத்திசாலி. புத்திசாலித்தனமான வீரர். ஆனால் நான் எப்படி வருகிறேன் என்று பார்ப்போம்' என்றார்.

## SLT-MOBITEL வலுவூட்டலில்

# 37ஆவது தேசிய படகோட்ட சம்பியன்ஷிப் போட்டிகள் நிறைவு

The SLT-MOBITEL வலுவூட்டலில் இடம் பெற்ற 37ஆவது கனிஷ்ட மற்றும் இடைத்தர தேசிய படகோட்ட சம்பியன்ஷிப் போட்டிக் 2022 மார்ச் 12ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவடைந்தது. பல கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகள் இந்தப் போட்டிகளில் பல்வேறு பிரிவுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன.

இலங்கை ஆரம்பநிலை படகோட்டல் சம்மேளனத்தினால் (ARASL) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த தேசிய போட்டிகள் 2022 மார்ச் 10 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை, ருவன்புர, தியவன்னா ரொவிங் சென்ரரில் இடம்பெற்றது. இதில் 12 பாடசாலைகள் மற்றும் கழகங்கள் கனிஷ்ட பிரிவில் பங்கேற்றிருந்ததுடன், இடைத்தர பிரிவில் ஏழு நிறுவனங்களும் கழகங்களும் பங்கேற்றிருந்தன.

இலங்கை ஆரம்பநிலை படகோட்டல் சம்மேளனத்தின் (ARASL) முன்னாள் தலைவரும், SLT குழுமத்தின் தற்போதைய தவிசாளருமான ரொஹான் பெர்னான்டோ இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், இலங்கை ஆரம்பநிலை படகோட்டல் சம்மேளனத்தின் (ARASL) தற்போதைய தலைவர் திமுத் குணவர்தன மற்றும் இலங்கை படகோட்ட சம்மேளனத்தின் அதிகாரிகள் மற்றும் SLTMOBITEL அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

போட்டிகளின் சம்பியன்களாக இராணுவ பெண்கள் பிரிவு வெற்றியீட்டியிருந்ததுடன், ஆண்கள் பாடசாலை பிரிவில் ஆனந்தா கல்லூரியும், பெண்கள் பிரிவில் மகளிர் கல்லூரியும் வெற்றியீட்டியிருந்தன. இந்த நிகழ்வில் கடுமையான போட்டியை அவதானிக்க முடிந்ததுடன், ரோயல் கல்லூரி, ஏசியன் இன்டர்நஷனல் ஸ்கூல் ( மற்றும் கேட்வே கல்லூரி ஆகியன தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன. ஆண்கள் பிரிவில் விமானப் படை, கடற்படை மற்றும் கொழும்பு ரொவிங் கழகம் ஆகியன சிறப்பாக திறமைகளை வெளிப்படுத்தி முதல் மூன்று ஸ்தானங்களைப் பெற்றுக் கொண்டன.



போட்டியின் முதல் நாளன்று 45க்கும் அதிகமான போட்டிகள் இடம்பெற்றதுடன், இரண்டாம் நாளன்று 31 இறுதிப் போட்டிகள் இடம்பெற்றன. AARSL இனால் இந்தப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் நோக்கம், புதிய திறமைகளை இனங்கண்டு, தற்போதைய மெய்வல்லுநர்களுக்கு, எதிர்வரும் சர்வதேச போட்டிகளுக்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்ள வாய்ப்பை வழங்குவதாக அமைந்திருந்தது.

ஒவ்வொரு ஆண்டும் படகோட்டலில் இளைஞர்கள் மத்தியில் ஆர்வம் அதிகரித்து வரும் நிலையில், இவ்வாறான போட்டிகளூடன் கைகோர்ப்பதனூடாக தனது சூழல் சமூக ஆளுகையை மேலும் விஸ்தரிக்கக்கூடியதாக இருக்கும் என்பதில் SLTMOBITEL உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், திறமை படைத்த இளம் மெய்வல்லுநர்களை ஊக்குவித்து, தமது விளையாட்டுக் கனவை தொடர்ந்து, இலங்கையின் படகோட்டல் துறையை, சர்வதேச விளையாட்டுத் தளத்துக்கு கொண்டு செல்ல முடியும் எனவும் கருதுகின்றது.

# உலக ஸ்னூக்கர் போட்டியில் இலங்கையின் மொஹமட் இர்ஷாத்



தேசிய ஸ்னூக்கர் சம்பியனான மொஹமட் தாஹா இர்ஷாத், அமெரிக்காவில் நடைபெறவுள்ள 2022ஆம் ஆண்டுக்கான உலக ஸ்னூக்கர் போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பினை இலங்கையில் இருந்து பெற்றிருக்கின்றார்.

இந்த ஆண்டின் ஜூலை மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த உலக ஸ்னூக்கர் விளையாட்டுப் போட்டிகளில் ஆடும் வாய்ப்பினை இர்ஷாத் தாஹா கட்டாரில் ஒழுங்கு செய்யப்பட்ட IBSF உலக ஸ்னூக்கர் சம்பியன்ஷிப் தொடரில் வெளிப்படுத்திய சிறந்த ஆட்டத்தின் மூலம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவுகளில் இலங்கையின் ஸ்னூக்கர் மற்றும் பில்லியார்ட் (Billiard) சம்பியனாக காணப்படுகின்ற இர்ஷாத், கட்டாரில் நடைபெற்றிருந்த 21 வயதின் கீழ்ப்பட்ட போட்டியாளர்களுக்கான உலக ஸ்னூக்கர் சம்பியன்ஷிப் தொடரிலும் அடுத்தடுத்த வெற்றிகளுடன் இலங்கையின் நாமத்தினை உலகறியச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

உலக பிலியார்ட் மற்றும் ஸ்னூக்கர் சம்மேளத்தினால் (IBSF) ஒழுங்கு செய்யப்பட்ட 21 வயதின் கீழ்ப்பட்ட போட்டியாளர்களுக்கான உலக ஸ்னூக்கர் சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை, தாய்லாந்து, ஈரான், இந்தியா, பாகிஸ்தான், ரஷ்யா, எகிப்து, சவூதி அரேபியா, ஆஸ்திரியா, சிரியா, ஜேர்மனி மற்றும் கட்டார் போன்ற முன்னணி நாடுகளின் 18 போட்டியாளர்கள் பங்கெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி

## வாழ்வாதாரமா சேதாரமா 217



தமிழ்க் கவி பேசுகின்றார்

# என்றைக்குமே திருந்தாத சிறீமான் பொதுஜனம்

'அண்ணை பால் ஒரு பைக்கற் தாங்கோ'

' நாலு யோக்கட் எடுக்க வேணும்'

'அட என்னத்துக்கு ந... குடிக்க மா பக்கட் இல்லையெண்டிட்டு யோகட் போட்டிருக்கிறாங்களே அதையேன் நாங்கள் வாங்க வேணும். அதை உரியகாலத்தில வித்திருக்கலாந்தானே? கொஞ்சநாளா பால்மாவுக்கு நாங்க என்ன அலைச்சல் அலைஞ்சநாங்கள். உதெல்லாம் எந்த சட்டத்தில இருக்கு அது வாங்கினாத்தான் இதெண்டு'

'ஹ..ஹவேண்டாமெண்டா விலத்துங்க இடத்தை காலி பண்ணுங்க மற்றாளுக்கு பில்போட விடுங்க' கடைக்காரர்களுக்கு இப்ப குரு சந்திர யோகம்தான். வாங்கி இருப்பில் போடும் எல்லாப் பொருட்களும் அவர்களுக்கு லட்சக்கணக்கிலல்ல கோடிக்கணக்கில் லாபத்தை வழங்கிக் கொண்டிருக்கின்றன. விலையேறிய பொருட்களை இருப்பெடுத்து விலை மாற்றத்தை செய்வதில்லைத்தானே எந்தப் பொருளும் இறங்கவில்லை. ஏறிக் கொண்டிருக்கிறது. எனவே கடைக்காரரும் வாடிக்கையாளரிடம் கொஞ்சம் எகிறித்தான் பேசுகிறார்.

இப்ப கொஞ்சக்காலமா கடைத் தெருவில இதுபோல பிரச்சனையள் கனக்கத்தான் வருது. பொருட்களுக்கு தட்டுப்பாடு வரப்போகுதென்றால் பணவசதியுள்ளவர்கள் தமது குளிர்பதனப் பெட்டிகளையும் பெட்டககங்களையும் நிரப்பி வைத்துக் கொள்கிறார்கள். சாதாரண ஏழைகளால் அது முடியாது. எனவே அவர்கள் அதிக விலைக்கு பொருட்களை வாங்க வேண்டும் அல்லது பாவனையை நிறுத்த வேண்டும்.

இப்போது நாட்கூலி ஆண்களுக்கு இரண்டாயிரம் ரூபாவாக இருக்கிறது. அதில் அவன் தினசரி ஒரு கிலோ அரிசியை நூற்றி எழுபது ரூபாவுக்கும் மீன் அறுநூறு ரூபாவுக்கும் வாங்கிவிட்டு அதற்கான கறிச்சரக்குப் பொருட்களை எப்படி வாங்குவான் அது மிகப் பெரிய செலவு செத்தல்' மிளகாய் ஆயிரம் ரூபா. மல்லி அறுநூற்று அறுபது ரூபா ஏனைய பொருட்களையும் பார்த்தால்' அவன் கடையில் விற்கும் கலப்பட மசாலாவை அதிக விலைக்கு வாங்கவேண்டியிருப்பது தவிர்க்க முடியாது. சாதாரணமாக கடின வேலை செய்பவன் கொஞ்சம் மதுபானம் அருந்துவதும் தவிர்க்க முடியாது. அதுவும் இப்போது ஆனைவிலை.குதிரைவிலை எனவே மலிவாக கசிப்பை உற்பத்தி செய்து தன்னை நாசமாக்கிக் கொள்கிறான்.

எப்படிப்பார்த்தாலும் உள்ளூர் உற்பத்திகளின் விலை இன்னும் மந்தமாகவே உள்ளது. விவசாயம் கால்நடை வளர்ப்பு என்பன எரிபொருள் தட்டுப்பாட்டாலும் விலையேற்றத்தாலும் கைவிடவேண்டிய நிலைக்கு பலர் வந்திருக்கிறார்கள்.

பால்மாவுக்கு எண்ணூறு ரூபா அதாவது சரிபாதி விலை ஏறினாலும் பால் வெறும் முப்பது ரூபாவே உயர்ந்துள்ளது. முட்டை கோழி என்பன எந்த முன்னேற்றமும் இல்லை தேங்காயெண்ணெய் ஆயிரம் ரூபா. ஆனால் தேங்காய் அந்தளவுக்கு ஏறவில்லை. பெரிய புதினமாகத்தான் இருக்கிறது. கேட்டால் போக்குவரத்தின் செலவே விலைகளை தீர்மானிக்கிறது என்கிறார்கள்.

நல்ல வேளையாக கிளிநொச்சியில் இன்னும் சினிமாக் கொட்டகை அமைக்க யாரும் முன்வரவில்லை. ஆனால் மூலைக்கு மூலை கோவில்களை வைத்து அந்த கோவில்களை கும்பிட வாருங்கோ, அபிசேகம் பண்ண வாருங்கோ, அருள் பெற வாருங்கோ என்று ஒலிபெருக்கி வைத்து கத்துவது நாற்புறமும் எதிரொலிக்கிறது எல்லாமே விற்பனைதான்.

அரசாங்கம் போருக்குப்பின் செய்த அபிவிருத்தித் திட்டங்களை இப்போது நாம் கவனித்துப் பார்த்தால் அவற்றில் எதுவும் அபிவிருத்தி என்ற சொல்லை தவிர்த்து வியாபாரம் என்ற நிலைக்குள் வந்து நிற்கிறது. அதுவும் தேசிய உற்பத்திகள் தவிர்ந்த அந்நிய முதலாளிகளின் விற்பனைக்கூடமாக நாம் மாறியிருக்கிறோம்.

இருநூறு கோடி டொலர் செலவிட்டு தொடர் வண்டி பாதை அமைத்தார்கள் அதில் பயணம் செய்வது யார். மிக மிக குறைந்த பயணிகளே அதில் பயணிக்கிறார்கள் அரச அதிகாரிகளுக்கான போக்குவரவுக் கடவுச்சீட்டுகளே ஆசனங்களை நிரப்புகின்றன. ரயில்சேவையிலும் கட்டணம் அதன் வேகத்துக்கேற்கப வெவ்வேறு அளவுகளில் உள்ளது. எனவே பல புகையிரத நிலையங்கள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. இருநூறு கோடியில் பாதை அமைத்த நாடு ஆயிரம் கோடிக்கு மேல் உந்துருளிகளையும் வெள்ளை வான்களையும் விற்றுத் தள்ளியிருக்கின்றன. வீடமைப்பு, மின்சாரம் எல்லாமே செலவழித்த பணத்தைவிட பல நூறு மடங்கு பொருட்களை விற்றிருக்கிறார்கள். அவற்றுக்கு இப்போது பெற்றோல் மின்சாரம் எனவும் அன்றாடம் சாதாரணமாக பலகோடி ரூபாக்கள் செலவாகின்றது. ஒரு வீட்டில் சாப்பாட்டைவிட செல்பேசிகளுக்காக மட்டும் தினமும் எத்தனை ரூபா செலவாகிறது. தொலைக்காட்சிக்கு மின்சாரத்துக்கு என கணக்கை சரிவரப் பார்த்தால் நாம் வெல்லவில்லை படுகுழியில் தள்ளப்பட்டிருக்கிறோம் என்பது புரியும்.

எல்லாவற்றையும் விட எங்களை மிகவும் பாதிப்பது இந்த மின் வெட்டுத்தான் அதுவும் தினசரி ஒரு குறிப்பிட்ட நேரம் என்றில்லாமல் தான்தோன்றியாக நிற்பதும் வருவதும் வேலை செய்பவர்களுக்கு பெரிய இடையூறுதான். இத்தனை மணிக்கு நிற்கும் என்றறிந்தால் அத்தியாவசிய வேலைகளை முடித்திருக்கலாம் என நான் கவலைப்பட என் பக்கத்து வீட்டுக்காரியும் அதேதான் எனக்கும் என்றாள். என்ன இது இவளுக்குத்தான் சமைப்பதைத்தவிர வேறு வேலை இல்லையே என நான் வியக்க அவள் ' ஓமக்கா நான் பாக்கிற நாடகம் ஒண்டையும் ஒழுங்காப் பாக்கேல்ல இப்பிடி கரண்ட் நிண்டா தொடர் நாடகம் எப்பிடி பாக்கிறது' என்றாள். ' அழுவாரும் அழுவாரும் தன் கரைச்சல் திருவன் பெண்டிலுக்கு கட்டியழ ஆளில்லயாம்' என்றொரு பழமொழி இருக்கிறதே எனக்கு அதுதான் சட்டென்று நினைவுக்கு வந்தது.

சரி அவரவர் துன்பம் அவரவருக்கு பெரிதுதான். பாலுக்குச் சக்கரை இல்லை என்பாருக்கும் பருக்கையற்ற கூழுக்குப் போட உப்பில்லை என்பாருக்கும் கனகதண்டி மேலுக்கு பஞ்சணை இல்லையென்பாருக்கும் காலுக்கு தோற்செருப்பு இல்லையென்பாருக்கும் விசனம் ஒன்றுதான் என்று படித்திருக்கிறேன்

எது எப்படியோ வாழ்க்கையின் படிக்கற்கள் செப்பமாக இல்லை. மறுபடியும் நாங்கள் எழுபதுகளின் ஆரம்பத்தில் அனுபவித்த துயரம் இப்போதும். அன்றே அதை தொடர்ந்து செய்திருந்தால் இப்போது ஒரு வளமான வாழ்க்கையை நாம் அடைந்திருக்கலாம். இன்றும் நாம் இலக்கை எட்டுவோமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கிறது. சட்டங்கள் திட்டங்கள் எல்லாவற்றையும் போடும் எந்தக் கனவானும் இந்த பாதிப்புகளை அடையப் போவதில்லை. எனக்குத் தெரியும். 'ஊருக்குத்தான் உபதேசம் உனக்கில்லை மகளே'

போர் நடந்த காலத்தில் இருந்த பாரிய பொருளாதாரத் தடைக்குள் எந்தத் தளபதிகளும் மின்சாரம் இல்லாமல் வாழவில்லை. எந்த தளபதிகளின் வீட்டிலும் மின்சாரம் இல்லாமல் இல்லை. குளிர்பதனப் பெட்டி சலவை மிசின் தொலைக்காட்சிப் பெட்டி. என எல்லா வசதிகளுடனும் சொகுசு வாகனப்பவனிகளிலும் அவர்களுக்கு குறைவில்லை. சாதாரண போராளிகளுக்கும் மக்களுக்குமே அவை மறுக்கப்பட்டிருந்தன. இதேபோலத்தான் இன்றும் சகல அரசியல் வாதிகளும் மிக வசதியாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் சாதாரண மக்களின் வாழ்க்கையை அவர்களால் ஒருநாள் கூட வாழ முடியாது.

இன்றைக்கு கடைத்தெருவில் நின்று கலங்கும் மக்களால் அவர்களை மீண்டும் மீண்டும் அந்த வசதிகளை அனுபவிக்கச் செய்ய முடியும். ஆனால் அவர்கள் செய்ய மாட்டார்கள். அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும். சிறீமான் பொதுஜனம் திருந்தியதாக வரலாறில்லை.



# மலையக பாரதி

**"நொய்ந்த வீடு ,நொய்ந்த கதவு, நொய்ந்த கூரை,
நொய்ந்த மரம், நொய்ந்த உடல்,நொய்ந்த உயிர்,
நொய்ந்த உள்ளம் இவற்றைக் காற்றுத் தேவன்
புடைத்து நொறுக்கி விடுவான்".**

இதனை வாசிக்கும்போது ஏதோ ஒரு பழைய லாயக் காம்பெறாவின் பிம்பமும், அங்கு குடியிருக்கும் தொழிலாளர்களின் தரிசனமும் மனக்கண்ணுக்கு வருகிறதல்லவா? நமது மக்களின் வாழ்வியலோடு பொருந்தி நிற்கும் இவ்வரிகள் மஹாகவி பாரதியின் மனவருத்தத்தின் குமுறல்.



பாமர மக்களுக்காக, பாமரர்கள் புரிந்து கொள்வதற்காக, அவர்களின் விமோசனத்திற்கும், விடுதலைக்கும் கவி படைத்த பாரதியின் வரிகள் வஞ்சிக்கப்பட்டோரின் வாழ்க்கையோடு பொருந்தி நிற்பதற்கு சிறந்த உதாரணம்.

பியூஜி தீவு கரும்புத் தோட்டங்களின் நாதியற்ற மாந்தரை நினைத்து கலங்கிய பாரதி இலங்கை தோட்டத்தொழிலாளர்களின் துயர் மிகு வாழ்க்கையைப்பற்றி நினைக்க மறந்துவிட்டாரோ? அவரின் கவிதைகளில் நாம் காணப்படவில்லை என்பதால் அவர் நமக்கு ஏற்புடையோர் அற்றார் ஆகிவிடுவாரோ? நிச்சயமாக இல்லை .

கவிஞர்களை பட்டியலிடுவோரின் கணிப்பீட்டில் பாரதியும் ஒருவர் என நினைப்போருக்கு அவரது சமகால நிலைமைகளுடனான பொருத்தப்பாடு புரியாமல் இருக்கலாம் . பாரதியை மகா கவியாகவும், பிரபஞ்சக் கவிஞரான போற்றியோருக்கு அவரது எல்லை கடந்த வாஞ்சை பிரமிப்பினை ஏற்படுத்தியுள்ளது .

பிராமணரான பாரதி பூணூலைத் தூக்கியெறிந்து, சம போசனத்தில் கலந்துகொண்டது இன்றும் சாதியையும், சாத்திரத்தையும், சாங்கியங்களையு தூக்கியெறியாத மலையகத்தாருக்கு உதாரண ஆசானாகவும், வழிகாட்டியாகவும் கொள்ளத்தக்கவர். சகல குறுகிய பேதங்களையும் சாடி, அதேவேளை வேறுபட்டு நின்றோரையும் மதித்தவர் பாரதி! அவர்மீது திணிக்கப்பட்ட ஆங்கிலக் கல்வியை விமர்சித்தபோதிலும், தமிழ் மொழிப்பற்றினை ஊக்குவித்த அவரது செயற்பாடு நமக்குப் பாடமாகின்றது.

இந்திய தேசிய காங்கிரசின் ஆதரவாளரான பாரதி அவ்வமைப்பிலிருந்த கலகக்காரர் குழுவினைச் சேர்ந்தவர்.1909 சூரத் மாநாட்டில் தளபாடங்களை உடைத்து நொறுக்கி கலகம் செய்ததனை உதாரணமாகக் கூறுவார். இயல்பிலேயே அவர் கோபக்காரராகவும், கலகக்காரராகவும், புரட்சிக்காரராகவும் இருந்துள்ளார். நிலைகெட்ட மாந்தரைக் கண்டு நெஞ்சு பொறுக்காத பாரதி அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கான மார்க்கத்தினைக் காட்டுவதற்காக ,

"ஈட்டியால் சிற்பங்களை மீட்டிட எழுமின்
தீட்டிய வேல்களை நேர் இருந்து எறிமின்" என்று கூறுகின்றார்.

இவ்வாறான கந்தக வரிகளுக்குள் ஒளிந்திருக்கும் பாரதியை நடப்புலகத்திற்கு காட்டவேண்டியது நமது கடமை. பாரதியின் சரியான பிம்பத்தை நாம் தரிசித்து பிறரும் தரிசிக்க வழி காட்டவேண்டும். ஆயிரத்து தொளாயிராது அறுபத்தி நாலாம் ஆண்டில் பாரதியின் பேத்தியும், அவரது கணவரும் ஹட்டன் இந்து மகா சபைக்கு சொற்பொழிவாற்ற வந்திருந்தபோது கட்டுரையாளரால் 'உண்மையான பாரதியைக் காட்டுவீர்களா? என்ற தலைப்பிலான துண்டு பிரசுரமொன்று வெளியிடப்பட்டது. பிரபல முற்போக்கு இலக்கியவாதியும், ஊடகவியலாளருமான இளங்கீரனோடு கலந்துரையாடி தயாரிக்கப்பட்ட அத் துண்டுப் பிரசுரத்தில் பாரதியின் பிரளய வெடிப்புக்குரல் விரிவாக விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.

சமூக இயக்கவியலுக்கான பாரதியின் பங்களிப்பினை இலங்கைத் தமிழர்கள் அறிந்தும், உணந்துமுள்ளனர். தமிழ் பேராசிரியகராகவும், ஆய்வாளருமான விபுலானந்தர் தமிழ் நாட்டில் பாரதியின் சமூகப்பெருமான கவிதை வீச்சியினை விளக்கியுள்ளதோடு, இலங்கையின் பல பகுதிகளிலும் பாரதியைப்பற்றி பரப்புரை செய்துள்ளார்.

பாரதியை சரியாக இனங்காட்டியவர்கள் முற்போக்கு எழுத்தாளர்களே ஆவர். தமிழகத்தில் சிதம்பர ரகுநாதனும் , ஜீவானந்தமும் இப்பணியினை கிராமமாக மேற்கொண்டனர். இதே போன்று இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதியின் கவிதைகளின் முக்கியத்துவத்தினை எடுத்தியம்பும் நற்பணியைச் செய்தது. 1956 இறுதிக்கட்டத்தில் நாட்டின் பல பகுதிகளில் பாரதி விழாக்களை நடத்தியது.

நடேச ஐயரால் மலையகத்தில் மக்கள் மயப்படுத்தப்பட்ட பாரதி ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பதுகளில் மீண்டும் மக்கள் மயப்படுத்தப்படுகின்றார். அன்றைய கட்டத்தில் பகுத்தறிவு பரப்புரைத் தளமாக செயற்பட்ட ஊவா மாகாண இளைஞர்கள் இப்பணியினை முன்னெடுத்தனர்.

தோட்டச் சிறார்களின் கல்விக் கண்களைத் திறக்கச் செய்வதற்காக 'பாரதி பாடசாலை' என்ற பதாதையோடு பாடசாலை ஒன்று ஆயிரத்து தொளாயிராது ஐம்பத்தி ஏழில் திறக்கப்பட்டது. அண்மையில் மறைந்த இராமசாமி இதற்கு முதற்சுழி போட்டவர். அவரது பெயரே பாரதி இராமசாமி என பிரபல்யம் பெற்றதிலிருந்து இதன் தாற்பரியத்தினைப் புரிந்துகொள்ளலாம். இவரோடு இணைந்து செயற்பட்ட தமிழோவியன் பெரி. கந்தசாமி, சத்குருநாதன் ஆகியோர் தோட்டங்களில் பாரதி மன்றங்களை அமைத்தனூடாக பாரதியை ஜனரஞ்சகராக மாற்றினார். . ஊவாவில் உற்றெடுத்த இப்பங்கு மத்திய, சப்ரகமுவ மாகாண தோட்டங்களிலுக்கு விரிந்தது.

தோட்டங்களில் அமைக்கப்பட்ட பாரதி மன்றங்கள் பாரதியின் சீர்திருத்த, பகுத்தறிவு, சமதர்ம கருத்துக்களை தொழிலாளரிடையே பரப்பின. இத்தகைய செயற்பாடுகளை இனவாத நோக்கோடு பார்க்கும் விஷமத்தன பரப்புரை ஒன்றும் எழுப்பப்பட்டது. இராகலையில் ஆயிரத்து தொளாயிராது அறுபத்து மூனில் நடத்தப்பட இருந்த பாரதி விழா காவல் துறையினரால் தடைசெய்யப்பட்டது இதற்கோர் உதாரணம். தமிழ் நாட்டில் இயங்கிய நாம் தமிழர் இயக்கம் இங்கு விஸ்தரிக்கப்படுகின்றது என்று காரணம் கூறப்பட்டது. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் மட்டுமல்ல குடியேற்ற நாடுகளில் ஒன்றான இலங்கையின் ஆளும் வாக்கத்தினரும் பாரதியின் நாமம் கேட்டு பயப் பீதி அடைந்ததனை இது பறைசாற்றுகின்றது.

பாரதியின் கவிதைகள் கலங்கரை விளக்காக கரை கடந்து ஒளி வீசியது. இதனூடாக இலங்கைக் கவிதை இலக்கியம் இருள் நீக்கும் ஒளிப் பிழம்பாய் பீறிட்டது. குறிப்பாக பெருந்தோட்டஞ்சார் கவிதை இலக்கியம் இவ்வொளி வீச்சால் பிரகாசிக்கத்தொடங்கியது.

இறுதி ஆய்வாக, பாரதியின் ஆவேசக் கவி முழக்கம் மலையாகப் பாட்டாளிகளின் மீட்சி,விழிப்புணர்வு,குறுகிய நோக்கு அறுத்தல் போன்ற வழிகாட்டல் மூலம் மலையக கவிதை இலக்கியத்தின் இலக்கினையும்,இயக்கத்தினையும் காட்டும் ஒளியாக உள்ளது எனலாம்.

பீ. மரியதாஸ்...✍

# நீர் வளங்ளைப் பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பு

மார்ச் 22ஆம் திகதி அனுஷ்டிக்கப்படும் உலக நீர் தினத்தை முன்னிட்டு, சமூகத்தாருக்கு தூய நீரையும் கழிவகற்றும் வசதிகளையும் வழங்கி அதனூடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயலாற்றுவதுடன், சர்வதேச காலநிலை மாற்றத்தின் சிக்கல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நீரைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கங்களை வழங்குவதன் முக்கியத்துவத்தையும் Brandix அடையாளம் கண்டுள்ளது.

சுமார் ஒன்றரை தசாப்த காலத்துக்கு முன்னதாக, Brandix தனது ஊழியர்களுக்கும் அவர்களின்

ஊழியர்களுக்கு அப்பால் தமது பங்களிப்புகளை முன்னெடுக்கும் வகையில் Brandix இனால் 'Model Village' எனும் நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டிருந்ததுடன், அதனூடாக Brandix தொழிற்சாலைகளை அண்மித்து வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் நீருடன் தொடர்புடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வந்திருந்தது. பாடசாலைகள், வைத்தியசாலைகள் மற்றும் விற்பனையகங்கள் போன்ற சமூகத்தின் நலனுக்கு மிகவும் முக்கியமான அமைப்புகளுக்கும் தனிநபர்களுக்கும் குழுமம் ஆதரவளிக்கின்றது. இன்று, Model Village நிகழ்ச்சியினூடாக சுமார் கால் மில்லியனுக்கும் அதிகமானவர்கள் பயன் பெறுகின்றனர்.



எமது Care for Our Own மற்றும் Model Village நிகழ்ச்சிகளுக்கு அனுகூலம் பெறுவோரின் வரவேற்பு கிடைத்திருந்தது. குறிப்பாக தொற்றுப் பரவலுடனான சூழலில், தூய்மை என்பது தொடர்பில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்ததுடன், தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றியிருந்தது.

இந்த ஆண்டு உலக நீர் தினத்தை கொண்டாடும் வகையில், Brandix இனால் மேலும் 87 பூர்த்தி செய்யப்பட்ட 'Care for Our Own' நீர்த் திட்டங்கள், ஊழியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்கு கையளிக்கப்பட்டிருந்தன. தேசிய சமூக நீர் விநியோகத் திணைக்களத்துடன் குழுமம் கைகோர்த்திருந்ததுடன், அதனூடாக Model Village பாடசாலைகளில் சுவர் ஓவியத் திட்டத்தையும் ஆரம்பித்திருந்தது.

பி. வீரசிங்கம்...✍

# நவீன வசதிகள் கொண்ட புதிய தொகுதியை இணைத்துள்ள ICBT கம்பஸ்



முன்னணி த னியார்துறை உயர்கல்வி சேவை வழங்குநரான ICBT கம்பஸ் கொழு ம்பு 4 பகுதியிலுள்ள தனது பிரதான கம்பஸ் வளாகத்தில் நவீன வசதிகள் படைத்த புதிய தொகுதியை திறந்துள்ளது.

கடந்த மார்ச் 21 ஆம்திகதி இந்த புதிய தொகுதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ICBT கம்பஸ் முகாமைத்துவ அங்கத்தவர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் இதர விருந்தினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இல. 36, கிரெஸ்டர் பிளேஸ், கொழும்பு 4 எனும் முகவரியில் ICBT கொழும்பு கம்பஸ் வளாகத்தில் இந்த புதியதொகுதி அமைந்துள்ளதுடன், 14 மாடிகளில் 80,000 சதுரஅடி பரப்பை சர்வதேச தரங்களுக்கமைய நிறுவியுள்ளது.

புதிய தொகுதியில் 350 இருக்கைகளுடனான அடுக்கு இருக்கை அரங்கு (amphitheater), சிவில் பொறியியல் ஆய்வு கூடங்கள், எந்திரவியல் பொறியியல் ஆய்வுகூடங்கள், உயிரியல் மருத்துவ பொறியியல் ஆய்வுகூடங்கள், உயிரியல் விஞ்ஞான ஆய்வுகூடங்கள், வாகன ஆய்வுகூடங்கள் மற்றும் மெகாட்ரொனிக்ஸ் (Mechatronics) ஆய்வுகூடங்கள் போன்றன அடங்கியுள்ளன. மேலும், புதிய தொகுதியில் மாணவர்களுக்கு தனித்தனியாகவும் குழுக்களாகவும் பயிலக்கூடிய வசதிகளை வடிவமைக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதிலும் 9 கிளைகளைக் கொண்டுள்ள ICBT கம்பஸ், டிப்ளோமா, உயர் டிப்ளோமா, இளமானி மற்றும் மாஸ்டர்ஸ் நிலை தகைமைகளை வணிக முகாமைத்துவம், தகவல் தொழில்நுட்பம், மொழிகள், விஞ்ஞானங்கள், வலையமைப்பு மற்றும் சைபர் பாதுகாப்பு, உளவியல், டேட்டா விஞ்ஞானம், தாதியியல் மற்றும் பொறியியல் போன்ற பிரிவுகளில் வழங்குகின்றது. இந்தக் கல்வியகத்தினால் உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகைமைகள் ஐக்கிய இராஜ்ஜியத்தின் புகழ்பெற்ற Cardiff Metropolitan University, Liverpool John Moor University, Birmingham City University மற்றும் University of Sunderland மற்றும் அவுஸ்திரேலியாவின் RMIT ஆகியவற்றுடன் இணைந்து வழங்குகின்றது.

# CMA Excellence ஒருங்கிணைந்த அறிக்கையிடல் விருதுகள் 2021 இல் ஆதிக்கம் செலுத்தும் DIMO

அண்மையில் இடம்பெற்ற 'CMA Excellence in Integrated Reporting Awards 2021' விருது விழாவில் பிளாட்டினம் விருதை DIMO வென்றுள்ளது. இந்நிகழ்வில் மொத்தமாக 4 விருதுகளை DIMO பெற்றுக்கொண்டது. ஏழு ஆண்டுகளாக ஒருங்கிணைந்த அறிக்கையிடலில் தொடர்ந்து சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக இவ்வாண்டு பிளாட்டினம் விருது அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த வகையில் இவ்விருதினைப் பெறும் இலங்கையின் முதலாவது நிறுவனமாக DIMO தனது பெயரை நிலைநாட்டியுள்ளது.

'Best Integrated Report Diversified HoldingsSector' (சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கை பன்முகப்படுத்தப்பட்ட துறை) இற்கான தங்க விருதையும் DIMO வெற்றி கொண்டது. அதன் வெற்றிப் பயணத்தில், 'Best Concise Integrated Report' (சிறந்த சுருக்கமான ஒருங்கிணைந்த அறிக்கை) எனும் விருதையும் DIMO வென்றதுடன், இலங்கையின் 'Five Excellent Integrated Reports' (ஐந்து சிறந்த ஒருங்கிணைந்த அறிக்கைகள்) மத்தியில் அங்கீகராத்தை பெற்றுக் கொண்டது. அத்துடன், DIMO பணிப்பாளர், பிரதான நிதி அதிகாரியும் நிறுவன செயலாளருமான சுரேஷ் குணரத்ன, CMA CFO Excellence Award விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 4.6 பில்லியனை பதிவு செய்துள்ள செலான்



செலான் வங்கி டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டில் வரிக்குப் பின்னரான இலாபமாக (PAT) ரூபா 4.6 பில்லியனை பதிவு செய்துள்ளது, 2020 இல் 4.64% ஆக பதிவு செய்யப்பட்ட வங்கியின் தேறிய வட்டி வருமானம் (NII) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவுக்கு 20.98% வளா்ச்சியடைந்ததன் விளைவாகவே வா ிக்குப் பின்னரான இலாபம் உயர்வடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டு நிலவிய மிகவும் சவால்மிக்கதான செயற்பாட்டுச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் வா ிக்கு முன்னரான இலாபம் (PBT) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 46.62% என்ற ஆரோக்கியமானதொரு அதிகா ிப்புடன் ரூபா 6.0 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இதன் பெறுமதி 2020 இல் ரூபா 4.1 பில்லியனாக காணப்பட்டது. அதேபோன்று வங்கியின் வரிக்குப் பின்னரான இலாபமும் (PAT) கடந்த நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 3.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 52.11% அதிகரிப்புடன் ரூபா 4.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப்பகுதியில் வங்கியின் ஒட்டுமொத்த வட்டி வருமானம் ரூபா 4.3 பில்லியனால் குறைவடைந்து 2021 இல் ரூபா 46.8 பில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், இந்த நிதியாண்டுக்கான வட்டிச் செலவுகள் அதைவிட அதிகமான சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதாவது, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வட்டிச் செலவுகள் 26.66% வீழ்ச்சியடைந்து, ரூபா 23.2 பில்லியனாக பதிவு செய்யப்பட்டதுடன், 2020 நிதியாண்டில் ரூபா 31.6 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

அதன் பெறுபேறாக, 2020 இல் 4.64% வளா்ச்சியை பதிவு செய்திருந்த வங்கியின் தேறிய வட்டி வருமானம் (NII) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலப் பகுதியில் குறிப்பிடத்தக்களவுக்கு 20.98% வளர்ச்சியடைந்தது.

# நவலோக்க கெயார் மூலம் சொகுசு சுகாதார நிலையம்



இலங்கையின் நம்பகமான தனியார் சுகாதார சேவை வழங்குனரான நவலோக்க கெயார், நாடு முழுவதும் உள்ள நோயாளிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் கூட்டு முயற்சியாக அதிநவீன சொகுசு சுகாதார மத்திய நிலையத்தை ஆரம்பித்துள்ளது. கொழும்பு 07இல் அமைந்துள்ள இந்த வசதி, விவேகமான வாடிக்கையாளர்களுக்காக வழங்கப்படுவதுடன், ஆடம்பர மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சுகாதார சேவைகளை வழங்கும் அதேவேளையில் சொகுசு அமைப்பின் வசதி மற்றும் தனியுரிமையை உறுதிசெய்கிறது.

"விவேகமாக வளர்ந்துவரும் இலங்கை வாடிக்கையாளர்களின் சுகாதாரத் தேவைகளை சிறப்பாகப் பூர்த்திசெய்வதற்காக நவலோக்க கெயார் பிரீமியர்சென்டரை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தனியார் சுகாதாரத்துறையில் ஒரு முன்னோடியாக, நவலோகா எப்போதும் இலங்கையர்களுக்கு உலகெங்கிலும் உள்ள ஆரோக்கியத்திற்கான அனைத்து அணுகலையும் வழங்க விரும்புகிறது. உற்சாகமான நோயாளர் பராமரிப்புடன் இணைந்து சிறந்த மருத்துவத்திறன்களால் இயக்கப்படும் முதல்வகுப்பு ஒருங்கிணைந்த சுகாதார அமைப்பின் மூலம் எங்கள் நோயாளிகளுக்கு ஆரோக்கியமாக இருக்கத் தேவையான கவனிப்பை வழங்குவதற்கு எங்கள் மத்திய நிலையம் எப்போதும் முன்னுரிமை அளித்து வருகிறது. எதிர்வரும் மாதங்களில், சர்வதேச சுகாதாரப்பாதுகாப்புத் தீர்வுகளுக்காக பிரீமியர் சென்டர் வழங்கும் சேவைகளை மேலும் விரிவுபடுத்த நாங்கள் எதிர்பார்க்கின்றோம்." என நவலோக்க கெயாரின் உபதலைவர் ஹர்ஷித்தர்மதாச தெரிவித்தார்.

நவலோக்க கெயாரின் பிரீமியர்சென்டர் அங்கீகாரம் பெற்ற ஆலோசகர்கள் மற்றும் உயர் பயிற்சிபெற்ற அனுபவமிக்க தாதி ஊழியர்களின் உதவியுடன் பரவலான நோயறிதல் மற்றும் ஆரோக்கிய தீர்வுகளை வழங்க தயாராக உள்ளது.

# IHS நிறுவனத்தின் (PCA) தனிப்பட்ட பராமரிப்பு உதவியாளர் பாடநெறியின் முதலாம் கட்டம் ஹம்பாந்தோட்டையில் ஆரம்பம்



சுகாதார சேவைகள் கற்கைத் துறையில் முதன்மையான நிறுவனமாக விளங்கும் IIHS (International Institute of Health Sciences), சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு இலட்சம் Personal Care Assistant (PCA) தொழில் வல்லுனர்களை உருவாக்கும் நோக்குடன் அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பித்த புலமைப்பரிசில் திட்டத்தின் முதலாம் கட்டம், ஹம்பாந்தோட்டை பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் பூரண பங்களிப்புடன் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சங்கத்தின் தலைவி எம். பியசீலி, முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.பீ. சியானி மங்களிக்கா, சிறப்பு கருத்திட்ட முகாமையாளர் ரீ.டபிளியு. பீ. மனோஜா ஆகியோரின் ஒத்துழைப்புடன் மாவட்டத்தின் இளைஞர்,யுவதிகளின் பங்கேற்புடன் செயற்படுத்தப்படும் இத் திட்டத்தை அனுராதபுரம் மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் செயற்படுத்துவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2 ஆண்டுகள் தொழில்புரிந்த பின்னர் ஐரோப்பிய நாடுகளில் அதிக ஊதியத்துக்கு தொழில்புரியும் அரியவாய்ப்பு கிடைக்கும். மாணவர்களிடமிருந்து பாடநெறி கட்டணமெதுவும் அறவிடாது 'Study Now – Pay Later' முறையின் கீழ் இந்த பாடநெறிகள் நடாத்தப்படுவதுடன் தொழில் வாய்ப்பு பெற்றதைத் தொடர்ந்து தவணை முறையில் பாடநெறி கட்டணத்தை செலுத்த முடியும்.

முறையான பயிற்சி மற்றும் அனுபவத்தை பெற்ற பின்னர் ஐரோப்பிய நாடுகளில் அதிக ஊதியத்துடன் கூடிய இத்தொழிலுக்கு இணைவதன் மூலம் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பட்ட நிலைக்கு கொண்டுசெல்ல முடியும் என IIHS நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கித்சிறி எதிரிசிங்க தெரிவித்தார்.




சிலோன் ஹார்ட்வெயார் வணிகர்கள் சங்கத்தின் (THE CEYLON HARDWARE MERCHANTS ASSOCIATION) ஆண்டு பொதுக் கூட்டம் STS. அருளானந்தன் தலைமையில் கொழும்பு ஹோட்டல் ரமடாவில் அண்மையில் நடைபெற்றது. கொரோனா காரணமாக 2019–2020 இல் பிற்போடப்பட்ட கூட்டம் நடப்பாண்டு நடைபெற்றது. சங்கத்தின் தலைவராக மீண்டும் அருளானந்தன் தெரிவு செய்யப்பட்டார். படத்தில் தற்காலிக தலைவர் எஸ். இராஜேந்திரன் செட்டியார் தலைவருக்கான பதக்கத்தை சம்பிரதாய பூர்வமாக அணிவிப்பதையும், தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் தலைவர் உரையாற்றுவதையும் உதவிச் செயலாளர் ஏ. சிற்றம்பலம், பொதுச்செயலாளர் எச். எம். ஜெயவீர, உதவித் தலைவர் தியாகலிங்கம், பொருளாளர் சஜீவன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட உறுப்பினர்களையும் காணலாம்.

(படப்பிடிப்பு : வத்தளை விசேட நிருபர்)

# பெருந்தோட்ட நிறுவன அதிகாரிகளுக்கு NVQ Skills Passport தகைமைகளை வழங்கும் ஹெய்லீஸ்



இலங்கையின் முதலாவது தேசிய திறன் கடவுச்சீட்டு (NSP) மற்றும் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஆகியவற்றை கள உத்தியோகத்தர்களுக்கு வெற்றிகரமாக வழங்கியதன் மூலம் Hayleys பெருந்தோட்ட நிறுவனமானது மனித வள மேம்பாட்டிற்கான புதிய அளவுகோலை அமைத்துள்ளது.

நிலையான பெருந்தோட்ட வியாபார செயற்பாடுகள் தொடர்பான அவர்களது திறமைகளை மேம்படுத்தும் வகையில், Kelani Valley Plantations PLC (KVPL), Talawakelle Tea Estates PLC (TTEL) மற்றும் Horana Plantations PLC (HPL) ஆகியவற்றின் 70 கள அதிகாரிகள் இந்த திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

இந்த பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட, Hayleys Plantations முகாமைத்துவப் பணிப்பாளர், கலாநிதி Roshan Rajadurai கருத்து தெரிவிக்கையில், "Hayleys Plantationsஇல் எங்களது பணியானது, தோட்ட நிர்வாகத்தில் ஒரு புதிய அணுகுமுறையை செயல்படுத்துவதாகும், அனுபவ அடிப்படையிலான அறிவை மேம்பட்ட தொழில்நுட்ப அறிவுடன் இணைப்பதாகும்.

"NVQ மற்றும் Skills Passport அறிமுகத்துடன், துடிப்பான, டிஜிட்டல் அதிகாரம் பெற்ற பணியாளர்களை உருவாக்குவதற்காக, எங்கள் குழுவின் திறன்களையும் நிபுணத்துவத்தையும் உயர்த்துவதற்கு நாங்கள் உதவுகிறோம். இந்த நிகழ்ச்சித்திட்டங்களை நிறைவு செய்ததற்காக குழுவிலுள்ள ஒவ்வொருவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன், மேலும் அவர்கள் நாட்டின் முன்னணி தோட்டத்துறை அதிகாரிகளாக வளர்ச்சியடைவதையும், அவர்களின் தொழில்சார் வளர்ச்சியைத் தொடர்வதையும், களத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் எதிர்பார்க்கிறேன்." என தெரிவித்தார்.

இந்த வேலைத்திட்டங்கள் இலங்கை முதலாளிமார் சம்மேளனம் (EFC), சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) கொழும்பு அலுவலகம், தேசிய தொழிற்பயிற்சி மற்றும் தொழில் பயிற்சி ஆணையம் (NAITA) மற்றும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) ஆகியவற்றுக்கு இடையேயான நான்கு தரப்பு முன்முயற்சியாகும். திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் கீழ் தேசிய பயிற்சி மற்றும் தொழில்துறை பயிற்சி ஆணையம் (NAITA) வழங்கும் தொழில்நுட்ப ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டது.

# 25 வருட கால முன்மாதிரியான வளர்ச்சி மற்றும் சிறப்பை கொண்டாடும் Expack



அலைவு நெளிவான பொதியிடல் தீர்வுகளை உற்பத்தி செய்யும் துறையில் புகழ்பெற்ற வர்த்தக நாமமான Expack Corrugated Cartons PLC, உள்நாட்டிலும், சர்வதேச சந்தைகளையும் சேர்ந்த புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு பொதியிடல் தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்வதுடன், தொடர்ந்தும் பல சவால்களுக்கு முகங்கொடுத்திருந்த போதிலும் சிறப்பான முன்னேற்றம் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றினூடாக தனது 25 வருட பூர்த்தியை வெற்றிகரமாகக் கொண்டாடுகின்றது. இந்நிறுவனம் தொடர்ந்தும் உறுதியான வளர்ச்சியைப் பதிவு செய்த வண்ணமுள்ளது.

இதனைக் குறிக்கும் வகையில், Expack இனால் அதன் நவீன வசதிகள் படைத்த தொழிற்சாலை வளாகத்தில் சகல ஊழியர்களின் பங்கேற்புடன் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதன் போது ஊழியர்களுக்கு பெறுமதியான அத்தியாவசிய நுகர்வுப் பொருட்கள் அடங்கிய பொதியொன்று அவர்களின் குடும்பத்தாருக்காக வழங்கப்பட்டிருந்தது. இலங்கையில் அதிகளவு விரும்பப்படும் அலைவுநெளிவுள்ள பொதியிடல் தயாரிப்புகள் விநியோகத்தராக Expack ஐ உயர்த்துவதற்கு பங்களிப்பு வழங்கியிருந்த சகல பங்காளர்களுக்கும் Expack இன் தவிசாளர் சத்தார் காசிம் தமது நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தார்.

1997 ஆம் ஆண்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்த Expack, படிப்படியாக தனது செயற்பாடுகளை விஸ்தரித்திருந்ததுடன், தொடர்ச்சியாக சாதனைமிகுந்த உற்பத்திகளை பதிவு செய்திருந்ததுடன், இலங்கையின் அலைவுநெளிவுள்ள பொதியிடல் தொழிற்துறையில் முன்னணி நிறுவனமாக தன்னை தரமுயர்த்தியுள்ளது. உள்நாட்டு சந்தையிலும், ஆசிய, ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு பிராந்திய சர்வதேச நாடுகளுக்கும் Expack சேவைகளை வழங்குகின்றது. இலங்கையில் காணப்படும் சிறந்த அலைவுநெளிவுள்ள பொதியிடல் தீர்வு தயாரிப்பாளராக PUM நெதர்லாந்தினால் பிரேரிக்கப்பட்டிருந்தது.

# வாரபலன்



21.03.2022 - 02.04.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

புதன் உங்கள் ராசியில் நீச்சம் பெற்று சஞ்சரிப்பதனால் உங்களுக்கு நல்ல பலன்கள் அதிகம் வந்து சேரும்.காரணம் உங்கள் ராசிக்கு 3,6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜ யோகம் என்பதற்கேற்ப உத்தியோகத்தில் உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கும். உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும்.

## ரிஷபம்

உங்கள் ராசியில் புதன் நீச்சம் பெற்று சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். மனக்கசப்பு தரும் தகவல்கள் ஊர் மாற்றமோ உத்தியோக மாற்றமோ உடனடியாக செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. குடும்பத்தில் மருத்துவ செலவு அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய முடியவில்லயே என்று கவலைப்படுவீர்கள்.

## மிதுனம்

உங்கள் ராசியில் புதன் நீச்சம் பெற்று சஞ்சரிக்கிறார்.உங்கள் ராசிநாதனாகவும் 4ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் புதன் கேந்ராதிபத்ய தோஷம் பெற்றவர். எனவே அவர் நீச்சம் பெறுவது நன்மைதான். தொழில் வளம் சிறப்பாக இருக்கும் தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். இல்லத்தில் நல்ல காரியங்கள் நடைபெறும். நம்பிக்கையோடு செய்யும் செயலில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டாகும். பிள்ளைகளால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். தொழில் நடத்துவோர் புதிய நிறுவனம் தொடங்க முயற்சிப்பர்.

## கடகம்

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு விரயாதிபதி நீசம் பெறுவது யோகம் தான் என்றாலும் 3ஆம் இடத்திற்கும் புதன் அதிபதி என்பதனால் உடன்பிறப்புக்களின் வழியே சச்சரவு ஏற்படக்கூடும். பெற்றோர்களின் ஆதரவு கிடைக்காது. உத்தியோகத்தில் வீண்பழிகள் ஏற்படலாம். திட்டமிட்ட காரியங்கள் திசைமாறி செல்லும். பிறருக்கு பொறுப்பு சொல்வதன் மூலம் பிரச்சினைகள் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் நம்பிக்கையோடு தெய்வங்களை வழிபடுங்கள்.

## சிம்மம்

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். தன லாபாதிபதியான புதன் நீச்சம் பெற்று சூரியனுடன் இனைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்கும் இந்த நேரத்தில் கல்வி,கலை சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு சில காரியங்களை முடித்துகொடுப்பர். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

## கன்னி

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிநாதன் நீசம் பெறுவதால் ஆரோக்கிய தொல்லை ஏற்படத்தான் செய்யும். இருப்பினும் கேந்ராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால் பெருமளவில் பாதிப்புக்கள் ஏற்படாது. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும்.சேமிப்பு கரைந்தாலும் புதிய வாய்ப்புக்கள் மூலம் வருமானம் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு சுயதொழில் செய்வது பற்றி சிந்திப்பார்கள்.

## துலாம்

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். 12க்கு அதிபதி நீசம் பெறுவது யோகம்தான். கெட்டவன் கெட்டில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கேற்ப எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும் தொழில் வளர்ச்சி திருப்தி தரும் உத்தியோகம் சம்பந்தமாக புதிய முயற்ச்சிகள் செய்திருந்தால் அது கைகொடுக்கும். பிள்ளைகள் படித்து முடித்து வேலை தேடிக்கொண்டிருந்தால் நல்ல நிறுவனத்தில் வேலை அமையும்.

## விருச்சிகம்

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு அட்டமத்தில் நீச்சம் பெறுவதால் உத்தியோகம் மற்றும் தொழிலில் முன்னேற்றம் தேடி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாகவே இருக்கும்.நண்பர்கள் மற்றும் உறவினர்கள் நல்ல காரியம் நடைபெற வழிவகுத்துக் கொடுப்பர்.புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வி.ஐ.பி களின் ஒத்துழைப்புடன் விரும்பிய காரியத்தை விரும்பியபடியே செய்து முடிப்பீர்கள். அரசு வழி ஆதரவு கிடைக்கும்.

## தனுசு

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிப்பது ஒரு வழிக்கு நன்மைதான். கேந்திராதிபத்திய கிரகமான புதன் நீசம் பெறுவதால் தொழில் முன்னேற்றம் உண்டு துணிந்து சில முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். வாழ்க்கை துனை வழியே வந்த பிரச்சினைகள் அகலும். வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வரன்கள் வாசல் தேடி வரும்.வருமானம் திருப்தி தரும். வீடு வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

## மகரம்

உங்கள் ராசிக்கு புதன் நீசம் பெற்று சஞ்சரிப்பது ஒரு வழிக்கு நன்மைதான். உங்கள் ராசிக்கு 6க்கு அதிபதி நீசம் பெறுவதால் உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகளை மேலதிகாரிகள் பெற்றுத்தருவர். 9க்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால் பெற்றோர் வழியில் பிரச்சினைகள் ஏற்படலாம்.உடன்பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வார்களா? என்பது சந்தேகம் தான்.உறவினர் பகை உருவாகாமல் பார்த்துகொள்ளுங்கள்.எதையும் அனுபவம் உள்ளவர்களிடம் ஆலோசித்து செய்யுங்கள்.

## கும்பம்

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு அட்டமாதிபதியான புதன் நீசம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான்.அதேநேரம் அவர் பஞ்சமாதிபதியாகவும் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். உடன்பிறப்புக்கள் உங்களை உதாசீனப்படுத்தலாம். சேமிப்பு குறையும். எந்த முடிவு எடுத்தாலும் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது.

## மீனம்

உங்கள் ராசியில் புதன் நீசம் பெற்று சஞ்சரிக்கிறார்.கேந்ராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் நீசம் பெறுவது யோகம்தான்.கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும்.கடல்தாண்டி செல்ல அழைப்புக்கள் வரும்திரும்பிச் சென்ற வரன்கள் முடிவாகலாம். உத்தியோகத்தில் எதிர்பாராத எதிர்பாராத முன்னேற்றம் உண்டு. நீண்ட நாள் கோரிக்கையான ஊதிய உயர்வு இப்போது கிடைக்கலாம். மாற்றினத்தின் ஒத்துழைப்பால் லாபம் குவிப்பீர்கள்.நேர்முக தேர்வில் வெற்றி கிடைக்கும்.

# காலவோட்டத்தில் மாற்றமுறும் பெண் சமூகம்

நடப்பியல் வாழ்வில் ஆண், பெண் என இருபால் பகுப்பு முறையை பிரதானப் படுத்துகின்றோம். தாய்வழிச் சமூகம் தந்தைவழிச் சமூகமாக மாறியபோது அதிகாரமும் ஆண்வயப்பட்டதாயிற்று. இலக்கியங்களின் ஊடாகவே தமிழர்களின் வாழ்வியல் சார்ந்த அம்சங்களை அறியக் கூடியதாய் இருப்பதனால் பெண்களை, அவர்கள் வாழ்க்கையை அவை எவ்வாறு காட்டியிருக்கின்றன என்பது முக்கியமானதாகும்.

**“அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற் குரிய.......”**

என்கிறது தொல்காப்பியம். பெண்களின் நற்குணங்கள் இவையே என வரையறுக்கப்பட்டது. அவள் வாழ்க்கையைச் சுருக்கும் தன்மை இப்படித்தான் தொடங்குகிறது. அவளுடைய வீச்சும் போக்கும் எல்லைகளும் வரையறுக்கப்படுகின்றது.

**“முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை”**

என்றெல்லாம் கட்டுப்பாடுகளை விதித்து அவளின் செயல்களுக்கும் சிந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. பழமை வாய்ந்த இலக்கியமான சங்க இலக்கியத்தில் அவனும் காதலித்தான் அவளும் காதலித்தாள். கடிமணம் கூடுவார்கள். அதில் தடை வந்தால் அவன் மடலூர்வான். அந்த உரிமை கூட அவளுக்கு கிடையாது. சங்க இலக்கியப் பாடல்களில் பாதிப் பாடல்களுக்கு மேல் தலைவியை மணம்புரிந்து அவளை காதல் வெந்நோய்க் கொடுமையிலிருந்து தலைவன் காத்தருள தோழி விடுக்கும் விண்ணப்பங்களாகவே உள்ளன.

ஆரம்ப காலங்களிலிருந்து பெண் பெரும் அழகியலாகவும் சக்தியாகவும் காட்டப்பட்டாலும் கூட பெண்ணுக்கான தன்மைகளும் நடவடிக்கைகளும் எழுதப்படாத யாப்பாகவே பேணு நிலையில் காணப்பட்டன.

**“கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்தமிழ்ப் பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணி”**

என சிலப்பதிகாரம் சிறப்பாய் பேசுகிறது. காலம் காலமாக பெண் சார்ந்து பேசப்படும் கருத்துக்களின் போர்வையில் பெண் பாவக்குழியில் தள்ளப்பட்ட பிறப்பினை உடையவளாக தென்பட்டாலும் கூட அது முடிந்த முடிவாக வில்லை. பெண் சார்ந்த கருத்துக்கள் கட்டவிழ்த்தலும் மீள் கட்டப் படலும் காலவோட்டத்தில் நடந்தேறியுள்ளது.

பெண்ணென்று பேச்சு எடுத்தாலே கற்பு பற்றிய சிந்தனைகளும் கூடவே எழுந்து விடுகிறது.

**“தெய்வம் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை”**

ஆனால் கற்பு சார்ந்த கருத்தாடல்கள் காலத்துக்கு காலம் மாற்றமுறுவதையும் காணமுடிகின்றது.

“கற்பு நிலை என்று சொல்ல வந்தால்
இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்”

என கற்பினை இருபால் சார்ந்தும் பொதுவாய் பேசுகின்றார் பாரதி. நடப்பியல் வாழ்விலே பெண்களுக்கான கட்டுப்பாடுகள் எல்லாம் கற்பினைக் காரணம் காட்டியே முன்வைக்கப்படுகின்றது. அம் மூலத்தை கட்டவிழ்த்து பேசுகிறார் பாரதி.

**“உதய குமாரர்களுக்குத்
தங்கள் உடல்களையே
அட்சயபாத்திரமாக்கி
தன் வயிற்றுப் பசியைத்
தணித்துக் கொள்ளும்
மணிமேகலைகள்”**

இன்றைய கால பெண்கள் வறுமை காரணமாக தம் உடலை விற்கும் நிலை என நியாயப்படுத்தும் தொனியில் பழைய மணிமேகலைத் தொன்மத்தினை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதன் மூலம் வெளிப்படுத்துகிறார் அப்துல்ரகுமான்.

புதுமைப்பித்தன் தன்னுடைய படைப்பு மூலமாக (பொன்னகரம்)

**“கற்பு கற்பு என்கிறீர்களே இது தானையா பொன்னகரம்”**

என கற்பு சார்ந்த சமூக முடிச்சினை அவிழ்ப்பதைக் காண முடிகின்றது.

காலவோட்டத்தில் பெண்களுக்கான கட்டுப்பாடுகளெல்லாம் பெண்களினாலேயே தகர்த்தெறியப் படுகின்றது. சங்கப்புலவர்களை அடுத்து ஒரு இடைவெளிக்குப் பின்னர் வலுவான சமயப் பின்புலத்தோடு கூடிய படைப்பாளிகளாக வெளிப்பட்டவர்கள் ஆண்டாளும் காரைக்காலம்மையாரும். உடலையும் பாலியலையும் வெறுத்து ஒதுக்கியதன் குறியீடாக பேய் வடிவு பூண்டவர் காரைக்காலம்மையார். இதற்கு மாறாக இதுவரையில் உடல் சார்ந்ததாகவும் பாலியல் சார்ந்ததாகவும் சமூகத்தில் உருவாக்கப்பட்டிருந்த பால் பேதம் கொண்ட அனைத்து கலாச்சார கட்டுமானங்களையும் தகர்த்தெறிந்து தன் எதிர்ப்பை வெளிப்படுத்தியவர் ஆண்டாள் . சமூகத்தில் பெண் என்றைக்கும் நுகரப்படும் இடத்தில் வைக்கப்படும் மரபினை தகர்த்தெறிந்து நுகரும் இடத்தில் இருந்து,

**“கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய் தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண் சங்கே”**

என அறைகூவல் விடுவது பெரும் மாற்றமாகவே உணர முடிகிறது.

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக்ிங்கே பெண்
இளைப்பில்லை காண்”**

என பாரதி குரல் கொடுத்த காலமே பெண்களுக்கான விடுதலை கிடைத்து விட்டது எனலாம்.பெண்களின் காதலினை ஊர் அறிந்தால் அலர் தூற்றுவதும் ஆணிடத்தில் அப்படியான நடைமுறைகள் இல்லை எனவும் அறியமுடிகின்றது. ஆனால் பாரதிதாசன் வெளிப்படுத்திய பெண், காதலன் தன்னை ஏமாற்றினால் ஊரில் சொல்லி நீதி கேட்பேன் என அச்சுறுத்துகிறாள்.

தற்காலப் படைப்புலகிலே பெண் எழுத்தாளர்களை ஆண்களுக்கு நிகராக காணமுடிகின்றது.பெண்களின் விசனங்களை, இரசாயன மாற்றங்களை, அழகுணர்வுகளை ஓர் ஆணால் அப்படியே எழுத முடியாது. வீரியமாக, நளினமாக, நாணம் கலந்து அத்தனை வலிகளுடனும் அவள் சொல்வதைப் போல சொல்ல முடியாது. இந்த இடைவெளியை நிரப்பும் வகையில் இன்று சமகாலப் படைப்பாளிகள் தமது எண்ணங்களை வெளிப்படையாகவே பேசத் துணிந்துள்ளனர்.

பெண்மீதான மரபு கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு இயல்பாகவே பெண் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை வெளிப்படுத்துகின்றார் இளம்பிறை.

**“நிஜமாய் இருக்கிறேன்
முரணானவள் என
முகம் சுழிக்கிறார்கள்”**

பெண்கள் தம் உணர்வுகளையே வெளியில் சொல்லக் கூடாது என்னும் தொனியில் உரைத்த தொல்காப்பியத்தோடு மடல் ஏறும் உரிமை கூட பெண்ணுக்கு மறுக்கப்பட்ட சங்க காலத்தையும் தாண்டி சிலப்பதிகாரத்தில் பெண்ணை அழகாய்க் காணமுடிந்தது.

கற்பு எனும் பெரும் பொருள் சார்ந்து திருக்குறளைத் தொட்டாலும் பாரதி சிந்தனையில் மாற்றமுறும் தன்மையைக் காணலாம்.

புதுமைப்பித்தன் தனது பார்வையில் கற்பினை காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைப்பது பெரும் வியப்பாய் இருந்தாலும் ஆண்டாளின் குரலில் கண்ணனை அறைகூவுவதன் மூலம் என்றைக்கும் நுகரப்படும் இடத்தில் வைக்கப்பட்ட பெண் நுகரும் இடத்தில் அமர்வது பெரும் வியப்புக்குரியதே.

பாரதி குரலில் புரட்சியோடு விடுதலையும் விதையாகுவது பெரும் மாற்றமாய்க் காண பாரதிதாசன் கண்ட பெண் ஆணை அச்சுறுத்துவது மலையளவு மாற்றமே.இளம்பிறை தனது எழுத்தின் மூலம் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் விதம் பெண்களின் வளர்ச்சி நிலையையே காட்டி நிற்கின்றது. ஆனால் இன்றைக்கும் கூட சிறைவாசம் உணரும் நிலையில் உளம் சார்ந்தும் பெரும் அழுத்தங்களோடு நகர்ந்து செல்கிறது பெண்கள் வாழ்வு. காலங்கள் மாறியுள்ளன. காட்சிகள் மாறியுள்ளன. ஆனால் இன்னும் மாற்றங்கள் தேவையாய் உள்ளது. மாற்றங்கள் முற்றுப் பெறும் பொழுது உலக இயக்கமே அழகாகிவிடும். அதுவரை உலகம் நிலைத்திருக்குமா என்பதே சிந்தனைக்குரிய விடயமாகும்.

சிந்துஜா தவராசா (B.A) ...
யாழ்ப்பாணம்

# சுற்றுச்சூழலை ஆதரித்தல்



மர நடுகை முயற்சிகள், வனவியலை ஊக்குவித்தல் மற்றும் பசுமை முயற்சிகள் ஆகியவற்றின் மூலம் சூழலுக்கு ஆதரவளிப்பதானது சூழலின் மேம்பாட்டுக்கு உதவுவதுடன் இது ஒவ்வொருவராலும் ஆதரவளிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

காலநிலை ஒழுங்கில் காலநிலை மாற்ற அதிகரிப்பானது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் பூமியின் இருப்புக்கு இன்றியமையாததாக விளங்கும் மரங்களை வெட்டுதல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் இயற்கை வளத்தை பாதிப்பதாக அமைகிறது.

இதனை மனதிற்கொண்டு பல நிறுவனங்கள் இயற்கை வளங்களை நிரப்ப உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகின்றன. வீட்டுத் தோட்டங்களுக்குச் செடிகளை வழங்குவது முதல் திட்டமிட்ட முறையில் மரங்களை நடுவது வரை, சுற்றுச் சூழலுக்கான நிலையான நடவடிக்கைகளின் மையமாக இந்த நடவடிக்கைகள் அமைகின்றன.

குளோபல் லைஃப் ஸ்டைல் லங்கா, நிலையான பசுமை முயற்சிகளுக்கான அதன் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக மரங்களை நடுவதற்கும் வீட்டுத் தோட்டங்களுக்கு தாவரங்களை வழங்குவதற்கும் வலுவான அர்ப்பணிப்பைப் பேணுகிறது. நிறுவனம் மரம் நடும் நடவடிக்கைகள் மூலம் சமூகத்தில் ஒரு நிலையான இருப்பை பேணி வருகிறது .

காடழிப்பானது புவி வெப்பமடைதலுக்கு சுமார் 10% பங்களிப்பினை வழங்குவதாக உலகளாவிய தரவு காட்டுகிறது மரங்களை வெட்டுதல் நிறுத்தப்படாவிட்டால் இந்நிலை அதிகரிக்கும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். மரங்களை வெட்டுவதானது சுற்றுச்சூழலில் பேரழிவு தரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது பாலைவனமாதல், மண் அரிப்பு, குறைந்த பயிர்கள், வெள்ளம் மற்றும் பசுமை இல்ல வாயுக்களின் அதிகரிப்பு ஆகியவை காடழிப்பினால் ஏற்படுகின்றன.

காலநிலை மாற்றம் சமூகங்களில் சிதைக்கும் விளைவுகளை ஏற்படுத்துகிறது கடுமையான வறட்சி, வெப்ப அலைகள், கடல் மட்ட உயர்வு, பெருங்கடல்கள் மற்றும் உருகும் பனிப்பாறைகள் ஆகியவை மக்கள் மற்றும் விலங்குகள் மீது நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, வாழ்வாதாரங்கள் மற்றும் சமூகங்களில் அழிவை ஏற்படுத்துகின்றன.

வெட்டப்பட்ட மரங்களை இடம் மாற்றுவது, காலநிலை மாற்றத்தைக் குறைப்பதில் ஒரு சமூகத்தின் அர்ப்பணிப்பைக் குறிக்கும் நிலையான முயற்சியாக இருக்க வேண்டும். குளோபல் லைஃப்ஸ்டைல் லங்கா இதைப் புரிந்துகொண்டு சமூகத்திற்கு மீள வழங்கும் பசுமையான நற்சான்றிதழ்களைப் பேணுவதற்கு முயற்சிக்கிறது.

தொடர்ச்சியாக மரம் நடும் நடவடிக்கைகள் அவர்களின் குழுக்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களின் பங்கேற்புடன் எல்லை நிகழ்ச்சிகளாக நடத்தப் படுகின்றன.

பசுமையான முன்முயற்சியானது தாவரங்கள் மற்றும் பசுமை வளங்களுக்கான அணுகலை வழங்குவதன் மூலம் சமூகங்களை மேம்படுத்துவதில் நிலையான கவனம் செலுத்துகிறது.

அ. கனகசூரியர் ...

# பலஸ்தீன நில தினம்: ஜனநாயக சக்திகள் தீர்வை வலியுறுத்த வேண்டும்

பலஸ்தீன் நில தினம் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 30 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. 1976ஆம் ஆண்டு சியோனிச இஸ்ரேல் பாராளுமன்றத்தில் சட்டங்களை இயற்றி பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான நிலங்கள் பலாத்காரமாக கையகப்படுத்தப்பட்டன. இஸ்ரேல் நிர்வாகம் நிலத்தைக் கையகப்படுத்துவதை எதிர்த்து நசரேத்தில் கடுமையாகப் போராடிய ஆறு பலஸ்தீனர்கள் இந்த துரதிர்ஷ்டமான நாளில் சுட்டுக் கொல்லப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மேலும் பலர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து பலஸ்தீனர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலான பலஸ்தீன நிலங்களின் பாதுகாப்புக்கான தேசிய முன்னெடுப்பு” எனும் ஓர் அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்குமாறு இந்தக் குழு கோரிக்கை விடுத்தது. தமது நிலத்தை இழந்ததனால் ஏராளமான பலஸ்தீனர்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் பலஸ்தீன நில தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இந்த நாளில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்த பலஸ்தீனர்கள் பரவலான போராட்டங்களை முன்னெடுத்தனர். 1970 களுக்கு முந்திய கிளர்ச்சிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களைப் போலன்றி அதிக அளவிலான பலஸ்தீனர்கள் பங்குகொண்ட நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்றுபட்ட போராட்டமாக இது அமைந்திருந்தது. பலஸ்தீன நில தினப் பிரகடனம் பலஸ்தீன மக்களுக்கு மிகுந்த வீரியத்தையும் வெற்றியையும் தந்தது. இஸ்ரேலிய எல்லையின் இருமருங்கிலும் வாழும் அரேபியரிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் இது வழியமைத்தது.

அன்றிலிருந்து, இஸ்ரேலிய இராணுவத்தினரால் வீரமிக்க ஆறு போராளிகள் கொல்லப்பட்டதையும் தமது மூதாதையர்களின் சட்டபூர்வமான பூர்வீக நிலத்தைப் பறித்தெடுப்பதன் மூலம் பலஸ்தீன மக்களுக்கு இதுவரை இழைக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான அநீதியையும் உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் மார்ச் 30 ஆம் திகதி ஆண்டுதோறும் பலஸ்தீனர்களால் நினைவுகூரப்படுகிறது. வரலாறு நெடுகிலும் ஒவ்வொரு வருடமும் மார்ச் 30 அன்று நினைவுகூரப்படும் பலஸ்தீன நில தினம் பலஸ்தீனர்களுக்கும் உலகெங்கிலுமுள்ள புலம்பெயர் பலஸ்தீனர்களுக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்படுகிறது. இந்த நிகழ்வு வரலாற்றைக் குறிப்பது மட்டுமல்லாமல் பலஸ்தீனப் புரட்சியைப் பற்றிய பொதுவான நினைவூட்டலையும் வழங்குகிறது. உலகில் வாழும் 13.7 மில்லியன் பலஸ்தீனியர்களில் 6.2 மில்லியன் பேர் பலஸ்தீன எல்லைக்கு வெளியே அகதிகளாக வாழுகின்றனர். சர்வதேச சட்டத்தின்படி அகதிகள் தமது சொந்த பூர்வீக நிலத்துக்கு திரும்ப முடியுமாக இருந்தாலும் இதுவரை பலஸ்தீன அகதிகளுக்கு தமது சொந்த ஊருக்குத் திரும்ப முடியாத நிலையே காணப்படுகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் சட்டவிரோத குடியேற்றங்களை நிறுவுவது உட்பட்ட இஸ்ரேலின் பல நடவடிக்கைகள் பலஸ்தீனின் இருப்புக்கு கடுமையான தடையாக மாறியுள்ளதோடு அவர்களின் செயற்பாடுகள் நாட்டில் நீடித்த அமைதிக்கான நம்பிக்கையையும் சிதைப்பதாக அமைந்துள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் பலஸ்தீனர்கள் தாம் பிறந்த இடத்தில் தமது சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் அனுபவிப்பதைத் தடுக்கின்ற தெளிவான சியோனிசக் கொள்கையைக் குறித்துக் காட்டுவதாக அமைந்திருக்கின்றது. சர்வதேச ரீதியாக கண்டிக்கப்பட்ட போதிலும் இஸ்ரேல் அரசாங்கம் அதன் சியோனிச விரிவாக்கக் கொள்கையையும் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீன நிலங்களில் சட்டவிரோத குடியேற்றங்களையும் தொடர்ந்து வருகிறது.

1976 சம்பவத்துக்கு 16 ஆண்டுகளுக்குப் பின்னர் பலஸ்தீன நில தினம் தேசிய பொதுவிடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டது. எதிர்ப்புப் பேரணிகள் மற்றும் பொதுவேலை நிறுத்தங்களை முன்னெடுப்பதனூடாக பலஸ்தீனர்கள் ஆண்டுதோறும் இந்த நாளை நினைவுகூருகின்றனர். அதேநேரம் உலகின் வேறுபல பகுதிகளிலும் பலஸ்தீன நில தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கூட பலஸ்தீனர்கள் இன்றுவரை இந்த நிகழ்வை அனுஷ்டித்து வருகின்றனர்.

சுதத் ...
அதிகாரி, நிறைவேற்றுக் குழு உறுப்பினர்,
சமாதானத்துக்கும் நட்புறவுக்குமான
இலங்கை அமைப்பு




# ட்ராம் போக்குவரத்துக்கு என்ன ஆனது?

இலங்கையில் பொதுப் போக்குவரத்துக்காக பஸ் வண்டிகள் வருவதற்கு முன்னரே அறிமுகப்படுத்தப் பட்டது ட்ராம் வண்டிகள் (TramCars) தான். இதற்காகவே பிரதான பொதுப்பாதைகளில் தண்டவாளங்கள் போடப் பட்டிருந்தன. மிகச் சமீப காலம் வரை அப்படியான ட்ராம் வண்டிகள் கொழும்பில் இயங்கியமைக்கான ஆதாரங்களாக கோட்டை, புறக்கோட்டை ஐந்து லாம்பு சந்தியிலும், கிராண்ட் பாஸ் வீதியிலும் தண்டவாளங்களின் எச்சங்களைக் காணக் கூடியதாக இருந்தது.

இலங்கையில் மனிதப் போக்குவரத்துக்காக மிருகங்களையும், மனிதர்களையும், அதன் பின்னர் இயந்திர வாகனங்களையும் பயன்படுத்தி வந்திருக்கிறோம். குதிரை, யானை, மாட்டு வண்டில்கள் என்பன இந்திய உபகண்டத்தில் முக்கிய போக்குவரத்து சாதனங்களாக நெடுங்காலமாக பயன்பாட்டில் இருந்து வந்திருக்கிறது. அதுபோல மனிதர்கள் சுமந்து



செல்லும் பல்லக்குகள் அரசர்களுக்காகவும், அதிகாரிகளுக்காகவும், செல்வந்தர்களுக்காகவும், "உயர்குடி"யினருக்காகவும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. 1893 ஆம் ஆண்டு இலங்கையில் ரிக் ஷா அறிமுகப்படுத்தப்பட்டது. இரு சக்கரமுள்ள வண்டிலில் ஒருவரையோ, இருவரையோ ஏற்றிக் கொண்டு மாடுகளுக்குப் பதிலாக மனிதர் இழுத்துச் செல்லும் அமைப்பைக் கொண்டிருந்தது அது. 1896 இல் அதே ரிக் ஷாவில் முன்னால் சைக்கிளை பொருத்தி அதை மிதித்துச் செல்லும் முறை கொழும்பில் அறிமுகப்படுத்தப்பட்டது. 1858 இல் தான் ரயில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1866 ஆம் ஆண்டிலேயே ட்ராம் போக்குவரத்துக்கான திட்டங்களை ஆங்கிலேய ஆட்சியாளர்கள் திட்டமிடத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் அதற்கான டெண்டர் ஒப்பந்தம் 1892 இல் தான் கோரப்பட்டது. இறுதியில் 1895இல் பௌஸ்டீட் (Boustead Brothers)என்கிற நிறுவனம் தான் அந்த ஒப்பந்தத்தை கொழும்பு மாநகர சபையுடன் செய்துகொண்டது.

பௌஸ்டீட் நிறுவனம் பிரித்தானிய கம்பனி ஆகும். ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த அந்த நிறுவனம் பெருந்தோட்டத்துறையிலும் பெருமளவு முதலீடு செய்திருந்தது.

அதன் பிரகாரம் 1898செப்டம்பர் மாதமே தொடங்கப்பட்டுவிட்டது. 1900ஆம் ஆண்டு ஜனவரி 11ஆம் திகதி, தெற்காசியாவின் முதல் டிராம் சேவை கொழும்பில் தான் ஆரம்பமானது. யோர்க் தெருவில் உள்ள கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலுக்கு அருகில் இருந்து முகத்துவாரம் வரை கிரான்ட் பாஸ் வழியாக சென்றது.1900 ஆம் ஆண்டு மட்டும் நாளாந்தம் 14,529 பேர் பயணித்திருக்கிறார்கள் என்றால் அன்றே எந்தளவு பயனாளிகள் இருந்திருக்கிறார்கள் என்பதை உணர முடியும்.

புறக்கோட்டை மின்வலுசக்தி நிலையத்தை இந்த நிறுவனம் தான் இயக்கி வந்தது. புறக்கோட்டை காஸ் வேர்க்ஸ் சந்தியில் இந்த நிலையம் இயங்கியது. இன்னும் சொல்லப்போனால் இன்றைய பீபல்ஸ் பார்க் என்று அழைக்கப்படுகிற தனியார் பஸ் வண்டிகள் நிறுத்தும் நிலையம் தான் அன்றைய ட்ராம் வண்டிகள் நிறுத்தப்படும் இடமாக இருந்தது. இந்த மின்சார நிலையம் கொழும்பு மத்திய பஸ் நிலையம் வரை அகன்று இருந்தது. சுமார் 110 வோல்ட் டி.சி சக்தியைக் கொண்டு இந்த ட்ராம் வண்டிகள் இயக்கப்பட்டன.

மெயின் வீதி வழியாக வந்து கேஸ் வேர்க்ஸ் வீதியூடாக ஒல்கொட் வீதியை அடைந்து புறக்கோட்டை இரயில் நிலையத்தின் வழியாக சதாம் வீதிவரை சென்று, அங்கே வலது புறமாக தபால் நிலைய தலைமையகத்துக்கும், பின் கார்கில்ஸ் கட்டிடப் பாதையில் வந்து, இடதுபுறம் திரும்பி துறைமுக அதிகார சபையின் முன்னாள் இருக்கிற கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டலின் வழியாக, கபூர் கட்டிடப் பாதை வழியில் மீண்டும் மெயின் வீதியை நோக்கிச் செல்லும்.

இன்னொரு பாதை மெயின் வீதி வழியாக டாம் வீதிக்குச் சென்று, புதிய சோனகத் தெரு, மெசேஞ்சர் வீதி, ஆர்மர் வீதி, கிராண்ட் பாஸ் வீதி, புனித ஜோசப் வீதி, நாகலகம் வீதி, கிரான்பாஸ் சந்தை வழியாக பெர்குசன் வீதிக்குச் செல்லும்.

**ட்ராம் போக்குவரத்து இருந்த இன்னொரு பாதை**

நொரிஸ் வீதி வழியாக இடதுபுறம் திரும்பி பழைய இரயில் நிலையத்தின் வழியாக, டெக்னிக்கல் கொலேஜ் சந்திக்கு ஊடாக வலது புறம் திரும்பி எல்பின்ஸ்டன் மண்டபம் அமைந்துள்ள மருதானை சந்தி வழியாக சின்ன பொரளை சென்று அங்கிருந்து நேராக பொரளை சென்றடையும்.

மொத்தம் 52 ட்ராம் வண்டிகள் சேவையில் இருந்தன டிராம் சேவையின் வருகையுடன் குதிரை வண்டிகள், மாட்டு வண்டில்கள்,ரிக் ஷாக்கள் என்பவற்றின் சகாப்தம் மெல்ல மெல்ல முடிவுக்கு வந்தது. ட்ராம் அறிமுகப்படுத்தப்பட்ட போதே ரிக்ஷா தொழிலாளர்கள் அதன் மீது வெறுப்பைக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ட்ராம் வண்டிகள் மீது கல்லெறி நடத்திய பல சந்தர்ப்பங்களும் பதிவாகியுள்ளன. பொலிசாரும் அப்படியானவர்களை



கைது செய்திருக்கிறார்கள்.

ட்ராம் வண்டியின் முன்னால் விழுந்து தற்கொலை முயற்சி செய்துகொண்ட சம்பவங்களும், அப்போதே முடிச்சவிக்கிகளின் அனுபவங்களைப் பற்றியும் அன்று பணிபுரிந்தவர்கள் சிங்களத்தில் பதிவு செய்த விபரங்களை காண முடிகின்றன.

**ட்ராம் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்**

ட்ராம் வண்டி ஓட்டுனர்களும், கண்டக்டர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களுக்கு நாளொன்றுக்கு 1.20 ரூபாய் மட்டுமே சம்பளம் வழங்கப்பட்டு வந்தது. நோய்விடுப்பு அல்லது சாதாரண விடுப்பு அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. அப்படியான விடுப்புகளுக்கு பெரும் அபராதம் விதிக்கப்பட்டது. எனவே 25 வீத சம்பள உயர்வு, சுகயீனம் மற்றும் சாதாரண விடுமுறைகளின் பேரிலான அபராதத்தை நிறுத்தும்படியும், மேலதிக நேர வேலைக்கு சம்பளமும் மற்றும்,பணிச் சீருடை இலவசமாக வழங்கப்பட வேண்டும் எனவும் தொழிற்சங்கம் கோரிக்கை வைத்தது. சம்பள உயர்வை மட்டும் மறுத்துவிட்டது நிறுவனம். இதன் விளைவாக 1929 ஜனவரி 23 அன்றிலிருந்து வேலை நிறுத்தம் 13 நாட்களாக தொடர்ந்தது.

வேலை நிறுத்தத்தில் 150 தொழிலாளர்கள் மட்டுமே கலந்து கொண்ட போதும் ஏ.ஈ. குணசிங்கவின் தலைமையில் மிகவும் வீரியத்துடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தில் ஈடுபடாத ஊழியர்களைக் கொண்டு பொலிசாரின் பாதுகாப்புடன் கம்பனி ட்ராம் வண்டிகளை இயக்க முற்பட்டது. தொழிலாளர்கள் ட்ராம் போக்குவரத்துப் பாதைகளை மறித்து மறியல் செய்தார்கள். இந்தப் போராட்டத்தில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் இணைந்து கொண்டு ஆதரவு கொடுத்தனர்.



போக்குவரத்து ஸ்தம்பித்தது.மீண்டும் மாட்டு வண்டில்களையும், ரிக்ஷாக்களையும் பயன்படுத்தும் யுகத்துக்குச் சென்றனர் மக்கள். பௌஸ்டீட் நிறுவனத்தின் ஏனைய தொழிலாளர்களையும் போராட்டத்தில் இணைந்து ஆதரவு தருமாறு தொழிலாளர்கள் கோரினார்கள். அதன்படி பௌஸ்டீட் நிறுவனத்தின் ஏற்றுமதி இறக்குமதியுடன் சம்பந்தப்பட்ட துறைமுகத் தொழிலாளர்களும் இணைந்து கொண்டார்கள்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள். வழக்குகள் தொடரப்பட்டான. பெப்ரவரி 5ஆம் திகதி ரயில்வே தொழிலாளர்கள் பலர் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவளித்தமைக்காக கைது செய்யப்பட்டார்கள். பலர் தாக்கப்பட்டார்கள். இந்த செய்தி வேகமாக பரவியது. மேலும் பல அரச நிறுவன தொழிலாளர்கள் தமது வேலைகளை நிறுத்தி போராட்டத்தில் கைகோர்த்தார்கள். வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். ஊர்வலங்களை நடத்தினார்கள்.

சுமார் 20,000 தொழிலாளர்கள் தொழிற்கட்சித் தலைவர் குணசிங்கவின் அலுவலகத்துக்கு வெளியில் கூடினார்கள். தனது உரையில் தான் தாக்கப்பட்டதையும் அவர் விளக்கினார். கூடியிருந்த தொழிலாளர்கள் "பொலிசாரைக் கொல்" என்று கோஷமிட்டதாக குமாரி ஜெயவர்த்தன தனது நூலில் குறிப்பிடுகிறார்.

நகரில் இருந்த பல அரச காரியாலயங்களின் மீது போத்தல்களாலும், தடிகளாலும் தாக்குதல் நடத்தினார்கள். வீதிகளில் இருந்த லாம்புகளை அடித்து நொறுக்கினார்கள். ஆங்காங்கு தீயிட்டார்கள். போலீசார் மூர்க்கத்தனமாக இதனை கட்டுபடுத்த முற்பட்டனர். மருதானையில் துப்பாக்கிகளைக் கொண்டு பகிரங்கமாக 20 நிமிடங்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். அதில் ஐவர் கொல்லப்பட்டனர். 250க்கும் மேற்பட்டோர் காயமடைந்த. 1920 களில் நிகழ்ந்த போராட்டங்களிலேயே உச்சப் போராட்டமாக இதனைக் கொள்ளலாம் என்கிறார் குமாரி ஜெயவர்த்தன.

இந்த போராட்டம் தந்த அதிர்ச்சியால் ட்ராம் போக்குவரத்தை தொடர்ந்து நடத்தும் எண்ணத்தை கைவிட்டது கம்பனி. 1944 ஆம் ஆண்டு செப்டெம்பர் 1 ஆம் திகதி கொழும்பு மாநகர சபையினால் 3.6 மில்லியன் ரூபாவை Bowstad நிறுவனத்திற்கு வழங்கி ட்ராம் சேவையை அரசு கையகப்படுத்தியது. கொழும்பு மாநகர சபை 1953 இல் ட்ராம் வண்டிகளை மின்சார ட்ரொலி பேருந்து வண்டிகளாக (ஒரு மாடி, இருமாடிகளைக் கொண்ட Trolly Buss) மாற்றி போக்குவரத்துக்கு விட்டது. 1958 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க இலங்கை போக்குவரத்துச் சபையை உருவாக்கி பொதுப்போக்குவரத்தை தேசியமயப்படுத்தினார். 1964 ஆம் ஆண்டு பஸ் ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் நிகழ்ந்தது. அரசு ட்ராம் வண்டி சேவைக்கு செலவளிக்கும் வசதியைக் கொண்டிருக்கவில்லை. 1965ஜனவரி 1ஆம் திகதி ட்ராம் போக்குவாத்து முற்றிலும் நிறுத்தப்பட்டது. இதனை ஆராய்வதற்காக ஒரு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டது. இச்சேவையால் பல விபத்துக்கள் அதிகரித்திருந்ததையும் அந்த ஆணைக்குழு சுட்டிக்காட்டியது.

அப்படி கைவிட்டபோது அதனை அன்றைய இரும்பு வியாபாரத்தில் பேர்பெற்ற தொழிலதிபராக இருந்த A. Y. S. ஞானம் ஒரு ட்ராம் வண்டியை 100 ரூபா படி மாநகர சபையிடம் இருந்து ஏலத்தில் கொள்வனவு செய்தார்.

இன்று நம் நாட்டில் டிராம் போக்குவரத்து இல்லை, ஆனால் அவை நோர்வே, சுவிட்சர்லாந்து, பின்லாந்து, பெல்ஜியம், பல்கேரியா போன்ற பல ஐரோப்பிய நாடுகளில் நகரப் போக்குவரத்துக்காக வெற்றிகரமான முறையில் பயன்பாட்டில் உள்ளன. ட்ராம் போக்குவரத்தை நவீனமயப்படுத்தி அதே தெருக்களில் அதே தண்டவாளங்களில் அவை பயணிக்கின்றன.

கொழும்பு டெக்னிக்கல் சந்தியில் அமைந்துள்ள இலங்கை தேசிய ரயில்வே நூதனசாலையில் இன்றும் ட்ராம் வண்டிகளும், என்ஜின்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

# பல்வகை நோய்களுக்கான அறிகுறியே தலைவலி

**ஒற்றைத் தலைவலியை உறுதிப்படுத்த MRI– Brain பரிசோதனை அவசியம். காலையில் தலைவலியுடன் வாந்தி எடுப்பது போன்ற உணர்வு இருந்தால், மண்டையோடு அல்லது மூளை சம்பந்தப்பட்ட கட்டிகளாக இருக்கலாம்.**



**மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பதில் பொது வைத்திய நிபுணர் பிரவின்சன்**

**கிளஸ்டர் தலைவலி எவ்வாறு ஏற்படுகிறது என்பதற்கு உறுதியான காரணங்கள் இல்லை. ஆனாலும் மூளை மற்றும் அதன் தன்னாட்சி நரம்புத் தொகுதியின் சிக்கலான கணத்தாக்கங்கள் மூலம் ஏற்படுவதாகவும் நரம்புகளுடன் சம்பந்தப்பட்ட குருதிக் குழாய்களில் ஏற்படும் அழற்சி காரணமாக ஏற்படுவதாகவும் நம்பப்படுகின்றது என மல்லாவி ஆதார வைத்தியசாலையின் பதில் பொது வைத்திய நிபுணர் பிரவின்சன் "ஞாயிறு தினகரனுக்கு" அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணல் வருமாறு.**

**கேள்வி : ஒரு பக்கமாக ஏற்படும் அனைத்து தலைவலிகளையும் ஒற்றைத் தலைவலி எனக் கூறலாமா ?**

**பதில் :** பெரும்பாலான முதன்மை தலைவலி வகைகள் (Migraine, Trigeminal autonomic cephalalgia) ஒற்றைத் தலைவலி வகையினை சார்ந்தவை. இவை நாட்பட்ட தலைவலி வகையினை சார்ந்தவை. உடல் இரத்த அழுத்த பிரச்சினை, இரத்த சர்க்கரை அளவு குறைவடைதல், கிருமித் தொற்றுக்கள் போன்ற இன்னும் பல நிலைமைகளில் தலைவலி ஒரு பக்கமாகவோ இரண்டு பக்கங்களுமோ ஏற்படலாம். இரத்த அழுத்தம்,

குருதி வெல்ல அளவு குறைதல், தலையில் ஏற்படும் கட்டிகள், பார்வைக் குறைபாடு இல்லாத நாட்பட்ட, வேறு எந்த காரணங்களும் கண்டுபிடிக்கப்படாத ஒரே பக்கத்தில் ஏற்படும் தலைவலியினை ஒற்றைத்தலைவலி என வரையறுக்கிறோம். Migrain வகை தலைவலிகள், ஒருபக்கம் ஆரம்பித்து சிலருக்கு சிலவேளைகளில் அடுத்த பக்கமும் பரவலாம். ஆனால் கிளஸ்டர் வகை தலைவலிகள் எப்போதும் ஒரே பக்கமே இருக்கும்.

**கேள்வி : அவ்வாறாயின் கிளஸ்டர் தலைவலி என்றால் என்ன ?**

**பதில் :** ஒற்றைத் தலைவலிகளில் Migraine க்கு அடுத்தபடியாக ஏற்படும் தலைவலி வகையாக Trigeminal Autonomic Cephalalgia (TACs) எனப்படும் ஒரு வகையான முதன்மை (Primary) தலைவலி வகையாகும். இந்த TAC குழுமத்திலுள்ள பிரதான தலைவலி வகையே இந்த கிளஸ்டர் தலைவலியாகும். கிளஸ்டர் (Cluster) கொத்தணி என பொருள்படும். அதாவது தலைவலிகள் பொதுவாக அடுத்தடுத்து வரும். பின்னர் இதன் அறிகுறிகள் சிறிது காலத்துக்கு இல்லாமல் இருக்கும். பின்னர் திரும்பத் திரும்ப வரும்.

பொதுவாக ஆண்களில் (ஆண் : பெண் விகிதம் 3:1) குறிப்பாக புகைத்தல் பழக்கம்

உள்ளவர்களிடத்தில் கிளஸ்டர் தலைவலி அவதானிக்கப்படுகிறது. பரம்பரையில் ஒருவருக்கு கிளஸ்டர் தலைவலி இருந்தால் அடுத்த சந்ததிகளும் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. ஏனெனில் இதனுடன் பரம்பரை அலகுகளும் தொடர்புபட்டுள்ளன. இது எந்த வயதினரையும் அதாவது 20 வயது நபரில் இருந்து 80 வயது முதியவர் வரையிலும் பாதிப்பை ஏற்படுத்தும். சிறுவர்களிடமும் இந்த தலைவலி அவதானிக்கப்பட்டுள்ளது.

தலைவலியை பொறுத்தவரையில், இது ஒரு நாளில் ஒரு தடவையில் முதல் எட்டு தடவைகள் வரை வரலாம். அல்லது சிலருக்கு ஒன்று விட்டநாளும் சிலருக்கு ஒவ்வொரு நாளும் ஏற்படும். ஏற்கனவே சொன்னபடி இந்த தாக்கங்கள் (attacks) சில மாதங்களுக்கு தொடர்ச்சியாக வந்து பின்னர் சில மாதங்களுக்கு எந்த அறிகுறிகளும் இல்லாமல் இருக்கும். பின்னர் மீண்டும் இந்த வட்டம் தொடரும். ஒரு தலைவலித் தாக்கம் 15 நிமிடங்களில் இருந்து மூன்று மணித்தியாலங்கள் வரை நீடிக்கும். பொதுவாக இரவு வேளைகளில் ஏற்படுவதால் காலையில் நித்திரையில் இருந்து எழும்பும் போதும் தலைவலி இருக்கும். குறிப்பாக காலையில் தலைவலியுடன் வாந்தி எடுப்பது போன்ற உணர்வு இருந்தால் அதுவும் குறுகிய காலத்தில் ஏற்பட்டால் அது, மண்டையோடு அல்லது மூளை சம்பந்தப்பட்ட கட்டிகளாக இருக்கலாம். எனவே வைத்திய ஆலோசனை இல்லாமல் இதுதான் வியாதி என முடிவெடுக்க வேண்டாம்.

கடுமையான வலியுடன் தலைவலி ஆரம்பிக்கும். சிலர் ஒன்றும் செய்ய முடியாமல் அப்படியே நிலத்திலோ கதிரையிலோ அமர்ந்து விடுவர். ஒரு தடவை தலைவலி ஆரம்பித்தால் அது முடிவடையும் வரை தலையின் வலது அல்லது இடது பக்கத்தில் இருக்கும். வெகு சிலருக்கு அடுத்த முறை தலைவலி வரும்போது முன்னர் வந்த பகுதிக்கு எதிர்ப்பக்கமாக வரலாம். ஆனாலும் அதுவும் ஆரம்பித்து முடிவடையும் வரை ஒரே பகுதியில் தான் இருக்கும். இது அதன் பெயரிலேயே உள்ளது போல் Trigeminal nerve எனப்படும் மூளையின் ஒரு நரம்புடன் சம்பந்தப்பட்டிருப்பதால் அந்த நரம்பின் ஆளுகைக்குட்பட்ட கண்களை

சுற்றியுள்ள பகுதி மற்றும் நெற்றியின் பக்கத்தில் உள்ள Temple/ Temporal region இலும் வலியை உணரலாம். இந்த வகை தலைவலிக்கு என்று பிரத்தியேகமான சில குணங்குறிகள் உள்ளன. இவையே இந்த வகை தலைவலியினை மற்றைய வகைகளில் இருந்து வேறுபடுத்திக்காட்ட உதவுகின்றது. இந்த அறிகுறிகளும் தலைவலி எந்த பக்கம் உள்ளதோ அந்த பக்கத்திலேயே இருக்கும். கண் சிவத்தல், கண்ணீர் வருதல், கண் இமை முழுமையாக திறக்க இயலாமை, மூக்கடைப்பு, மூக்கில் இருந்து நீர் வடிதல் என பல அறிகுறிகளை காணலாம். சில வேளைகளில் அதிகமாக வியர்க்கவும் கூடும். கண்ணிமைகளில் சிறிதளவு வீக்கமும் காணப்படும்.

ஆனால் இந்த அறிகுறிகள் எல்லாமே தலைவலி உள்ள நேரத்தில் மட்டுமே காணப்படும்.

தலைவலி இல்லாமல் இவை இருந்தால் அது வேறு நோய் நிலைமைகளை குறிக்கலாம். இந்த கிளஸ்டர் வகை தலைவலி வரும்போது திரும்பத் திரும்ப ஒரே மாதிரியான அறிகுறிகளையே காட்டும் (Sterio type). இந்த பண்பும் இதனை மற்றைய தலைவலிகளில் இருந்து வெறுபடுத்திக்காட்ட உதவுகின்றது.

**கேள்வி : கிளஸ்டர் தலைவலி எவ்வாறான**

பாக்கியராஜா மோகனதாஸ் ...

**பாதிப்புக்களை ஏற்படுத்தும் ?**

**பதில் :** இவை ஒரு தடவை வந்தால் வாழ்நாள் முழுவதும் வரக்கூடியது. ஆனால் வயதாகும்போது எண்ணிக்கையிலும் வீரியத்திலும் குறையலாம், ஆனால் இது எல்லோருக்கும் பொருந்தாது. அத்துடன் இதற்கு சிறிதளவான ஆதரங்களே உள்ளன. இவை முதன்மை வகை தலைவலி வகைக்குள் வருவதால் எதிர்காலத்தில் புற்றுநோய், பக்கவாதம் என்பன இந்த தலைவலியின் காரணமாக ஏற்படாது. ஆனால் சரியான சிகிச்சைகளை மேற்கொள்ளாதவிடத்து இந்த வகை தலைவலி ஒருவரின் அன்றாட வாழ்க்கை முறையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடியது.

அதாவது திட்டமிட்டவாறு வேலைகளை செய்ய முடியாது போகலாம். மனதை ஒரு நிலைப்படுத்தி காரியங்களை செய்ய முடியாது போகலாம். இதனால் பாராதூர மன அழுத்தங்களுக்கு உள்ளாகி சில வேளை தற்கொலைக்கு உள்ளாகும் வாய்ப்புக்கள் உள்ளவதாகவும் அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

**கேள்வி : மூளையில் கட்டிகள் இருந்தால் இவ்வாறான தலைவலிகள் ஏற்படுமா ?**

**பதில் :** முதன்மை தலைவலி வகைகளில் அதிகம் பேரை பாதிக்கும் ஒற்றைத் தலைவலியான Migraine தலைவலியை கண்டறிந்து உறுதிப்படுத்த பிரத்தியேக பரிசோதனைகள் அவசியமில்லை. ஆனால் துரதிஷ்டவசமாக இந்த ஒற்றைத் தலைவலியை உறுதிப்படுத்த MRIBrain பரிசோதனை அவசியம். தேவைப்பட்டால் வேறு பல பரிசோதனைகளும் செய்ய வைத்தியர்களினால் நோயாளர்களுக்கு அறிவுறுத்தப்படும். கிளஸ்டர் ஒற்றைத்தலைவலி மூளையின் ஒரு நரம்புடன் சம்பந்தப்பட்டிருப்பதால்

இந்த நரம்பினை பாதிக்கும் வேறு காரணிகளான மூளையில் உருவாகும் கட்டிகளும் தலைவலியை உருவாக்கும். அது கிளஸ்டர் வகை தலைவலிபோல தோன்றும். எனவேதான் MRIBrain பரிசோதனை அவசியமாகின்றது. அத்துடன் தலையோட்டினுள் உருவாகும் புற்றுநோய் கட்டிகள் மற்றும் புற்றுநோய் அல்லாத கட்டிகள் என்பனவற்றுக்கான மிக பொதுவான அறிகுறி தலைவலி ஆகும். எனவே யாருக்காவது மிக குறுகிய காலத்தில் தலைவலி ஏற்பாட்டிருந்தால் அதுவும் மிக வலிமையாக தாங்க முடியாத

தலைவலியாக இருக்குமானால் அவர்கள் கட்டிகள் சம்பந்தமான பரிசோதனைகளை செய்ய அறிவுறுத்தப்படுவர்.

**கேள்வி : கிளஸ்டர் தலைவலி ஏற்படுவதற்கான பின்னணி ?**

**பதில் :** கிளஸ்டர் தலைவலி எவ்வாறு ஏற்படுகிறது என்பதற்கு உறுதியான காரணங்கள் இல்லை. ஆனாலும் மூளை மற்றும் அதன் தன்னாட்சி நரம்புத் தொகுதியின் சிக்கலான கணத்தாக்கங்கள் மூலம் ஏற்படுவதாகவும் நரம்புகளுடன் சம்பந்தப்பட்ட குருதிக் குழாய்களில் ஏற்படும் அழற்சி காரணமாக ஏற்படுவதாகவும் நம்பப்படுகின்றது.

**கேள்வி : கிளஸ்டர் தலைவலிக்கு எவ்வாறான சிகிச்சைகள் உள்ளன ?**

**பதில் :** சிகிச்சை முறைகளை இரண்டாக வகைப்படுத்தலாம். ஒன்று தலைவலியினை உடனடியாக குறைத்து வலி நிவாரணம் அளிப்பவை, மற்றையது மீண்டும் தலைவலி வராமல் தடுப்பவை. இங்கு ஒன்றை குறிப்பிட்டாக வேண்டும். தலைவலி வராமல் தடுக்கும் மருந்துகள் சரியான முறையில் தொழிற்பட சில வாரங்கள் முதல் ஒன்று இரண்டு மாதங்கள் வரை எடுக்கலாம். அதுவரைக்கும் ஒழுங்காக மருந்துகள்

எடுப்பதன் மூலமே சிறந்த பலனை காணலாம். பெரும்பான்மையான நோயாளர்கள் தரப்பட்ட மருந்துகளை சில காலம் மட்டுமே எடுத்துக் கொண்டு நோய் தீரவில்லை என குறைபட்டுக்கொள்வதுடன் சிகிச்சைகளை இடைநடுவில் கைவிட்டு வேறு வேறு மருத்துவ முறைகளை நாடி செல்கின்றனர்.

தலைவலியை உடனே குறைக்கும் சிகிச்சை முறைகளுள் Triptan வகை மாத்திரைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. நூறு வீதம் செறிவுள்ள ஒட்சிசன் வாயுவை சுவாசிப்பதன் மூலமும் உடனடியாக தலைவலியை குறைக்கலாம். நீண்டகால தடுப்பு முறைக்கு பல வகையான மாத்திரைகள் உள்ளன. இவற்றினை அரச வைத்தியசாலைகளில் இலகுவாக பெற முடியும். இதைவிட சில தொழிநுட்பங்கள் மூலம் சில நரம்பு கணத்தாக்கங்களை கட்டுப்படுத்தும் சிகிச்சை முறைகளும் மேலைத்தேய நாடுகளில் உள்ளன. ஆனால் எந்த சிறந்த விளைவுகளுக்கும் தொடர்ச்சியான மருந்துப் பாவனையும் மருத்துவ கண்காணிப்பும் அவசியமாகும்.

**கேள்வி : கிளஸ்டர் தலைவலி ஏற்படாமல் தவிர்த்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும் ?**

**பதில் :** புகைத்தல், மதுபானம் அருந்துவதை தவிர்த்து சீரான உடற் பயிற்சி, போதிய ஓய்வு, உறக்கம் என்பன ஏற்கனவே கிளஸ்டர் தலைவலி வந்தவர்களுக்கு தலைவலி வரும் வாய்ப்புக்களை குறைப்பதுடன், ஊட்டச்சத்துள்ள உணவுகளை உள்ளெடுப்பது சமநிலையான வாழ்க்கைக்கு உதவும்.

## வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

# வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

இலங்கையின் விநியோக அமைப்பொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையுமான கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய ஏழு கிளைகளையும் 500,000 இற்கு மேலான வாடிக்கையாளர்களுக்கு சேவைபுரிவதுடன் 1500 ஊழியர்களுடனான தொழிற்படையையும் கொண்டுள்ளதுடன் பின்வரும் பதவிக்கான தகைமையுள்ள நபர்களை தேடுகின்றது.

### மேலதிக பொது முகாமையாளர் (நிதி)

| | |
|---|---|
| தேவைப்படும் தகைமைகள் பின்வருமாறு: | |
| தொழில்சார் தகைமைகள் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழமொன்றிலிருந்து முதுமாணிப் பட்டத்துடன் (ICASL/CIMA/ACCA) அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் கணக்கிடல் அமைப்பொன்றின் அங்கத்தவர். |
| அனுபவம் | நிதியிடல் முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது 10 வருட தகைமைப் பட்டபின் அனுபவத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியில் ஐந்து (5) வருட அனுபவம். |
| வயது | 2022 ஏப்ரல் 6 ஆம் திகதியன்று 50 வயதிற்கு கீழேயிருத்தல் வேண்டும். |

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரியானவர் பொது முகாமையாளருக்கு கடமைக்காக அறிக்கையிடுவதுடன் கம்பனியின் நிதிப் பிரிவை செயற்றிடத்துடன் முகாமைப்படுத்துவார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் கம்பனியினால் பராமரிக்கப்படும் வாகனம் அடங்கலாக மேலதிக நன்மைகளும் வழங்கப்படும்.

உங்களின் சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை கீழேயுள்ள முகவரிக்கு 2022 ஏப்ரல் 06ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் தன்மையில் அனுப்பவும்.

விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது விண்ணப்பத்திலும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையிலும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும

LECO

**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**
**1 ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்**
**411, காலி வீதி,**
**கொழும்பு-03.**

## வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### வணிகக் கப்பற்றுறைச் செயலகம் 2022

2022ஆம் ஆண்டிற்காக வணிகக் கப்பற்றுறைச் செயலகத்திற்கு கீழ் காணப்படும் உருப்படிகளை வழங்குவதற்காக அங்கீகாரம் பெற்றுள்ள வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. அலுவலக எழுதுகருவிகள் மற்றும் உபகரணங்கள்
2. வாகன உதிரிப்பாகங்கள், புதுப்பித்தல்கள் மற்றும் சேவை செய்தல்
3. தொழில் நுட்பவியல் உபகரணங்களைப் புதுப்பித்தல்

இதற்காக ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், 2022 ஏப்ரல் 07 வரை வணிகக்கப்பற்றுறைச் செயலகத்தின் உத்தியோக இணையதளத்தில் (www.dgshipping.gov.lk) அல்லது வணிகக் கப்பற்றுறைச் செயலகத்திற்கு நேரில் சமுகமளித்து இதற்கான விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக விபரங்களிற்காக அழைக்கவும்.**
**011-2335389/ 011-2435127/ 011-2441429**

## மோட்டார் கப்பல் ‘SAI ARAMBH’ ஐ பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்தல்

கொழும்பில் நடைபெறும் அதன் நியாயாதிக்கத்தை நிர்வகிக்கும் செயற்பாட்டில் இலங்கை குடியரசின் மேல் நீதிமன்றக் கட்டளையின் விளைவாகவும் 01/2020 என்ற Rem இல. நீதிமன்ற நடவடிக்கையின் விளைவாகவும் M.V. SAI ARAMBH ((IMO No. 9115456, Type - General Cargo, GRT/NRT – 5,582/2,791) ஆனது அதனது தற்போதுள்ள நிலையில்/நிலபரத்தில் எவ்வித பாரபந்தங்களற்ற நிலையில் 2022.04.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு இலங்கை, கொழும்பு-12, ஹல்ஸ்ப்டோர்ப் வீதியிலமைந்துள்ள கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற 03 ஆம் இலக்க நீதிமன்ற வளாகத்தில் கொழும்பு மேல் நீதிமன்ற மார்ஷலினால் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

(தற்போது கிடைக்கக்கூடிய விபரக்குறிப்புக்கள் மற்றும் தகவல் ஆகியன துல்லியமானவையென உத்தரவாதம் வழங்க இயலாது)

விற்பனையின் மேலதிக விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் மற்றும்/அல்லது கப்பலை பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளுக்காக தயவு செய்து கீழேயுள்ள இணையதளத்தை பார்வையிடவும் அல்லது பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

**மேல்நீதிமன்ற மார்ஷல்,**
**வணிகக்கப்பற்றுறை செயலகம்,**
**1 ஆம் மாடி, பிரிஸ்டல் கட்டிடம்,**
**43-89, யோர்க் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி:** +9411 2441429/+9411 2435127
**தொலைநகல்:** +9411 2430277
**இணையதளம்:** www.dgshipping.gov.lk
**மின்னஞ்சல்:** dmsmos@slnet.lk

Repeat Your Ad For Better Offers

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்காக 34 எண்ணிக்கையான Split Type வளிச்சீராக்கிகளின் வழங்கல், நிறுவுதல், செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு

1) தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைக்காக Split Type வளிச்சீராக்கிகளின் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பிராந்திய பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2) விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் மூலம் நடாத்தப்படும்.

3) ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் EM-04 தரத்தில் ICTAD இன் கீழ் பதிவு பெற்றவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டதும் உற்பத்தியாளருடன் வர்த்தகம் செய்வதற்கான அதிகாரம் பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.

4) ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2303157 என்ற இலக்கத்தின் வழியாக வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் கொழும்பு-02, டபிள்யு.ஏ.டி. இராமநாயக்க மாவத்தை, 47 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்காளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5) 2022.03.28 ஆம் திகதியிலிருந்து 2022.04.20 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3.30 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500 ரூபாவை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவரின் பெயரில் 78088835 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை வங்கியின் றீஜெனட் தெரு கிளையில் வரவு வைக்கப்படல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-02, டபிள்யு. ஏ.டி. இராமநாயக்க மாவத்தை, 47 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்காளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6) விலைமனுக்கள் 63 நாட்கள் காலத்திற்கு செல்லுபடியாகும் காலத்திற்கும் 35 நாட்கள் ஒப்பந்த காலப்பகுதிக்கும் வேலை ஆரம்பத்தின் உண்மையான ஆரம்ப திகதியிலிருந்தும் செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.

7) 2022 ஏப்ரல் 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணமானது முத்திரையிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Supply, Installation, Commissioning and Maintenance of Split Type Air Conditioners” என தெளிவாக அடையாளமிடப்பட்டு கொழும்பு-02, டபிள்யு. ஏ.டி. இராமநாயக்க மாவத்தை, 47 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை, இல. 47, டபிள்யு.ஏ.டி. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

8) அனைத்து விலைமனுக்களும் இலங்கை மத்திய வங்கியினால் அல்லது இலங்கையில் செயற்படும் காப்புறுதி கம்பனியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் இலங்கை காப்புறுதி சபையினால் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்பட்டதும் 50,000 இலங்கை ரூபா தொகைக்கு அனுமதியாகும் வண்ணம் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையில் இருத்தலும் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# களனி பல்கலைக்கழகம்

## மருத்துவ பீடம் – விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டவாறு தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து களனி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவு | விலைமனுப் பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| UOK/FM/DO/02/CONS/22/1/01 | களனி பல்கலைக்கழக மருத்துவ பீட பராமரிப்பு பிரிவில் உத்தேசிக்கப்பட்ட அலுவலகத்தின் நிர்மாணம் | 18 மில்லியன் | 180,000 ரூபா | 3,500 ரூபா |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   **ICTAD** பதிவு சி-6 அல்லது மேற்பட்டது.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை களனி பல்கலைக்கழக வேலைகள் திணைக்கள வேலைகள் பொறியியலாளரின் அலுவலகத்திலிருந்து (தொலைபேசி: 011-2903164) பெற்று, 2022 மார்ச் 28 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் இறாகம-11010, தலகொல்ல பாதை, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2022 மார்ச் 28 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரையும் பி.ப. 1.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணத்தில் மருத்துவ பீட சிறாப்பரிடம் செலுத்திய பின்னர், இறாகம-11010, தலகொல்ல பாதை, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்கள் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2022 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இறாகம-11010, தலகொல்ல பாதை, களனி பல்கலைக்கழக, மருத்துவ பீட சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

7. அனைத்து விலைமனுக்களும் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   2022 ஏப்ரல் 12 ஆம் திகதியிலிருந்து 2022 ஏப்ரல் 17 ஆம் திகதி வரையும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டிற்காக பல்கலைக்கழகமானது மூடியிருப்பதனால் விலைமனுக்கள் வழங்கப்பட மாட்டாது என்பதனை தயவு செய்து கவனிக்கவும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம், களனி.**
**27.03.2022.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

# பட்டினம் மற்றும் சூழல் பிரதேச சபை

### கிழக்கு மாகாணம், திருகோணமலை

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பட்டினம் மற்றும் சூழல் **பிரதேச சபையின்** பெறுகைக் குழு மற்றும் உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்கான, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள தரம் மற்றும் விஷேடத்துவம் ஆகியவற்றிற்கு பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.
4. தகைமை தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையின் 5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **பட்டினம் மற்றும் சூழல் பிரதேச சபையின்** தலைவர்/செயலாளரிடமிருந்து பெற்று அதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. **2022.03.29 ஆம் திகதியிலிருந்து 2022.04.20 ஆம் திகதி வரையும் பட்டினம் மற்றும் சூழல் பிரதேச சபைக்கு** எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. **2022.04.21 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள அட்டவணையிலுள்ள முகவரிக்கு** விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
8. கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. 2022 ஏப்ரல் 8 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு உரித்தான உள்ளூர் அதிகாரசபைகளில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**பட்டினம் மற்றும் சூழல் பிரதேச சபை,**
**உப்புவெளி, திருகோணமலை.**
**27.02.2022**

| தொ இல. (1) | உள்ளூர் அதிகார சபையின் பெயர் (2) | வேலைகளின் விளக்கம் மற்றும் விலைமனு இல. (3) | பெசேவ நீங்கலாக கேள்வியிடக்கூடிய தொகை (மில்லியனில்) (4) | ஒப்பந்தக் காலம் (5) | தேவைப்படும் தரம் மற்றும் விஷேடத்துவம் (6) | பெறுகை அமைப்பின் பெயர் (7) | விலைமனுக் கோரல் ஆவணத்தை கொள்வனவு செய்யும் இடம் மற்றும் தொலைபேசி இல. (8) | விலைமனுவை சமர்ப்பிக்கும் இடம் | விலைமனு ஆவணத்தின் விலை (ரூபாவில்) (9) | தேவைப்படும் விலைமனுப் பிணை: விலைமனு உத்தரவாத தொகை (ரூபாவில்) (10) | தேவைப்படும் விலைமனுப் பிணை: செல்லுபடியாகும் காலம் (11) | விலைமனு செல்லுபடியாகும் காலம் - வரையும் (12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | பிரதேச சபை பட்டினம் மற்றும் சூழல், திருகோணமலை | கிண்ணியாவில் தகனச்சாலை நிர்மாணம். EP/TGPS/WD/SP/Crematorium/2022/01 | 16.04 | 180 நாட்கள் | கட்டிட நிர்மாணத்தில் சி-6 மற்றும் சி-5 | பிரதேச சபை, பட்டினம் மற்றும் சூழல், திருகோணமலை | பிரதேச சபை, பட்டினம் மற்றும் சூழல், திருகோணமலை. 026-2222150 | பிரதேச சபை, பட்டினம் மற்றும் சூழல், திருகோணமலை | 7,500.00 | 161,000.00 | 2022.08.04 ஆம் திகதி வரையும் | 2022.07.07 ஆம் திகதி வரையும் |

**தலைவர்,**
**பட்டினம் மற்றும் சூழல் பிரதேச சபை,**
**உப்புவெளி, திருகோணமலை.**
**23.03.2022**

# முருகு ஐயா

"என்ன பவளம் செலவுக்கு இன்றைக்கு காசுக்கு இருக்குதா" இது முருகு ஐயாவின் கேள்வி. சத்தம் வந்த திசையை பார்த்து பவளம் "என்னப்பா செலவுக்கு காசு எண்டு கேட்கிறீங்களே. நேற்றைக்கு ஐயாயிரம்ரூபாய் இருந்தது. உவன் இரண்டாவது பொடி ஏதோ அவசர தேவை எண்டு சொல்லி அம்மா ஐயாயிரம் ரூபா தா என்றான். எடுத்துக் கொடுத்துட்டேன். இன்றைக்கு இருக்குற சாமான்களை வச்சித்தான் சமாளிக்க வேண்டும்." என்று கூறினாள்.

முருகு ஐயா கடற்தொழில் செய்பவர். அவரது மனைவி பெயர் பவளம் முருகு ஐயா ஒரு தடித்த மனுஷன் வட்டமான முகம் பொது நிறம்.கிழமையிலை ஒரு நாளைக்கு சேவெடுப்பார். மற்ற நாளெல்லாம் முகம் வெள்ளை மயிர்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். இப்ப அவருக்கு வயது ஐம்பத்திரண்டு ஆகுது. அவருக்கு அவருடைய வயது தெரியாது கண்டியளே. ஆரேன் என்ன மனிசி பவளம் நினைவு படுத்தினால்தான் வயசு தெரியும். பள்ளிக்கூடத்துக்கு இரண்டாம் வகுப்போடை கட்டடிச்சிட்டார். காரணம் அவருக்கு படிப்பு மண்டையில ஏறேல்லை கண்டியளே. அவற்றை அப்புவும் கடற்றொழில் தான் செய்தவர். அம்மா வாய் பேச மாட்டா. ஆனா அவவுக்கு எழுதத் தெரியும். கைப்பாசையாலயே கதைப்பா.

சின்ன வயசில்முருகு ஐயா நல்ல ஸ்மார்ட்டான பெடியன். பெடியன் முருகு பத்து வயதிருக்கும்போது ஒரு நாள் கடற்கரைக்கு தனியாக போனான். கட்டுமரத்திலையும், போட்டிலையும் கொண்டுவந்த மீன்களை அப்ப கடற்கரையில் குவித்து வைப்பினம். பிறகு பெரிய பெரிய பெட்டியளுக்கை ஒவ்வொரு குவியல் மீனிலயும் தெரிஞ்சு தெரிஞ்சு போட வேண்டும். சிறுவன் முருகு அந்த நேரம் ஒரு முதலாளியிடம்"நான் ஏதாவது வேலை செய்யறேன். சம்பளம் தாறியளே"எண்டு கேட்டான்.

முதலாளி சொன்னார்,"நீ இந்த குவியலிலிருந்து மீன்களை தவத்தி தவத்தி பெட்டியளுக்கை போட வேண்டும். உனக்கு மீனும் இருபது ரூபாய் காசும் தாரேன்" என்று சொன்னார். சிறுவன் முருகு மிகவும் சந்தோஷமடைந்தான். ஆனால் வேலைதான் அவன்ட வயசுக்கு மிஞ்சியது. காலமை எட்டு மணிக்கு தொடங்கி பின்னேரம் அஞ்சு மணி வரை நின்ற நிலையில் செய்யுற வேலை. ஒரு மாதிரி வேலை முடிச்சிட்டான். முதலாளி சொன்ன மாதிரி கொஞ்ச மீனும் இருபது ரூபாய் காசும் கொடுத்தார். இருபது ரூபாய் எண்டது சின்ன காசில்லை கண்டியளே. அந்தக் காலத்திலே அதுக்கு ஒரு நாளைக்கு வீட்டில நாலுபேர் சமைச்சு சாப்பிடுகிற அளவுக்கு சாமானுகள் வாங்கலாம்.

சிறுவன் முருகுகாசை பொக்கற்றுக் கைவச்சுக் கொண்டு மீனைக் கொண்டு ஓடுறான். ஆத்தாட்டை குடுக்கிறதுக்காக. ஆத்தா எண்டது அம்மாதான். ஆத்தா முருகுவின்ரை கையில காச கண்டதும் பரவசம் அடைஞ்சிட்டா. அவவின்ரை மகிழ்ச்சியை சொல்லி வேலை இல்லை. தன்ரை மகன் சின்னவன் எண்டாலும் சம்பாதிக்க தெரிந்து கொண்டான் என்று நினைத்து அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

அண்டைக்கு விதம்விதமான சாப்பாடு எல்லாம் செய்து பிள்ளைகளுக்கு கொடுத்தா. முருகுவுக்கு ஆத்தாவின் ஆரவாரமான மகிழ்ச்சியை கண்டு மிகப்பெரிய சந்தோசம் ஏற்பட்டது:

சிறுவன் முருகு அன்று ஆத்தா அடைந்த சந்தோஷத்துக்கு பின்னர் ஒன்றை உணர்ந்து கொண்டான். அதாவது தனது உதவியினால் மற்றவர்களை மகிழ்ச்சியடைய செய்யலாம் என்பதே அதுவாகும். இதன் பின்னர் தனக்குவேலை கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேலைக்கு போய் தனது செலவுக்கு என சிறு தொகையை எடுத்துக்கொண்டு மிகுதியை ஆத்தாவிடம் கொடுத்து வந்தான். ஆத்தாவுக்கு மட்டுமில்லாமல் தன்னிடம் பணம் இருக்கும்போது கேட்பவர்கள் அனைவருக்கும் உதவி செய்து வந்தான். அவனது வயது அதிகரிக்க அதிகரிக்க அவனது வருமானமும் அதிகரித்தது.

அவனது நடுத்தர வயதில் அவனுக்கு ஒரு பெண்ணுடன் நட்பு ஏற்பட்டது. அப்பெண் தான் பவளம். முருகுவின் சினேகிதன் ஆனந்தனின் தங்கை. முருகு தனது வேலை விடயமாக ஆனந்தனின் வீட்டுக்கு செல்லுவான். அப்பொழுது பவளத்தை கண்டான். ஆரம்பத்தில் முருகுவை கண்டதும் பவளம் நாணத்தினால் ஓடி ஒளிந்து கொள்வாள். ஆனந்தன் வீட்டில் இல்லாத சமயத்தில் முருகு அங்கு சென்றாலும் அவள் வெளியே வருவதில்லை. ஆனந்தனின் தாய் தந்தையரே முருகுவை ஏன் வந்ததென்று விசாரித்து ஆனந்தன் வெளியில் சென்றமை பற்றி கூறுவர்.

ஆனால் முருகு ஆனந்தனின் வீட்டுக்கு சென்ற முதல் நாளிலேயே பவளத்தை கண்டவுடன் அவனது மனம் அலைபாய தொடங்கியது. இதுதான் விதி என்பதா? அன்று தொடக்கம் பவளத்துடன் கதைக்க வேண்டும் என்று அவன் மனதார விரும்பினான்.

ஆனால் பவளம் நெடுநாளாக முருகுவை காண்பதை தவிர்த்து வந்தாள். அவனை கண்டாலும் காணாதவள் போல சென்றுவிடுவாள். பவளத்தின் இந்த செயற்பாடு முருகுவிற்கு மேலும் மேலும் பவளத்தின் மீது ஈர்ப்பை ஏற்படுத்தியது.

இளைஞனான முருகு பொது நிறமானவன். அவனது முகம் வட்டமானது. தலைமயிர் சுருள் சுருளாக இருக்கும். பார்ப்பவர் கண்களை வசீகரிக்கும் தோற்றம் கொண்டிருந்தான். அவனது வேலை நேரங்களில் அவன் வேலைக்குரிய ஆடை அணிந்திருக்கும் போது அவனது அழகு முழுமையாக தெரிவதில்லை. அவன் வேலை முடிந்து குளித்து அலங்காரம் செய்து நல்ல ஆடைகளுடன்செல்லும்போது, அவனது அழகு பார்ப்பவர் மனதை கொள்ளை கொள்ளும்.

முருகுவைக் குறிவைத்து எத்தனையோ பெண்களும் பெற்றோரும் அவனை வளைக்க முனைந்தனர். அவன் யாரிடமும் பிடி கொடாது விலகி நடந்து கொண்டு வந்தான். இதனால் முருகுவின் மீது சிலர் பொறாமை கொண்டு அவன்மீது வீண் பழியை சுமத்தவும் முனைந்தனர்.

ஆனால் முருகுவின் மனம் ஏனோ பவளத்தை பார்க்க வேண்டும். அவளுடன் பேச வேண்டும். என்று துடிதுடித்தது. இதேவேளை பவளமும் நாணத்தினால் முருகுவை பார்க்காதது போல் நடந்து கொண்டாலும், அவளது உள் மனதில் முருகு மீது தீவிரமான காதல் நிறைந்திருந்தது.

முருகு தனது வீட்டுக்கு வரும்போது மறைந்திருந்து முருகுவின் செயற்பாடுகளை அவதானித்து மகிழ்ச்சி அடைவாள்.

இருவரது மனமும் ஒன்றையே விரும்பியதால் பிரபஞ்ச சக்தி அவர்களை ஒன்றிணைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கியது.

ஒரு நாள் அண்மையில் இருந்த டவுனுக்கு சென்ற பவளம் தனது பேர்சை தோளில் கொழுவிய படி வீதியால் சென்றாள். அப்போது போதைக்கு அடிமையான இளைஞன் ஒருவன் அவளது பேர்சை பிடுங்கிக் கொண்டு ஓடினான். அப்போது பிரபஞ்ச சக்தி முருகுவை அவ்விடம் கொண்டு வந்தது.

இங்கு பிரபஞ்ச சக்தி பற்றியும் சிறிது சொல்ல வேண்டும். பிரபஞ்ச சக்தி என்பது நாம் எல்லோரும் நம்புகின்ற தெய்வீக சக்திதான். எமது ஆன்மீக ஞானிகள் எல்லோரும் இறைவன் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளான் என்று கூறியுள்ளனர். இதுவே பிரகலாதன் கதையிலும் வெளிப்படுத்தப்படுகிறது. இந்த இறை சக்தியே பூவுலகில் எல்லா இடங்களிலும் பரந்துள்ளது இதற்கமைய பிரபஞ்ச சக்தி என்பதும் உலகில் பரந்துள்ள மகா சக்தியே. ஒரே சக்தி இங்கு வெவ்வேறு உருவங்களுக்குள் மறைந்து செயல்படுகிறது. இதனால் எல்லாவற்றுக்கும் இடையிலிருந்து நமது கண்களுக்கு தெரியாத ஒரு சக்தி எல்லாவற்றையும் இணைக்கின்றது. அதுவே நாம் நினைப்பது மட்டுமல்லாது, நினைக்க போவதையும் சரியாக அறிந்து குறிப்பிட்ட சூழ்நிலையை உருவாக்குகின்றது. இது பல அறிஞர்களின் கருத்தாகும்.

இந்த பிரபஞ்ச சக்தியே பவளத்துக்கு உதவி செய்ய அந்த இடத்திற்கு முருகுவை அழைத்து வந்திருந்தது. பவளம் தனது பேர்ஸ் பறிக்கப்பட்டபோது, இப்போது முருகு இருந்திருந்தால் தன்னுடைய பேர்சை மீட்டுத் தருவான் என்று நினைத்தாள். ஆனால் ஏற்கனவே பிரபஞ்ச சக்தி முருகுவை அவ்விடத்திற்கு கொண்டு வந்து விட்டது.

முருகு எந்த தீர்மானமும் இன்றி தனக்கு தேவையான ஆடை ஒன்றை வாங்குவதற்காக டவுனுக்கு சைக்கிளில் வந்து கொண்டிருந்தான். அப்போது பவளம் செல்வதையும் அவளது பேர்ஸை பறித்துக்கொண்டு ஒருவன் ஓடுவதையும் கண்டான். முருகுவின் உடல் உழைப்பினால் முறுக்கேறி இருந்தது. அவன் சடாரென்று சைக்கிளை போட்டுவிட்டு குறித்த இளைஞனே துரத்திக் கொண்டு சென்றான். பேதையினால் நலிவடைந்து இருந்த குறித்த இளைஞனால் வேகமாக ஓட முடியவில்லை. முருகு இளைஞனை பாய்ந்து பிடிப்பதற்கு முயன்றபோது பீதியடைந்த இளைஞன் பேர்சை போட்டுவிட்டு ஓடினான். முருகு நினைத்திருந்தால் அடுத்த பாய்ச்சலில் அவனை பிடித்துச் சாத்தி இருப்பான். ஆனால் அவனது இளகிய மனம் பேர்சை எடுத்துக் கொண்டு பவளத்தை தேடி திரும்பி பார்த்தது.

பவளம் பேர்சை பறிகொடுத்து தவித்த நிலையில் கடவுளே என்று கத்திக்கொண்டு திரும்பி திருடனை பார்த்தாள். அவளது கண்களால் கண்டதை அவளால் நம்ப முடியவில்லை. தான் காணுவது கனவா என்று நினைத்து தனது கையை கிள்ளிப் பார்த்தாள். முருகு சைக்கிளை போட்டுவிட்டு திருடனை பின் தொடர்ந்து ஓடுவதை கண்டாள்.

உடனடியாக அவளது மனம் முருகுவின் சைக்கிளை பாதுகாக்க வேண்டும் என்று துடித்தது. உடனடியாக ஓடி வந்து முருகுவின் சைக்கிளை நிமித்தி வைத்துக்கொண்டு நின்றாள்.

பேர்சை மீட்டுக்கொண்டு வந்த முருகு இராஜேந்திர சோழன் பாண்டியனின் மணிமூடியை இலங்கையிலிருந்து மீட்டுக் கொண்டு வந்தது போன்ற சந்தோஷத்துடன் பேர்சை பவளத்திடம் கொடுத்தான்.

அந்த நாள் முருகுவுக்கும் பவளத்திற்கும் பொன்னான நாள் ஆகியது. அதன்பின் உலகை மறந்து இருவரும் காதலித்தனர்.

முருகு தனது தங்கைகளுக்கு திருமணம் செய்து வைத்தான். அதன் பின்னர் தனது திருமணத்தைப் பற்றி பெற்றோர் சகோதர சகோதரிகளுடன் சொன்னபோது அவர்கள் சம்மதிக்கவில்லை. பவளத்தின் வீட்டிலும் சம்மதம் கிடைக்கவில்லை.

இதனால் முருகுவும் பவளமும் இணைந்து தீர்மானித்து இருவரும் இரவோடிரவாக நீர்கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு ஓடிப் போயினர். திருகோணமலையில் திருமணத்தை முடித்துக்கொண்டு அங்கு நண்பர்களின் உதவியுடன் முருகு கடற்தொழில் செய்தான். அவர்களுக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர்.

அப்போது முருகுவின் நண்பன் ஒருவரின் திடீர் மறைவினால் நாலு பிள்ளைகள் அனாதைகளாய் இருந்தனர். முருகு அந்த பெண் பிள்ளைகளையும் தங்களுடைய பிள்ளைகளுடன் சேர்த்து பாதுகாப்போமா என்று மனைவி பவளத்திடம் கேட்டான். அவளும் அதற்கு சம்மதம் தெரிவித்து தலையை ஆட்டினாள். அதன்பின் அந்த நான்கு பெண் பிள்ளைகளும் முருகுவின் வீட்டிலேயே வளந்தனர். முருகு தனது கடும் உழைப்பினால் சேமித்த பணத்தைக் கொண்டு மீன் பிடிப் படகு ஒன்றை வாங்கினான்.

இப்பொழுது முருகுவின் பெற்ற பிள்ளைகள், வளர்த்த பிள்ளைகள் எல்லோரும் திருமணம் செய்து விட்டனர். இப்போது முருகு, முருகுஐயா என்ற பெயருடன் மனைவி பவளத்துடன் முதுமையில் அன்புடன் இணைந்து வாழ்கின்றார்.


முருகுஐயா முதுமை அடைந்த நிலையிலும் தற்போது அவரது வீட்டுக்கு அண்மையில் இருந்த பூங்காவுக்கு சென்று, அங்கிருந்த சீமெந்து பெஞ்சுகளை துப்பரவாக்குகிறார். முருகு ஐயா சம்பளம் இல்லாது சுத்தம் செய்யும் வேலையை மன நிறைவுடன் செய்கிறார்.


அந்த பூங்காவிற்கு வரும் காதல் ஜோடிகளும், மற்றவர்களும் அருவருப்பின்றி அந்த பெஞ்சுகளில் அமருவதற்கு வசதியாக அது அமைந்திருந்து. அவர்கள் அப்பெஞ்சுகளிலிருந்து உரையாடுவதை கண்டு முருகு ஐயாவின் மனம் நிறைவடைகிறது.

முருகு ஐயா சுத்தம் செய்த பின் ஒரு பெஞ்சில் ஓய்வாக அமர்ந்திருப்பார். அப்போது அங்கு வரும் கண்ணியமான இளைஞன் ஒருவன் முருகுஜயாவுடன் உரையாடுவான். ஒரு நாள் முருகுஜயா தன்னுடைய வாழ்வின் மகத்தான கதையை அந்த இளைஞனுக்கு சொல்லிக் கொண்டிருந்தார். குறித்த இளைஞன் அவரது தியாகத்தை எண்ணி மிகுந்த வியப்பை அடைந்தான். அவன் முருகு ஐயாவை வாழ்த்தியது மட்டுமல்லாமல் தானும் அவ்வாறு வாழ வேண்டும் என தீர்மானித்தான். இப்போது முருகு ஐயா புதிய வழிகாட்டியாக மக்கள் மனதில் விளங்குகிறார்.

**(யாவும் கற்பனையே)**

குப்பிளான்
**ஆ.மோகனசுந்தரம் ...**






திரு/திருமதி.செல்வி ..................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..................................

..................................

..................................

.................... ....................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
**போட்டி இல. 16**
**த.பெ.இல.834. கொழும்பு**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :16

**இடமிருந்து வலம்**

(01) இதனைப் பெறுவதற்கு இப்போது நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது.
(04) இதுவும் ஒரு நிறம். (திரும்பியுள்ளது)
(06) கலப்பை. (திரும்பியுள்ளது)
(07) அழிவு அல்லது சிதைவு.
(08) வீடு அல்லது கட்டடம் ஒன்றில் நுழையும் வழி.
(10) ஒரு செயலை நிறைவேற்றுவதில் காட்டும் தீவிர கவனம்.
(11) காற்று என்றும் சொல்லலாம். (திரும்பியுள்ளது)
(12) இதுவும் ஒரு சிற்றுண்டி.
(13) குளிர். (திரும்பியுள்ளது)
(15) உணவுக்குப் பயன்படுத்தும் காய் தரும் கொடி தாவரம். (திரும்பியுள்ளது)
(18) உறவு அல்லது சொந்தம்.
(19) கருத்து வேறுபாட்டால் ஏற்படும் சச்சரவு.
(21) வாழ்க்கை வரலாறு.
(23) எருதுக்கும் இப்படி ஒரு பெயர்.
(24) இளம் காளைமாடு திரும்பி ஓடுகிறது.

**மேலிருந்து கீழ்**

(01) இப்போது இதற்கும் பெரும் தட்டுப்பாடு.
(02) சோலை.
(03) பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்படும் ஒரு மலை. (தலைகீழ்)
(04) சிபாரிசு என்பதனை இப்படியும் சொல்லலாம்.
(05) தாவரங்களில் இலை, காய் என்பனவற்றுடன் இணைந்த மெல்லிய தண்டுப் பகுதி.
(07) மன்னர் ஆட்சிக்காலத்து பாதுகாப்புப் படை.
(09) ஒன்றைச் செய்யுமாறு விடுக்கப்படும் துணிவுமிகு அழைப்பு.
(10) நெருக்கடி அல்லது தட்டுப்பாடு.
(12) யமன் குழம்பிவிட்டான்.
(14) பொருட்களை நிறுக்கப் பயன்படுத்தப்படும் சாதனம். (குழம்பியுள்ளது)
(15) பரம்பரை.
(16) ஓர் உறவுமுறை.
(17) ஒத்துழைப்பு.
(20) அங்காடி.
(22) இடுப்புப் பகுதி. (தலைகீழ்)

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 15

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. ஒன்பது 04. சூரன் 06. பதுக்கல்
08. தித்திப்பு 09. காளை 11. மாடி
12. பாட்டன் 13. வேலி 14. சாது 15.மடி
16. விலாங்கு 18. அக்கா 20. குடை
21. கைதி

**மேலிருந்து கீழ்**

01. ஒத்திகை 02. பக்திமான் 03. துப்பட்டி
04. சூது 05. ரகளை 07. புல்
10. காவாலி 12. பாசாங்கு 13. வேடிக்கை
14. துலா 15. மகா 17. விடை
19. அதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 14

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**கே. ராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**இரண்டாம் பரிசு**

**எம்.எச்.என். சமீஹா,**
12B, மாளிகாஹேன,
பேருவளை.

**மூன்றாம் பரிசு**

**அனுராதா பாக்கியராஜா,**
88/1/1, பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு 06.

### பாராட்டு பெறுவோர்

**1. ஏ.எல்.ஏ. அசீஸ்,**
17/A, சிறிமல் மாவத்தை,
தெஹிவளை.

**2. முபாரக் சாரா,**
174, அல் முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 04.

**3. ரஸீயா வாஹிட்,**
இல. 26/2,
பெரிய பள்ளிவாசல் வீதி,
பதுளை.

**4. கோபிநாத் ஜெரிஷ்,**
209, மார்க்கண்டு வீதி,
பாண்டிருப்பு 01.
கல்முனை.

**5. எம்.ஆர். ஐய்னா ஷெய்னப்,**
இல. 117, அன்னல் வீதி,
மாஞ்சோலைசேனை,
கிண்ணியா 3.

**6. சி. லவன்ஆர்த்தன்,**
241/15, ரொக்ஹில், பதுளை.

**7. எம்.ஏ. அத்தாஸ்,**
141/1, குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**8. கே.எப். மில்ஹானி,**
14, புளியடி குறுக்கு வீதி,
ஏறாவூர் 6.

✦✦✦




## கசப்பு



ஒவ்வொரு ஆண்டும் "வானொலி ஆளுமை விருதுகள்" நிகழ்ந்து முடிந்து மறுகணம் கசமுகாக்களும் கசப்பு வில்லைகளும் தாராளம், தாராளம்!

கடந்த 21/03 திங்கள் கிழமை நடந்து முடிந்த வைபவத்திற்கு மறுநாளே முகநூலில் எதிர்வினைகள்.

ஒரு முக்கியப்பதவியிலிருப்பவர், 'ரூபவாஹினி' நேத்ரா தொலைக் காட்சியின் தமிழ்ச் செய்தி, கலாசாரப் பிரிவுப் பிரதி பணிப்பாளர் **யாகூப் உமர் லெப்பை**யின் பதிவால் என் மூத்த பேனைக்கு வேலை மிகக் குறைந்து போனது.

அவர் தன் முகநூல் பக்கத்தில் பதிந்திருப்பதில் ஒரு சில பகுதிகளை வழங்குகிறேன்.

★ கடந்த சிலகாலமாக கலாசார அலுவல்கள் திணைக்களத்தாரால் நடத்தப்பட்டு வரும் வானொலி மற்றும் தொலைக்காட்சி விருது விழாத் தேர்வுகளில் மிகக் கடுமையாகப் பாரபட்சங்கள் காட்டப் படுகின்றன.

"யாருக்கு விருது வழங்கப்படுகிறது என்பதில் தான் அந்த விருதின் கௌரவம்,, மேன்மை, பெருமை உள்ளது. அவ்விருதைப் பெறுபவர் உயர்ந்தபட்ச திறமைகளை தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும்.

★ உதாரணமாக, குறித்த ஒலி, ஒளிபரப்புப் பங்களிப்புக்கு விருது ஒருவருக்கு வழங்கப்படுமாயின் அதற்கு அவர் பொருத்தமா, இல்லையா என்பதை நேயர்களே தீர்மானித்து விட இயலும்.



ஏனெனில் விருதாளரின் பங்களிப்புகளைப் பல தடவை பார்த்தும் கேட்டும் பழக்கப்பட்டவர்கள் பாரபட்சமான முறையில் தனிப்பட்ட செல்வாக்கு அல்லது வேறு ஏதோ ஒரு வகையில் நடுவர்களைத் திருப்திப்படுத்திப் பெறலாம் என்ற முடிவுக்கு நேயர்கள் மிக இலகுவாக வந்து விடலாம்.

ஆகவே நடுவர்கள் என்போர், குறிப்பிட்ட துறைப்போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் அல்லது விண்ணப்பிப்போர் பணியாற்றும் துறை சார் நிறுவனத்தில் பணிபுரியாதவர்களாக அல்லது அவர்களுடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். அத்தோடு, தனக்குத் தெரிந்த அல்லது வேறு சிபாரிசுகளின் மூலம் ஒருவரைத் தேர்வு செய்து விருது வழங்குவது என்பது இறை நீதிக்கு சவால் விடும் ஒரு சங்கதியாகும்.

இவ்வாறு தர்க்கரீதியாக நியாயங்களை தனது முகநூல் அன்பர்களுக்கு எடுத்துரைக்கும், 'ரூபவாஹினி' பிரதிப் பணிப்பாளர் யாக்கூப் தன் பதவி நிலையை ஒரு புறத்தில் கொஞ்சம் ஓய்வெடுக்க வைத்து விட்டு, அந்த நான்கு நடுவர்களும் யார், எவர் எனத் துணிவையே துணை கொண்டு அடையாளப்படுத்தி உள்ளார்.

என் பேனை பெயர்களைக் குறிக்க வெட்கப் பட்டு "வேறொரு விதத்தில் அபிமானிகளுக்கு வெளிச்சமிடுகிறது.

ஒருவர் தலைமை நடுவர். இவர், இ.ஒ. கூட்டுத்தாபன வானொலித் தமிழ் சேவையில் கடமை யாற்றி ஓய்வில் இருப்பவர். இருந்தும், கிழமை தோறும் 'சிறுவர் மலர்' மாமா!

இன்னொருவர், இ.ஒ. கூட்டுத்தாபனத்தில் பிரதான செய்தி அறிக்கை வாசிப்பாளர். இவரும் ஓய்வு நிலை. ஆனாலும் புனரமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டுத் தமிழ் ஒலிபரப்பு அறிவிப்பாளர்.

மற்றொருவர், கொட்டாஞ்சேனை பாடசாலை ஒன்றின் அதிபராக இருந்தவாறே பகுதி நேர அறிவிப்பாளராகவும், பரீட்சைத் திணைக்கள அதிகாரியாகவும் கடமையாற்றி ஓய்ந்தவர்.

கடைசியான நாலாவது பேர்வழியோ, நில அளவை திணைக்களத்தில் நிலப்பரப்பு வரைபடங்களை உற்றுப் பார்த்தவாறே வானொலி நிலையத் தாழ்வாரத்தில் சஞ்சரித்த கலைஞர், (இப்போதும் முஸ்லிம் சேவை 'சஞ்சாரம்' நடைச் சித்திரத்தில் நடையோ நடை!)

முகநூல் பக்கத்தில் நெருடல்பட்டல் 'ரூபவாஹினி' பிரதிப் பணிப்பாளர் யாகூப் ஆதங்கப்படுவது, இந்த நால்வரும் ஓய்வு பெற்ற பிறகும் வானொலித் தாழ்வார நடைபாதையில் தள்ளாட்டம் போடுவதுடன் "விருது நடுவர்" பதவியைக் குத்தகைக்கு எடுத்து (99 வருடங்கள்) அங்கிருப்பவர்களுடன் வெளியில் தனியார் ஒலிபரப்பு நிலைய ஊழியர்களையும் எவ்வாறு மனச்சாட்சிக்கு மாறுபடாது தேர்வு செய்வார்கள் என்பதே.

நியாயம் நியாயம் நால்வரில் இருவராவது இ.ஒ. கூட்டுத்தாபனத்துடன் முற்றாக சம்பந்தமில்லா நடுவராக இருந்தால் யார் மனமும் ஏற்கும் ஒரு வேளை, தமிழ் வானொலித் தேர்வுக்கு நம் நாட்டில் நடுவர் பஞ்சமும் ஏற்பட்டிருக்கிறதோ? வடக்கு, கிழக்கு, தெற்கு மூன்று திசைகளும் விவரம் சொல்லட்டுமே!

## இனிப்பு 2

தமிழ்நாட்டில் இம்மாதத்தின் முதலிரு கிழமைகளிலும் சென்னையில் பெரிய அளவில் ஒரு புத்தகத் திருவிழா நடந்து முடிய, திருநெல்வேலி மாநகரிலும் சென்ற வாரம் ஒன்று.

இவற்றுக்கு மத்தியில் மூன்று பெரு நகரங்களில் நடந்திருக்கிற ஒரு சங்கதி இனிப்புச் சுவையை அள்ளி வழங்குகிறது.

என்ன இது, தமிழ்நாட்டவர் போக்கு இப்படியும் திசை திரும்பி விட்டதா எனப் பல ஆச்சரியக் குறிகளையும் பதிய வைக்கிறது.

புதுக்கோட்டை, விருதுநகர், தஞ்சாவூர் மூன்று முக்கிய நகரங்களில் இந்த விசித்திரம் நடந்திருக்கிறது.

**அங்கே திருமண வைபவங்களில் மணமக்களுக்கு சீர்வரிசையாக புத்தகங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன!**

"மொய்ப்பணம்" என்கிற பணப்பரிவர்த்தனை மெய்யாகவே ஒதுக்கி விட்டுக் காரியம் பார்த்திருக்கிறார்கள் இன்னொன்றை அறிமுகப்படுத்தி.

மதுரை மாநகரைத் தாண்டி சில பல கிலோ மீட்டர்களுக்கு அப்பால் நாம் சந்திக்கக்கூடிய நகரம் **"விருது நகர்"** இங்கே நடந்ததை மட்டும் விலாவாரியாக விவரிக்க விரும்புகிறது பேனை!

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே உள்ள எதிர்க்கோட்டை கிராமத்தை சேர்ந்த சுப்புராஜ் முத்துலட்சுமி தம்பதியின் மகன் நவநீதன். இவர் ஆட்டோமொபைல் துறையில் என்ஜினீயராக பணியாற்றி வருகிறார். இவருக்கும் விருது நகர் மாவட்டம் இனாம் மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் விஜயலட்சுமி தம்பதியின் மகள் அனிதாவிற்கும் எதிர்க் கோட்டை கிராமத்தில் உள்ள கோவிலில் திருமணம் நடைபெற்றது.

இந்த திருமணத்துக்கு மணமக்களின் நண்பர்கள் புத்தகங்களை பரிசளிக்க முடிவு செய்தனர். இதையடுத்து. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு. வாழ்க்கையில் எவ்வாறு வெற்றி பெறலாம். காமராஜரின் வாழ்க்கை வரலாறு உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட புத்தகங்களை மேளம், தாளம் முழங்க சீதனமாக ஊர்வலமாக எடுத்துச் சென்று மணமக்களுக்கு வழங்கினர்.

மணமக்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் என அனைவரும் இணைந்து புத்தகங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்று மணமக்களுக்கு பரிசு அளித்தனர். திருமணத்தின் போது மற்ற பரிசுகள் வழங்குவதை தவிர்த்து 500க்கும் மேற்பட்ட புத்தங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்று வழங்கிய நிகழ்வுக்குப் பெரும் வரவேற்பு வாழ்த்து திருமணத்துக்கு வந்த அனைவருக்கும் தாம்பூல பையில் புத்தகங்களை வைத்து மணமக்கள் வீட்டார் நினைவு பரிசுகளாக வழங்கிய சம்பவமும் நடந்தது.

இதேபோல் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த மோகன்குமார் பொலிஸாக பணியாற்றி வருகிறார். இவருக்கும் சாமுண்டீஸ்வரி என்பவருக்கும் திருமணம் நடந்தது. அப்போது நண்பர்கள் புத்தகங்களை வரசையாக வழங்கினர்.

வாசிப்பை நேசிக்க வைக்கும் ஒரு பழக்கத்தைத் திருமண வைபவங்களில் கொண்டு வந்துள்ள தமிழகத்தவரை, "நீங்கள் இந்த



இனிப்பை எல்லாம் செய்வது இந்த கனவிலா நனவிலா என வினவ வைக்கிறது.

நல்லது, நல்லது, அவர்கள் தொய்வில்லாமல் தொடரட்டும், அதே நேரத்தில் நாமும் ஈயடிச்சான் கொப்பியாக இதை நடைமுறைக்குக் கொண்டு வரலாமே?

முந்தப் போவது, வடபுலமா? தென்புலமா? அல்லது தேனகமா தகவலைத் தெரிவித்து இந்த மூத்த பேனைக்கும் ஓர் அழைப்பு புத்தங்களுடன் வரத்தயார்! தயார் நன்றி.




## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

**கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.**

**ஆமாம்,**

**இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.**

**நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.**

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:
**கொல்லுவதோ இளமை**
**தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்**
**கொழும்பு1O.**

# 19 உணர்வோடு இணைந்தால் வருவது உண்மைக்காதல் உடல்களோடு இணைந்தால் வருவது பிரிவின் மோதல்

பிரசன்னா இப்படி சொல்லியபிறகு, மெல்ல ஊர்ந்து சென்ற மதுமிதா,

காரின் டிக்கியைத் திறந்து, டயலில் உள்ள நட்களை கழற்றுவதற்கு தேவையான பொருட்களை எடுத்துக் கொடுத்தாள்.

விரைவாக செயல் பட்ட பிரசன்னா,

சிறிது நேரத்தில் பஞ்சான டயரை கழற்றி எடுத்து கொண்டு போய் தனது காரின் டிக்கியில் போட்டான்.

பிறகு,

மதுமிதாவையும் தனது காரில் ஏற்றிக் கொண்டு,

பெச்போடும் டயர் கடை ஒன்றை தேடிச் சென்றான்.

அதேநேரம்,

தாங்கள் வரும் காரைக் கொஞ்சம் பார்த்துக் கொள்ளும் படி பக்கத்தில் இருந்த ஒரு சிறிய வெற்றிலை கடைக்காரனிடம் சொல்லிவிட்டுத்தான் வந்தான் பிரசன்னா. காருக்குள் இருந்த அமைதிக்கு சமாதி கட்ட விரும்பிய பிரசன்னா

"இன்று காலை சாப்பாட்டையும் சாப்பிட முடியாமல் போய் விட்டது இல்லையா மது?" என்று கேட்டபடியே, ஓரக்கண்களால் மதுமிதாவைப் பார்த்தான்!

"ஓ... உங்களுக்கு பசிவந்து போலிருக்கே?" சொல்லிவிட்டு,

கவர்ச்சியாகச் சிரித்தாள் மதுமிதா.

"இல்லை... எனக்கு பரவாயில்ல... ஆனா உங்களுக்கு... பசி வந்துட்டா மாதிரி முகத்துல தெரியுதே...?"

"பசி வந்தாலும் இப்போது என்ன செய்வதாம்... எப்படியாவது .... பெச்சைப் போட்டுக் கொண்டு வழக்கமாக சாப்பிடப்போகும் ஓட்டலுக்கு சாப்பிடப் போகவேண்டியது தான்... அங்கே சாப்பாடு நல்லம் தானே...!"

"பக்கத்தில் டயர் கடை ஒன்று இருக்குமென்று நினைக்கிறேன்?" என்று பிரசன்னா சொல்லும் போதே,

"ம்... அந்தா இருக்கிறது ஒரு டயர் கடை!" என்று கொஞ்சம் சத்தமாகவே சென்னாள் மதுமிதா.

"ம்... நானும் பார்த்தேன் மது!" என்று சொல்லியபடியே அந்த டயர்கடையின் முன்னால் காரை நிறுத்தினான் பிரசன்னா.

டயர் கடையின் முன்னால் கார் நின்றதும்,

கடையில் அமர்ந்திருந்த ஓர் இளைஞன் ஓடி வந்தான்.

"சேர் காத்தடிக்கவா?"

"இல்லை டிக்கியில் ஒரு டயர் இருக்கு... அதில் காற்று இறங்கி விட்டது. கொஞ்சம் பாருங்களேன் என்றான் பிரசன்னா.

சொல்லிவிட்டு,

டிக்கியைத் திறந்து விட்டான்.

டயரை எடுத்து கழற்றிப் பார்த்த இளைஞன்,

"ஐயோ சேர் இந்த டியுபை போட முடியாது. ரொம்பவும் பழசாகிவிட்டது. புதுசுதான் போட வேண்டும்!" என்றான்.

"பரவாயில்லை போடுங்கள்... நாங்கள் சீக்கிரம் போக வேண்டும்!" என்றான் பிரசன்னா.

"இதோ ஐந்து நிமிசத்தில் போட்டுத்தாறேன் சேர்!" என்றவன் விரைந்து செயலில் இறங்கினான்.

எல்லாம் முடிந்த பிறகு,

மதுமிதா பணம் கொடுக்கப் போனபோது,

"வேண்டாம் மது.. நானே பணம் கொடுக்கிறேன்!" என்று சொல்லிவிட்டு,

தனது பர்ஸில இருந்து பணத்தை எடுத்துக் கொடுத்தான் பிரசன்னா.

அவளை தன் வசப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது அவனுடைய திட்டமாக இருந்தது.

பணத்தை கொடுத்து விட்டு,

மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தான் பிரசன்னா.

"என்னால் இன்று உங்களுக்கும் நேரமாகி விட்டது இல்லையா பிரசன்னா.,..?" அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்த படியே கேட்டாள் மதுமிதா.

"நேரமாகிவிட்டது தான் ஆனாலும் இன்றைக்கு ஒரு சான்ஸ் இருக்கிறது?"

"அது என்ன சான்ஸ்?"

"எங்களுக்கு இன்று ஒரு மீட்டிங் இருக்கிறது. அது மூன்று மணிக்கு நடக்கிறது... அதனால் ஹெட் ஓபீசுக்கு போகாமல் நேரடியாகவே மீட்டிங்குக்குப் போய் விடுவேன்!"

"ஓ... அப்படீன்னா அது எனது நல்ல நேரத்துக்காகவே நடக்கிற மட்டிங் போலவே இருக்குது. இல்லாட்டி நீங்களும் ஒபீசுக்கு லேட்டா போக வேண்டிய பிரச்சினை வந்திருக்குமே...!"

"இல்லை மது அதைப் பற்றிய கவலையில்லை உங்களுக்கு வேண்டாம். என்னுடைய வேலையைப் பற்றி எனது பொஸ்சுக்கு நன்றாகவே தெரியும். அதனால் அதைப் பற்றி யெல்லாம் நீங்கள் கவலைப்படத் தேவை இல்லை!"

"ஓ... அப்படீன்னா ஒபீசில் மட்டும்தான் உங்கள் கடமையை ஒழுங்காக செய்வீங்களோ... சாதாரண வாழ்க்கையில் அது இல்லையோ?"

மதுமிதா இப்படிக் கேட்டும்,



பிரசன்னாவுக்கு, தூக்கி வாரிப்போட்டது!

அவன் படாரென்று திரும்பி அவளைப் பார்த்தான்.

அவன் மனம் எண்ணியது.

இவள் ஏன் இப்படி ஒரு கேள்வியை என்னிடம் கேட்கிறாள்? எனது தனிப்பட்ட வாழ்க்கையில் நான் எப்படி நடந்து கொள்கிறேன் என்பதை அறியக் கேட்கிறாளா? நான் எப்படிப்பட்டவன் என்பதை தெரிந்து கொள்வதற்காகக் கூட இப்படி ஒருகேள்வியை கேட்டிருக்கலாம்."

"நீங்கள் இப்படி ஒருகேள்வியை என்னிடம் கேட்டீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் எனது சாதாரண வாழ்க்கையில் எனது கடமைகளையும் செய்து கொண்டு பிறருக்கும் உதவி செய்யும் ஒருவனாகத்தான் இருக்கிறேன்!" என்றான் அமைதியாக.

"ம்... அதெண்டால் உண்மை தான்... இப்போது எனக்காக எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறீர்கள்... இது, எவ்வளவு பெரிய உதவி?"

"அதைபுரிந்து கொண்டால் சரி... ம்... இப்படியே பேசிக் கொண்டே போனால் நாங்கள் போக வேண்டிய இடத்தையும் மறந்து விடுவோம்... இதோ வந்துட்டோம்!" என்று சொல்லியபடியே

மதுமிதாவின் காரின் அருகில் தனது காரை நிறுத்தினான்.

காரைவீட்டு இறங்கி டயரை மாற்றிக் கொடுத்தான்.

"ரொம்ப தேங்ஸ் பிரசன்னா... உங்களுக்கு நேரமாகி விட்டது.

நீங்கள் இனி போங்க!!! என்றாள் மதுமிதா.அவள் இப்படிச் சொன்னதும், படாரென்று திரும்பி, அவளை ஒருமாதிரியாகப் பார்த்தான் பிரசன்னா.

அந்த பார்வைக்கு, என்ன பொருள்?

**(இளமை வளரும்)**




# படித்ததும் பகர்வதும் 89



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### வெள்ளி விழா கண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்!

இலங்கையில் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் நலன் களை மேம்படுத்த ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், தனது சேவையில் 27வது வருடத்தில் கால்பதித்துள்ளது. 1995 ஜூன் 09 ஆம் திகதி 3 4 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட 'போரம்' இன்று சுமார் 900 அங்கத்தவர்களுடன் பலம் மிக்க அமைப்பாக வளர்ச்சியடைந்துள்ளது.

இ தன் ஸ்தாபகத் தலைவர், காலஞ்சென்ற எஸ். பி .சி. ஹலால்டீன் த னது மூன்று வருட தலைமைத்துவத்துக்கு பின் போரத்துக்கு பொருத்தமான தலைவராக சகோதரர் என். எம். அமீனை இனங்கண்டு தெரிவு செய்தார். 'முஸ்லிம் மீடியா போரம் என்றாலே என். எம். அமீன்தான்' எனும் அளவுக்கு இவ்வமைப்பை கட்டிக்காத்து, காத்திரமாக, சக்திமிக்க அமைப்பாக 24 வருடங்கள் வளர்த்தெடுத்த என். எம். அமீன் அவர்களது உழைப்பும், அர்ப்பணிப்பும், சேவையும் முஸ்லிம் ஊடகவியலாளர்களால் என்றும் மறக்க முடியாதவை.

SLMMF

முஸ்லிம்களுக்கான ஓர் அமைப்பாக இருந்தாலும், தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்கம், சுதந்திர ஊடக அமைப்பு, 'சப்மா' எனும் தெற்காசிய சுதந்திர ஊடக இயக்கம், பத்திரிக்கை ஆசிரியர்கள் சங்கம் என பல இனத்தவர்கள் அங்கம் வகிக்கும் ஏனைய அமைப்புகளோடும் மிக நெருக்கமாக கூட்டுச் சேர்ந்து, பொதுவாக எல்லா ஊடகவியலாளர்களுக்காகவும் குரல் கொடுத்து செயல்படுவதில் 'போரம்' வெற்றிகண்டுள்ளது.

முஸ்லிம் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளை தேசியமயப்படுத்தல், அவர்களுக்கு ஊடகத்துறை பயிற்சிகளை வழங்குதல், ஊடகத்துறைக்கான புலமைப் பரிசில்களை வழங்குதல், ஊடகவியலாளர்களின் பிள்ளைகளின் கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல், இயற்கை அழிவுகளினால் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல், ஊடகப்பணிக்கு துணைசெய்யும் வகையில் மடிக்கணினிகள், புகைப்பட கருவிகள் போன்றவற்றை வழங்குதல், நலிவுற்ற ஊடகவியலாளர்களுக்கு நிதி உதவிகளை வழங்குதல், மரணித்த ஊடகவியலாளர்களை நினைவூட்டி நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், வெளிநாட்டு பயிற்சிகளுக்கு ஊடகவியலாளர்களை அனுப்பிவைத்தல் போன்ற இன்னோரன்ன பணிகளை போரம் வெற்றிகரமாக முன்னெடுத்தது.

இவற்றுக்கெல்லாம் மேலாக முஸ்லிம்களின் முக்கிய பிரச்சினைகளை தேசிய மயப்படுத்துவதிலும், பொருத்தமானோரின் கவனத்துக்கு கொண்டு செல்வதிலும் போரம் குறிப்பிடத்தக்க பணியாற்றியுள்ளது. இவ்வாறு ஆக்கபூர்வமான பணிகளைச் செய்திருந்தாலும் செய்யத்தவறிய சில பணிகளும் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றையும் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பது புதிதாக தெரிவுசெய்யப்பட்டுள்ள நிருவாகக் குழுவின் மீதுள்ள பொறுப்பாகும்.


போரத்தின் 25வது வருட மாநாடு அண்மையில் நடைபெற்றபோது, 24 வருடங்களின் பின்னர் அதன் தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. போரத்தின் புதிய தலைமைத்துவத்துக்கு ஒலிபரப்பாளர் புர்கான் பீ. இப்திகார் தெரிவு செய்யப்பட்டுள்ளார். போரத்தின் முதல் பெண் தலைவியாகவும் தெரிவாகியுள்ள இவர் மீதுள்ள பொறுப்புக்கள் பாரியனவாகும். புதிய தலைவிக்கும், புதிய நிருவாகக் குழுவுக்கும் வாழ்த்துக்களை தெரிவிப்பதோடு போரத்தின் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையவும் விசேடமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

## நெஞ்சுக்கு நீதி

ஏழைகள் படும் துயரை தினம் கண்டும்
ஏன் உள்ளம் கடுகளவும் கசியவில்லை
தேவைகள் மலையளவு நிறைந்திருந்தும்
நிறைவேற்ற மனமேனோ மசியவில்லை

## புது வரவு

### 'யாவரும் கேளிர்'



தனது 80வது அகவையை கொண்டாடிய மூத்த எழுத்தாளரும், சர்வதேச புகழ் பெற்ற பிரபல "ஞானம்" மாத சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும், பதிப்பாளருமான டாக்டர் தி. ஞானசேகரன் அவர்களது 'யாவரும் கேளிர்' நூல் எம் கரம் கிட்டியுள்ளது. தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் தொடர்ச்சியாக 75 வாரங்கள் எழுதிய பத்தி எழுத்துக்களின் தொகுப்பே இந்நூல்.

இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பலதரப்பட்டவர்களின் வாழ்க்கை குறிப்புகளையும், உலக அதிசயங்களையும், நூல் அறிமுகங்களையும், கலை, கலாசாரம், ஆன்மிகம் சார்ந்த பலதரப்பட்ட விடயங்களையும் அவர் 'யாவரும் கேளிர்' பத்தியில் வாராந்தம் சிறப்புற எழுதிவந்தார். வாசகர்களுக்கு புதிய அனுபவங்களையும், அறிவுசார் விடயங்களையும் இவை அள்ளி வழங்கின.

இவற்றின் தொகுப்பாக சுமார் 400 பக்கங்களில், நிறைய படங்களுடன் 'யாவரும் கேளிர்' நூல்வடிவில் மலர்ந்துள்ளது. வாரமஞ்சரியில் வாசித்தோரும், வாசிக்காதோரும் இவ்வனைத்து விடயங்களையும் ஒரே சூலில், ஒன்றாக, நிறைவாக வாசிக்கும் வாய்ப்பை இந்நூல் மூலம் பெறுகின்றனர். சுயமாக வாசிக்கவும், பிறருக்கு பரிசளிக்கவும், நூலகங்களில் வைத்திருக்கவும் பொருத்தமான, தகுதியான புத்தகம் இது.

நூல்: **யாவரும் கேளிர்**, ஆசிரியர்: **தி. ஞானசேகரன்**, முதற்பதிப்பு: **2022**, பக்கங்கள்: **vi + 396**, விலை: **ரூபா. 1000/=**, தொடர்புகளுக்கு: **0112586013**

## தகவல் களஞ்சியம்

### கண்டியில் சுரங்கப்பாதை

இலங்கையின் வாகனப் போக்குவரத்திற்கான நீண்ட சுரங்கப்பாதை கண்டியில் நிர்மாணிக்கப்படவுள்ளது. கண்டி சுதுஹும்பொல தொடக்கம் தென்னகும்புர வரையான இப்பாரிய சுரங்கப்பாதை ஐந்தரை கிலோமீற்றர் நீளமுள்ள இரட்டை சுரங்கப்பாதையாக அமையும்.



இந்த சுரங்கப்பாதையானது கண்டி தெய்யன்னவெலயிலிருந்து சுதுஹும்பொல வரை 900 மீற்றர்களாகவும், சுதுஹும்பொலவில் இருந்து போகம்பர வரை 660 மீற்றர்களாகவும், போகம்பரையிலிருந்து அம்பிட்டிய வரை 1120 மீற்றர்களாகவும், அம்பிட்டியவிலிருந்து தென்னகும்புர வரை 2680 மீற்றர்களாகவும் நவீன வசதிகளோடு அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

தென்னகும்புர முதல் கண்டிக்கு வரை அனைத்து வாகனங்களும், இரு வழிப்பயணத்துக்கு இந்த சுரங்கப்பாதையை பயன்படுத்த முடியுமாக இருக்கும்.

இத்திட்டத்துக்கான செலவு 252 மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் 199 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொரிய உதவியாகும். எஞ்சியவை இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு 2026 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## சிந்தனை செய் மனமே

### வாழ்வும்! சாவும்!!

வீட்டு வாடகையை என்னால் கட்டமுடியவில்லை. எனது வாடகை வீட்டில் இருந்து உரிமையாளரால் நான் வெளியேற்றப்படவிருந்தேன். முகநூலில் உதவி கேட்டு பதிவிட்டிருந்தேன். கிடைத்ததெல்லாம் லைக்குகள் மாத்திரமே.

எனது நட்புப் பட்டியலில் இருக்கும் 250 நண்பர்களுக்கு 30,000 ரூபாய் கேட்டு தனிப்பட்ட செய்திகளை அனுப்பினேன்.



பத்து பேர் மாத்திரம் பதிலளித்தார்கள். அதில் ஆறு பேர் உதவி செய்ய முடியாத நிலையில் இருப்பதாகக் கூறினார்கள். மீதி நான்கு பேரில் ஒருவர் மட்டுமே உதவி செய்தார். ஏனையோர் எல்லோரும் சாக்குப் போக்குச் சொன்னார்கள். எனது தொலைபேசி அழைப்புகளுக்குக் கூட பதில் சொல்லவில்லை.

இறுதியில் நான் எனது வாடகை வீட்டை விட்டு வெளியேற்ற ப்பட்டேன். தூங்குவதற்குக் கூட எனக்கு ஒரு இடம் இருக்கவில்லை.என்ன செய்வதென்று தெரியாமல் இருட்டில் நடந்து கொண்டிருந்த போது எனது பையை ஒரு திருடன் பிடுங்கிக் கொண்டு ஓடினான். ஓடிய வேகத்தில் திருடன் காரில் அடிபட்டு இறந்து விட்டான்.

அடுத்த நாள், நான் இறந்துவிட்டதாக செய்தி வேகமாகப் பரவியது. திருடன் இறந்ததை நான் இறந்ததாக மக்கள் எண்ணிவிட்டார்கள். சுமார் 2500 பேர் எனது முக நூல் பக்கத்தில் எனக்கு அனுதாபம் தெரிவித்து எழுதினார்கள். என்னை அவர்களுக்கு எப்படி அறிமுகமானது, நான் எவ்வளவு உன்னதமான பிறவி என்றெல்லாம் அபாரமாக எழுதினார்கள்.

'எனது விசுவாசமான நண்பர்கள்' என்ற பெயரில் ஒரு குழு அமைக்கப்பட்டது. சுமார் மூன்று லட்சம் பணம் சேர்த்தார்கள். எனது இறுதிச் சடங்கன்று 100 ஏழைகளுக்கு விருந்தளிப்பதாக அறிவித்தார்கள். என்னோடு வேலை செய்தவர்கள் எனது சவப்பெட்டிக்கும், வருகையாளர்களுக்கான கதிரைகளுக்கும், என்னைச் சுற்றும் ஆடைகளுக்கும் ஒரு லட்சம் பணம் சேர்த்தார்கள். 30,000 ரூபா பெறுமதியான சவப்பெட்டியில் வைத்து நான் புதைக்கப்படுவதாக திட்டமிடப்பட்டது. அந்த 30,000 ரூபா பணம்தான் நான் வாழத் தேவையாக இருந்த பணம். எனது மரணச் சடங்கில் என்னைப்பற்றி எல்லோரும் பெரிதாக பேசினார்கள். பின்னர் பலரும் எழுதினார்கள்.

ஆனால், நான் இன்னும் தூங்குவதற்கு ஒரு இடம் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன். திடீரென நான் அவர்கள் முன் தோன்றினால் என்னைப் பேய் என்று நினைத்து ஓடிவிடுவார்களோ என்ற பயத்தில் அவர்களை சந்திக்க நான் போகவில்லை..

## பேசும் படம்




இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# உலக முகாமைத்துவ அறிவின் ஊற்று திருக்குறள்



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்



கே. பத்மநாதன் 01

**ஐரோப்பாவில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துமுகமாக தங்களது வர்த்தகத்தை பெருப்பிக்கும் நோக்கத்தோடு ஐரோப்பியர்கள் வேறு நாடுகளுக்கான குறிப்பாக தூரகிழக்கு நாடுகளுக்கான கடல் வழிகளை கண்டுபிடிக்க முயற்சி செய்தார்கள். இந்த முயற்சியின் ஒரு பகுதியாக இந்தியாவிற்கான கடல் வழியைக் கண்டுபிடிக்கு முகமாக வஸ்கொடகாமா மற்றும் கிறிஸ்ரோபர் கொலம்பஸ் உட்பட மேல் நாட்டவர்கள் பலரும் முயன்றார்கள். இதற்கு முக்கிய காரணமாக இருந்தது இந்தியாவிலும் இலங்கை போன்ற நாடுகளிலும் காணப்பட்ட அளவற்ற வளமும் செல்வமுமாகும் என்பது வெளிப்படையான உண்மையாகும்.**

இந்தியாவையும் இலங்கை போன்ற நாடுகளையும் சேர்த்து அடிமைப்படுத்துவதன் மூலம் இந்த நாடுகளில் காணப்பட்ட அளவற்ற வளத்தையும் செல்வத்தையும் தம் வசப்படுத்தி தமது நாடுகளை வளப்படுத்துவதற்காகவே இந்தியாவிற்கான கடல் வழியை கண்டுபிடிக்க ஐரோப்பியர்கள் முயன்றதுடன் அதில் வெற்றியும் பெற்று இந்தியாவோடு சேர்த்து இலங்கை உட்பட பல நாடுகளையும் பல நூற்றண்டுகள் ஆட்சி செய்து பெரும் வளத்தையும் செல்வத்தையும் சுரண்டி தம் நாடுகளை வளப்படுத்தினார்கள் என்பது வரலாறு எமக்கு கூறும் செய்தி .

ஒரு நாட்டின் செல்வச்செழிப்பு அல்லது பொருளாதார அபிவிருத்தி என்பது தானாக ஏற்படுவதில்லை மாறாகச் சிறந்த முகாமைத்துவ அறிவுகளினதும் பல்வேறுபட்ட திறன்களினதும் வளங்களினதும் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் காரணமாகவே இது சாத்தியமாகும் என்பது தெளிவான முடிவு. எனவே பண்டைய இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் அவற்றிற்கே சொந்தமான முகாமைத்துவ அறிவுகள், திறன்கள், வளங்கள் இருந்ததன் காரணமாகவே அத்தகைய ஒரு செல்வச்செழிப்பு இந்நாடுகளில் காணப்பட்டிருக்க வேண்டும் அல்லது பேணப்பட்டிருக்க வேண்டும் .



இத்தகைய பண்டைய இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் பயன்பட்ட முகாமைத்துவ அறிவே பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் மேலைத்தேசத்தவர்களால் ஒரு விசேடமானதுறையாக வளர்த்தெடுக்கப்பட்டதாக கருதப்படுகிறது. உதாரணமாக மேலைத்தேசத்தவர்களால் முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் வழக்கு முறை (Casemethod) ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பஞ்சதந்திரக் கதைகளில் பல்வேறு சிக்கல்களையும் தீர்ப்பதற்கான உபாயமாகப் பயன்படுத்தப்பட்டு வருவது கண்கூடு .

உண்மையில் முகாமைத்துவம் என்பது பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய பகுதியாகக் கொள்ளப்படுகின்ற அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளின் தொகுப்பாகும்.

இன்றைய நவீன முகாமைத்துவ அறிவின் ஊற்று மூலமாக இந்து மற்றும் யூதமதக் கருத்துக்கள் இருப்பதாக நவீன முகாமைத்துவ அறிவியலாளர்கள் கூறுகிறார்கள். எனவே இவர்களின் கருத்துப்படி நவீன முகாமைத்துவக் கோட்பாடுகளின் ஊற்றாக கருத்துச் செழிப்பு மிக்க இந்துமதமும் செல்வச்செழிப்பு மிக்க பண்டைய இந்தியாவும் இருந்திருக்கின்றனவென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இந்திய முகாமைத்துவ அறிவு மிகப் பரந்ததாகவும் ஆழமானதாகவும் காணப்படுவதுடன் இன்றைய நவீன முகாமைத்துவக் கோட்பாடுகளில் அதன் தாக்கம் புறக்கணிக்க முடியாததாக உள்ளதாகவும் முகாமைத்துவ அறிஞர்கள் கருதுகிறார்கள் .

இவ்வாறு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தோன்றிய பண்டைய இந்தியாவின் அறிவுசார் பண்பாட்டின் அல்லது விசாலித்த இந்திய தத்துவஞானத்தின் தவிர்க்கமுடியாத அங்கமாகவிருந்த அல்லது இருக்கின்ற திருக்குறள் இந்திய முகாமைத்துவ அறிவின் அல்லது உலக முகாமைத்துவ அறிவின் ஊற்றாக காணப்படுகிறது என்பதை மேலை நாட்டினர்கள் உள்ளடங்கலாக முகாமைத்துவ அறிஞர்கள் பலர் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் .

### திருவள்ளுவரின் வரலாறு

திருவள்ளுவரின் தோற்றம், அவரது இயற்பெயர், குடும்ப வாழ்வு, மறைவு, குடும்பப் பின்னணி, பெற்றோர், சமூக சமயப் பின்னணி பற்றி எந்தவிதமான சான்றுகளும் இல்லாத போதும் பழந்தமிழ் இலக்கியமான திருக்குறளை இயற்றியவர் வள்ளுவர் குலத்தைச் சார்ந்தவராக இருக்கக்கூடும் என்ற வரலாற்று நம்பிக்கையின் அடிப்படையில் அல்லது ஊகத்தின் அடிப்படையில் திருக்குறளின் ஆசிரியருக்கு திருவள்ளுவர் என்ற காரணப்பெயர் அமைந்திருக்கலாம் என்று தமிழ் அறிஞர்கள் கருதுகிறார்கள் .

திருவள்ளுவர் ஆதிபகவன் என்ற பெற்றோருக்குப் பிறந்ததாகவும் மயிலாப்பூரில் வாழ்ந்து வந்தார் என்றும் சில தமிழ் அறிஞர்களாலும் இல்லை அவர் மதுரையில் வாழ்ந்து வந்தார் என்று திருவள்ளுவமாலையின் 21 ஆம் செய்யுள் அடிப்படையிலும் சில தமிழ் அறிஞர்களாலும் கூறப்படுகிறது . ஆனால் 2005 இல் அமைக்கப்பட்ட கன்னியாகுமரி வரலாற்று, கலாசார ஆய்வு நிலையத்தின் மூன்று பேர் கொண்ட ஆய்வுக் குழு தற்போதுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமமான திருனாயனார்க்குறிச்சியில் பிறந்தார் என்கிறது. அவரின் மனைவி பெயர் வாசுகி என்றும் ஊகங்களின் அடிப்படையில் நம்பப்படுகிறது.

திருவள்ளுவரின் காலம் பற்றி பல்வேறு அறிஞர்கள் காலத்திற்கு காலம் தங்களது ஆய்வின் அடிப்படையில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்திருக்கிறார்கள். வி.ஆர்.ஆர். தீட்சிதர் திருவள்ளுவரின் காலம் கி.மு முதலாம் நூற்றாண்டு என்று கூறும்போது சோமசுந்தர பாரதியார். இராசமாணிக்கனார் போன்றவர்கள் கி.மு முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டாக இருக்கலாம் என்று கூறுகிறார்கள் . வரலாற்றாசிரியர் கே. கே. பிள்ளை திருவள்ளுவரின் காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டின் ஆரம்பத்திற்குரியது என நம்புகிறார். கமில் சுவலபில் போன்ற மேலைநாட்டு தமிழறிஞர்கள் உட்பட பல தமிழறிஞர்கள் திருக்குறள் சங்கம் மருவியக்காலத்தைச் (கி.பி. 4ம் நூற்றாண்டிற்கு பின்) சேர்ந்தது என்று கூறுகிறார்கள்.

"தெய்வம் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" என்னும் குறளை
சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையில்
"தெய்வம் தொழாஅள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்" என்று
பாடுவதன் மூலமும் இளங்கோ வடிகள்
"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழுதகை திண்ணிதால்" என்று
பாடுவதன் மூலமும்
"பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்" என்னுங் குறளை
இளங்கோவடிகள்
"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்" என்று
பாடுவதன் மூலமும் மேற்கோள் காட்டி உள்ளனர் . மேலும் பல திருக்குறள் கருத்துக்கள் பல புறநானூறுப் பாடல்களிலும் (புறம். 34, 63, 182, 312). நற்றிணையிலும் (355) எடுத்தாளப்பட்டு இருப்பதாக அறிஞர்கள் கருதுகிறர்கள் . எனவே திருக்குறளானது சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்கும் புறநானூறு நற்றிணைக்கும் காலத்தால் முந்தியது என்பது இவ் அறிஞர்களின் கருத்தாகும் .

திருவள்ளுவர் "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப" (1434)
என்னுந் தொல்காப்பியப் பாடலை

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்" (28) என்னுங் குறளிலும்,
"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான" (981)
என்னுந் தொல்காப்பியப் பாடலை
"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்

பெண்ணிற் பெருந்தக்க தில்" (1137) என்னுங் குறளிலுந் தழுவியிருப்பதையும் காணலாம் .

அதே போன்று "மாவும் மாக்களும் ஐயறி வினவே" (1531) "மக்கள் தாமே ஆறறி வுயிரே" (1532) என்று, ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு உள்ளவரை மக்கள் என்றும் அவ்வாறு அல்லாதவரை மாக்கள் என்றும், மக்களை இரு வகுப்பினராகத் தொல்காப்பியர் பிரித்த மாதிரியே

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்" (410)
"அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்" (997)
"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்" (1071)
என்னுங் குறள்களிற் பண்பட்ட மாந்தரை மக்கள் என்றும்,
"கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து" (329)
"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்" (420)

என்னுங் குறள்களில் பண்படா மாந்தரை மாக்கள் என்றும் எடுத்தாண்டு இருப்பதனால் சில தமிழறிஞர்கள் திருவள்ளுவரின் காலம் தொல்காப்பியருக்கு பிற்பட்டது என்கிறார்கள். எனினும் மறைமலை அடிகள் குறிப்பிட்ட கி.மு 31 ம் ஆண்டு என்பதே இன்று திருவள்ளுவரின் காலமாக தமிழ் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வள்ளுவர் ஆண்டைக் கணிக்கும்போது ஆங்கில ஆண்டுடன் 31 ஆண்டுகள் சேர்க்கப்படுகின்றன.

**( தொடரும் )**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 மார்ச் 27 ஞாயிற்றுக்கிழமை
ShaLini Suresh
Model and Actor

# அப்பாவி யானை!



ஹவாயில் இருக்கும் சர்க்கஸ் நிறுவனம் ஒன்றில் இரண்டு ஆண்டுகள் துன்புறுத்தலுக்கு உள்ளான ஹைக்கி என்ற யானை காயங்களுடன் அங்கிருந்து தப்பிச் செல்ல முடிந்தது. ஆனால், 1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 24 ஆம் திகதி வீதி வழியே ஓட்டம் பிடித்த அந்த யானைக்கு முப்பது நிமிடங்கள் கூட உயிர் தப்ப முடியவில்லை. யானையை கட்டுப்படுத்த பொலிஸார் முயன்றபோதும் அது முடியாமல் போக யானை மீது 86 தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அது வீதியில் விழுந்து உயிரிழந்தது. ஆனால் இறக்கும் முன் எடுக்கப்பட்ட இந்தப் படத்தில் யானையின் கண்கள் ஆயிரம் கதைகள் சொல்லும்.

# குண்டு மழை பொழிந்த நாடு



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால் உலகில் அதிகம் குண்டு வீசப்பட்ட நாடாக லாவோஸ் உள்ளது. 1964 தொடக்கம் 1973 ஆம் ஆண்டு வரை அமெரிக்கா அந்த நாட்டில் மழை போல குண்டு வீசித் தள்ளியது. வியட்நாம் போரில் ஆயுத விநியோகத்தை தடுக்கும் முயற்சியாகவே அந்த நாட்டில் குண்டு வீசப்பட்டது. அதாவது அமெரிக்கா 9 ஆண்டுகளில் அந்த நாட்டில் நிமிடத்திற்கு சராசரியாக 9 குண்டுகளை வீசி இருக்கிறது. ஒட்டுமொத்தமாக இரண்டு மில்லியன் தொன்கள் வரை குண்டு வீசப்பட்டது. அதாவது அப்போது லாவோசில் வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் நிகராக தலா ஒரு தொன் குண்டு அளவு விழுந்திருக்கிறது. வியட்நாம் போர் முடிந்த பின்னரும் கூட வெடிக்காத குண்டுகளால் லாவோசில் 20,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது தான் பரிதாபம்.

# கொலை மர்மத்தை அவிழ்த்த வரட்சி

அமெரிக்காவின் தெற்கு டகோடாவில் 1971 ஆம் ஆண்டு பமிலா ஜக்சன் மற்றும் செரில் மில்லர் என்று இரு உயர் கல்லூரி செல்லும் பெண்கள் காணாமல் போனார்கள். இது ஒரு பயங்கர நிகழ்வாக ஊரெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல்படி டேவிட் லைக்கன் என்பவர் தான் இதன் பின்னணில் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டது. இந்த லைக்கன் என்பவர் அப்பாவி அல்ல. கற்பழிப்பு மற்றும் கடத்தல் குற்றச்சாட்டில் சிறை தண்டனை அனுபவித்தவர்.



பமிலா ஜக்சனின் அண்டை வீட்டார் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலமும் லைக்கனுக்கு எதிராக இருந்தது. அதாவது பமிலாவுக்கும் லைக்கனுக்கும் வாக்குவாதம் ஒன்று ஏற்பட்டதை கேட்டதாகவும் லைக்கன் தனது கையை கார் கதவில் வைத்து மூடியதாக பமிலா சொன்னதாகவும் கூறப்பட்டது.

லைக்கனின் சகோதரி கூட அவருக்கு எதிராக வாக்குமூலம் அளித்திருந்தார். ஜக்சன் மற்றும் மில்லரின் உடல்கள் தமது வீட்டுப் பண்ணையில் இருந்ததை ஒரு மயக்கநிலையில் கண்டதாக அவர் குழப்பமான வாக்குமூலத்தை கூறியிருந்தார். தனது சகோதரரின் குற்றத்தை தமது பெற்றோர் மூடி மறைத்ததாகவும் அவர் ஒரு வலுவான வாக்குமூலம் ஒன்றை அளித்திருந்தார்.

கடைசியில் சிறைச்சாலை உளவாளி ஒருவரும் லைக்கன் இந்தத் தப்பைச் செய்ததை ஒப்புக்கொண்ட குரல் பதிவையும் முன்வைத்தார். ஆனால் அந்தக் குரல் லைக்கன் உடையது அல்ல என்பது தெரியவந்தது.



பொலிஸார் லைக்கனின் வீட்டுப் பண்ணையை சோதித்தபோதும் அந்தப் 17 வயது யுவதிகளை அவர் காணாமல் செய்ததற்கான எந்த ஆதரமும் கிடைக்கவில்லை. என்றாலும் அந்தக் குற்றச்சாட்டு லைக்கன் தலையிலேயே விழுந்தது. அவர் சிறை செல்ல வேண்டியதாயிற்று.

அந்த சம்பவத்தை உலகமே மறந்திருந்தது. ஆனால் 2013 ஆம் ஆண்டு தெற்கு டகோடாவில் பெரும் வரட்சி ஏற்பட்டது. ப்ரூலே க்ரீக் ஆற்றின் நீர் மட்டம் வரலாறு காணாத அளவுக்கு குறைந்தது. அப்போது ஆற்றுக்குள் தலை குப்புற விழுந்த நிலையில் கார் வண்டி மூழ்கி இருப்பது கண்டறியப்பட்டது. அதனை வெளியே எடுத்துப் பார்த்தால் 1960 இல் தாயரிக்கப்பட்ட ஒன்று. காரின் முன் பக்கத்தில் இருவரது எழும்புகள் காணப்பட்டன.

மரபணு சோதனை செய்து பார்த்ததில் அது 42 ஆண்டுகளுக்கு முன் காணாமல் போன பமிலா மற்றும் செரில் இருவருடையது என்பது உறுதியானது. அவர்களை கொன்றதாக லைக்கன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு கைவிடப்பட்டது. காரை வேகமாகச் செலுத்தியே இந்த விபத்து நேர்ந்திருப்பதாக விசாரணையில் உறுதியானது.

# குப்பை அள்ளிய ஆடம்பரக் கார்




இந்தியாவின் ஆழ்வார் மாகாராஜா ஜெய் சிங் பிரபாகர் 1920 இல் 7 ரோல்ஸ் ரோய்ஸ் கார்களை இந்தியாவுக்கு எடுத்து வந்தார். ஆனால் அவர் அந்தக் கார்களை ஆடம்பரத்திற்கு பயன்படுத்தவில்லை. ஊரில் குப்பை அள்ளப் போட்டுவிட்டார். இங்கிலாந்தில் தான் சந்தித்த அவமானத்திற்கு பழி தீர்க்கவே அவர் இந்த வேலையைச் செய்தார். ரோல்ஸ் ரோய்ஸ் கார்களை வாங்கும் பெரும் ஆர்வத்தோடு தான் அவர் இங்கிலாந்து சென்றார். கார் காட்சி அறையில் கார்களை ஓட்டிப் பார்க்க வேண்டும் என்று கேட்டபோது அவருக்கு அதற்கான வாய்ப்பு மறுக்கப்பட்டது. செய்கிறேன் பார் உனக்கு வேலை என்று, ரோல்ஸ் ரோய்ஸ் கார்களில் தும்புத்தடியை கட்டி அந்தக் கார் ஊர் வழிய முழுவதும் குப்பை அள்ளியது.

# செப்டெம்பர் 11 ஐ வர்த்தகமாக்க முயன்றவர்

2001 செப்டெம்பர் 11, அமெரிக்காவின் இரட்டை கோபுர தாக்குதல், பெண்டகன் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரம். இரண்டாவது விமானம் இரட்டை கோபுரத்தை தாக்கும் தருணத்தில் அமெரிக்கர்கள் மாத்திரமல்ல உலகமே அதிர்ச்சியில் பார்த்துக் கொண்டிருந்தன. ஆனால் இஸ்ரேலில் பிறந்த தொழிலதிபர் மொட்டி ஷரிபேர்க்கிற்கு வேறு மாதிரி யோசனை தோன்றியது. அந்த தருணத்திலேயே அவர் ‘2001 செப்டெம்பர் 11’ என்ற பெயரில் வர்த்தக முத்திரை ஒன்றை பதிவு செய்ய அமெரிக்க காப்புரிமை மற்றும் வர்த்தக முத்திரை அலுவலகத்திற்கு விண்ணப்பித்தார். இந்த திகதியில் காப்புரிமை பெற்றால் நல்ல வர்த்தகம் பார்க்கலாம் என்பது அவரது நினைப்பு. ஆனால் அந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.



# விண்வெளியில் சஞ்சரித்த முதல் மனிதன் யூரி ககாரின்

**பூமியின் சூழலை விட்டு நீங்கி விண்வெளியில் சஞ்சரித்து வரலாற்று சாதனை படைத்த முதல் மனிதன் யூரி ககாரின் மிகவும் ஏழைக் குடும்பத்தில் 1934 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் திகதி ரஷ்யாவின் மேற்குப் புற எல்லையிலுள்ள குளுஷினோ எனுமிடத்தில் அலெக்ஸியேவிச் ககாரின், அனா டிமோபிஈனா தம்பதியினருக்கு நான்கு பிள்ளைகளில் மூன்றாவதாக பிறந்தார்.**

யூரி ககாரினின் தந்தை பயிற்சி பெற்ற தச்சு தொழிலாளர், தாயார் பால் பண்ணை மாடுகளை பராமரிப்பவர் ஆவர்.

யூரி ககாரின் மொஸ்கோவிற்கு அருகிலுள்ள லூரயிபெர்ஸ்டி என்னுமிடத்தில் சாதாரண பள்ளியில் படித்தார். அதற்கு பிறகு சாராடாவ் தொழில் நிறுவனத்தில் பொறியியல் வடிவமைப்பாளராக பணிபுரிந்தார். இருந்தபோதிலும் அவரது நீண்டகால கனவு, தான் ஒரு விமான ஓட்டியாக வர வேண்டுமென்பதுதான். 1955இல் தொழில்நுட்பத்தில் பட்டப்படிப்பு முடித்து, சாராடோ விமான அகடெமியில் பைலட் படிப்பை முடித்தார். அதன் பிறகு ஓரன்பர்க் விமான பள்ளியில் சேர்ந்து 1957இல் அங்கு அவர் எயார்போர்ஸ் பைட்டர் பைலட் என்ற பட்டம் பெற்று பின்பு சோவியத் விமானப்படை பிரிவில் பணிபுரிந்தார். அவருடைய இலட்சியம், தான் விண்வெளி வீரராக வர வேண்டும் என்பதுதான். பல்வேறு தேர்விற்கு பிறகு விண்வெளி வீரரானார்.

விண்வெளிவீரர் என்றால் மிக மனவுறுதி உடையவராகவும் மிகத்தீவிர அமைதித்தன்மை உடையவராகவும் ஆளுமை, பொறுமை, உடலியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் கடும் துணிவு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

இவ்வகையான தகுதிகள் கொண்ட 20 விண்வெளி வீரர்கள் 1960 இல் மனிதனை விண்வெளிக்கு அனுப்பும் சோவியத் விண்வெளித் திட்டத்தில் இணைந்து கொண்டனர். இரகசிய வாக்கெடுப்பின் மூலம் விண்வெளிக்கு அனுப்புவதற்கு முதல் மனிதனாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடத்தால் யூரி ககாரின் தெரிவு செய்யப்பட்டார்.

1961 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி வொஸ்டொக்1 விண்கலத்தில் யூரி ககாரின் பயணித்தார். சுமார் 108 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தார்.

விண் பயணத்திற்கு 20 நிமிடங்களுக்கு முன்பு பேழையில் கட்டப்பட்டிருந்த நிலையில் விண்வெளிக்கு சீறிப் பாய இருக்கும்போது அவருடைய நாடித்துடிப்பு சீராக ஒரு நிமிடத்திற்கு 64 தடவைதான் இருந்ததாக ஒரு குறிப்பு தெரிவிக்கிறது.

விண்வெளி பயணத்திற்கு முன்னர் யூரி ககாரின் நலமாகவும் நல்ல உடல் ஆரோக்கியத்துடனும் இருந்தார். அவருக்கு இந்த விண்வெளிப் பயணம் வெற்றியை அளிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. அவரது திட்டம் மிகவும் சவாலானது. தொழில்நுட்ப வல்லுநர்கள், விஞ்ஞானிகள், என்ஜினியர்கள் மற்றும் தோழர்கள் அவருடைய வெற்றியை குறித்து ஒரு துளி கூட சந்தேகப்படவில்லை. அவர் சென்ற விண்கலம்



மிகச்சிறந்ததாக வடிவமைக்கப்பட்டது. விண்வெளி ஓடம் விண்வெளியில் நுழைந்தபோது அதனுடைய செயல்பாடு, அதிர்வு, சத்தம் போன்றவை அவரிடத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

விண்வெளி சுற்றுப்பாதையில் நுழைந்தபோது அவர் இருந்த கலம் தனியாக பிரிந்தது. அப்போது விண்வெளியில் அவர் எடையின்மையை உணர்ந்தார். ஆரம்பத்தில் இந்த உணர்வு ஒருமாதிரியாகத்தான் இருந்தது. ஆனால் இந்த பயணத்திற்கு முன்னர் விண்வெளிக்கு சென்றால் அங்கே எடையின்மையை குறித்து சிறப்பாக பயிற்சி பெற்றதால் அவருக்கு ஒன்றும் தெரியவில்லை. அந்த சூழ்நிலைக்கேற்ப பழக அதிக நேரம் தேவைப்படவில்லை.

யூரி ககாரின் அவர்களது சொந்த கருத்து என்னவெனில், எடையின்மை உடல் உறுப்புகள் தம்மிடத்தில் இல்லாதது போன்ற ஒரு மனநிலையை ஏற்படுத்தியதாம். அதனால் உடலுக்கு எந்த தீங்கும் ஏற்படாது. தன்னுடைய விண்வெளி பயணத்தின்போது சாப்பிட்டார். தண்ணீர் குடித்தார். தொடர்ந்து ரேடியோ மூலம் பூமியில் உள்ள அனைத்து அலைவரிசைகளிலும் தொடர்பு வைத்திருந்தார். விண்வெளி ஓடத்தின் செயல்பாடுகள் குறித்து அவ்வப்போது பூமிக்கு தகவல் அனுப்பிக் கொண்டிருந்தார். சுயமாக தகவல்களை பதிவும் செய்தார். தன்னுடைய குறிப்பு புத்தகம் மற்றும் ஒலிப்பதிவுக் கருவியிலும் எடையின்மையை உணர்ந்தும், செய்த வேலைகள் அனைத்தும் அருமையாக இருந்தது.

விண்வெளி ஓடம் தானாகவே தனது நிலைப்பாட்டை சரி செய்துகொண்டது. நிறுத்தல் முறை செயல்படுத்தப்பட்டதால் விண்வெளி ஓடத்தின் வேகம் குறைய தொடங்கியது. விண்வெளி ஓடம் ஏற்கனவே திட்டமிட்ட இடத்தில் பத்திரமாக தரை இறங்கியது.

யூரி ககாரின் அவர்களுக்கு விண்வெளிப்பயணத்தின் போது 175 300 கி.மீ. செங்குத்து உயரத்திலிருந்து பூமியை பார்க்கும்போது பூமி மிகவும் துல்லியமாக தெரிந்தது. பெரிய மலைகள், பெரிய நதிகள், பெரிய வன பகுதிகள், கடற்கரைகள் மற்றும் தீவுகள், பூமியின் பரப்பை மறைத்து செல்லும் மேகங்கள், அவற்றின் நிழல்கள் பூமியின் மீது விழுவது ஆகியவை தெளிவாக அவருக்கு தெரிந்தது.

யூரி ககாரின் அவர்களுக்கு விண்வெளிப் பயணத்தின் போது வானத்தின் நிறம் முற்றிலும் கறுப்பாக இருந்தது. இந்த கறுப்பின் பின்னணியில் நட்சத்திரங்கள் தெளிவாகவும், பிரகாசமாகவும் தெரிந்தன. இந்த பூமியானது நீலநிற ஒளிவட்டத்தால் சூழப்பட்டிருந்தது. இந்த ஒளிவட்டம் குறிப்பாக தொடுவானத்தில் நன்றாக தெரிந்தது. மெல்லிய நீலநிறத்தில் இருந்த வானம், பிறகு அடர்த்தியான நீலநிறம், பிறகு கருநீலநிறமாகவும் பின்பு ஊதா நிறமாகவும் இறுதியில் முழுவதும் கருமை நிறமாகவும் இருந்தது.

யூரி ககாரின் விண்வெளிக்கு வெற்றிகரமாக பயணித்த முதல் விண்வெளி வீரர் என்பதோடு பூமியை வெற்றிகரமாக விண்ணில் வலம் வந்த முதல் மனிதர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

யூரி ககாரின் அவர்கள் விண்வெளிப் பயணத்தின் பின்னர் உலகின் பல நாடுகளுக்கும் ஒரு நல்லெண்ண தூதுவராக சென்று வந்த சுற்றுலாவின் போது எமது நாடான இலங்கைக்கும் 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 7 ஆம் திகதி வருகை தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சோவியத் ஒன்றியத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையே பனிப்போர்ப் போட்டி நடக்கையில், “விண்வெளிப் போட்டி” என்று அழைக்கப்பட்டதின் உச்சக்கட்டத்தில் யூரி ககாரின் அவர்களின் விண்வெளிப்பயணம் நிறைவேறியது.

சோவியத் விண்வெளித் திட்டத்தின் ஆரம்ப வெற்றிகளானது, பெரும் செல்வம் படைத்த, மிகச் சக்தி வாய்ந்த முதலாளித்துவ நாடாகிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோன் எப். கெனடியை ஒரு தசாப்தத்திற்குள் ஒரு மனிதனை சந்திரனுக்குள் இறக்க வேண்டும் என்ற ஆக்ரோஷ முயற்சிக்கு உறுதிப்பாடு கொடுக்க வைத்தது.

யூரி ககாரின் 1955 இல் ஒரென்பூர்க் விமான ஓட்டுநர் பாடசாலையில் இணைந்து மிக்15 போர் விமான ஓட்டுநராக பயிற்சி பெற்று வெளியேறிய போது அங்கு வெலென்டினா கொர்யசோவா என்பவரை சந்தித்து 1957 இல் திருமணம் புரிந்தார்.

அவரது மிகப்பெரிய ஆசை என்னவெனில் வெள்ளி, செவ்வாய் ஆகிய கிரகங்களுக்கும் செல்ல வேண்டும் என்பதுதான். ஆனால் அது நிறைவேறாத ஆசையாகிவிட்டது.

இவரது பிறந்த ஊரான குளுஷினோ தற்போது ககாரின் எனப் பெயரிடப்பட்டுள்ளது. யூரி ககாரின் அவர்களை கௌரவிக்கும் முகமாக சந்திர தரையிலுள்ள பிரதேசம் ஒன்றுக்கு அவரது பெயர் இடப்பட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் திகதி மிக்15 யுடிசி என்ற விமானத்தில் பறந்த போது ஏற்பட்ட விமான விபத்தில் தனது 34 ஆம் வயதில் காலமானார்.







பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்




# சுட்டுவிரல்; சுட்டி நிற்கும் உணர்வு

தமிழ்க்கவிதையின் தொகை முயற்சிகள் அதிகம் நிகழ்ந்துள்ளன. தனியொரு கவிஞனின் படைப்பனுபவத்தைத் தாண்டிய ஒரு திரட்சியின் கூட்டனுபவம் ஒரு வகையில் காத்திரமானது மட்டுமல்ல அது சமூக வரலாற்று ஆவணமாகவும் நின்றிலங்குவது. அகநானூறு, புறநானூறு காலத்திலிருந்து இந்தப் பண்பைக் காணுகிறோம்.

தமிழில் 20ஆம் நாற்றாண்டிலும் இத்தகைய பல திரட்சிகள் நம்முன் வந்துள்ளன. அத்தகையத் திரட்சிகளை மொழி, பிரதேச, தேசிய, வர்க்க, பால், தொழில் என்றெல்லாம் வகுத்துப் பார்க்கும் போக்கும் நம்மிடையே உண்டு.

அதன் தொடர்ச்சியாகத் தற்போது வந்திருக்கிறது 'சுட்டுவிரல்''. 'முஸ்லிம் பெண் எழுத்தாளர்களின் கவிதைகள்' என்ற அடையாளத்துடன் சிறீலங்கா பென் கிளப் வெளியிட்டுள்ள இத் திரட்சியைத் தொகுத்திருக்கிறார், சுட்டுவிரலுக்குக் கடைசிக் கவிதை தந்திருக்கும் சம்மாந்துறை மஷ்ஹூறா. அறுபத்திமூன்று முஸ்லிம் பெண்கள் கவிதைகளை எழுதியுள்ளனர்.

'அடக்குமுறைக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆட்பட்டு துன்புற்று துயருற்று வாழ்வதாய் எண்ணி வலியுற்றிருக்கும் ஊமைப் பெண் குயில்களுக்கு இந்த ஆவணம் சமர்ப்பணம்'' என்கிற சமர்ப்பிப்புக்கூட திரட்சியின் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகிறது.

'மனம் திறந்து' கலாநிதி பிர்தௌஸ் சத்தார் அணிந்துரைக்கிறார். தனது இயலாமைகளை, எதிர்பார்ப்புக்களை, வெப்புசாரங்களைப் படைப்புகளில் வெளிப்படுத்துவதென்பது அனைத்துப் பெண் எழுத்தாளர்களாலும் முடிவதில்லை. அடக்கிவாசித்தல் அவள் கைவிலங்காகிறது என' சொல்வதெல்லாம் உண்மையென' மஸ்ஹூறா எழுதுகிறார்.

சுட்டுவிரலில் கூர்ந்து நிற்கும் பொருளாழம், சமூக யதார்த்தம், வாழ்வியல் அனுபவம், அனுபவத்தின் அடியான துயரம், துயரம் கக்கும் ரணம், ரணத்திடை வழியும் குருதியென பெண் கவிகள் கோரிநிற்கும் நியமங்கள் மிகுந்த அவதானிப்புக்குரியன. அதன் உட்கிடக்கை உணர்வுகள், சுட்டுவிரல் சுட்டிச்சொல்லும் செய்தியாகும்.

கவிதைத்திரட்டுகள் முனைப்புடன் மேலெழும் 21ஆம் நூற்றாண்டில் கவிதையின் பெறுமானம் அல்லது அதன் பொங்குநிலை குறித்த அவதானிப்பும் மேலெழுந்தது. இந்தத் திரட்சியில் ஒத்தோசைத்தனத்துடன் அல்லது வீணையறா ஒற்றை இசையுடன் கவிதைகள் தொடருமாற்றைக் காணலாம். கவிதைமொழி குறித்த கவனிப்பு மீது தொகுப்பாளரின் கவனிப்பைத் திரட்சி கோரி நிற்கிறது.

இலங்கை முஸ்லிம் பெண் எழுத்தாளர் என்கிற அடையாளம் சில போதாமைகளை அல்லது மேலுமான சேர்க்கைகளைக் கோரி நிற்பதாகத் தோன்றுகிறது. சுல்பிகா, அனார், பஹீமா ஜஹான், பெண்ணியா, பாயிஷா அலி, கெகிகிராவ சஹானா, மிஸ்ரா ஜப்பார், மின்ஹா போன்றோரின் கவிதைகளையும் கோரி நிற்கிறது. இது பொது அடையாளத்தில் அழுத்தத்தையும் வீரியத்தையும் ஏற்படுத்தத்தக்கது. ஏனெனில் கவிதை வெளிப்படும் முறை மீது கவிதைச் செயல் பாய்ச்சல் நிகழ்ந்த சூழலில் வெளிவரும் திரட்சியென்ற வகையில் இதனை அவதானிக்க வேண்டியது கட்டாயமுமாகும்.

பெண்மொழி, முஸ்லிம் பெண்மொழியாகத் திரட்சியுற வேண்டியதும் வரலாற்று ஆவணவாக்கல் என்பதற்கான அடையாளமுமாகும். சுட்டுவிரல் ஈழத்து முஸ்லிம் பெண்களின் திரட்சியை முன்னெடுத்த முதல் பனுவல் என்ற வகையில் பாராட்டத்தக்கது. சுட்டுவிரல் பெண்ணாள்,'....ஊசித்துளைக்குள் தன் ஆயுள் திணித்து புதிரான ஒரு ஆடை செய்கிறாள்...'' (ரீஸாஹனி) சுட்டுவிரலால்.

## ஔவன் கவிதை அலைதலும் தொலைதலும்

நீல இருள் படர்ந்த அதிகாலையில்
வரையவும் தொடங்கினேன்
ஆதிமனிதன்
சூர்யன் மேலெழும்பும் கதிர்ப்பாதை
புட்கள் ஆயிரம் சிறகசைப்பு
மலர்வாடியில் மென்தென்றல்
பஞ்சுமெத்தை
பூப்பெய்தும் அழகு

கணம்
என் தூரிகையைப் பிடுங்கி
வீசிற்றுப் பெருங்காற்று

ஆதிமனிதன் முகங்குப் புறவே
வீழ்ந்தான்
வீழ்ந்தவிடத்தில் மீள்
தொடங்கிற்றுக்காட்சி

கடிகாரத்தின் விரைவு
நெரிசலின் நெடி
இலக்கற்றுத்தெறிக்கும் சொற்கள் மேடு
பள்ளம்
பெரு மூச்சில் அலையும்
கோடிக்கால்கள்
கால்களுமற்ற பெருந்தடம்
தடத்தின் படத்தை அழித்திற்றுப் பெருந்தீ

நீர் முட்ட அலையெடுத்து வரைகிறேன்
மீக்காட்சி

ஆகாயமுதிர்த்த நட்ஷத்திரங்கள்
இழந்த ஒளியில்
என் முகம் விகாசித்தேன்
ஆதிமனிதன்
பூமியில் இறங்கிக்கொண்டிருக்கிறான்

மறுகாட்சி திரையில்
என் வரைபு

## மனம் ததும்பும் ஹைக்கூ 2

வரிகளைக் கூட்டாதே
பாவம் மக்களும் ஹைக்கூவும்

(ரமா ராமநாதன் குயிலின் நிறம்)

மனம் ததும்புறச் செய்யும் ஹைக்கூ குறைந்த வரிகளில் நிறைந்து ததும்பும் பொருள் வளம் மிகுந்தது.

ஜப்பானிய ஹைக்கூவின் உள்கிடக்கையில் முதன்மையானது ஜென்மன நிலைதான். ஜென் பௌத்தம், மௌனம், தனிமை, ஏற்புத்தன்மை குறித்ததான பண்புகளையுடையது. உதடுகளை விட உள்ளம் அதிகமாகப் பேசும் சாந்தி நிலை அமைதிபூத்த சாந்த நிலைதான் ஜென்னின் ஆழமான நம்பிக்கை.

மனிதனின் தனிமைதான் மன வளர்ச்சிக்குத் துணையாவது என்பதும் உள்ளதை உள்ளபடி உள்ளீர்க்கும் இயல்பும் மனப்பக்குவமும் உன்னதமானது என்பதும் ஜென் உணர்த்தும் உண்மைகளாகும்.

மௌனம் மனதைத் ததும்புறச் செய்யும் வார்த்தைகள் கடந்த அர்த்த நிலையை,

They Spoke No Word
The Visitor The Host
And The White Cherry
அவர்கள் எதுவும் பேசவில்லை
விருந்தாளியும் வீட்டுக்காரரும்
வெள்ளைச் செர்ரி மலர்களும்

அந்தக்கணம் விருந்தாளியும் எதுவும் பேசவில்லை. வீட்டுக்காரரும் பேசவில்லை. அங்கிருந்த வெள்ளைச் செர்ரி மலரும் பேசவில்லை. இது சாதாரண நிகழ்வு அல்லது மௌனக்காட்சி போலத் தோன்றினாலும் அது தோற்றுவிக்கும் உள்மனப் பயணம், உணர்வு அற்புதமானது. மெல்லிய தந்தியின் ஓசை போல் துடிப்பானது. மனதைத் ததும்புறச்செய்வது, இரண்டு மனிதரதும் மனநிலை மௌனமாக இருந்த மலரையொத்தது. மென்மையும், வெண்மையும், மௌனமான மனசுகள் ஒன்றையொன்று மௌனத்தால் புரிந்து கொள்கின்றன.

இதே அர்த்தத்தில் மனசு ததும்புறுகிறது இன்னொரு ஹைக்கூவில்.

Silent Flowers
Speak Also
The Obedient Eawithin
மௌனமான மலர்கள்
பேசவும் செய்யும்
கேட்கும் செவிகளுக்கு

மௌனம் செவிகளுக்குள் கேட்கும் மனம் ததும்பும் தூய்மை மௌனத்தின் ஓசையைக் கேட்கும்.

# கறுப்ப



நெடும் பயணத்தின் இடை வழியிலிருந்து கதையைத் தொடங்குகிறேன். வேகம் முட்டிப் பறக்கும் கார் வளைவெடுக்கிறது. இதுவரைத் தொடர்ந்த அல்லது இரண்டாவது மௌன இடைவெளியைக் கிளறிக்கொண்டு கேட்டான் அவன்.

அவன் என்பவன் பெயர் தெரியாதவன்; கார் ட்ரைவர்; இந்தக் கதையின் பிரதானன். இதற்கு முன் எங்கும் கண்டிராத பழகியிராத ஒரு மணி நேரத்துக்கு முன் அறிமுகமான புதிய முகம். கொதிப்பும் சில போது சாந்தமும்; வேகமும், சிலபோது சிரிப்பும் கடுகடுப்பும் கலந்த முகம் அவனுடையது.

நான் அதிகம் பேசுவதில்லை. ஊமை வகையினனாக இருக்கப் பார்த்தேன். அவன் விடுவதாயில்லை. காரின் வேகத்துக்கு சரிசமாந்தரமாக அவனது கதையாடல் வேகமெடுத்தது. அவனைப்புரிந்து கொள்வதற்கு அல்லது அரைகுறையாகவேனும் புரிவதற்கு முழுப்பயணமும் தேவைப்பட்டது.

பியதாச (இப்படித்தான் முன் சீற்றிலிருந்த மற்றவரை கதையில் அறிமுகப்படுத்துகிறேன்) மெல்லிய குரலில் அமைதியாகப் பதிலளிக்கிறார். கேள்வியும் கேட்கிறார். சந்தேகம் படர்ந்த கேள்வி. பியதாசவின் கேள்விக்கு அவன் உரத்த பதில் சொல்கிறான். பதிலின் பொருத்தம் குறித்து நான் யோசித்துக் கொண்டு அல்லது எனக்குள் முரண்பட்டுக் கொண்டிருந்தேன்.

என் மடியில் என் ஆறு வயதுக்காரன் தூக்கத்தில் கிடந்தான். கார்க்காரன் சிரித்த சத்தத்தில் அவன் திடுக்கிட்டான். அவனுக்குத் தூக்கம் முக்கியம். மற்றப்பக்கம் பிரேமாவதியும் (பியதாசவின் மனைவிக்கு கதையில் வைத்த பெயர்) தூங்குவதும், விழிப்பதும் அவனது கேள்விகள் அல்லது பதில்கள் அவளைத் தொந்தரவு செய்திருக்க வேண்டும். இடையிடை செருமல். அது பியதாசாவுக்கானது. ஆனால் அந்த மனிதன் அதைச் செவியுறுத்துவதாயில்லை. முகத்தைச் சுழித்தாள். சில சமயம் முட்டைக் கண்ணால் முழித்துப் பார்த்தாள். ஒரு சமயம் அவளுக்கும் பயம் தொற்றியது. கார் சஞ்சாரமற்ற முடக்கில் திரும்பியது. இருள் வீதி நிறைய அப்பியிருந்தது. கரண்ட் கட்டாகியது. அரசியல் பற்றிய கதையைத் தொடங்கினான் ட்ரைவர். பியதாசவுடன் கதை முரண்பட்ட போது, முன்னே எதிர்ப்பட்ட லொறியை லாவகமாக விலக்கிக் கடந்தான்.

எனது துணை (இப்போது தான் கதைக்குள் அவளும் வருகிறாள்) பின்நடுவில். அவள் மடியில் ஒரு பக்கம் நான் தூங்கிவிழ மறுபுறம் பிரேமாவதியும் முட்ட துணை சங்கடப்பட்டாள். எப்போ வீதி முடியுமென்ற அங்கலாய்ப்பில் விழி திறந்திருந்தாள். தூக்கம் துறந்திருந்தாள்.

காரின் வேகம் வற்றவில்லை. பெற்றோலுக்காக இரண்டு செற்களில் வேகம் குறைந்தது. ஒன்றில் பெற்றோல் இல்லை. இன்னொன்றில் கியூ நீளம். இரண்டையும் அரசியல் கதையோடு கடந்தான். மூன்றாவதில் பெற்றோல் ஊற்றினான். நான் காசை நீட்டினேன். புறக்கணித்தான். 'நீங்கள் விசிற்றஸ்' என்றும் சொன்னான்.

பியதாச ஒருதடவை கேட்டான் 'இந்த வழி புதுசு நீ வழி மாறி வருகிறாய்....''அதற்கு அவன், 'கேட்கிறீரா? சொல்லுகிறீரா?'' என்றான். 'இந்தவழி குறுக்குவழி சோட்கட்....'.விரைவாகப் போய்விடலாம் என்பதை அவன் அழுத்திச் சொல்வதாகப்பட்டது. நான் துணையைப் பார்த்தேன். அவளுக்கு வேர்த்திருந்தது. பிரேமாவதி ஊமையானாள். இருட்பாதை மேலும் நீண்டு வளைந்து நீண்டது.

இடைவெளிகளை அவன் கதை கொண்டு நிரப்பினான். தன் புராணம், குடும்பப் படம், தொழிற் படலம், உலக மகா செய்திகளென நீண்ட கதை. கோபம், வெறுப்பு, பெருமிதம், கருணை,கொடையெனக் கலந்த கதை.

முதலில் ஊரைக் கேட்டான். கேட்டபின் இரண்டு பெயர்களை பட்டப் பெயருடன் கேட்டான். 'தெரியுமா' என்றான். தெரியாமலா? நான் ஆமுக்கும் இல்லைக்குமிடையில் தலையாட்டினேன். இருட்டில் என் தலையை எங்கே கண்டான். 'இல்லை' என்றேன் தடித்த குரலில். துணையானவளுக்கு என் தடுமாற்றம் குழப்பமானது. உற்றுப்பார்த்தாள்.

இந்த ரெண்டையும் கேட்டதால் எனக்குள் சந்தேகம் வேர் பரப்பி பாதை நெடுக வளர்ந்தது.

'............சீச்சீ..........அப்படியொன்றும் நடக்காது.........இல்ல.......இல்ல.........பின்னால் ஆரும் துரத்திக்கொண்டு........'திரும்பிப் பார்த்தேன்....இதே சங்கடம்தான் என் துணைக்கும்.

பியதாச கேட்டான். இவன் சொன்னான் ''உங்களுக்கு உங்கள் மார்க்கம். எங்களுக்கு எங்கள் மார்க்கம்''என்றான். இவன் மார்க்கம் எதுவென்று தெரியவில்லை. காரின் முன்னால் புத்தபெருமான். உருத்திராட்ச மாலை. அது காரின் வேகத்தில் ஆடுகிறது. அவன் இளநரைத் தாடியைக் கோதிக்கொள்கிறான். தமிழும் சிங்களமும் பிசிறிறின்றி பேசுகிறான். இங்கிலீஸ் இடையிடையே நடனமாடுகிறது.

'பசிக்கிறது'' என்றான்...'பார்த்து நிறுத்துங்கள் சாப்பிடலாம்'' என்றேன். காரில் வந்த கூலிக்கு சாப்பாடாவது வாங்கிக் கொடுக்க மனம் விரும்பியது.

நாங்கள் ஏற்கனவே சாப்பிட்டதையறிந்து அவன் நிறுத்தவில்லை. பயணம் தொடர்ந்தது. நான் இப்போது கதையின் முதல் துண்டுக்கு வருகிறேன்.

நேரம் 11.30 யைத் தாண்டியும் பஸ் இல்லை. வழமையாக ஒன்றன்பின் ஒன்றாக வரும். டீசல் இல்லையாம். அந்த பஸ் ஹோல்ட்டில் இரண்டு குடும்பம் நின்றது. அதிலொன்று சிங்களக் குடும்பம். தூரத்தில் தெறித்த ஒளி அண்மிக்கவும் அருகே வந்து நின்றது. 'எங்கே போறீங்க'....பதில்...... 'நான் தனியே தான் போறேன். வாங்க'....பதில் மௌனம்.... 'வாங்க'...அழைப்பு. ஏறும்போது 'அவர்களும் நிற்கிறார்கள்' என்றேன்.....'அவங்களையும் கூப்பிடுங்கோ....''இப்படிச் சேர்ந்த பயணக்கூட்டம்.

இறங்கும்போது, பியதாச...071 xxxxx என்று நம்பரை உரத்துச் சொன்னான். நம்பரை அடிக்கும்போது நிமாலினி வந்தாள். அது பியதாசாவின் மகளாம். மகளையும் அறிமுகம் செய்து வைத்தான். பியதாசவையும் பிரேமாவதி'யும் வசதியான இடத்தில் இறக்கிவிட்டான். 'மற்றவர்களுக்கு செய்யும் உதவி எப்போதும் நமக்கு நன்மைதான்' என்றான்.

நானும் துணையும் இறங்கினோம். நான் காசைக் கொடுக்கலாம் என்றேன். துணை'அன்பைக் கெடுக்கும்' என்றாள். எனது கை பேர்சை நோக்கிச் சென்றது. 'காசுக்காக எதையும் செய்வதில்லை. மனுசருக்கு உதவுவதுதான்' என்றான். இருட்டிலும் அவன் முகம் ஒளிர்ந்தது. என் ஆறுவயதுக்காரன் டாட்டா கொடுத்தான்.

இருட்டில் கார் விரைந்தது. காரின் நிறம் கறுப்பு இல்லை.

**பொன் மீரா**



**ராமு:** ஏன் தரைல ஊக்காரிங்க ..?
**விருந்தினர்:** சாப்பாட்டு இலை
தாரைல தான் இருக்கு.அதுதான்
**ராமு:** ..?



**பெண்:** இலையை மடிக்க வேண்டாம்.
**விருந்தினர்:** ஏங்க மடிக்க வேண்டான்னு
சொல்றீங்க.
**பெண்:** அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.
**விருந்தினர்:** ஐய்யோ! அவங்க
கோவிச்சுக்க மாட்டாங்களா ?
**பெண்:** இப்போ நீங்க
கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன ?
**விருந்தினர்:** ..?




**ஆசிரியர்:** நான் தினமும் ஏழு கிலோ மீட்டர்
நடந்து சென்று படித்து வந்தேன்.
**மாணவன்:** அப்பவே உங்களுக்கும்
படிப்புக்கும் ரொம்ப தூரமா சார்.




**பூசாரி:** சாமி தலையில் இருக்கிற
கீரிடத்தை எதுக்கு எடுத்த..?
**பக்தர் :** என் எஜமான்
சாமிக்கு மொட்டை போடுறதா
வேண்டிக்கிட்டாரு அதுதான்.



**நண்பர் 1**: ஒரு பையன் சாமிக்கு நன்றி
சொல்கிறான்.ஏன்..?
**நண்பர் 2**: எல்லா விலையும் ஏறினாலும்
இந்த பாஸ் மார்க்க மட்டும் ஏத்தாம 35லயே
வச்சிருக்காங்க அதுதான்.



**நண்பர் 1**: மச்சா எப்பட வருவ ...?
**நண்பர் 2**: மழை நின்னதும் வாறேன்டா
**நண்பர் 1**: அப்படினா நீ வரவே முடியாது டா
**நண்பர்** 2: ஏன்டா



**ஆசிரியர் :** நீ இந்த பரீட்சையில 90 மார்க்
வாங்கனும்.
**மாணவன் :** 100 மார்க் வாங்குவேன் சார்.
**ஆசிரியர் :** டேய் கொமெடி பண்ணாதடா.
**மாணவன் :** யார் சார் முதல்ல கொமெடி
பண்ணது.



**நண்பர் 1**: நேத்து ஒரே "அட " மழை .
**நண்பர் 2**: "குடை" மழை தான்
கேள்வி பட்டிருக்கேன் இது
என்ன "அட" மழை ...?



**நண்பர்** 1: மழை எந்த ஊர்ளையாவது
நிக்குமா டா மழை விழ தான் செய்யும்
**நண்பர் 2**: ..?

# Vijay T.Vயில் கொடி நாட்டிய இலங்கை பெண்மணி

# Modelling கலையில் களைகட்டும் ஷாலினி




**விஜய் தொலைக்காட்சியின் உதவி இயக்குனரும் விஜய் தொலைக்காட்சியின் எபிசோட் சுப்பர்வைஸருமான ஷாலினி சுரேஷ் ஊடகத்துறையில் பிரபல்யமான ஒரு இளம் பெண்மணி. லக்ஸ்டோ மீடியா நெட்வேர்க் அமைப்பின் பெண்கள் பிரிவின் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் தொகுப்பாளராகவும் இந்திய இணைப்பாளராகவும் மொடல் S. ஷாலினி Rj நியமிக்கப்பட்டுள்ளார்.**

2022 நடுப்பகுதியில் பெண்கள் பேராளர் மாநாடு இடம்பெறவுள்ளது. இம்மாநாட்டினை முன்னிட்டு 1000 பேராளர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தனது கை வண்ணத்தையும் கலைத் திறனையும் காட்டி வரும் ஷாலினி மொடலிங் கலையில் மட்டுமல்ல கவிதை எழுதுவதிலும் வல்லவர். இவர், அவ்வப்போது கவிதைகள் எழுதி பேஸ்புக்கில் பதிவிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



இவர், பொழுதுபோக்குக்காக பேஸ்புக்கில் பதிவிட்ட கவிதைகளில் ஒன்று இதோ......
முதல் பார்வையில் காதலா..?
ஏன் கூடாதா..?
பலரை என் கண்கள் சந்தித்திருந்தாலும்..!!
உன்னை பார்த்த போது மட்டும்..!!
என் இதயம் பேசியது ..!!
இவள் தான் உன் இணை என்று ..!

இவ்வளவு திறமைகளை தன்னகத்தே கொண்ட இந்த இளம் தாரகையை அணுகி விபரங்களை அறிய முற்பட்டதில் கிடைத்த விபரங்களை பகிர்ந்து கொள்கிறோம்.

**உங்களைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களே.....?**

நான் ஷாலினி சுரேஷ். நான் ஒரு எம்ஏ பட்டதாரி. நான் நிறைய விசயங்கள் ஆசைப்பட்டிருக்கிறேன்.



றே. ஸ்கூல் டயிம்ல எனக்கு இரு ஆசை வந்து லொயராக வேணும். ஒரு வழக்கறிஞராக வேணும் என்பதுதான் என்னோட ஆசை, எயிமாக இருந்தது. அதற்கு அப்புறம் எனக்கு பிடிச்ச சப்ஜக்ட். தமிழ் எனக்கு பிடிச்ச சப்ஜக்ட். எனக்கு தமிழ் டீச்சரே ரொம்ப பிடிக்கும். அதனால்தான் என்னவோ தெரியவில்லை. எனக்கு தமிழ் ரொம்ப பிடிக்கும். அதுபோல் படம் வரைவதும் எனக்கு பிடிக்கும். நான் டென்த் படிக்கும்போது டொரியின் ஒன்று வரைந்தேன். அது அகில இலங்கை ரீதியாக மூன்றாவது இடத்தைப் பிடித்தது. அது என் லைப்பில மறக்க முடியாத ஒன்னு. அதுமட்டுமல்ல ஸ்கூல் டயிம்ல வந்து பேச்சு போட்டி, டிராமா ஆகியவற்றில் பங்குபற்றி பரிசுகள் பெற்றிருக்கிறேன். எனக்கு ஆசிரியர்கள் மிகவும் ஒத்துழைப்பாக இருந்தாங்கள். டீச்சர் வந்து என்கராஜ் பண்ணுவாங்க.

**நீங்கள் இப்போது என்ன செய்றீங்கள்?**
நான் விஜே டிவியில் வேலை செய்கிறேன்.
**என்னவாக வேலை செய்றீங்கள்?**
நான் உதவி டைரக்டராகவும் எப்பிசோட் சுப்பர்வைஸராக வேலை செய்கிறேன். அத்துடன் மொடல் மற்றும் நடிகராகவும் கலைப்பணியாற்றி வருகிறேன்.



**நீங்கள் இலங்கையில் எங்கே இருக்கிறீங்கள்?**
மட்டக்களப்பில்
நீங்கள் எங்கே படித்தீங்கள்? இந்தியாவில் தான்.

**எத்தனை வயதில் இந்தியாவுக்கு போனீங்கள்?**
16 வயதில்







**16 வயதுக்கு முன் இலங்கையில் எங்கு கல்வி கற்றீங்கள்?**
மன்னாரில் உள்ள புனித சேவியர் மகளிர் பாடசாலையில் கல்வி கற்றேன்.
**அம்மா, அப்பா எங்க இருக்கிறாங்க?** மட்டக்களப்பு, அக்கறைப்பற்று கோளாவில் என்ற இடத்தில் இருக்கிறாங்க.
**நீங்கள் முன்பு எங்கு யாருடன் இருந்தீங்கள்?**
மன்னாரில், அம்மா மன்னார். அம்மாவுடன் தான்





இருந்தேன்.
**அம்மா மன்னார் என்றால் அப்பா மட்டக்களப்பா?**
ஆம்
**நீங்கள் இந்தியா போக முதல்ல எங்க இருந்தீங்க?**
இந்தியா போக முதல்ல மன்னார். இப்ப மட்டக்களப்பில.
**அப்பா என்ன செய்தார்?**
வியாபாரம்
**என்ன வியாபாரம்?** புடவை வியாபாரம்.
**இந்தியாவுக்கு எப்படி போனீங்கள்?**
போட்டில் தான்.
**உங்களுக்கு எப்படி விஜே டிவியில் வேலை கிடைத்தது?**
என்னுடைய ஸ்கூல் லைப் வந்து.... சிறிலங்காவிலேயே முடிஞ்சிருச்சு . அதற்கப்புறம் இந்தியாவுக்கு போக வேண்டிய நிலை ஏற்பட்டது. .இந்தியாவில வந்து தான் ஓப்பன் யுனிவர்சிட்டியில பிஏ படிச்சேன். அதோட . பாத்திமா .கொலோஜில கம்பியூட்டர் இன்ஜீனியரிங் படிச்சேன். பிறகு அலைகள் மீடியாவில படிக்க வாய்ப்பு கிடைத்தது. அதில் படித்துக் கொண்டிருந்தபோது மல்ட்டிமீடியா, அனிமேஷன் மட்டுமல்லாது, மூவி எப்படி எடுக்கிறது என்று ஒரு சப்ஜக்ட் இருந்திச்சு. அனிமேஷன் Drawingகில் எனக்கு ஆர்வம் இருந்ததால் நான் மிகவும் ஆர்வமாக ஈடுபட்டேன். அதன்பின்

நான் அலைகள் மீடியாவில் படிக்கும்போது “விருட்சம்” என்ற குறும்படத்தை தயாரிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. மாணவர்களாகிய நாங்கள் ஐந்து இளம் பெண்கள் சேர்ந்து இதனை தயாரித்தோம். அது மரம் பற்றிய கதை. அதில எனக்கு நிறைய பாராட்டுக்கள் கிடைத்தன. சான்றிதழ்கள் கிடைத்தன.

அதன் மூலம் இயக்குனரான எனக்கு பிரபல்யமாகக் கூடிய வாய்ப்பு கிட்டியது. இதன் மூலமும் எனது உறவினர் மூலமாகவும் விஜய் தொலைகாட்சியில் ஒளிபரப்பாகும் ஆண்டால் அழகர் மற்றும் பகல் நிலவு சீரியல்களில் உதவி இயக்குனராகவும் மாப்பிள்ளை சீரியலில், எபிசோட் சுப்பர்வைசராகவும் பணிபுரியும் வாயப்பு அண்ணன் ரமணகிரிவாசனால் கிடைத்தது. நான் அவருக்கு நன்றியுடையவளாக இருக்கிறேன்.

**சீரியல்களில் அல்லது குறும்படங்களில் நடிக்கக்கூடிய வாய்ப்பு கிடைக்கவில்லையா?**
எனக்கு “ஆண்டாள்” என்ற குறும்படத்தில் முக்கிய வேடத்தில் கதாநாயகியாக நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.



**கே. ஈஸ்வரலிங்கம்**







# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

**எஸ் கே.சுதாகர். வத்தளை.**

**கேள்வி:** சிம்பு நடித்த 'மாநாடு'படத்தின் தெலுங்கு ரீமேக்கில் நாக் சைதன்யா நடிக்கப் போகிறாராமே..?

**பதில்:** சுரேஷ் காமாட்சி தயாரித்திருந்த படம் 'மாநாடு'.



கடந்த ஜனவரி மாதத்தில் தெலுங்கு நடிகர் ராணா டகுபதியின் தந்தை தன்னுடைய சுரேஷ் புரோடக்சன்ஸ் மூலம் 'மாநாடு'திரைப்படத்தின் தெலுங்கு ரீமேக் மற்றும் பிற மொழியில் ரீமேக் செய்வதற்கான உரிமத்தை பெற்றிருப்பதாக தெரிவித்திருந்தார்

தெலுங்கு ரீமேக்கையும் இயக்குனர் வெங்கட் பிரபு இயக்குவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் நடிகர் நாக சைதன்யா சிம்பு வேடத்தில் நடிக்க இருப்பதாகவும் நடிகை பூஜா ஹெக்டேவும் இந்த படத்தில் நடிக்க இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது!

**ஜே.எம்.முனவரா. மாவனல்ல.**

**கேள்வி:** புதுமை இயக்குநர் பார்த்தீபன் இயக்கத்தில் வெளியாகி விமர்சன ரீதியாகவும். வசூல் ரீதியாகவும் வெற்றி பெற்ற திரைப்படமான 'ஒத்த செருப்பு சைஸ்7' படம் இந்தியிலும் தயாராகிறதா..?

**பதில்:** ஆமாம் இந்தப் படம் தற்போது அபிஷேக் பச்சன் நடிப்பில் ஹிந்தியில் ரீமேக்காகி வருகிறது.. இதனை பார்த்தீபனே இயக்கி வருகிறார்.. இதனைத் தொடர்ந்து ஒரே ஷொட்டில் படமாக இருக்கும் 'இரவின் நிழல்'என்றபடத்தின் பணிகளில் ஈடு பட்டு வருகிறார் பார்த்தீபன்.



**ஆர் .எம்.இம்தியாஸ். கல்முனை.**

**கேள்வி:** மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் முதன் முதலாக இரட்டை. வேடத்தில் நடித்த. படம் எது?

**பதில்:** 'நாடோடி மன்னன். இந்தப் படத்தை அவரே தயாரித்ததோடு இயக்கியுள்ளார்.

தனது முழு சொத்தையுமே விற்றுத் தான் இந்தப் படத்தைத் தயாரித்தார் என்று அந்த நாளில் பொதுவாக பேசப்பட்டது.

இதனால்தான் "இந்தப் படம் ஓடினால் நான் மன்னன். இல்லையென்றால் நான் நாடோடி"என்று எம்.ஜி.ஆர். கூறியிருந்தார். ஆனாலும் படம் பிரமாதமாக எம்.ஜி.ஆரை மன்னனாக்கியது.



**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# விஜய் சேதுபதியின் புதிய படம்



மிஷ்கின் இயக்கும் புதிய படத்தில் நடிக்க விஜய் சேதுபதியிடம் பேசி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.

விஜய் சேதுபதி கதாநாயகனாக மட்டுமன்றி மற்ற நடிகர்கள் படங்களில் இமேஜ் பார்க்காமல் வில்லனாகவும் நடித்து வருகிறார். இவரது நடிப்பில் கடைசி விவசாயி படம் கடந்த மாதம் வெளியானது. கமல்ஹாசனின் விக்ரம் படத்தில் வில்லனாக நடித்து முடித்துள்ளார். விஜய் சேதுபதியின் இடம் பொருள் ஏவல், மாமனிதன் ஆகிய படங்கள் முடிந்து திரைக்கு வர தயாராக உள்ளன.

இந்நிலையில், அடுத்து மிஷ்கின் இயக்கும் புதிய படத்தில் நடிக்க விஜய் சேதுபதியிடம் பேசி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கனவே மிஸ்கின் இயக்கி உள்ள பிசாசு 2 படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் விஜய்சேதுபதி நடித்து இருக்கிறார். இதன் படப்பிடிப்பு முடிந்து இறுதி கட்ட பணிகள் நடக்கின்றன.

இந்நிலையில் மீண்டும் புதிய படத்தில் இருவரும் இணைய இருப்பதாக கூறப்படுகிறது. இந்த படம் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விடுதலை, யாதும் ஊரே யாவரும் கேளிர், காந்தி டாக்கீஸ் ஆகிய படங்களும் விஜய் சேதுபதியின் கைவசம் உள்ளன.

# வடிவேலுவுக்கும் சூரிக்கும் என்ன வித்தியாசம்?



நகைச்சுவை நடிகர்கள் வடிவேலுவுக்கும், சூரிக்கும் மதுரைதான் சொந்த ஊர்.

இருவருமே ஏழை நடுத்தர குடும்பங்களை சேர்ந்தவர்கள். இரண்டு பேருக்குமே சினிமாவுக்கு வருவதற்கு முன்பே திருமணமாகி விட்டது.

இருவருக்கும் குழந்தை ரசிகர்கள் அதிகம். நகைச்சுவை நடிகராக பிரபலமாகி கதாநாயகன் அந்தஸ்துக்கு உயர்ந்தவர்கள். வடிவேல் 2 படங்களில் கதாநாயகனாக நடித்துக் கொண்டிருப்பது போல், சூரியும் 2 படங்களில் கதாநாயகனாக நடித்து வருகிறார்.

இருவருமே நாள் கணக்கில் சம்பளம் (சில லட்சங்கள்) வாங்கி வருகிறார்கள். தயாரிப்பாளர், டைரக்டர் ஆகிய இருவரையும் பொருத்து சம்பளத்தை கூட்டி குறைத்துக் கொள்கிறார்கள். வடிவேல் சம்பாதித்த பணத்தில் பெரும்பகுதியை வீடுகளாகவும், தோட்டங்களாகவும் வாங்கியிருக்கிறார்.

சூரி, 'அம்மன் டீ ஸ்டால்' என்ற பெயரில், மதுரையில் 6 டீக்கடைகளை ஆரம்பித்தார். இப்போது, 'அம்மன் உணவகம்' என்ற பெயரில், சைவம் மற்றும் அசைவ ஓட்டல்களையும் நடத்தி வருகிறார். மதுரையில் உள்ள தனது தோட்டத்தில், 6 மாடுகளை வளர்த்து வருகிறார்.

இருவருமே 'இன்னோவா' கார்களை பயன்படுத்தி வருகிறார்கள். ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் இரண்டு பேரும் மதுரைக்கு பறந்து விடுகிறார்கள்.

# வித்யா பாலனின் படு மோசமான அனுபவங்கள்

திரையுலகில் தனக்கு நடந்த சில மோசமான அனுபவங்கள் பற்றி முன்னணி நடிகை வித்யா பாலன் பேட்டியில் பகிர்ந்துள்ளார்.

இந்தி திரையுலகில் முன்னணி கதாநாயகியாக இருப்பவர் வித்யாபாலன். தமிழில் நேர்கொண்ட பார்வை படத்தில் அஜித்குமார் ஜோடியாக நடித்தார். மறைந்த நடிகை சில்க் சுமிதா வாழ்க்கை கதையான தி டர்ட்டி பிக்சர் என்ற படத்தில் நடித்து சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்றார்.

இந்தியில் வித்யாபாலனை மனதில் வைத்தே கதைகளை உருவாக்குகிறார்கள். ஆனாலும் இதுவரை சல்மான்கான், ஷாருக்கான், ஹிருத்திக் ரோஷன், அக்‌ஷய்குமார் உள்ளிட்ட முன்னணி கதாநாயகர்களுக்கு ஜோடியாக அவர் நடிக்கவில்லை. ஆரம்பத்தில் தமிழ் படங்களில் வாய்ப்பு தேடியதாகவும், கதாநாயகிக்கு ஏற்ற தோற்றம் இல்லை என்று ஒதுக்கியதால் இந்திக்கு சென்று முன்னணி நடிகையாக உயர்ந்துள்ளார் எனவும் கூறப்படுகிறது. தனது சினிமா வாழ்க்கை பற்றி வித்யாபாலன் கூறும்போது, முன்னணி கதாநாயகர்கள் ஜோடியாக நடிக்க வைக்காமல் தன்னை ஒதுக்கியதாக குறை சொல்லி இருக்கிறார்.

## ஒதுக்கிய கதாநாயகர்கள்

நான் முன்னணி கதாநாயகர்கள் ஜோடியாக நடிக்கவில்லை. அவர்கள் என்னை ஓரம் கட்டுவதாகவும், நிராகரிப்பதாகவும் உணர்ந்தேன். அவர்கள் ஒதுக்கியதற்காக எனக்கு வருத்தம் இல்லை. நல்ல கதைகள்தான் சினிமாவுக்கு ஆன்மாவை போன்று இருக்கின்றன. எனவே அப்படிப்பட்ட கதைகளை தேர்வு செய்து நடிக்க ஆரம்பித்தேன். அந்த படங்கள் எனக்கு பெயர் வாங்கி கொடுத்தன. ரசிகர்களும் ஏற்றுக்கொண்டார்கள் என கூறினார்.

## 13 படங்களில் இருந்து நீக்கம்

திரையுலகில் தனக்கு நடந்த சில மோசமான அனுபவங்களை பற்றியும் அவர் பிரபாத் கபர் என்ற இந்தி நாளிதழுக்கு சமீபத்தில் அளித்த புதிய பேட்டி ஒன்றில் பகிர்ந்துள்ளார். நான் நடிக்க வந்த புதிதில் நடந்த சம்பவங்களை என்னால் மறக்கவே முடியாது. 13 படங்களில் இருந்து நான் நீக்கப்பட்டேன்.

அதில் ஒரு படத்தில் நடிப்பதில் இருந்து தயாரிப்பாளர் என்னை நீக்கி விட்டு, என்னிடம் நடந்து கொண்ட விதம் மறக்க முடியாதது. அவர்கள் என்னிடம் மோசமாக நடந்து கொண்டனர். நான் மிகவும் அசிங்கமாக இருப்பது போன்று உணர வைத்தனர்.

## கண்ணாடியில் பார்க்க பயம்

அதனால் கண்ணாடியில் என்னை பார்ப்பதற்கான தைரியம் வர எனக்கு 6 மாதங்கள் தேவைப்பட்டது என கூறி அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளார். அன்று என்னை வேண்டாம் என கூறியவர்களிடம் (தயாரிப்பாளர்கள்) இருந்து சமீபத்தில் எனக்கு தொலைபேசி அழைப்புகள் வருகின்றன.

எங்களுடைய படத்தில் நடிக்க வாருங்கள். வாய்ப்பு தருகிறோம் என கூறினர். ஆனால், பணிவாக அவர்களது படங்களில் நடிக்காமல் மறுத்து விட்டேன் என நடிகை வித்யா பாலன் கூறியுள்ளார்.

## பாலசந்தர் படம்

தொடர்ந்து அவர் கூறும்போது, 2004ம் ஆண்டு காலகட்டத்தில், திரைப்பட இயக்குனர் கே. பாலசந்தரின் 2 படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டேன். அப்போது, வேறு பல படங்களில் இருந்து நான் மாற்றப்பட்ட சமயம். எனக்கு பதிலாக வேறு சிலர் நடிக்க வைக்கப்பட்டனர். இதில் பாலசந்தர் படத்திற்காக, நியூசிலாந்து நாட்டுக்கு படப்பிடிப்புக்காக செல்ல இருந்த நிலையில், படத்தில் இருந்து என்னை நீக்கிய விசயம் பின்னரே தெரிய வந்தது.

என்னிடம் அதுபற்றி எதுவும் கூறவில்லை. எனது தாயார் போன் செய்து விவரம் தெரிந்து எனக்கு கூறினார். ஆத்திரத்தில் மரைன் டிரைவில் இருந்து பந்திரா பகுதி வரை அந்த நாளில் நடந்தே சென்றேன். அனலால் கொதித்திருந்த அந்த தருணத்திலும் மணிக்கணக்கில் வெயிலில் நடந்து சென்றேன். நிறைய அழுதேன். அந்த நினைவுகள் இன்றும் என்னை விட்டு நீங்காமல் உள்ளன. ஆனால், 3 ஆண்டுகள் திரை துறையில் போராடியும் எந்த முன்னேற்றமுமில்லை என வேதனையுடன் கூறுகிறார்.

எனினும், இந்தி திரையுலகில் தவிர்க்க முடியாத நடிகையாக அவர் உயர்ந்து உள்ளார். அவர் அடுத்து ஷெபாலி ஷா, மானவ் கவுல் உள்ளிட்டோருடன் இணைந்து ஜல்சா என்ற திரில்லர் படத்தில் நடித்துள்ளார். இந்த படம் கடந்த 18ந்தேதி அமேசான் பிரைம் வீடியோவில் வெளியிடப்பட்டு உள்ளது.



# விரைவில் காதல் திருமணம் நடிகர் ஆதி

திருமணம் குறித்து ஆதியிடம் கேட்டபோது, "விரைவில் எனது திருமண அறிவிப்பு வரும். காதல் திருமணம் செய்து கொள்வேன். அது இருவீட்டார் சம்மதத்துடன் நடக்கும் என தெரிவித்தார்.



நடிகர் ஆதியும், நடிகை நிக்கி கல்ராணியும் காதலிப்பதாகவும், விரைவில் திருமணம் செய்து கொள்ள இருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இதற்கு இருவரும் விளக்கம் அளிக்கவில்லை. இந்நிலையில், திருமணம் குறித்து ஆதியிடம் கேட்டபோது, "விரைவில் எனது திருமண அறிவிப்பு வரும். காதல் திருமணம் செய்து கொள்வேன். அது இருவிட்டார் சம்மதத்துடன் நடக்கும்.

திருமணம் பற்றிய முறையான அறிவிப்பை விரைவில் வெளியிடுவேன்'' என்றார். மேலும் ஆதி கூறும்போது, "ஒரு கால் இழந்த கதாபாத்திரத்தில் 'கிளாப்' படத்தில் நடித்தது திரில்லாக இருந்தது மன அழுத்தத்துடன் கூடிய நபரின் கதாபாத்திரம். லிங்குசாமி இயக்கத்தில் வாரியர் படத்தில் வில்லனாக நடித்து வருகிறேன்.

எனக்கு நானே சவால் விடும் பாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்கிறேன். நான் நடித்துள்ள பார்ட்னர் முழுக்க நகைச்சுவை திரைப்படம். திரையரங்கிற்கு மக்கள் இன்னும் முழுதாக வர ஆரம்பிக்கவில்லை. ஓ.டி.டி.யில் வரட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்று இருக்கிறார்கள்.

சமீபத்தில் ஒரு படத்திற்கு திரையரங்கம் நிறைந்திருந்ததைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருந்தது. நான் நடித்த மரகத நாணயம் படத்தின் இரண்டாம் பாகம் வரும். அதற்கான வேலை நடக்கிறது'' என்றார்.

# உக்ரைன் அதிகாரிக்கு உதவிய ராம்சரண்

ஆர்.ஆர்.ஆர். படத்தின், சில காட்சிகள் உக்ரைனில் படமாக்கப்பட்ட போது ராம்சரணுக்குப் பாதுகாப்பு அதிகாரியாக ரஷ்டி என்பவர் இருந்துள்ளார். தற்போது போர் நடந்து வரும் சூழ்நிலையில் ரஷ்டிக்கு மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை ராம்சரண் அனுப்பி இருக்கிறார்.

பதிவு: மார்ச் 21, 2022 05:59 AM

பிரபல தெலுங்கு நடிகர் ராம்சரண். இவர் சிரஞ்சீவியின் மகன். ராம்சரண் நடித்த மகதீரா படம் தமிழிலும் வெளியானது. தற்போது ராஜமவுலி இயக்கத்தில் ஜூனியர் என்.டி.ஆர்., அக்‌ஷய்குமார், சமுத்திரக்கனி, ஆலியா பட், ஸ்ரேயா ஆகியோருடன் இணைந்து ஆர்ஆர்ஆர் படத்தில் நடித்து முடித்துள்ளார். இந்த படம் தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் விரைவில் திரைக்கு வர உள்ளது.

ஆர்.ஆர்.ஆர். படத்தின், சில காட்சிகள் உக்ரைனில் படமாக்கப்பட்டு உள்ளன. உக்ரைனில் படப்பிடிப்பு நடந்தபோது ரஷ்டி என்பவர் ராம்சரணுக்குப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்துள்ளார். போர் நடந்து வரும் சூழ்நிலையில் ரஷ்டிக்கு மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை ராம்சரண் அனுப்பி இருக்கிறார். இதற்காக ராம்சரணுக்கு உக்ரைன் அதிகாரி ரஷ்டி நன்றி தெரிவித்து வீடியோ வெளியிட்டுள்ளார்.

அதில் "போர் தொடங்கியதும் ராம்சரண் தொடர்புகொண்டு நலம் விசாரித்தார். என் மனைவியின் நோய் மற்றும் மருந்துகள் கிடைக்காமல் கஷ்டப்படுவது பற்றி அவரிடம் சொன்னேன். உடனே எனக்கு மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பி வைத்தார். அவருக்கு நன்றி. போர் விரைவில் முடியும் என்று நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்.



# பெண்ணின் வாழ்வை சித்தரிக்கும் குமாரபுரம்

**புத்தகத்தின் பெயர் குமாரபுரம்**
**எழுத்தாளரின் பெயர்**
**அ. பாலமனோகரன்**

முல்லைத்தீவின் முள்ளியவளையில் கணுக்கேணிப் பிரதேசத்தை பூர்வீகமாகக் கொண்ட "நிலக்கிளி" என்னும் படைப்பை படைத்த அ. பாலமனோகரனின் இன்னுமொரு படைப்பு தான் குமாரபுரம்.

நேரடியாக படைப்பின் மீதான என்னுடைய விமர்சனப் பார்வைக்குச் செல்லலாம். வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவிலடியை வாழ்விடமாகக் கொண்டவள் கதையின் நாயகி சித்திரா. அதே பகுதியைச் சேர்ந்தவன் கங்காதரன். அதாவது சித்திராவின் காதலன், முறை மாப்பிள்ளையும் கூட. விதிவசத்தால் இவர்களின் காதல் பிரிந்துவிட கதையின் நாயகன் குமாருடன் திருமணத்தில் இணைகிறாள் சித்திரா. ஆனாலும் அந்த வாழ்க்கை நீண்ட நாளிற்கு நிலைக்கவில்லை. காலன் குமாரின் உயிரைப் பறித்துவிட தனி மரமாய் நின்று தன் சகோதரிகளை கரையேற்றி விட்டு கணவனிடம் செல்லும் முடிவைத் தானாகவே எடுத்துவிடுகிறாள். இது தான் கதைச் சுருக்கமாக அமைகின்றது.

கதையினுடைய கரு என்று நோக்கும் போது, ஒரு பெண் அவளுடைய வாழ்வில் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றாள், பிரச்சினையான சூழ்நிலையில் தன்னை மனதளவில் எவ்வாறு பக்குவப்படுத்திக்கொண்டு வாழ்க்கையை எதிர்கொள்ளத் தயாராகுகின்றாள், சமூகத்தில் தனக்கான மதிப்பை அவள் வைராக்கியத்துடன் எவ்வாறு பேணுகின்றாள் என ஒரு பெண்ணின் வாழ்க்கையைச் சித்தரிப்பதே கதையின் முக்கிய கருவாக உள்ளது.

கதையின் பெரும்பான்மையான பகுதிகளில் குமாரபுரம் என்னும் ஊரையும் குமாரபுரம் முருகன் கோவில் சூழலையும் வற்றாப்பளைப் பிரதேசத்தினையும் வர்ணிக்கவும், வன்னி மன்னர்களின் ஆட்சியைக் கூறவும் தவறவில்லை. ஒரு பெண்ணினை கதை கருவாகக் கொண்டும் குமாரபுரம் பகுதியை பெரும்பாலான கதைக் களமாகவும் கொண்டு கதை நகர்ந்துள்ளது.

நாவலாசிரியர் கையாண்ட கதையின் நகர்வே குறித்த நாவலின்பால் ஆர்வத்தைத் தூண்டுகின்றது. இயற்கைச் சூழலை கூறி பிரதேசங்களை அடையாளப்படுத்துவதும் ஊரின் பெருமைகளை கூறுவதும் பிரதேச பேச்சுவழக்கு மொழிகளை கையாளும் விதமும் பழைய வரலாறுகளைக் கூறுவதுமாக கதையை நகர்த்திச் செல்லும் விதமும் நூலின் மேலான ஈரப்பை உண்டு பண்ணுகிறது. அத்தோடு அவரின் மொழியாள்கை ஒவ்வொரு காட்சியையும் கண்முன்னே உயிரூட்டமாய்த் தரும் விதம் இரசனையைத் தூண்டும் விதத்தில் அமைந்துள்ளது.

இக் கதையில் பால்நிலை என்கின்ற விடயம் பேசப்படும் விதம் பற்றி நோக்கும் போது, ஒரு ஆணிற்கு நிகராக பெண்ணின் வல்லமையை கூறுகிறது நாவல். கதையின் நாயகன் குமாரினை அறிமுகம் செய்யும் போது அவனது உடல் வலிமையையும் தோற்றத்தினையும் குணத்தினையும் எவ்வாறு வெளிப்படுத்தினாரோ அதே போல தான் கணவனை இழந்து தனியாளாக தன் குடும்பத்தினை கொண்டு செல்லும் சித்திராவின் மன வலிமையையும் "பெண்ணால் முடியாதது ஒன்றுமல்ல" என தன்




வார்த்தைகளூடாக விளக்கியிருக்கின்றார் நாவலாசிரியர்.

இதனை இடையில் ஒரு கட்டுரையினூடாகவும் கூறியுள்ளார். "பெண் என்பவள் பொறுமையும் எளிமையும் தீவிர உழைப்பும் கொண்டவள் அவள் தன்னையும் தன் சூழலையும் தாங்கி நிற்கும் வல்லமை படைத்தவள்" என்றும் பெருமை கொள்ளச் செய்கின்றார்.

யாராலும் அடக்க முடியா ஆணையை அடக்கிய அரியாத்தையின் கதையையும் கூறி பெண் வீரத்திலும் தன் கணவனை மானமிழக்காமல் பார்த்துக் கொள்ளும் சக்தி படைத்தவள் என்றும் வெளிப்படுத்தி அந்த நினைவுகளூடாக சித்திரா என்னும் கதையின் நாயகிக்கு மனோபலத்தை கொடுத்துள்ளார். அது மட்டும் இல்லாமல் ஒரு பெண்ணை வைத்து சமூகத்தில் எவ்வாறான கதைகளை மெருகூட்டுகின்றனர் என்பதையும் அச்சமயத்தில் கூட சித்திராவின் தெளிவான மனநிலையை வெளிப்படுத்தியுள்ளார்.

சித்திராவைப் போலவே முக்கியப்படு த்தப்பட்டவர் தான் வன்னிச்சியார். சித்திராவின் பெத்தாச்சி.

அவரின் தோற்றம் பற்றி சித்தரித்த விதம் ஆச்சரியத்திற்குரியது. மிடுக்கான வீரமான பெண்ணாக சித்தரித்து கண்முன்னே நிறுத்தியுள்ளார்.

பெண்ணை கதை கருவாகக் கொண்டிருந்தாலும் ஒரு ஆணிற்கு இருக்கும் மனதைரியம் நெஞ்சின் உறுதி முடிவெடுக்கும் தன்மை என்பவற்றையும் சரிக்குச் சரி கூறியுள்ளார். குறிப்பாக குமார் என்னும் பாத்திரத்தினுடைய நம்பிக்கை, தன்னையும் தன்னை நம்பி வந்த பெண்ணையும் அவளின் குடும்பத்தையும் பாதுகாக்கும் விதம் ஒரு ஆணிற்கான பொறுப்புக்கள் காதலில் ஆணின் மனநிலை போன்றவற்றையும் கூறியுள்ளார்.

பால்நிலை என்னும் விடயத்தில் ஆணிற்கு நிகராகவும் சில இடங்களில் பெண்ணை, ஆணை விட ஒருபடி மேலே வைத்தும் கதையை வார்த்துள்ளார் பாலமனோகரன்.

இவற்றோடு சமூகத்திற்கான நூலின் பங்களிப்பு என்னும் போது, ஒரு பெண்ணை சமூகம் எவ்வாறு பிழையாகச் சித்தரிக்கிறது? அதனால் அவள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ளுகின்றாள்? சமூகத்தின் பார்வையில் பெண்ணின் சித்தரிப்பு எப்படி இருக்கின்றது? என்ற பல விடயங்களை சமூகத்திற்கு எடுத்துச் சொல்லும் பணியையும் ஆற்றியுள்ளது குமாரபுரம்.

கதையின் பாத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும் என்ன ஆனது என்பதனைக் குறிப்பிட்டு இருந்தாலும் கதையின் முக்கிய பாத்திரமான செல்லையர் அதாவது குமாரின் தந்தை என்ன ஆனார் என்பது கதை வாசித்து முடித்தவுடன் எனக்குள் எழுந்த கேள்வி. ஏனெனில் கதையின் முக்கால் பாகம் வரை பயணித்த செல்லையா என்னும் பாத்திரம், மிகுதிப் பகுதியில் பேசப்படவில்லை.

அதே போல கதைக்குக் காரணமாகவிருந்த சித்திரா இறுதியில் தன் உயிரை மாய்த்துக் கொண்ட போது அவளது இறப்பினை தவிர்த்திருக்கலாம் என யோசிக்கத் தோன்றியது. ஆனாலும் அவ்வாறு யோசிக்கும் அளவிற்கு கதைக்குள் எம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் வகையில் கதையை அமைத்துள்ளமை சிறப்பு.

மொத்தத்தில் குமாரபுரம் பெண்ணின் வாழ்வியலை தத்ரூபமாக எடுத்துச் சொல்கிறது.



**இ. ஷயனுதா**
**4ம்வருடம்**
**ஊடகக் கற்கைகள் துறை**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்**

# காற்றிலே கண்டம் மனிதருக்கு....

கோடிப்புற வளவில் கொட்டில் அருகருகே
விறகுக்கரம் அடுக்கி இருந்த நிலம் மறந்தோம்.
மாரிமழை என்று கோடையில வேலிகளை
புதுக்க அடைத்தகற்றும் கிளுவங்கதியால்கள்.
முறித்து அவை அடுக்க நிமிரும் நம்விறகுக் கரம்..

பாளை, பொச்சுமட்டை ஊமல் சிரட்டை என ,
நீளும் நம் உரிமை நிகரிலா விறகுகளை
ஈரம் என்றாலும் சேர்ந்தெரிந்து பற்றவைத்து
ஆக்கிச் சோறு கறி அவியத்தந்து நிதம்
வீட்டின் விறகடுப்பு சாம்பரினைத் தந்துநிற்கும்.

ஓலையில அடுப்பு மூட்டி அடுக்கிச்சிறு சுள்ளிகளை
மேலமேல பெருவிறகுக்கட்டைகளை வைத்து
ஊதவென ஒருகுழல் நூரவிடாது ஊதி
தீ வளர்த்து சட்டியில தீந்தவை தீர்ந்துவிட
வாய்க்கு ருசி அதுதான் வாழ்க்கையில மறப்போமா??

இருந்து சமைக்க விருப்பமிலாப்பெண்டிர்
நின்று சமைக்க நேர்விருப்பம் கொண்டார்.
விறகு முறித்துக் கொள்ள இல்லை நேரமென்றார்.
கடகடென முடித்துவிட 'காஸ்' அடுப்புநல்லதென
முடிவு திடங்கொண்டு முன்னேற்றம் கண்டார்.

நின்று சமைக்க நேர்விருப்பம் கொண்டவர்கள்



குந்தியிருக்க முடியாமல் போனார்கள்.
மண்சட்டி விறகடுப்பு சுவைதனுக்கு நிகராக
சரக்குக்கலப்படத்தை கண்டறிந்து கொண்டார்கள்..
விளைவு
விடங்கொண்டு பின்னோக்கி வைத்தது காண்.

என்ன விளைவு எங்குவந்து என்னபயன்?
கண்டம் மனிதனுக்கு காற்றிலே வந்தது காண்.
மூக்கை மூட வைத்துமுடக்க வைத்து துயர் நீள
வாயு எரிவாயு வெடிக்கிறது கொதித்தெழுந்து
யாரிடம் போய்ச்சொல்ல காற்றிலே கண்டம் தான்
மனிசருக்கு



**கலைஞானச்சுடர்**
**ஸ்ரீமதி சுபாஷினி கொழும்பு**

# செல்ஃபி உலா



ஜெகஜீவனி— கண்டி



ஏ. எம். ஜெசீம், ஏ. எல். நொபர், கிண்ணியா கடற்கரை



சங்கீதா — கொச்சிக்கடை



ஜோசப் சின்னத்தம்பி— கொட்டாஞ்சேனை



கலக் ஷனா— தெரணியாகலை



சாரீக் அமீன்



அரபாத், பாதில் — மூதூர்





பிரவீன் சதா— காரைதீவு



மூதூர் — ரிசாத்

## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்






## நிறம் தீட்டுங்கள்





## Fill in the blanks

a e i o u

1. __pple. 
2. c__t. 
3. b__ll. 
4. p__g. 
5. __wl. 
6. d__ck 
7. d__g. 
8. b__d 

## நேரத்தைக் கணியுங்கள்





## கூட்டுங்கள்



| | | |
|---|---|---|
| 47 + 22 | 78 + 11 | 63 + 24 |
| 35 + 23 | 22 + 14 | 62 + 16 |
| 12 + 27 | 42 + 56 | 17 + 82 |
| 34 + 43 | 14 + 33 | 12 + 18 |

## விடுகதைகள்

1. பார்க்கத்தான் கறுப்பு; ஆனால் உள்ளமோ சிவப்பு. நமக்குத் தருவதோ சுறுசுறுப்பு அது என்ன?

**தேயிலை**

2. பல் துவக்ககாத வனுக்கு உடம்பு எல்லாம் பற்கள்?

**சீப்பு**

3. கடலிலே கலந்து, கரையிலே பிரிந்து, தெருவிலே திரியும் பூ எது?

**உப்பு**

4. பற்கள் இருக்கும் கடிக்கமாட்டான் அவன் யார்?

**சீப்பு**

5. வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு. வயிறில்லை. அது என்ன?

**அகப்பை**

6. காதை திருகினால் பாட்டு பாடுவான்? அவன் யார்?

**ரேடியோ**

7. நடுவழிய ஓய்வுக்காம், கடையிரண்டில் ஏதுமில்லை சொல், மூன்றெழுத்தில் உடுத்தலாம், மொத்தத்தில் பெண்கள் விருப்பம், அது என்ன?

**பட்டு**

8. நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல்லாது அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம் அது என்ன?

**நத்தை**

## வழிகாட்டுங்கள்



# கோயில் பணிக்காக தன்னை அர்ப்பணித்து நீண்ட காலமாக பணியாற்றும்

## சிவ பக்தன் சிவசுப்பிரமணியம்

**சமய வழிபாட்டுத் தலங்கள் எமது நாட்டில் பல பிரதேசங்களிலுள்ள முக்கிய நகரங்களுக்கு அண்மையிலேயே வியாபித்துக் காணப்படுகின்றன. அந்த அந்த சமயத்தைச் சார்ந்த பக்தர்கள் தமக்கே உரித்தான சமயத் தலங்களுக்குச் சென்று மிகுந்த பக்தியுடன் வழிபாடுகளை தமது சமய சம்பிரதாய முறைப்படி மேற்கொள்வர். சிலாபம் குருநாகல் பிரதான வீதியில் சிலாபம் நகரத்துக்கு இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் முன்னேஸ்வரம் பிரதேசம் உள்ளது. அங்கே சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் சிவன் கோயில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கோயில் வளாகம் காணப்படுகின்றது.**

சிவன் கோயிலில் அன்றாடம் நடைபெற்று வருகின்ற பூஜை வழிபாடுகளுக்கு பூரணமான ஒத்துழைப்புக்களை தினந்தோறும் வழங்கி வருகின்ற சிலாபத்தைச் சேர்ந்த சிவ பக்தனான 76 வயதுடைய சிவசுப்பிரமணியம் என்பவரை " நான் ரொம்ப பிஸி " பகுதிக்காக சிலாபம் முன்னேஸ்வரம் பிரதேசத்தில் சந்தித்தேன்

**கேள்வி ; நீங்கள் கடமை புரியும் சிவன் கோயிலின் சமய சம்பிரதாய வழிபாடுகள் தினமும் எத்தனை மணியிலிருந்து ஆரம்பமாகும் ?**

**பதில் ;** சிவன் கோயிலில் அன்றாடம் கடமை புரிந்து வருகின்ற குருக்கள் அனைவரும் அதிகாலை 5 மணியிலிருந்து மதச் சம்பிரதாயக் கடமைகளை கோயிலில் முறைப்படி ஆரம்பித்து வைப்பார்கள். இது கோயிலில் வழமையாக நடைபெற்று வருகின்றது.

**கேள்வி ; மிகுந்த சிவன் பக்தனான நீங்கள் கோயில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு குருக்களுக்கான உரிய வசதிகளை எவ்வாறு மேற்கொள்வீர்கள் ?**

**பதில் ;** சிவன் கோயிலில் இடம்பெற்று வருகின்ற அனைத்து பூஜை வழிபாடுகளுக்கும் பூக்கள் மற்றும் நைவேத்தியம் என்பன அவசியமாகும். அந்த அந்த விக்கிரகங்களுக்கு தேவையான பூக்களையும் நைவேத்தியங்களையும் வழிபாடுகளுக்கு ஏற்ப நான் வழங்குவேன். இதில் எந்த விதமான குறைபாடுகளையும் நான் வைக்க மாட்டேன்.

**கேள்வி ; நீங்கள் குறிப்பிட்டுக் கூறிய நை வேத்தியம் பற்றி கூற முடியுமா ?**

**பதில் ;** நைவேத்தியம் என்பது பூஜையின் போது பாவிக்கப்படுகின்ற சில தீ விளக்குகள் மற்றும் ஏனைய பொருட்கள் ஆகும். பூக்களைத் தவிர்ந்த ஏனைய பொருட்களை நாம் நைவேத்தியம் என்றே கூறுவோம்.

**கேள்வி ; உங்களுடைய சொந்த இடம் எது ?**

பதில்; நான் யாழ்ப்பாணம் மானிப்பாய்



பிரதேசத்திலேயே பிறந்தே. மானிப்பாய் செ. மேரிஸ் கல்லூரியில் கல்வி கற்றேன்.

பாடசாலை படிப்பை முடித்து விட்டு அப்பாவுடன் இணைந்து வியாபாரம் செய்து வந்தேன்.

**கேள்வி ; நீங்கள் எப்போது சிலாபம் நகரில் நிரந்தரமாக குடியேறினீர்கள் ?**

**பதில் ;** கடந்த 1995ம் ஆண்டு யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து வெளியேறி வேறோர் இடத்தில் குடியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதனாலேயே சிலாபத்தில் கடந்த 1995 ம் ஆண்டு குடியேறினோம்.







**கேள்வி ; சிலாபம் நகரில் வசித்து வருகின்ற நீங்கள் சிவன் கோயில் கடைமைகளுக்கு எவ்வாறு நேரத்தை ஒதுக்கிவீர்கள் ?**

**பதில் ;** சிவன் கோயிலில் அன்றாடம் நடைபெற்று வருகின்ற பூஜைகளுக்கு தேவையான பூக்களை நான் பல இடங்களில் சேகரித்து கோயிலில் வைப்பேன்.

காலை 6 மணியளவிலிருந்து பூக்களை பறித்து சேகரிப்பேன். சேகரிக்கப்பட்ட அனைத்து வகையான பூக்களையும் காலை 7.30 மணிக்கு கோயிலில் வைப்பேன்.

**கேள்வி ; கோயில் கடமைகளில் இணைந்து செயல்பட்டு வருகின்ற நீங்கள் பகல் போசனத்தை எங்கே பெறுவீர்கள் ?**

**பதில் ;** பகல் 1.00 மணியளவில் எனது வீட்டுக்கு சென்று பகல் சாப்பாட்டை முடித்து விட்டு மாலை 4 மணியளவில் கோயிலுக்கு வருவேன். இரவு 8 மணிவரை கோயில் கடமைகளை முறைப்படி நிறைவேற்றி விட்டு வீட்டுக்குச் செல்வேன். இதனை நான் வழமையாக செய்து வருகின்றேன்.

**கேள்வி ; பூஜைகளுக்கு தேவையான பூக்களை பறிப்பதற்கு எதில் பயணம் செய்வீர்கள் ?**

**பதில் ;** என்னிடம் ஓர் துவிச்சக்கர வண்டி உள்ளது. அதில் பயணம் செய்தே பூக்களை பறித்து சேகரிப்பேன்.

**கேள்வி ; பக்தர்கள் அதிகமாக எந்த நேரத்தில் வருவார்கள் ?**

**பதில் ;** பக்தர்களின் வருகையில் நேரத்தை குறிப்பிட்டுக் கூற முடியாது. ஏனெனில் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் வருவார்கள். சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் கோயில் வளாகம் காணப்படுவதால் பக்தர்களுக்கு எந்த தங்குதடையின்றி பூஜை வழிபாடுகளை கோயிலில் மேற்கொள்ளலாம். பக்தர்களின் வாகனங்களை தரித்து வைப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

**கேள்வி ; இந்த கோயிலில் அன்றாடம் கடமை புரிந்து வருகின்ற ஜெகநாதன் குருக்களுடன் தற்போது நீங்கள் கடமைகளை ஆரம்பிக்கின்றீர்கள் ? அவர் பற்றி உங்களால் கூற முடியுமா ?**

**பதில் ;** தற்போது ஜெகநாதன் குருக்களுக்கு 45 வயதாகின்றது. அவர்களின் பரம்பரையே முன்னேஸ்வர சிவன் கோயிலில் அன்றாடம் நடைபெற்று வருகின்ற சகல பூஜை வழிபாடுகளுக்கும் முன்னுரிமை வழங்கியவர்கள். இதேபோன்று ஏனைய குருக்களுடனும் ஜெகநாதன் குருக்கள் ஒருங்கிணைந்து சமய சம்பிரதாய வழிபாடுகளை கோயிலில் முறைப்படி மேற்கொண்டு வருகின்றார்.

**கேள்வி ; கோயிலுக்கு பக்தர்கள் வருவதற்கான பஸ் போக்குவரத்து சேவைகள் எப்படி உள்ளது ?**

**பதில் ;** சிலாபம் குருநாகல் பஸ் போக்குவரத்து சேவை தினமும் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது.

அதில் எவ்வித குறைபாடுகளும் இல்லை. எனவே பக்தர்களுக்கு பஸ்களிலும் முன்னேஸ்வர சிவன் கோயிலுக்கு வர முடியும். இதனால் நாம் இந்த பஸ் சேவையை பாராட்டுகின்றோம்.

shumsfahim@gmail.com

# வியர்வை நாற்றத்தால் அவதிப்படும் பெண்களுக்கு...

**தற்போது பெரும்பாலான பெண்கள் வேலைக்கு செல்பவர்களாக இருக்கிறார்கள். வெயிலில் அலைவது, பயணம் செய்வது போன்றவைகளை அவர்களால் தவிர்க்க முடிவதில்லை.**

பெண்கள் வியர்வை நாற்றத்தால் மிகுந்த அவஸ்தைகளை அனுபவிக்கிறார்கள். மற்றவர்கள் தன்னை பார்த்து முகம் சுளித்துவிடுவார்களோ என்று நினைத்து கவலைப்படவும் செய்வார்கள். அது அவர்களுக்குள் ஒருவித தாழ்வு மனப்பான்மையை உருவாக்கிவிடக்கூடும்.

நமது உடலில் இரண்டு வகை வியர்வை சுரப்பிகள் இருக்கின்றன. அதில் 'ஏக்ரைன்' எனப்படும் சாதாரண வியர்வை சுரப்பிகள், உடலில் பெரும்பாலான பகுதிகளில் காணப்படுகின்றன. 'அப்போகிரைன்' எனப்படும் இன்னொரு வகை வியர்வை சுரப்பிகள் அக்குள், பிறப்பு உறுப்பு சருமப்பகுதி, மார்பு காம்பைச் சுற்றியுள்ள கறுப்பு பகுதி போன்ற இடங்களில் காணப்படுகின்றன. வயதுக்கு வந்த பின்பே இந்த சுரப்பிகள் பெரிதாகி செயல்படத் தொடங்குகின்றன.



எல்லாவகை வியர்வை சுரப்பிகளுமே லேசான எண்ணெய்த்தன்மை கொண்ட திரவத்தை சுரக்கின்றன. அது மணமற்றது. இயற்கையானது. அது நமது உடல் இயக்கத்தின் வெளிப்பாடுதான். ஆனால் அந்த திரவத்தில் நமது சருமத்தில் இருக்கும் சில வகை பாக்டீரியாக்கள் சேர்ந்து செயல்படும்போது, அது ரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகிறது. அத்துடன் சேபாஷியஸ் சுரப்பி சுரக்கும் திரவமும் சேர்ந்து நாற்றமடிக்கும் நிலைக்கு செல்கிறது.

இந்த வாடையை நீக்கி, உடலை மணக்கச் செய்வது எப்படி?

வியர்வைத் துளிகள் அப்போகிரைன் சுரப்பிகளில் இருந்து வெளிப்பட்டு சில மணி நேரம் கடந்த பின்பே பாக்டீரியாக்களோடு சேர்ந்து ரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகும். அந்த வேதிவினை மாற்றம் ஏற்படுவதற்கு முன்னால் கழுவித் துடைத்து சுத்தம் செய்துவிட்டால் வாடை வீசாது. அந்த பகுதிகளை சுத்தம் செய்ய வீரியம் குறைந்த சோப்பை பயன்படுத்த வேண்டும்.

வியர்வை நாற்றத்தைப் போக்க டியோடரண்டுகளை பயன்படுத்துகிறார்கள். அவற்றில் இருவகைகள் உள்ளன. மருத்துவரின் ஆலோசனை பெறாமலே கடைகளில் வாங்கக்கூடியவை, அதில் முதல் வகை. இது அழகு சாதனப் பொருட்கள் பட்டியலில் இடம்பெறக்கூடியது. அது பாக்டீரியாக்களின் செயல்பாட்டை தற்காலிகமாக தடுத்து, நாற்றத்தை போக்கும். உடலில் மணத்தை வீசச்செய்யும் நறுமணப் பொருட்களும் அதில் சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாவது வகையாக குறிப்பிடப்படுபவை, ஆன்டி பெர்ஸ்பிரண்ட் எனப்படுகிறது. இதில் மருந்துப்பொருட்கள் அடங்கியிருக்கின்றன. அவை வியர்வை சுரப்பிகளில் தாக்கத்தை ஏற்படுத்தி, வியர்வை அதிகமாக வெளி யேறுவதை தடுக்கிறது.

தற்போது பெரும்பாலான பெண்கள் வேலைக்கு செல்பவர்களாக இருக்கிறார்கள். வெயிலில் அலைவது, பயணம் செய்வது போன்றவைகளை அவர்களால் தவிர்க்க முடிவதில்லை. அதனால் வியர்வை பிரச்சினையை தவிர்க்க டியோடரண்டுகளை பயன்படுத்துகிறார்கள். ஸ்பிரே, ரோல்ஆன், ஸ்டிக், ஜெல், விக்யூட், பவுடர் போன்ற பல வகைகளில் அவை கிடைக்கின்றன. ஸ்டிக், பவுடர் போன்றவைகளை பயன்படுத்தினால் ஈரத்தன்மை ஏற்படாது. அவை 'டிரை டியோடரண்ட்' என்று அழைக்கப்படுகின்றன. இதன் பயன்பாடு அதிகமாக இருக்கிறது.

உடலில் பூசும் விதத்தில் 'கிரீம் டியோடரண்டு'கள் உள்ளன. கை விரலால் எடுத்து இதனை பயன்படுத்தவேண்டும். ரோல் ஆன் பயன்படுத்தும்போது முனைப்பகுதியில் பந்து போன்று காணப்படுவது சுழன்று, உள்ளே இருக்கும் திரவம் சருமத்தில் பரவும். ஸ்பிரே டியோடரண்டை சருமத்தில் மிக நெருக்கமாக பயன்படுத்தக்கூடாது. சருமத்தில் நெருக்கமாகவைத்து ஸ்பிரே செய்தால் சருமத்தின் இயல்புத்தன்மையில் மாற்றம் ஏற்பட்டு கொப்பளங்கள் போன்று தோன்றக்கூடும்.





# வகவத்தின் 78 வது கவியரங்கம்


















கவிஞன் காலத்தின் கண்ணாடி அப்படி காலத்தைக் காட்டிய கவிதைகளை நேரடியாக கேட்டு மகிழ்ந்தேன். வகவ கவியரங்கில் கவிஞர் சு. முரளிதரன்

உலக கவிதை தின அரங்காக வலம்புரி கவிதா வட்டத்தின் 78 ஆவது கவியரங்கு அண்மையில் கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் சிறப்பதிதியாக கல்வியலாளரும், கல்வி அமைச்சின் பணிப்பாளருமான கவிஞர் சு. முரளிதரன் கலந்து கொண்டார். நிகழ்வுகளை வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுஸைன் நெறிப்படுத்தினார். கவியரங்கு கவிஞர் கம்பளை ரா. சேகர் தலைமையில் நடைபெற்றது.

வகவ சிரேஷ்ட ஸ்தாபகர் சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி முன்னிலை வகித்தார். செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும் பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

எம்மை விட்டும் பிரிந்த வகவ கவிதாயினியும், புகைப்படப்பிடிப்பாளருமான நஸீமா முஹம்மத், கவிஞர் எம். வை. எம். மீஆத், சென்ற வருடம் இதே மாதம் எம்மை விட்டும் பிரிந்த கவிஞர் ஏ. எஸ். எம். நவாஸ் ஆகியோருக்காக மௌனப் பிரார்த்தனை நடைபெற்றது.



சிறப்பதிதி கவிஞர் சு. முரளிதரன் தனது சிறப்புரையில், ". கவிஞர் மேமன்கவியோடு ஏற்பட்ட நட்பு என்னை கொழும்பு வட்டத்தோடு இணையும் வாய்ப்பைத் தந்தது. 1986 ல் எனது முதலாவது கவிதைத் தொகுதி "தியாக இயந்திரங்கள்" வெளிவந்தது. பின்பு வகவம் அதற்கு ஒரு விமர்சன கூட்டம் வைத்தது. அதற்கு கவிஞர் கலா விஸ்வநாதன் முன்னிலை வகித்தார். கவிஞர் ஈழகணேஷும் உறுதுணையாக இருந்தார். கவிஞர் கலைவாதி கலீல் என் நூலை விமர்சனம் செய்தார். அவையெல்லாம் இன்றும் என் ஞாபகத்தில் இருக்கிறது.

வகவம் கவிதைக்கு பெரும் பங்காற்றி வருகிறது. பெயரளவில் தெரிந்த பல கவிஞர்களை இன்று நேரில் காணும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு மிகவும் மகிழ்கிறேன். கவிஞன் காலத்தின் கண்ணாடி என்பார்கள். அப்படி காலத்தைக் காட்டிய கவிதைகளை நேரடியாக கேட்டு மகிழ்ந்தேன்.

வகவம் தனது கவிதைகளை ஆவணப்படுத்த வேண்டும். கட்டாயம் வகவ கவிஞர்களின் கவிதைத் தொகுப்பொன்றை நூலாக வெளியிட வேண்டும். அது வலம்புரி கவிதா வட்டத்தின் வரலாறை நாளை பேசும்" என்றார்.

கவிஞர் கம்பளை ரா. சேகர் தலைமையேற்று நடத்திய கவியரங்கில் கவிஞர்கள் ஈழகணேஷ், பாத்திமா ஷிமாரா, ஏ. கே. இளங்கோ, எஸ். யூ. கமர்ஜான் பீபி, இஸ்பஹான் ஷர்ப்தீன், தெஹியோவிற்ற இரா. சிவராஜா, கலாபூஷணம் மஸீதா அன்சார், வெலிகம கலைமகன் பைரூஸ், எம். ஐ. எம். முஸம்மில், மலாய்கவி டிவாங்ஸோ, லைலா அக்ஷியா, இளநெஞ்சன் முர்ஷிதீன், போருதொட்ட ரிஸ்மி, வாழைத்தோட்டம் எம். வஸீர், கலா விஸ்வநாதன், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், எஸ். தனபாலன், கிண்ணியா அமீர் அலி ஆகியோர் கவிதை பாடினர்.

கவிஞர் ரவூப் ஹஸீர், எம். எஸ். எம். ஜின்னா, கவிஞர் கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், அன்பழகன், நூருல் அசின் நஜ்முல் ஹுஸைன், எம். எஸ். எம். ராஸிக், எம். நஸார், அன்சார், நிஸாம்தீன், ரமீனா ஐயூப் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.




**படங்கள் : முஹம்மத் நஸார்**

## பள்ளி ஞாபகங்கள்



அந்தநாள் பள்ளி ஞாபகங்கள்
அணையாது எரியும் என் மனதில்
எங்கோ எங்கோ மழை தூறும்
இங்கே இதயம் குடை பிடிக்கும்

அன்று நடந்தவை எல்லாமே
அழியா நெஞ்சின் ஞாபகமே
புத்தகக்கட்டு ஒரு கையில்
புட்டு பார்சல் மறு கையில்
காலையில் கூடும் நண்பர்களோடு
சாலையில் நகரும் சந்தோஷம்

பள்ளிக்கூடம் உள் நுழைந்தால்
பலவாய் ஒலிக்கும் காதில் சத்தம்
விளையாடும்போது விசில் ஓசை
பிரார்த்தனை கூடினால் இசை ஓசை
பீரியட் முடிந்தால் மணி ஓசை
இப்படி பலதாய் ஒலிகள் தரும்
எம்பள்ளிக்கூடம் போதிமரம்

நேரம் பிந்தி வந்ததனால் நீட்டிய
கையில் பிரம்படி பட்டதுவும்
வீட்டுக் கணக்கை
மறந்துவிட்டதனால்
காதைத்திருகி அனுப்பியதும்
படங்கள் சரியாய் இல்லையென்று
புவியியல் ஆசான் குட்டியதும்

கவிதை எழுதி படித்தபோது
வகுப்பே கைகள் தட்டியதும்
இன்னும் நினைவில் உதிக்கிறது
இதமாய் எனக்கு வலிக்கிறது

அகம் கலந்த வகுப்பு நட்பின்
முகங்கள் இன்னும் மறக்கவில்லை
பலரின் முகவரி இப்போ
தெரியவில்லை

ஒருவர் உணவை ஒருவர் உண்ட ருசிதான்
இன்னும் மறக்கவில்லை அச்சாறு வித்த
அம்மாவுக்கு
கடனை இன்னும் அடைக்கவில்லை

தேர்ச்சி அறிக்கை வாங்குவதற்கு
அம்மா அப்பா வந்ததில்லை
பெற்றோர் மீட்டிங் போட்டு போட்டு
குற்றச்சாட்டு சொன்னதில்லை
பாடசாலை கடைகள் நடத்தி சீருடை விற்பனை
செய்ததில்லை
சப்பாத்தும் சாக்ஸும் போட்டால்தான் நீ
மாணவன் என்று சொன்னதில்லை

எல்லா வகுப்புமே சிறப்பாய் நடந்ததால்
டியூசன் வகுப்பே சென்றதில்லை
பீடி சிகரட் அடித்ததில்லை
பில்டிங் பன்டே கொடுத்ததில்லை

இத்தனை பெருமையும் நிறைந்த பள்ளியில்
படித்தவன் என்ற பெருமையோடு இன்று
படிக்கும் மாணவரே ஒன்று சொல்வேன்
கேளுங்கள்

ஒழுங்காய் நானும் பள்ளி சென்று ஊக்கம்
மிகுந்து கற்றதனால் வகுப்பில் டீச்சர் பெயர்
கூவ வந்தேன் என்று சொன்னதால் ஊரே இன்று
என்னைப்பார்த்து உயர்வாய் நன்றாய் மதிக்கிறது

எத்தனை கஷ்டம் வந்தாலும் பள்ளி செல்ல
தவறாதீர் தகுதிக்கெல்லாம் முதல் மகுடம்
கல்வி என்பதை மறவாதீர்



**கவிஞர் ச. தனபாலன்**
(வலம்புரி கவிதா வட்டத்தின்
78 ஆவது கவியரங்கில்
வாசிக்கப்பட்ட கவிதை)

# 2022 ஆம் ஆண்டுக்கான அரச வானொலி விருது விழாவில் விருதுகள் பல வென்ற கெப்பிட்டல் வானொலி ஊடகவியலாளர்களுடன் அதிகாரிகள்



2022 ஆம் ஆண்டுக்கான அரச வானொலி விருது வழங்கும் விழாவில் சிறந்த நேர்காணல் நிகழ்ச்சிக்கான விருதினை அலைவரிசை பிரதானி K.C. பிரகாஷும் சிறந்த நேர்காணல் மாலை நேர நேர்காணல் நிகழ்ச்சிக்கான விருதினை சிரேஷ்ட முகாமையாளரும் சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான A.L ஜபீரும் சிறந்த ஆராய்ச்சிபூர்வ நிகழ்ச்சிக்கான வெற்றி சான்றிதழை கெப்பிட்டல் செய்திப் பிரிவின் சிரேஷ்ட செய்தியாசிரியர் மற்றும் செய்திப்பிரிவின் உதவி முகாமையாளர் செல்லசாமி நிவலாசன், சிறந்த சிறு விளம்பரத்திற்கான வெற்றி சான்றிதழை பிருந்தா ராஜகோபாலனும் பெற்றுக் கொண்டனர். கெப்பிட்டல் வானொலி ஆரம்பிக்கப்பட்டு நான்கு வருட காலத்தில் பல அரச விருதுகளை சுவிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தகவல்: யதுஷா ரவித்தியாகராஜா

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.